
சு. சமுத்திரம்
குற்றம் பார்க்கில்

# குற்றம் பார்க்கில்

(சிறுகதைத் தொகுதி)

பேரன்புக்கு

சு. சமுத்திரம்

**மணிவாசகர் பதிப்பகம்**
55, லிங்கித்தெரு, சென்னை-600001.

முதல் பதிப்பு: 14, நவம்பர், 1980.
இரண்டாம் பதிப்பு: 25, டிசம்பர், 1992.

உரிமை: ஆசிரியர்க்கு

விலை: ரூ.20.00

பேராசிரியர் முனைவர் ச. மெய்யப்பனார்

மணிவிழா ஆண்டு வெளியீடு

## பதிப்புச் செம்மல்

### டாக்டர் ச. மெய்யப்பன்

டாகடா ச. மெயயபபன அணணாமலைப பலகலைக கழகததில பேராசிரியா, திருககுறள இயககம, திருமுறை இயககம, தமிழிசை இயககம, தமிழவழிககலவி இயககம முதலிய தமிழியககஙகளில முழுமூசசுடன ஈடுபடடு உழைபபவா, புலவா குழு உறுபபினா, பலகலைக கழகஙகளின பதிபபுககுழு உறுபபினராகச சிறபபாகச செயலாறறி வருகிறாா இவா, தமிழ நாடடில பல பலகலைக கழகஙகளில அறககடடளைகள நிறுவியுளளாா, பனனிரணடு நூலகளின ஆசிரியா இவா எழுதிய 'தாகூா' நூல தமிழக அரசின முதறபரிசு பெறறது. தமிழ நூல வெளியீடடுத துறையில சாதனைகள பல புரிநத செமமலாகிய இவா துறைதோறும தமிழுககு ஆககம தரும நலல நூலகளை வெளியிடுவதைத தம வாழவின குறிககோளாகக கொணடுளளாா. பதிப்புச் செம்மல் என அறிஞாகள இவரைப பாராடடுவா

கிடைக்குமிடம்:

மணிவாசகர் நூலகம்

12–B, மேல சன்னதி, சிதம்பரம் – 608 001.

55, லிங்கித் தெரு, சென்னை – 600 001.

28–A, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை – 625 001.

15, ராஜ வீதி, கோயமுத்தூர் – 641 001.

28, கிளைவ்ஸ் கட்டிடம், திருச்சி – 620 002.

தொலைபேசி : சிதம்பரம் 2799 – சென்னை 513707

பாரி ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை – 13.

# சிறுகதை வளர்ச்சி

**பேராசிரியர் டாக்டர் ச. மெய்யப்பன்**

***அண்ணாமலைப் பல்கலைக்கழகம்***

ஆசிரியா சமுததிரம நூற்றுககணககான சிறுகதைகளை எழுதி நாடறிநத எழுததாளராகத திகழகிறாா அவரின் காகித உறவு, சததியததின அழுகை, சமுததிரம் கதைகள வாசகாகளிடையே மிகுநத வரவேற்பைப் பெற்றுளளன. **அவருக்கென வாசகர்கள் நாளும் பெருகி வருகிறார்கள்.** வானொலி, தொலைக்காட்சி முதலிய மககள தொடாபுச சாதனங்களில பணியாறறுவதால புலபபாடடு நெறி வாயககப் பெறறவர் எதையும எளிதில சொலலும கலையில் வலலவராகத திகழகிறாா. அவருடைய அணுகுமுறைகளும உததிகளும் அவா படைப்புககள பரவுவதறகு வழிவகுக்கினறன. அவருககு எனறு ஒரு தனிநடை அமைநதுளளது அறிவு ஜீவிகள என்று சொல்லககூடிய மேதாவி விமரிசகாகள குழு மனப்பானமையுடன இருடடடிப்பு செய்தாலும அவருடைய வாசகா பரப்பளவு நாளும விரியததான செயகிறது வானொலியிலும, தொலைககாட்சியிலும ஒலிககும பெயராக இருப்பதால மககள காதுகளில இப்போதும ஒலிததுக கொணடே இருககிறது.

சிறுகதையோ, நெடுஙகதையோ அவா படைப்பில அவருடைய தனித்தனமை பளிசசிடுகிறது 75 ஆணடு பததிரிகை உலகில தமிழசசாதி எழுததாளர்களுக்கு விளம்பர மினமையும மறைக்கபபடுதலும மரபாகிவிடடமை ஒனறும

புதிதல்ல காரிருளைக் கிழித்து வரும் கதிரவன் ஒளிபோலப் படைப்பாற்றலால் எழுத்தாளாகள ஒளிவீசத்தான செய்கிறார் கள். அவ்வகையில் சமுத்திரம் தடைகள பல கடந்து இலககிய உலகில் அங்கீகாரம் பெற்றுவிட்டார்.

அவர் படைப்புக்களில அலுவலங்களின் அவலமும், அதி காரிகளின் ஆணவப்போக்கும் லஞ்ச லாவணியஙகளின சீர்கேடும் மிகுநத அழுத்தததுடன் பேசப்படுகின்றன.

தீமைகணடு பொங்கும நெஞ்சினர்; சமூகக் கொடுமைகளை ஆவேசமாகச சாடுகிறவா. அவரது சத்திய ஆவேசம சுகவாசி களுக்கு எரிசசல ஊட்டுகிறது. சிறுகதை, நாவல், நாடகம முதலிய இலககிய வடிவங்களில் கடநத 15 ஆண்டுகளில் இருபதுககு மேறபட்ட நூல்களைப் படைததத அவா எழுத்தாளா வரிசையில் குறிப்பிடததக்க இடம பெற்றுவிட்டார் அண்மைக் காலங்களில் அவரைப் போல எழுதவும் அவர் பாணியில் எழுதவும சிலர் முனவந்துள்ளனர். கோபாவேசததோடு கொதிதெழும் சமுத்திரத்தின் படைப்புக்களில் பிரச்சார நெடி இருப்பதாகச் சிலர் குறைகூறி மகிழ்கிறார்களா. தாங்கள் விரும்புகிற மொழிநடையில் எழுதவிலலை என்றும சிலர் குறைபட்டுக் கொளகிறாாகள் தஙகள குழுவைச சோந்த ஒரு சிலரின படைப்பே சிறநதது எனத தலையில தூககிவைத்துக் கொணடு ஆடுகின்றனர். இலக்கியததரம, தரமினமையைக் காலம உறுதி செய்யும.

பத்தாணடுகளுககு முனபே நவீன விமர்சன உலகததின மும்மணிகளாகிய கைலாசபதி, சிவததம்பி, வானமாமலை ஆகியோர் சமுத்திரம படைப்புககளின பனமுக நலனகளைத திறனாயநது தெளிநது கூறியுள்ளார்கள. இது சமுத்திரததின கதைக் களஙகள, கதை சொலலும முறை, சமுதாயப் பாாவை, படைப்பு வழஙகும் செயதி என அவரின் படைப்பாளுமை பற்றி மிகத் தெளிவான மதிப்பீடுகள நாளும் வநது கொணடுதான் இருககினறன.

மத்திய, மாநில அரசுகள் பரிசுகள் தந்து சிறப்பளித்தன. நிறுவனங்களும் அவரது படைப்புக்களுக்குப் பரிசுகள வழங்கி இவரைப் பெருமைப் படுததி வருகின்றன.

சமுத்திரததின் சகதி வாயநத எழுதுகோல் தொடர்ந்து நல்ல படைப்புக்களை நல்கும் எனபது எம் உறுதியான நம்பிக்கை. எதிர்ப்புகளிடையே வளரும சமுததிரம் எதிர்ப்புகளை வென்று ஏறறம பெறுவார். சமுததிரத்தின அலைகள ஓய்வதில்லை இலக்கிய உலகில் ஒரு நாளும ஓயாது. புதிய அலைகளாய், உயர்நத அலைகளாய உயரும் சிறக்கும்.

---

# என்னுரை

இந்தச் சிறுகதைத் தொகுப்பு பத்திரிகைகளும் படைப்புக்களும் புனிதமாகக் கருதப்படவில்லையென்றாலும், போற்றுதற்குரியவை யாகக் கருதப்பட்ட ஆண்டில் வெளியானது. இதுதான் எனது முதல் படைப்பு. ஆனந்தவிகடன். குமுதம், தாமரை ஆகிய பத்திரிகைகளில் வெளியானவை இந்தக் கதைகள். ஒரு புத்தக வடிவில் இந்தத் தொகுப்பை நான் பார்த்த போது புல்லரித்துப் போனேன்; புளகாங்கிதமடைந்தேன். சென்னை நூலகக் கட்டி டத்தில் எனது இனிய நண்பரும், செங்கை மாவட்ட அப்போதைய ஆட்சித் தலைவருமான மறைந்த திரு. திவான்முகம்மது தலைமையில், அப்போது காங்கிரஸ் செயலாளராய், பிரபலமாக விளங்கியவரும் என்றுமே என் இனிய தோழருமான திரு. ஏ.கே.சண்முகசுந்தரம் இந்த நூலை வெளியிட்டார். பிரபல நாவலாசிரியர் அகிலன் எனது குடும்பத் தோழர் திரு.கே.சி.எஸ். அருணாசலம், நாவலாசிரியர் திரு. நா. பார்த்தசாரதி போன்ற ஆன்றோர்களும் சான்றோர்களும் வாழ்த்தியருளினார்கள். திரு. நா.பா. அவர்கள் தனது தீபம் பத்திரிகையில் இந்தச் சிறுகதைத் தொகுப்பின் வெளியீட்டுவிழா ஒரு மாநாடு போல் நடந்தது என்று குறிப்பிட்டார்.

இந்தப் படைப்புக்குத் தமிழக அரசின் முதல் பரிசும் கிடைத்தது. அப்போதைய முதல்வர் திரு. எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்கள் 1981—ஆம் திருவள்ளுவர் திருவிழா ஆண்டு இந்தத் தொகுப்புக் கும் 'ஊருக்குள் ஒரு புரட்சி' என்ற நாவலுக்கும் இரண்டு பரிசுகளை வழங்கினார். தமிழக அரசின் செய்தித்துறை நான் அவரிடம் பரிசு வாங்கிய புகைப்படத்தையும், சாலை இளந்திரையன் சார்பில் அவரது தங்கை வாங்கிய புகைப்படத்தை யும் ஆகிய இரண்டை மட்டுமே வெளியிட்டது. அப்படியும் மக்களின் வரிப்பணத்தில் வாங்கிய பணம் என்று மட்டுமே நான் குறிப்பிட்டேன். சம்பந்தப்பட்ட பத்திரிகைப் பேட்டியில் திரு. எம்.ஜி.ஆர். அவர்களை நான் குறிப்பிடாதது பலருக்கு வருத்தத்தைக் கொடுத்தது. திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் மீது மனிதர் என்ற முறையில் ஒரு மகத்தான மரியாதை உண்டு என்றாலும், எழுத்தாளன் பேனா தனிநபர் வழிபாட்டிற்குத் தாராளம் காட்டக்கூடாது என்ற கருத்தே அகற்குக்காரணம். இன்றளவும் அதே கருத்தைக் கொண்டிருக்கிறேன்.

இந்தத் தொகுப்பிலுள்ள அத்தனைக் கதைகளும் இதன் வெளியீட்டு விழாவில் திரு. அகிலன், 'இவரைப் போல் எழுதியிருக்கிறார், அவரைப்போல் எழுதியிருக்கிறார் என்று கூறமுடியாத 'ஒரிஜினல்கள்' என்று கூறினார். 'மருந்தைக் குடிக்கும் போது குரங்கை நினைக்காதே' என்ற உபதேசத்தின் அடிப்படையில் இலக்கியமாக எழுதவேண்டுமென்று நினைத்து அதற்கு எதிர்மாறாக எழுத்தில் அடிப்பட்டுப்போகாத சிறுகதைகள், இந்தத் தொகுப்பிலுள்ள துணிச்சலான கதைகளை வெளியிட்ட தோடு, என்னை அவ்வப்போது உற்சாகப்படுத்தியதுடன் தாமரையில் வெளியிட்ட கவிஞர் கே.சி.எஸ். அருணாசலம் அவர்களையும், ஆனந்த விகடன், குமுதம் போன்ற பத்திரிகை களையும், இதனை அப்போது வெளியிட்ட 'கல்வி வெளியீடு' என்ற சின்னஞ்சிறு பதிப்பகத்தின் உரிமையாளர், புலவர் அன்பரசனையும் நன்றியுடன் நினைத்துப் பார்க்கிறேன். இந்தச் சிறுகதைத் தொகுப்புக்கும், 'ஊருக்குள் ஒரு புரட்சி' என்ற நாவலுக்கும் தமிழக அரசின் பரிசு கிடைத்த அப்போது வாழ்த்துக் கள் வந்தாலும் அவை குவியவில்லை. ஆனால் 'மண்சுமை' என்ற சிறுகதைத் தொகுப்புக்கு முதல் பரிசு கிடைத்த இப்போது வாழ்த்துக்கள் இன்னும்கூட குவிந்து கொண்டே இருக்கின்றன. அந்த அளவிற்கு இலக்கிய உலகில் நான் வளர்வதற்குக் காரண மானவர்களில் ஒருவரான மணிவாசகர் பதிப்பக உரிமையாள ரான பேராசிரியர் டாக்டர் ச. மெய்யப்பன் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எல்லாவற்றிக்கும் மேலாக ஆரம்ப எழுத்தாளனாக இருந்த என்னை நாடறிந்த எழுத்தாளனாக மாற்றிய அனைத்துப் பத்திரிகைகளுக்கும், ஆழமாக எழுத வைத்த 'செம்மலர்' 'தாமரை' ஆகிய பத்திரிகைகளுக்கும் வாசகப் பெருமக்களுக்கும் மனம் நெகிழ நன்றி செலுத்துகிறேன். இவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப இன்னும் ஆழமாகவும், பரவலாகவும், மனித நேயத்தோடும் எழுதவேண்டுமென்று உறுதி பூணுகிறேன்.

# பொருளடக்கம்


| | |
|---|---|
| 1. ஆசிரியர் அணணாவி | 9 |
| 2. பூககாரி | 24 |
| 3. எநநனறி கொனறாாகும் | 32 |
| 4. உறவின விலை | 40 |
| 5. கலெக்டர் வருகிறார் | 48 |
| 6. போலீஸ பொனனபபன | 54 |
| 7. குட்டி மஸ்தான | 61 |
| 8. அஙகே கல்யாணம் இங்கே கலாட்டா | 72 |
| 9. பழத்தோட்டம் | 78 |
| 10. சாமியாடிகள் | 87 |
| 11. ஆட்டுததலை | 94 |
| 12. மேதைகள் தோற்றனர் | 104 |
| 13 சத்தியம் | 115 |
| 14. கூடடுக் கணககு | 127 |
| 15. குற்றம் பார்ககில் | 139 |
| 16. போதும் உங்க உபகாரம் | 161 |

# ஆசிரியர் அண்ணாவி

பஞ்சாயத்து அலுவலகத்திற்கு எதிரே இருந்த சிமிண்ட் பெஞ்சில், மடித்துக் கட்டிய வேட்டியோடு, உட்கார்ந்து கொண்டு, ஒரு சிகரெட்டைப் புகைத்துக் கொண்டே பத்திரிகை படித்துக் கொண்டிருந்த ஊராட்சித் தலைவர் ராமசாமி, எதிரே வந்துகொண்டிருந்த மனிதரைப் பார்த்ததும், சிகரெட்டை அணைத்துவிட்டு, வேட்டியை இழுத்து பாதம்வரை பரப்பிவிட்டு, பௌயமாக எழுந்து நின்றார் லேசாகப் புகைந்து கொண்டிருந்த சிகரெட் துண்டை, அவர் காலால் நசுக்கிக் கொண்டும், மறைத்துக் கொண்டும் நின்றபோது, தலைவரின் வணக்கத்திற்குரிய அந்த மனிதர் நெருங்கிவிட்டார்

சூரிய வெளிச்சத்துடன் போட்டி போடுவதுபோல் எட்டுமுழ வேட்டி வெண்மையில் மினுங்க, தோளில் கிடந்த 'மேரியல்' இரு புஜங்களையும் மறைத்து, சட்டம் போட்ட 'எக்ஸ்ரே' படம்போலக் காட்ட, இன்னொரு கோணத்தில் ஒரு கவசம்போல் காட்சியளிக்க, நெற்றியில் அணிந்திருந்த 'விபூதி' வேட்டியின் தொடர்ச்சி என்னும்படி ஒளிர, ஆமணக்குச் செடியைப்போன்ற மேனி, சிவப்பழமாகக் காட்சியளிக்க அந்த மனிதர் வந்தேவிட்டார்

பஞ்சாயத்துத் தலைவர் ராமசாமி, தலையைச் சொறிந்து கொண்டே, "ஆயிரம் ரூவாய்க்குக் குதிரை வாங்கியாச்சி... ஒரு அஞ்சு பைசாவுக்குக் கயிறுதான் வாங்கல வாங்குன குதிரை என்ன ஆவுமோ?" என்றார்

அந்த மனிதர், ராமசாமியை எடை போடுவது போல் மேலும் கீழும் பார்த்தார் 'மைக்ராஸ்கோப்' பில் வைத்த கண் மாதிரி, அவர் பார்வை, ராமசாமியின் முகபாவத்தை அளந்தது பிறகு, "என்னடா, புதிர் போடுறே " என்று வாய் இரண்டு வார்த்தைகளைக் கொட்டியது

"என்ன அண்ணாவி பின்னே? ஹைஸ்கூல் வாரதுக்கு எல்லா ஏற்பாடும் பண்ணினிங்க என்னை முன்னால நிறுத்தி கௌரவம் குடுத்திங்க இப்போ, வெண்ணெய் திரளும் போது, தாழியை உடைக்கப் பாக்குறாங்க நீங்களும் கண்டும் காணாதது மாதிரி

இருக்கிங்க."

அண்ணாவி சிறிது நேரம் பதில் சொல்லாமல் யோசித்தார். பிறகு, "அந்தப்பசங்க, நீ ஹைஸ்கூல் கட்டுறதுக்காக வசூல் பண்ணுன பணத்துல கையாடுனதா பேசிக்கிறதாத்தானே சொல்றே அவங்க கிடக்காங்க காய்ச்ச மரந்தானே கல்லடிபடும். இதுக்கா கலங்குறது? அந்தப் பசங்கள எப்படிச் சமாளிக்கிறதுன்னு எனக்குத் தெரியும்."

ராமசாமிக்கு, அவர் கூறிய ஆறுதல், ஒரு தரமான திரைப்படத்தைப் பார்த்தது போன்ற திருப்தியைக் கொடுத்தது அதற்கு வெளிப்பாடாக லேசாய் சிரித்துக் கொண்டே, "அண்ணாவி, நீங்க செய்யுறதும் நல்லா இல்லே. உங்க முன்னேற்பாடால, நம்ம ஊருக்கு ஹைஸ்கூல் வேணுமின்னு, பஞ்சாயத்து யூனியன் தீர்மானம் போட்டுட்டு சீப் எஜுகேஷன் ஆபீஸரும் சிபாரிசு பண்ணிட்டார் பேப்பர் கலெக்டர் ஆபீசுல இருக்கு" என்றார்.

"நீ போய் கலெக்டர பாக்க வேண்டியது தானே."

"தலை இருக்கையிலே வாலு ஆடுமா?"

"ஏண்டா, நீ ஒரு தலைவரு. ஒரு மேஜர் பஞ்சாயத்துக்கு அதிபதி. நீயே போயி கலெக்டர பார்க்காம, இந்த வயசான கிழவன ஏண்டா கஷ்டப்படுத்துற?"

"நல்லா இருக்கே, தலைவராம் தலைவரு. ஊர்க்காரங்க கிட்ட நான்தான் தலைவராய் இருக்கணுமின்னிங்க; அவங்களும் அண்ணாவி சொன்னா சரிதான்னு ஏகமனதா தேர்ந்தெடுத்தாங்க "

" டேய், மெள்ளப் பேசுடா; ஒரு அன்னக்காவடி வாத்தியாரு 'லோகல் பாலிடிக்ஸுலே' தலையிடுறதா, ஆபீஸருங்க என்மேல ஆக்ஷன் எடுக்கப் போறாங்க "

"எடுப்பாங்க. எடுப்பாங்க இந்த ஊருக்காரங்க வளையல போட்டுக்கிட்டா இருக்காங்க, உங்க மேல ஆக்ஷன் எடுக்கவுடுற துக்கு? அவங்க ஆபீஸையே பொசுக்கிப்பிட மாட்டோமா?"

அண்ணாவிக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை அன்பின் முதிர்ச்சி வார்த்தைகளாக வரும்போது, அவற்றிற்கு அணை கட்டுவது இயலாததுதான் அவர் குழம்பிக் கொண்டிருக்கையில், ராமசாமி, "கலெக்டர எப்பப் பார்க்கலாம் அண்ணாவி?" என்றார்

"நம்ம பேப்பர் கலெக்டர் ஆபீஸ்ல இருக்கறது எனக்குத் தெரியும். வறட்சி நிலவுற இந்தச் சமயத்துல, ஒரு ஹைஸ்கூலுக்குப்

பணம் செலவுடுறது தேவையான்னு கலெக்டர் யோசிக்காராம் டில்லியில இருக்கற என் மவன், நம்ம கலெக்டரோட மொஸோரியில ஒன்ணா டிரெயினிங் எடுத்தவன் அவன விட்டு கலெக்டருக்கு 'ஸ்ட்ராங்கா' எழுதச் சொல்லியிருக்கேன் எழுதிட்டதா என் மவன் லட்டர் போட்டதும் போவோம். ஆக்கப் பொறுத்தவன் ஆறப் பொறுடா "

"அப்புறம் அந்தத் தங்கையாட்டம் வகையறா, நான் வசூல்ல தில்லுமுல்லுப் பண்ணினதா பிரச்சாரம் பண்ணிக்கிட்டு இருக்காங்க நான் பொண்டாட்டி நகையை அடகு வச்சி வாங்குன மாட்ட 'நன்கொடை மாடு'ன்னு கிண்டல் பண்ணுறாங்களாம் நீங்க கொடுத்த பதவின்னு பாக்குறேன். இல்லன்னா என்னைக்கோ ராஜினாமா செய்திருப்பேன் "

"டேய் ராஜினாமா ராஜினாமான்னு அடிக்கடி மிரட்டாதேடா. இப்படித்தான் சர்ச்சிலோட அப்பா ராண்டோப் சர்ச்சில், தன்னோட மந்திரி பதவியை ராஜினாமாப் பண்ணப் போறதா பிரதம மந்திரிகிட்ட மிரட்டினாரு. கடைசில அந்தப் பிரதமரு பண்ணுடான்னுட்டான் மனுஷன் வேறு வழியில்லாமப் பண்ணிட்டு, அவஸ்தைப் பட்டான் இப்படி ஏடாகோடமாய் மிரட்டாதே."

"நான் மிரட்டல அண்ணாவி நாம, ராவும் பகலுமா கருமிப் பயலுக வீட்டிலகூட பழியாக் காத்துக்கிடந்து, நன்கொடை பிடிச்சோம். ஒரு அஞ்சு பைசா கூட எடுத்தது கெடையாது ஆனால் அவங்க, என் மாட்டை 'நன்கொடை மாடு'ன்னு கிண்டல் பண்றதைக் கேட்க வேதனையா இருக்கு "

அண்ணாவி, ராமசாமியைக் கனிவுடன் பார்த்தார். பிறகு அவரின் பெருவிரலைப் பிடித்துக் கொண்டே, "நீ ஏண்டா கவலைப்படுற? பரம்பர பரம்பரையாய் பஞ்சாயத்துச் சொத்தை அனுபவிச்சவங்க அவங்க, நீயும் தேனை எடுத்த கையோட, புறங்கையை வாய்க்குக் கொண்டு போயிருப்பேன்னு நினைக்கிறாங்க போலிருக்கு எனக்குத் தெரியும் எந்தப் பயல எப்படிச் சமாளிக்கணுமுன்னு சரிடா, உன் வேலையைப் பாரு, எனக்கு வேலை இருக்கு நம்ம மாடசாமி பொண்ணுக்கும், பெருமாள் பேரனுக்கும் பொருத்தம் பார்க்கணுமுன்னு என்னைத் துளைச்சி எடுக்கிறாங்க; நான் வர்ரேன் "

ராமசாமி அண்ணாவி போவதையே பார்த்துக் கொண்டிருந்தார் ஒரு பெரிய சுமை இறங்கியது போலிருந்தது

அதற்கு அடையாளமாக, அண்ணாவி தலை மறைந்ததும், ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்றவைத்தார்

அண்ணாவி "நமசிவாய நமக" என்ற சிவமந்திரத்தை முணு முணுத்துக் கொண்டே, மேனி குலுங்க நடந்தார். அவருக்கு எதிரே சைக்கிளில் வந்து கொண்டிருந்த தங்கையா, கீழே இறங்கி, தோளில் கிடந்த துண்டை எடுத்து, முழங்கையில் போட்டுக் கொண்டார்.

"டேய் தங்கையா, ஒன் மவன் எனக்கு லெட்டர் போட்டிருக்காண்டா. பெங்களூர்ல போயி, அவன்கூட நான் ஒரு மாசம் தங்கணுமாம்."

"போயிட்டு வாரதுதானே அண்ணாவி."

"இப்போ அவன் பிளைட் ஆபீஸரு என்கிட்ட படிச்ச நன்றியில் எழுதியிருக்கான் இந்தக் கிழவன் அங்க போயி எதுக்குடா சுமையா இருக்கணும்?"

"என்ன அண்ணாவி நீங்க இந்த ஊருக்கே நீங்கதான் குலதெய்வம். எங்க குடும்பத்துக்கு நீங்க கடவுளு நீங்க கண்டிப்பா போகணும். அப்பதான் அவனும் உருப்படுவான்"

சமீப காலமாக தன் மகன் பணம் அதிகமாக அனுப்பாமலும், ஏனோ தானோன்னு லெட்டர் போடுவதும், தங்கையாவைக் குடைந்து கொண்டிருக்கின்றன அண்ணாவி போனால், மகன் திருந்துவான் என்ற நம்பிக்கையில், "நீங்க கண்டிப்பா போயிட்டு வரணும் அண்ணாவி நீங்க போனால் அவனுக்குத் தெம்பா இருக்கும்" என்றார்

அண்ணாவி, தங்கையாவை ஓரக்கண்ணால் உற்று நோக்கிக் கொண்டே, "இந்தத் தலைமுறையைச் சேர்ந்தவர்க்கு மரியாதை கிடையாதுன்னு நாம சொல்லுறோம் ஆனால் ஒன் மவன் இந்தத் தலைமுறையைச் சேர்ந்தவனா இருந்தாலும் அவன் இந்த அன்னக்காவடி வாத்தியாருக்கு மரியாதை கொடுக்கிறான். ஆனால் அவன் அப்பன் முதுகில புளியம் விளாரால நான் கொடுத்த அடியோட தழும்பு இன்னும் கிடக்கு ஆனால் அவனுக்கு மரியாதை கொடுக்கத் தெரியலியே!"

தங்கையா, துடித்துப் போனார் ஒரு தடவை முதுகைத் தடவி விட்டுக் கொண்டு, "என்ன அண்ணாவி, பூடகமா பேசறீங்க! நான் பெத்த மவனே உங்ககிட்ட மரியாதைக் குறைவா பேசினா அவனைக்

கண்டந் துண்டமா வெட்டிப்புடுவேன். அப்படிப்பட்ட நானா உங்களுக்கு மரியாதை கொடுக்காம இருப்பேன்?"

"பின்ன என்னடா! அவன் ராமசாமி, நாயா அலைஞ்சி நன்கொடை பிரிக்கிறான் சுய கௌரவத்த பெரிசா நினைக்கிறவன். அப்படிப்பட்டவனே அக்கம் பக்கத்துலே போயி பெரிய மனுஷங்க சின்ன மனுஷங்க அத்தனை பேரு கிட்டேயும் கால்ல விழாத குறையா கெஞ்சி பணம் பிரிக்கிறான் நீ அவன் வாங்குன மாட்டை, 'நன்கொடை மாடுன்னு' சொல்றியாம் நீ அவனை அப்படிச் சொல்றதும், என்னைச் சொல்றதும் ஒண்ணுதாண்டா."

"அண்ணாவி, நான் நன்கொடை விஷயமா கணக்கு இருக்கணுமுன்னுதான் சொன்னேன். ராமசாமியோட நாணயத்த சந்தேகிக்கல."

"எனக்கு எல்லாந் தெரியும்டா ஆனால் ஒண்ணு மட்டும் நினைச்சிக்கடா உன் போஸ்ட் மாஸ்டர் மவன் பேச்சியம்மைக்கு வந்த பணத்தை ரேகை போட்டு எடுத்துக்கிட்டான் அது அந்தக் கிழவிக்குத் தெரிஞ்சதும், ரிப்போர்ட் பண்ணப் போனாள் உடனே நீ என்கிட்ட வந்து விழுந்தே. நானும் ராமசாமிகிட்ட 'உன் சித்திக்கிட்ட சொல்லுடா'ன்னு சொன்னேன் அவனும், உன்கிட்ட இருந்த பழைய பகையை மறந்து சித்திக்காரியைச் சரிகட்டினான் இதெல்லாம் மறக்காதே. ராமசாமி மட்டும் இல்லன்னா, ஒன் மவன் இன்னும் கம்பி எண்ணிக்கிட்டிருப்பான் மனுஷனுக்கு நன்றி வேணுண்டா!"

"அண்ணாவி, எந்தச் சல்லிப்பய மவனோ என்னைப் பத்தி உங்ககிட்ட கலகம் பண்ணியிருக்கான். சாமி சத்தியமா நான் இந்த வம்புக்கே போகமாட்டேன். வேணுமுன்னா பாருங்க, தலையிட மாட்டேன் "

"தலையிட மாட்டேன்னு சொல்லாதடா. அநியாயம் நடக்கும்போது தலையிடவேண்டியதுதான் ஆனால் நியாயத்த கேள்வி கேக்கக் கூடாதுடா! அவன் - ராமசாமி - நியாயஸ்தன் சரி, சரி. ஹைஸ்கூலுக்கு உன் பணத்த எப்படா குடுக்கப்போற?"

"இன்னும் நாலு நாளையில பருத்தி எடுக்கறேன், கொடுத்துடறேன் "

"உன் வீட்டுக்காரி வயித்து வலியில துள்ளுனாளே, நான்

சொன்ன மருந்தைச் சாப்பிட்டாளா?"

"இன்னும் சாப்பிடலை."

"காய்ச்சின இரும்புல தேனைவிட்டு, இஞ்சிச் சாறுல போட்டுக் குடிக்கச் சொல்லுடா. அதுக்கும் குணமாகலன்னா, ஆஸ்பத்திரியில போயி எக்ஸ்ரே எடு. நாளக்கழிச்சி உன் வீட்டுக்கு வருவேன். உன் வீட்டுக்காரிக்கு வயித்து வலி வந்துதோ படுவா உன்னை பிச்சுப்புடுவேன்."

"இன்னைக்கே மருந்து கொடுக்கறேன், அண்ணாவி."

அண்ணாவி இப்போது சற்று வேகமாக நடந்தார். தங்கையா முழங்கையில் கிடந்த துண்டை எடுத்து, தோளில் போட்டுக் கொண்டு, சைக்கிள் பிடலை அழுத்தினார்.

அண்ணாவியின் எதிரே, காலேஜ் படிக்கும் ராமனும், அவனோடு இணைந்தாற்போல், ஹெல்த் விஸிட்டராகப் பணி புரியும் நளினாவும் வந்து கொண்டிருந்தார்கள். ராமன், கால்கள் பின் வாங்கின. கண்டும் காணாதது மாதிரி நடந்த அண்ணாவி, அவனை ஏறிட்டுப் பார்க்காமலே,"டேய் ராமா, மத்தியானம் என்னை வீட்டுல வந்து பாரு" என்றார். "சரிங்க ஸார்" என்ற பதிலைக் காதில் வாங்கிக் கொண்டதாகக் காட்டிக் கொள்ளாமலே, அவர் நடந்தார் நடந்தவர், சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தார். ராமன் வளைய வந்து கொண்டிருந்தான்.

"டேய், உன்னை மத்தியானம் தானே வரச்சொன்னேன். இப்ப எங்க போகணுமோ அங்க போடா. மத்தியானம் வாடா."

"பரவாயில்ல சார் காரணம் இல்லாமக் கூப்பிட மாட்டிங்களே. உங்களைவிட எனக்கு யாரும் பெரிசில்ல."

'யாரும்' என்ற வார்த்தையில் நளினா பதுங்கியிருக்கிறாள் என்பதைப் புரிந்துகொண்ட அண்ணாவி, ராமனை நோட்டம் விட்டார். வயதானவர்களை மைக்ராஸ்கோப்பில் பார்ப்பது மாதிரி பார்ப்பவர், இப்போது அவனை டெலஸ்கோப்பில் பார்ப்பது போல் மேல்மட்டமாகப் பார்த்தார். ராமனின் கைகால்கள் ஆடின.

"டேய் ராமா, நீ புத்திசாலிப் பையன். இப்ப உனக்கு முக்கியம் படிப்புத்தான். நீ அந்தப் பொண்ண விரும்புறதும், அவள் உன்னை விரும்புறதும் எனக்குத் தெரியும். அவளை, உனக்கே முடிச்சி

வைக்கிறதா முடிவு பண்ணிட்டேன். ஆனால் அதுவரைக்கும் நீ அவள் பின்னால் திரியக்கூடாது. இது சுத்தமான ஊருடா. பொண்ணு பின்னால பப்ளிக்கா பல்லைக் காட்டிக்கிட்டு நடக்கறது நாகரிகமாவாது. உன் அப்பாகிட்ட சொல்லி முடிச்சிடுறேன்; அதுவரைக்கும் உன்னை அந்தப் பொண்ணோட நான் பார்க்கக் கூடாது. நான் சொல்றது புரியுதாடா?"

"புரியுது ஸார். அப்பா கிட்டே எப்போ?"

"எப்போன்னு எனக்குத் தெரியும்டா. இப்போ நீ திரும்பிப் பாராம ஓடுடா."

'அண்ணாவி' என்று நடுத்தர வயதினராலும், 'ஸார்' என்று இளைஞர்களாலும் அழைக்கப்படும் பூதலிங்கம்பிள்ளை அந்த ஊருக்குக் குடிவந்து முப்பது ஆண்டுகள் ஆகின்றன. அந்தக் காலத்தில் ஐந்தாவது வரை படித்துவிட்டு, 'லோயர் கிரேட்' வாத்தியாராக, திண்ணைப் பள்ளிக்கூடத்தைத் தொடக்கி வைத்தவர் அவர்தான். தங்கையா, ராமசாமி உட்பட அந்த ஊரில் 'லிட்டரேட்டுகள்' அத்தனை பேரும் அவரிடம் 'ஒண்ணாம் வகுப்பில்' சேர்ந்தவர்கள். ஆற்று மணலை கோவிலுக்கு எதிரே இருந்த திட்டில் கொட்டி, அதில் உயிர், மெய் எழுத்துக்களை ஆக்கிக் கொடுத்தவர் அவர் அப்போது, அந்த ஊருக்குச் சிலேட்டோ, கரும்பலகையோ எட்டிப் பார்க்கவில்லை. மாணவர்களுக்கு எழுத்துக் கூட்டிப் படிக்கத் தெரிந்ததும், ஓலைச் சுவடிகளில், எழுத்தாணியால் 247 எழுத்துக்களையும் எழுதிச் சொல்லிக் கொடுத்தார். "கடவுளை எந்நாளுமே கனவிலும் மறவாதே" என்ற பாடலை அவர் முன்னால் பாட, மாணவர்கள் அதை 'கோரஸாக'ப் பின்னால் பாட, அந்த ஊரின் நம்பிக்கையே அந்தப் பாட்டில் உருவெடுக்கும். பள்ளிக்கூடத்தை ஒரு குருகுலமாக நினைத்து அவர் செயல்பட்டதால், ஊரே அவரை ஒரு குருவாக மதித்தது. அப்போது 'ஸார்' 'அண்ணாவியாக' இருந்த காலம். அண்ணாவியின் கையிலிருந்த வாதமடக்கிக் கம்புக்குப் பயந்து புளிய மரங்களில் ஏறிப் பதுங்கிக் கிடந்த பையன்களை,'விசுவாச, பையன்களின் உதவியோடு போய், மரத்தில் இருந்து இறக்கி, பள்ளிக்கூடத்துக்கு இழுத்துக் கொண்டு வந்து, 'சுமத்து சுமத்துன்னு சுமத்தி'ப் படிக்க வைத்தார். சில 'புளியமர வாசிகள்' அவரால், இன்று ஆபீஸர்களாய், 'பங்களாவாசிகளாய்' இருக்கிறார்கள்.

இருபதாவது வயதில், வெளியூரில் இருந்து அங்கு வந்து ஊரோடு ஒன்றிவிட்ட அண்ணாவிக்கு, இரண்டு மூன்று ஆண்டுகளில் திருமணம் நடந்தது. அவர் மனைவியும், ஒரு லோயர் கிரேட் ஆசிரியை. ஊர்க்காரர்கள், அவருக்குப் பள்ளியருகே ஒரு வீடு கட்டித் தந்தார்கள். ஊரில் விளையும் வெள்ளாமையில் ஒரு பகுதி, தானாக வீடு தேடி வந்ததால், சம்பளப் பணத்தை என்ன செய்வதென்று பிரச்சினைகள் அண்ணாவிக்கு வந்ததுண்டு.

கிணறு வெட்டப் போய், கிணற்றுக்குள்ளேயே விழுந்தவர்கள், பனைமரத்தில் இருந்து விழுந்த மரமேறிகள், மருமக்களால் கைவிடப்பட்ட கிழங்கள், கிழங்களால் நிராகரிக்கப்பட்ட மருமக்கள் ஆகியோரின் பிரச்சினைகளுக்கு, அண்ணாவியின் பிரச்சினை ஒரு தீர்வாக இருந்தது.

பள்ளிக்கூடத்தில் ஐந்தாவது வகுப்பு வந்ததும், அண்ணாவி எஸ்.எஸ்.எல்.சி. எழுதி செகண்டரி கிரேடில் தேறி, அதே கிரேட் ஆசிரியரானார் அன்று முதல் இன்று வரை, பள்ளியை வளர்த்து, அந்த வளர்ச்சியில் தன் தகுதியையும் வளர்த்துக் கொண்டார். இந்தப் பரிணாம வளர்ச்சியில் ஊரார்க்கு அவர்மீது இருந்த பிடிப்பும் வளர்ந்தது. இன்று வரை அவர்தான் பள்ளியின் தலைமையாசிரியர். பெரும்பாலான ஆசிரிய ஆசிரியைகள், அவரது முன்னாள் மாணவ மாணவிகள்.

இந்த வளர்ச்சியின் மத்தியில், அண்ணாவிக்கு ஒரு கடுமையான தளர்ச்சியும் ஏற்பட்டது. அவர் தோளோடு தோளாகப் பணிபுரிந்த, அவர் மனைவி ஒரு பையனைப் பரிசாக அளித்து, அந்தப் பரிசை மூன்றாண்டு காலம் பராமரித்து விட்டு, காலமாகிவிட்டாள். வாழ்க்கையில் ஏற்பட்ட இந்த அதிர்ச்சியையும், ஆக்க வழிக்குத் திருப்பினார். கவலையை மறப்பதற்காகவோ என்னவோ ஆசிரியர் பணியில் தீவிரமாக ஈடுபட்டார். முதியோர் கல்வித் திட்டத்தை, அரசாங்கம் தொடங்குவதற்கு முன்னதாகவே, 'ராப் பள்ளிக்கூடத்தை' ஒரு ஹரிக்கேன் விளக்கின் முன்னணியில் நடத்தி 'கைநாட்டுகளை' "அண்ணாவி, ஓங்க கையெழுத்து. நல்லா இல்லியே" என்று உரிமையோடு செல்லமாகச் சொல்கிற அளவுக்கு உழைத்தார். இளமையிலே மனைவியை இழந்தாலும், அந்த இழப்பை, உழைப்பில் ஈடுசெய்தார். "அண்ணாவின்னா அண்ணாவிதான்" என்று வயது வந்தோரும், "அந்த ஆளு ஆம்பிளைதானா" என்று சில இளம் பெண்களும் சொல்கிற அளவுக்குத் தலைநிமிராமல்

அவர் நடந்ததால் தலைகுனிய வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. அவருக்குச் சித்த வைத்தியமும், ஜோஸ்யமும் அத்துபடி. ஆகையால், அவர் வீடு, ஒரு மருத்துவ மனையாகச் செயல்பட்டது. அவர் தலையாட்டாமல் எந்தக் கல்யாணமும் நடக்காது.

திண்ணையில் தவழ்ந்து, குடிசையில் எழுந்து, இப்போது கல் கட்டடத்தில் நடக்கும் பள்ளிக்கூடத்தைப் பார்த்த அண்ணாவியின் இதயம் நிறையுறவில்லை. எப்படியாவது ஒரு உயர்நிலைப் பள்ளி, தன் கண்முன்னாலேயே தோன்றிவிட வேண்டும் என்பதில் கருத்தாய் இருந்தார். அதன் அவசியத்தை உணர்த்தி, பஞ்சாயத்திலும், யூனியனிலும் தீர்மானம் போடச் செய்தார்; முப்பது ஆண்டுகால அனுபவத்தில் சந்தித்த கல்வி அதிகாரிகளைச் சந்தித்துப் பேசினார் சென்னை வந்து பெரிய அதிகாரிகளையும், அமைச்சர்களையும் சந்தித்தார் அத்தனைபேரும், முறைப்படி விண்ணப்பிக்கும் மனு வந்தவுடனேயே, 'சாங்ஷன்' அளித்து விடுவதாக வாக்களித்தார்கள். எப்படியும் உயர்நிலைப் பள்ளி வந்து விடும் என்ற நம்பிக்கையில், இப்போது கட்டிடவேலைகள் நடைபெற்று வருகின்றன. மக்கள்தொகை, அண்மையில் எந்த உயர்நிலைப்பள்ளியும் இல்லாத நிலைமை, போதுமான கட்டடங்கள், ஆகியவை பள்ளி கட்டாயம் வந்துவிடும் என்ற நம்பிக்கையைக் கொடுத்தது

பஞ்சாயத்துத் தலைவர் ராமசாமி, வழக்கம்போல் அண்ணாவியைப் பார்க்க வந்தார். கலெக்டரிடம் போய், ஹைஸ்கூல் பேப்பரை நகர்த்த வேண்டுமே!

"நாளைக்கே கலெக்டர்கிட்ட போவேண்டா. நம்ம பையன் கலெக்டருக்கு 'ஸ்ட்ராங்கா' எழுதியிருக்கானாம். திருமலாபுரத்துக் காரங்க வேற நம்ம ஊர்ல ஏற்கனவே லைப்ரரி இருக்கிறதனாலே, அவங்க ஊர்லதான் ஹைஸ்கூல் வேணுமுன்னு கலெக்டருக்கு மனுப் போட்டிருக்காங்களாம். அவன் மனுப்போட்டு என்ன செய்ய முடியும்? நம்ம ஊர்ல ஹைஸ்கூலப் பார்க்காம இந்தக் கட்டை வேகாது நாளைக்கே போயிட்டு வந்துடுவோம். என் மவன், 'உடனே கலெக்டர பாருங்கன்னு', நேத்து லட்டர் போட்டிருக்கான்."

பஞ்சாயத்துத் தலைவர் ராமசாமி, அண்ணாவியைப் பார்த்துக் கொண்டிருந்தார். இப்படியும் ஒரு மனிதரா! அவருடைய மகன், டில்லியில் மத்திய தகவல் சர்வீஸில் கிரேட் ஒன் ஆபீஸராக

இருக்கிறான். அவனுக்குக் கல்யாணமும் நடந்து, ஒரு குழந்தையும் பிறந்து விட்டது. அப்பாவைத் தன்னோடு வந்துவிடும்படி எத்தனையோ தடவை எழுதிவிட்டான். இருந்தும் 'அண்ணாவி' தட்டிக் கழித்து வருகிறார். கிராமத்தைவிட்டுப் போக அவருக்கு முடியவில்லை ராமசாமி அவரிடம் கேட்டே விட்டார். "அண்ணாவி! தம்பியைப் பார்க்க உங்களுக்குத் தோணலியா?"

அண்ணாவி இந்தக் கேள்வியை எதிர்பார்க்கவில்லை என்றாலும், அவரிடமிருந்து பதில் உடனடியாகக் கிடைத்தது

"ஏண்டா! நீங்கஎல்லாம் என் பிள்ளைங்க தானடா. நான் பள்ளிக்கூடத்தில மட்டுமில்ல, வீட்டில கூட நீ, தங்கையா, மாடசாமி வேற, என் பையன் வேறன்னு பிரிச்சி நினைச்சதே கிடையாது. என் மகன்களில் ஒருவன் டில்லில இருக்கான், மத்தவங்க இங்கதானடா இருக்காங்க."

அண்ணாவியின் குரல் தழுதழுத்தது. ராமசாமி அவரின் பாதத்தையே உற்றுப் பார்த்தார். பிறகு உணர்ச்சி வசப்பட்டவர்போல் தன் கையை எடுத்து, அவர் பாதத்தைத் தொட்டு, கண்ணில் ஒற்றிக் கொண்டார்.

"டேய் கால வாராதடா.." என்று சொல்லிக் கொண்டே, அண்ணாவி, அந்த உணர்ச்சிக் கட்டத்திற்கு 'மசகு' போட்டார். ஒருவாறாக, உயர்நிலைப் பள்ளிக்கூடம் கிடைத்துவிட்டது முதல் கட்டமாக, ஒன்பதாம் வகுப்பு தொடங்கப்பட்டது ஊர்க்காரர்கள், உயர்நிலைப் பள்ளி கிடைத்த மகிழ்ச்சியை விழாவாக்கினார்கள். விழாவில் கலந்து கொண்ட கலெக்டர் முதலிய அதிகாரிகளும், இதர பிரமுகர்களும், மேடைப்பேச்சின் திறன் தெரிந்தவர்கள் அல்ல. என்றாலும் அவர்களின் பேச்சுக்களுக்குக் கூட்டத்தினர் அடிக்கடி கைத்தட்டக் காரணம், பேசிய அத்தனைபேரும், அண்ணாவி, கல்விக்காகவும், அந்த ஊருக்காகவும் ஆற்றிய சேவையைப் புகழ்ந்ததுதான். பஞ்சாயத்து யூனியன் தலைவர், அந்தப் பள்ளியைப் 'பூதலிங்கம் உயர்நிலைப் பள்ளி' என்று பெயரிட வேண்டும் என்று யோசனை கூறினார் மேடையில் இருந்த அண்ணாவி வெட்கப்பட்டுத் தலையைத் தாழ்த்திக் கொண்டார் ஆனால், அவர் அடிக்கடி எழுந்து தலைநிமிர வேண்டிய அவசியம் ஏற்பட்டது 'இன்னார் சார்பில் மாலை' என்று மாலைகள் மலையாவதுபோல், அவரிடம் படித்த ஒவ்வொரு மாணவரும், தங்கள்

அண்ணாவிக்கு மாலை அணிவித்தார்கள்

அந்தப் பள்ளி உயர்நிலைப் பள்ளியாகி விட்டதால், பி.ஏ., பி.டி படித்த ஒருவரைத் தலைமை ஆசிரியராகப் போட்டார்கள். இந்தப் பள்ளியில், வேலை செய்து கொண்டே பி.ஏ.பி.டி. படித்து 'புரமோஷன்' வாங்கி, அவர் தலைமையாசிரியராக, முதல் தடவையாகப் பொறுப்பேற்றார். தன்னை ஆட்டிவைத்த தலைமையாசிரியர் போல் தானும் ஆட்டிவைக்க வேண்டும் என்ற மனோபாவம் உள்ளவர் அவர் அண்ணாவிக்கு ஊரில் இருக்கும் செல்வாக்கும், மாணவர்கள் மட்டுமல்ல, இதர ஆசிரிய, ஆசிரியைகளும் அவரிடம் அதிக ஒட்டுதலாக இருப்பதும், தலைமையின் தலையைக் குடைந்து, நெஞ்சுக்குள் புழுக்கத்தை ஏற்படுத்தியது.

அண்ணாவி, தலைமை ஆசிரிய ஸ்தானத்திற்கு உரிய மரியாதையை அளிக்கத் தவறவில்லை அதே நேரத்தில், காலையில் பள்ளிக்கு வந்ததும், தான் "நமஸ்காரம் எச்செம் ஸார்" என்று சொல்லும் போதெல்லாம், அவர் அலட்சியமாகத் தலையை லேசாக ஆட்டுவதையும் கவனிக்கத் தவறவில்லை

முன்னால் வந்து நின்ற அண்ணாவியைப் பார்த்துவிட்டு "எஸ் " என்று கேள்வி கேட்கும் பாவனையில் இருந்தார் தலைமை ஆசிரியர்

"ஸார், நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதிங்க நம்ம லோகநாதனை சயன்ஸுக்கும், அருமைநாயகத்தைக் கணக்குக்கும், ரொட்டேஷன் பீரியடில போட்டிருக்கிங்களாம். லோகன் கணக்குல எக்ஸ்பர்ட்: நாயகம் சயன்ஸுல கெட்டி. அதனால. " தலைமையா சிரியர் முகத்தைச் சுளித்தார் பிறகு, "மிஸ்டர் பூதலிங்கம், இதுல நீங்க தலையிடாமல் இருக்கிறது பெட்டர்" என்றார் அலட்சியமாக அண்ணாவி, கூனிக் குறுகிக் கொண்டே வெளியே வந்தார்

இன்னொரு நாள், அட்டெண்டென்ஸ் ரிஜிஸ்டரில் கையெழுத்துப் போடுவதற்காக, அண்ணாவி தலைமையாசிரியரின் அறைக்குள் போனார் சுவரில், முருகனின் படமும், சரஸ்வதி தேவியின் படமும் காட்சியளித்தன இந்தத் தெய்வப் படங்களுக்கு, அண்ணாவி தினமும் ஊதுவத்தி கொளுத்திவைப்பார் வத்தியில் இருந்து எழும்புகை, இரு தெய்வப் படங்களையும் சூழ்ந்து வியாபித்து, பிரபஞ்சத் தோற்றத்தைக் காட்டும் இப்போதும் அந்தப்

படங்களில் புகை வியாபித்திருந்தது - தலைமை ஆசிரியரின் சிகரெட் புகை, அலை அலையாகச் சூழ்ந்தது

அண்ணாவி துடித்துப் போனார் கேட்கலாமா, வேண்டாமா என்று யோசிப்பவர் போல் சிறிது நேரம் தனக்குத்தானே அவகாசத்தைக் கொடுத்துவிட்டு, பின்னர், "தம்பி, நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதிங்க. ஒரு பள்ளிக்கூடம், பழனியைவிட, சிதம்பரத்தைவிட புனிதமானது அதில் மாட்டப்பட்டிருக்கும் தெய்வப் படங்கள், அதைவிடப் புனிதமானது இங்கே சிகரெட் பிடிக்கிறது நல்லதில்லை" என்றார்.

தலைமையாசிரியர் அண்ணாவிக்குப் பதிலளிப்பதுபோல், இப்போது சுருள் சுருளாகப் புகைவிட்டு, 'சிகரெட் சர்க்கஸ்' நடத்தினார். "நீயும் ஒரு வாத்தியாராடா" என்று வாய் வரைக்கும் வந்த வார்த்தைகளை, அண்ணாவி அடக்கிக் கொண்டார்

அண்ணாவியின் மௌனம், தலைமை ஆசிரியர்க்கு ஊக்கம் கொடுத்திருக்க வேண்டும் சிகரெட்டைப் புகைத்துக் கொண்டே, "பூதலிங்கம், உங்க வயசுக்காக நான் பொறுமையாய் இருக்கேன் அவன அந்தப் பாடத்துல போடு இவன இந்தப் பாடத்துல போடுன்னு அதிகப் பிரசங்கித்தனமா பேசினதைக் கூடப் பொறுத்துக் கிட்டேன் அப்படிப் பொறுத்ததினாலே இன்னைக்கு என் பெர்ஸனல் மேட்டர்ல தலையிடுறீங்க நான் தலைமையாசிரியர் பி ஏ , பி டி படிச்ச டபுள் கிராஜுவேட் லோயர் கிரேட்ல இருந்து வரல நிர்வாகத்தை எப்படி நடத்தணும், எப்படி எப்படி என் அறைக்குள்ளே நடந்துக்கணுமின்னு எல்லாம் எனக்குத் தெரியும். யூ கேன் கோ நவ் " அண்ணாவி, தள்ளாடிக் கொண்டே வெளியே வந்தார் கம்பீரமாக நின்று பழக்கப்பட்ட அவர், மேனி குலைந்து போனார் மனதுக்குள் புனிதமாக இருந்த சேவையின் நினைவுகள் அவரைச் சுட்டன "எனக்குத் தெரியும்" என்று தலைமையாசிரியர் எவ்வளவு அலட்சியமாகக் கூறிவிட்டார்! அண்ணாவி கூடத்தான் கலெக்டரைப் பார்ப்பது சம்பந்தமாகவும், ராமனின் காதல் விவகாரத்திலும்"எனக்குத் தெரியும்" என்று சொல்லியிருக்கிறார். ஒரே வார்த்தையில் இரண்டு அர்த்தங்களா? இருவர் பயன்படுத்திய ஒரே வார்த்தையில் எவ்வளவு எதிரும் புதிருமான நோக்கங்கள்! அந்த மனிதர்களால் ஒரே வார்த்தை கூட இரட்டை வேடம் போட்டுவிட்டதே!

அன்று இரவு, வெகுநேரம் வரை அண்ணாவி தூங்கவில்லை எவ்வளவு பெரிய பிரச்சினை வந்தாலும், 'ஏ, மனமே! அஞ்சாதே! எல்லாம் ஆண்டவனின் சித்தம்!' என்று ஒரு நிமிடம் சொல்லுவார். தூக்கம் தானாய் வந்துவிடும் மனைவி இறந்தபோதிலும் சரி, இந்தச் சாதாரணச் சொற்கள் மந்திரம் போல் பலிக்கும் ஆனால், இன்றோ இந்த வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டும் என்ற புலனுணர்வே அவருக்குப் புலனாகவில்லை "உங்க மேல ஆக்ஷன் எடுத்தா ஆபீஸையே பொசுக்கிப் பிடுவோம்" என்று சொன்ன ராமசாமியின் வார்த்தையும், "நான் பெத்த மவனே, உங்ககிட்ட மரியாதை இல்லாம நடந்தால், அவனைக் கண்டதுண்டமாய் வெட்டிப் புடுவேன்" என்று கூறிய தங்கையாவின் பேச்சும், அவருக்கு எங்கோ ஒலிப்பது போல் கேட்டது

அவருக்கு ஏற்பட்ட அவமானம் வெளியே தெரிந்தால் தலைமையாசிரியர் ஒரு நாள்கூட இருக்க முடியாது அவர் நினைத்தால், அந்தத் தலைமையை இருபத்துநாலு மணி நேரத்தில், அங்கிருந்து தூக்க முடியும் கடைசியில் என்ன நிற்கும்? அவர் கண்ணிலும் மேலாய் வளர்த்த அந்தப் பள்ளிக்கூடத்தை, 'பிராப்ளம் ஸ்கூல்' என்று அதிகாரிகளும், 'தகராறு பிடிச்ச பள்ளிக்கூடம்' என்று வெளியூர்க்காரர்களும் எள்ளி நகையாடுவார்கள் அந்தக் கெட்ட பெயருக்கு அவர் ஒரு தரப்பாக இருக்க விரும்பவில்லை எந்தத் தனிமனிதனையும் விட, ஒரு ஸ்தாபனம் பெரிது மனிதனுக்காகத்தான் ஸ்தாபனம் என்றாலும், அந்த ஸ்தாபனத்தை மானுடமாகக் கருதும்போது, தனிமனிதன் முக்கியத்துவமற்றவன் ஆகிறான் எண்ணற்ற துளிகள் சேர்ந்த கடலில், முதல்துளி என்பதற்காக, அதற்கு முக்கியத்துவம் கொடுக்கலாகாது சுயநல மனிதன் ஒரு ஸ்தாபனத்தையே ஆட்டிப் படைக்கலாம் ஆனால் அந்த மனிதன் போகக் கூடியவன் ஸ்தாபனம் போகாதது - போகக் கூடாதது அண்ணாவி நீண்டநேரம் சிந்தித்து, காலை மூன்று மணிக்கு ஒரு முடிவுக்கு வந்தார் அதன்பிறகு நன்றாகத் தூங்கினார்

மறுநாள், தான் ஓய்வு பெறப்போவதாக அரசுக்கு எழுதிய ஒரு கடிதத்தையும், அதற்கு முன்னேற்பாடாக நான்கு மாத விடுமுறை விண்ணப்பத்தையும் அண்ணாவி தலைமை ஆசிரியரிடம் கொடுத்தார் "உடனே, ஆக்ஷன் எடுக்கிறேன்" என்று தலைமை தலையாட்டியது அந்தத் தலையில் ஆணவம் நிறைந்திருப்பது, அண்ணாவிக்குத் தெளிவாகத் தெரிந்தது

சொல்லாமல் கொள்ளாமல், திடீரென்று ஊரைவிட்டுக் கிளம்பும் அண்ணாவியின் போக்கு, ஊரார்க்குப் புரியவில்லை தலைமை ஆசிரியருக்கும், அவருக்கும் ஒத்துவரவில்லை என்று காற்று வாக்கில் செய்தி அடிபட்டாலும், 'நம்ம அண்ணாவியிடம் மோதுறதுக்கு அவருக்கென்ன பைத்தியமா' என்று ஒவ்வொருவரும், தங்களைத் தாங்களே கேட்டுக் கொண்டார்கள் அண்ணாவியும், "மகளைப் பார்க்க ஆசை வந்திடுச்சி" என்று தட்டிக் கழித்தார்

ரயில்நிலையத்தில் ஒரே கூட்டம் சக ஆசிரிய ஆசிரியைகள், ராமசாமி, தங்கையா உட்பட, பெருந்திரளான மக்கள் அவரைச் சூழ்ந்து நின்றனர் 'அண்ணாவி' லீவில் போவதாகத்தான் அத்தனைபேரும் நினைத்துக் கொண்டார்கள். தலைமை ஆசிரியரின் போக்கைத் தன்னையும் மீறி சொல்லிவிடக்கூடாதே என்பதற்காக அண்ணாவி பேச்சைக் குறைத்துக் கொண்டார் தங்கள் அண்ணாவி, நான்கு மாத விடுமுறையில் போவதை, தங்கையாவாலும், ராமசாமியாலும் பொறுத்துக் கொள்ள முடியவில்லை

"அண்ணாவி, எங்கள உங்க பிள்ளைங்கன்னு சொன்னிங்க இப்போ இந்த மகன்கள விட்டுட்டுப் போவ எப்படி மனம் வந்தது?" என்று ராமசாமி அழாக் குறையாகக் கேட்டார்

அண்ணாவி முதல் முறையாகக் கண்ணீர் விட்டார் பின்பு மனதை அடக்குவது போல் மூச்சைப் பிடித்துக் கொண்டார் பிறகு, "டேய் சுப்பு, ராமன் விஷயம் ஞாபகம் அந்தப் பொண்ணு நளினா ரொம்ப நல்லவள் " என்று சுப்புவின் காதோடு பேசினார்

ரயில் வண்டியில், 'கார்ட்' கொடியை எடுத்தார்

அண்ணாவி பொதுப்படையாக,"ஏண்டா கலங்குறீங்க நான் தான் இன்னும் நாலு மாசத்திலே வந்துடுவேனே. அப்புறம், நம்ம ஹெட்மாஸ்டர்கிட்டேயோ வேறு எந்த ஆசிரியர்கிட்டேயோ ஏடாகோடமாய் நடந்தீங்கன்னா பிச்சுப்புடுவேன் பிச்சு" என்றார்

ரயில் வண்டியை விசில் உஷார் படுத்தியது பச்சைக் கொடி ஆடியது

அண்ணாவி சுற்றும் முற்றும் பார்த்தார் பிறகு, "அப்புறம் ஒரு சமாச்சாரம் நான் தங்கியிருந்த வீட்டில ஹெட்மாஸ்டர இருக்கச்

சொல்லுங்க அவர் சம்மதிக்கலன்னா நளினா சொன்னது மாதிரி, ஹெல்த் விஸிட்டர்களுக்கும், கிராம சேவகர்களுக்கும் அதை ஓய்வு அறையாய்க் கொடுத்திடுங்க" என்று ஓய்வு பெற்றவர் சொன்னார்

"நாலு மாதத்தில வந்திடுறதா சொன்னிங்க. இப்போ நீங்க சொல்றதப் பார்த்தா வரமாட்டீங்க போலிருக்கே நிஜத்தைச் சொல்லுங்க அண்ணாவி நீங்க வரமாட்டியளா?" என்று ராமசாமி கத்திய வார்த்தைகள் அண்ணாவியின் காதில் விழாதபடி ரயில், புகைவிட்டுக் கொண்டே புறப்பட்டு விட்டது (தலைமை ஆசிரியர் தன் அறையில் புகை விட்டுக் கொண்டிருந்தார் )

உண்மையைப் புரிந்து கொண்டதற்கு அடையாளம் போல் அழுத ராமசாமியின் கண்களை, தங்கையா அழுது கொண்டே துண்டை வைத்துத் துடைத்தார் "கடவுளை எந்நாளுமே கனவிலும் மறவாதே" என்ற பாடலை அவர்கள் முணுமுணுத்துக் கொண்டே, அண்ணாவியைக் கடவுளாகப் பார்த்தார்கள்

அந்த ஊரின் ஆன்மா, அன்புக்குரிய அண்ணாவி வடிவில், ரயிலில் பறந்து கொண்டிருந்தது

# பூக்காரி

கோமதியின் எதிர் வீட்டுக்காரி கனகம், நைலக்ஸ் புடவையும், ஊதாநிற ஜாக்கெட்டும் அணிந்து கொண்டு, கண்ணிற்கு மை தீட்டி, முகத்திற்கு நிதானமாகப் பவுடர் போட்டுக் கொண்டிருந்தாள் அவளின் இரண்டு வயதுப் பையன் பால்கனியில் நின்று வெளியே எட்டிப் பார்க்க முயற்சி செய்தான் சுவர் அவனுக்கு எட்டாமல் இருந்ததால் எம்பி எம்பிக் குதித்துக் கொண்டிருந்தான்.

"குழந்தையை இப்படியா வெளியே விட்டுட்டு நிற்பது?" என்ற குரல் கேட்டு, கனகம் வாசலுக்கு வந்தாள் அங்கே அவள் கணவன் குழந்தையை எடுத்துக் கொஞ்சிக் கொண்டிருந்தான். சற்று நேரத்திற்கு முன்புவரை, தலைவலி விளம்பரத்திற்கு போஸ் கொடுப்பவள் போல் 'போரடித்து'ப் போயிருந்த அவளது 'முகம் கணவனைக் கண்டதும் புன்னகை பூத்தது

"ஆபீசில் இருந்து வர, பத்து நிமிடம் தான் ஆகும் ஐந்து பத்துக்கு வரவேண்டிய நீங்கள், ஏன் ஐந்தரைக்கு வந்திருக்கிறீர்கள்?" என்று பொய்க் கோபத்தோடு, சிணுங்கிக் கொண்டு கேட்டாள் அவன் அதற்குப் பதிலளிக்காமல், அவள் இடையை வளைத்துப் பிடித்தான். "சரி சரி யாராவது பார்க்கப் போகிறார்கள்" என்று சொல்லிக் கொண்டு, கோமதி தங்களைப் பார்க்கிறாளா என்று நோட்டம் விட்டாள் அவள் நினைத்தபடியே கோமதி பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள் அவன், இடையைப் பிடிக்கும் போது, அவள் போய்விட்டாள் கனகத்திற்குப் பரம திருப்தி இன்னும் இடையை விடாத கணவனைப் பார்த்து "விடுங்க அவள் பார்க்கிறாள்" என்று கூறியபடி, எங்கே எடுத்து விடுவானோ என்று பயந்துபோய் அவன் கையின் மேல், தன் கரத்தை வைத்துக் கொண்டு, எவரும் 'பார்க்காத' வீட்டிற்குள் கணவனை இழுத்துக் கொண்டு சென்றாள் நடந்ததை எல்லாம், பாதி பார்த்தும், பாதி பார்க்காமலும் இருந்த கோமதி பெருமூச்சு விட்டபடி, கட்டிலில் உட்கார்ந்தாள் கனகம் அவளை மட்டந்தட்ட வேண்டும் என்பதற்காகத்தான், 'பகிரங்க'க் காதலை அதிகப் படுத்துகிறாள்

என்பது அவளுக்குத் தெரியும் ஆனால் அதற்கு தன்நிலையும் ஒரு காரணமல்லவா? கோமதியால் கண்ணீரை அடக்க முடியவில்லை

கோமதியும், எதிர்வீட்டு இளம் பெண்ணிற்கு அழகில் குறைந்தவளல்ல. சொல்லப்போனால், அவளை விட இவள் நல்ல நிறம், இளமை ஒரே ஒரு பல் தெற்றிக் கொண்டிருந்தது ஆனால், அதுவே அவளுக்கு ஒரு தனி அழகைக் கொடுத்தது. அவள் கணவன் தியாகுவே, இதைப் பலமுறை அவளிடம் சொல்லியிருக்கிறான் எல்லாம் 'அந்த' 'முப்பது நாள்' காலம் வரைதான் கோமதிக்கு நினைக்க, நினைக்க அழுகையாக வந்தது அவள் தனது கணவனுக்கு மனதறிந்து, எந்தவிதத் தொல்லையும் கொடுக்கவில்லை இருந்தும் அவன் அவளை அலட்சியப் படுத்துகிறான் எதற்கெடுத்தாலும் எரிந்துவிழுவதும், சிலசமயம் அடிப்பதற்குக் கையை உயர்த்துவதும், இரவு பத்து மணிக்கு மேல் வீட்டிற்கு வருவதும் அவனுக்கு வாடிக்கையாகி விட்டது

கதவைத் தட்டும் சத்தம் கேட்டு, கோமதி, புடவைத் தலைப்பால் கண்ணீரைத் துடைத்துவிட்டு, கதவைத் திறந்தாள் அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது வழக்கத்துக்கு விரோதமாக, அவள் .கணவன் தியாகு, வீட்டிற்கு வந்திருந்தான். ஏதோ நல்ல காலம் பிறந்து விட்டதாக நினைத்த கோமதிக்கு தான் பட்ட கஷ்டமெல்லாம் கடந்தகாலமாகி விட்டதாக நினைத்தாள் அந்த மகிழ்ச்சியில் 'இதோ ஒரு நிமிடத்தில் காபி கொண்டு வருகிறேன்' என்று சொல்ல நினைத்தவள், 'அவரே, முதலில் பேசட்டும்' என்று நினைத்து, காபி போடுவதில் முனைந்தாள் அவளின் கடைக்கண், அவனைக் கவனித்துக் கொண்டே இருந்தது

தியாகு, மனைவி என்ற ஒருத்தி இருப்பதை நினைத்ததாகத் தெரியவில்லை அவசர அவசரமாக, புதிய பேண்டையும், சட்டையையும் போட்டுக் கொண்டு, தலைமுடியோடு சற்று அதிகமாகப் போராடிவிட்டு முகத்துக்குப் பவுடர் பூசி பீரோவைத் திறந்து இருபது ரூபாயை எடுத்து, பையில் வைத்துக் கொண்டு, வெளியே செல்வதற்காகக் கதவைத் திறப்பதற்கும், கோமதி காபி கொண்டு வருவதற்கும் சரியாக இருந்தது அவன் அவசரமாக வந்த வேகத்திலேயே, வெளியேறுவதைப் பார்த்த கோமதியால் அழுகையை அடக்க முடியவில்லை!

"வந்ததும், வராததுமாக எங்கே போகிறீர்கள்?" தியாகு

விசுவாமித்திரனானான். "போகும்போதே கேட்டுவிட்டாயா தரித்திரம்...போகிற காரியம் உருப்பட்டால்தான்" என்றான் அலட்சியம் கலந்த கோபத்துடன். பத்து நிமிடம் தாமதமாய் வந்ததற்காகக் கணவனைக் கடிந்து கொண்ட எதிர்வீட்டுக்காரியின் நினைவு, கோமதிக்கு வந்தது. விளக்கின் வெப்பத்தைத் தாங்க முடியாமலும், அதே நேரத்தில் அதைவிட்டு, அகல முடியாமலும் தவிக்கும் விட்டில்பூச்சியைப் போல், கோமதி தவித்தாள். சோகத்தைத் தைரியமாக மாற்றிக் கொண்டு, "இப்படிப்பட்டவர்கள் ஏன் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்? ஏதாவது விடுதியில் தங்கி விரும்பியவாறு நடக்கலாமே!" என்று சொல்லிக் கொண்டு விம்மினாள்!

"அதைப் பற்றித்தான், நானும் நினைக்கிறேன்; விவாகரத்து செய்துவிட்டால் போகிறது" என்று நிதானமாகச் சொல்லிவிட்டு, அவசரமாக வெளியேறினான். அவன் அவசரம் அவனுக்கு,

சொல்லக்கூடாத ஒன்றை, அவனிடமிருந்து கேட்ட கோமதி, நிலைகுலைந்துபோய் கட்டிலில் அப்படியே சாய்ந்தாள். அந்தக் கட்டிலையே பாடையாக நினைத்து, தான் இறந்ததுபோல் கற்பனை செய்துகொண்டு நினைவிற்கும் கனவிற்கும் இடைப்பட்ட நிலையில், வாழ்வும் சாவும் சந்திக்கும் எல்லைக்கோட்டில், துன்பத்தின் தொடுவானில் தவித்து, புரண்டு விரக்தியடைந்து, தன்னையே மறந்து தலை சாய்த்தாள்.

தியாகு தலைவிரி கோலமாக பஸ் ஸ்டாண்டை நோக்கி நடந்தான். இன்றைக்கு எப்படியாவது அந்தப் பூக்காரியை வழிக்குக் கொண்டு வந்து விடவேண்டுமென்ற நோக்கத்தோடு மாம்பலம் செல்லும் பஸ்சுக்காகக் காத்து நின்றான். பஸ் வரும் வரைக்கும் காத்திருக்க அவனுக்குப் பொறுமையில்லை. வழியில் வந்த டாக்சியில் ஏறி மாம்பலம் விரைந்தான்.

தியாகுவிற்கும் கோமதிக்கும் திருமணம் நடந்து ஒரு வருடம் ஆகிறது. கிராஜுவேட் மனைவி கிடைப்பாள் என்று நினைத்த தியாகு, பெற்றோரின் வற்புறுத்தலால் எட்டாவது படித்த கோமதியை மணம் செய்ததில் ஓரளவு வருத்தம் இருந்தாலும் அந்தக் குறை, தொடக்க கால இல்லறத்தில் தெரியவில்லை. ஆபீசர் வேலையில் எந்தவிதமான கெட்ட பழக்கமும் இல்லாத கணவன் கிடைத்ததில் கோமதி மகிழ்ந்து போனாள். ஆனால், அந்த மகிழ்ச்சி

நீடிக்கவில்லை. திடீர் என்று தியாகுவிற்கு அவள் மேல் வெறுப்பு வந்துவிட்டது தனது வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாத, தன்னுடைய கலைத்திறன்களைப் புரிந்துகொள்ளும் அறிவில்லாத, தன் சுகதுக்கங்களைப் பகிர்ந்து கொள்ளும் பக்குவம் இல்லாத ஒரு ஜடத்தை மணந்துவிட்டதாகத் தியாகு நினைத்தான்.

திருமணத்திற்கு முன்பு தனக்கு வரப்போகிறவள் 'அப்படி இருக்க வேண்டும், இப்படி இருக்க வேண்டும்' என்று கற்பனை செய்த தியாகுவிற்கு, வந்தவள் அந்தக் கற்பனையில் கால்பங்குகூட இல்லை என்று எண்ணியதும், அவனுக்கு வாழ்க்கையே பிரச்சினையாகியது அதன் எதிரொலியாக, அலுவலகம் விட்டதும் நேராக வீட்டுக்கு வராமல் கண்டபடி சுத்துவது அவனுக்கு வழக்கமாகிவிட்டது. பரிவு உணர்ச்சியோ பாசமோ இல்லாதவள் மனைவியாகக் கிடைத்துவிட்டாள் என்ற நினைவில் எழுந்த சுய இரக்க உணர்வில் அவதிப்பட்ட அவன் இன்றைக்கு ஒரு முக்கியமான காரியத்திற்குப் போவதால் டிப்டாப்பாக இருக்க வேண்டும் என்பதற்காக ஆடைகளை மாற்றுவதற்காக வீட்டிற்குச் சென்றான்.

டாக்சி மாம்பலம் சென்றதும் பஸ் ஸ்டாண்டிற்குச் சற்று தொலைவில் இறங்கி ஐந்து நிமிடம் அங்குமிங்குமாகச் சுற்றிவிட்டு பஸ் நிலையத்திற்கு வந்தான் அங்குத் தன்னந்தனியாகப் பூக் கட்டிக் கொண்டிருந்த இளம் பெண்ணை, வேகத்தோடு பார்த்தான்.

இப்படி ஒரு பெண், இங்கே இருக்கிறாள் என்பது, நேற்று தான் அவனுக்குத் தெரியும். வழக்கமான ஊர் சுற்றும் வேலையில், நேற்று அவளைச் சந்தித்தான். அவள் பார்வை 'என்னவோ' போல் இருந்ததால், இன்று வந்து விட்டான். அவளுக்கு, பதினெட்டு, பத்தொன்பது வயதிருக்கும். தலையில் போதிய எண்ணெய் இல்லாததால், அவளின் கேசம், முன் நெற்றியை வருடிக் கொண்டிருந்தது. அதுவே, அவளுக்குத் தனி அழகைக் கொடுத்தது. செழிப்பான ஆமணக்குச் செடியைப் போன்ற தேகம் வறுமையில் வாடிய அதே நேரத்தில் வைரம் பாய்ந்த கண்களும், வாயில் புடவையும், ஸ்டைல் இல்லாத ஜாக்கெட்டும் அணிந்திருந்த அவள், ஆடி ஆடி பூத்தொடுக்கும்போது, அழகு அவயவங்கள் அத்தனையும் ஆடுவது, அழகே உருவெடுத்து, பிறகு அதுவே, ஆடுவது போல் தோன்றியது (குறைந்த பட்சம், தியாகுவுக்கு அப்படிக் காட்சியளித்தாள்.) அவளின் கண்கள் அங்குமிங்குமாக, ஊஞ்சல்

போல் ஆடின. வறுமையையே பெருமையாகக் கருதுபவள் போல், ஒருவித அலட்சிய - ஆனால் அகம்பாவமில்லாத பார்வை.

நேரம், இருட்டை நெருங்கிக் கொண்டே வந்தது பஸ்சுக்காகக் காத்திருப்பவன்போல், பாவலா செய்து கொண்டே, தியாகு அவளை நோட்டம் விட்டான் 'ஏன் இப்படி ஓரேயடியாக நிற்கிறான்' என்று எவரும் சந்தேகப்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காக, இடம் கிடைக்காது என்று தெளிவாகத் தெரியும் பஸ்களில் ஏற முயற்சி செய்வான் பஸ் கிடைக்காமல் தவிப்பவன் போல் "சே! சே! இந்த பஸ்களே மோசம்" என்று அவள் காது கேட்கும்படி முணங்கினான். அவளும் ஒருவிதமாகப் பார்த்து, சூள் கொட்டினாள்

ஆயிற்று. பஸ்களும் ஆட்களும் நகர்ந்தபடி இருந்தன. இப்போது ஆள் அரவம் இல்லை அவள் மட்டும் தனியாக இருந்தாள் பூக் கூடைகளை எடுத்து வைத்து விட்டு, புறப்படுவதற்கோ படுப்பதற்கோ தயார் செய்பவள்போல் ஆயத்த வேலைகளில் ஈடுபட்டாள். தியாகு அவளை நெருங்கினான் கால்கள் தாமாக நடுங்கின வியர்த்துக் கொட்டியது. எப்படிப் பேசுவது என்று அவனுக்குப் புரியவில்லை.

'எப்படிப் பேச்சைத் தொடங்குவது?' என்று அவன் தடுமாறிக் கொண்டிருக்கையில், "என்னா சாமி! பூ வேணுமா?" என்று அவளே கேட்டாள், குறும்பு தவழும் கண்களுடன்

"ஆமாம். வேணும்."

"எத்தனை முழம் சாமி?"

"மூன்று முழம்"

"உன் வீட்டுக்காரி, கொடுத்து வச்சவங்க. எந்த ஆம்பிளையும், பொண்டாட்டிக்கு மூணுமுழம் வாங்கினத இந்த நல்லம்மா பார்த்ததில்லை" நல்லம்மாவின் இந்தப் பேச்சைக் கேட்டதும், தியாகுவின் மனச்சாட்சி உறுத்தியது எப்படியோ சமாளித்துக் கொண்டு, "எனக்கு இன்னும் கல்யாணமே ஆகலை" என்று சொல்லி, முழுப்பூசணிக்காயைச் சோற்றுக்குள் மறைக்க முயற்சி செய்தான்.

"அப்படீன்னா, பூ யாருக்கு?" அவள் கேட்டாள்

"சாமிக்கு."

கோயில் பக்கம் தலையே வைக்காத தியாகுவிற்கு, தன் காதுகளையே நம்பமுடியவில்லை தான் பேசியதைத் தானே கேட்டதும், இவ்வளவு தூரம் பொய் பேசத் தனக்கு சக்தி இருக்கிறது என்பதை அறிந்ததும், அவனுக்குப் பெருமை பிடிபடவில்லை. நல்லம்மா, பூவை அளந்தாள் பூ மென்மையா, அவள் கரம் மென்மையா என்ற ஆராய்ச்சியில் தியாகு ஈடுபட்டான்

"நல்லா, பார்த்துக்க சாமி. மூன்று முழம்" என்று சொல்லி, பூவை அவனிடம் கொடுத்தாள். கரங்கள் உரசின. கண்கள் கிரங்கின. "உன் கையால், எதைக் கொடுத்தாலும் நான் வாங்கிக் கொள்வேன்."

"அடி கொடுத்தால் கூடவா?" அவள் சிரித்துக் கொண்டே கேட்டாள். தியாகுவுக்குத் துணிச்சல் வந்து விட்டது.

"நல்லம்மா! நீ சினிமாவுக்குப் போறதுண்டா?"

தன் பெயரை உச்சரித்ததும் அவளுக்கு மகிழ்ச்சியாகி விட்டது. இந்தப் பொறுக்கிப் பசங்க "நள்ளம்மா...நள்ளம்மா," என்பாங்க. இந்த ஆளு எவ்வளவு அயகா உச்சரிக்கான். நல்லம்மா, அவன் கேள்வியின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டு, "நான், அனாதை, வயசுப் பொண்ணு; சினிமால்லாம் கட்டுபடியாகாது" என்றாள்

"அப்படீன்னா, என் கூட வர்றியா?"

சொன்ன பிறகு, ஏன் சொன்னோம் என்று நினைத்து, அவள் திட்டப் போகிறாள் என்று பயந்து கொண்டிருந்தான் தியாகு. மாறாக, அவள் நாணத்தால் தலை கவிழ்ந்து, மெல்ல அவனை நோக்கி "நாளைக்குப் போவோமா?" என்றாள்.

தியாகுவிற்கு உலகம் அனைத்தும், தன்னை மதிப்பது போலவும், நல்லம்மாவிற்கும் தனக்கும் பூர்வஜென்மத் தொடர்பு இருப்பது போலவும் நினைத்தான். தெருவைச் சுற்றி வருகிற அவள் முகம் கருத்துவிட்டது. "சீக்கிரம் போயிடுங்க...அதோ பொறுக்கிப் பசங்க ..சந்தேகத்தோடு பார்த்துட்டு வர்றாங்க. போங்க" என்றாள்

"போகமாட்டேன். உன்னைக் காப்பாற்றி விட்டுத்தான் போவேன்."

"ஐயோ, அவங்க பொல்லாதவங்க முதல்லே கைவச்சுட்டுத் தான் பேசுவாங்க அதோ பஸ் வருது அதுல போங்க "

"உன் கதி?'

"எனக்கு இதெல்லாம் சகஜம். எப்படியும் நான் டெய்லி அவங்க கண்ணுல முழுச்சித்தானே ஆகணும் பழகிப் போச்சி. நீங்க போயிடுங்க "

நல்லம்மா அழாத குறையாகக் கெஞ்சினாள் சிறிது தயங்கிய தியாகு நிற்கலாமா வேண்டாமா என்பதுபோல் தயங்கித் தயங்கி, வந்து கொண்டிருந்த பஸ்ஸில் ஏறினான்

அப்படி ஏறும்போது கண்டக்டர் விசில் அடிப்பதற்காக விசிலை வாயில் வைத்திருந்தார் தியாகு அதில் மோத, விசில் கண்டக்டர் உதட்டில் மோத, தியாகுவிற்கு நெற்றி வீங்கிவிட்டது. கண்டக்டர், மூன்று நாளைக்கு விசிலே அடிக்க முடியாதபடி உதடு வீங்கிவிட்டது கண்டக்டர், தமக்கே உரிய பாணியில் திட்டியதையும் பொருட்படுத்தாமல், தியாகு, சேத்துப்பட்டில் இறங்கி, வீட்டை நோக்கி விரைந்தான். கையில் இருந்த மூன்று முழப் பூவை, அருவருப்பாக நோக்கினான். கோமதிக்குத் தேவை மூன்று முழக் கயிறுதானே யன்றி பூவல்ல. அந்த அசடுக்கு, பூ ஒரு கேடா? கையில் இருந்த பூவை நழுவ விட்டான் பின்னால் வந்த அப்பாவி ஒருவர் "சார் இந்தாங்க, உங்க பூவு .. கெட்டியாப் பிடிச்சுக்கங்க" என்று சொல்லி அந்தப் பூவைக் கொடுத்துவிட்டு தேங்ஸுக்காகக் காத்து நின்றார் தியாகு முணங்கிக் கொண்டே நடந்தான்

அனாதையான அந்தப் பூக்காரி பொறுக்கிகளிடம் எப்படி அவஸ்தைப் படுகிறாளோ? சிந்தனையிலாழ்ந்த தியாகு, பூவை எறிய வேண்டுமென்பதை மறந்து, வீட்டுக் கதவைத் தட்டினான்

அவன் நெற்றி வீங்கியிருப்பதைப் பார்த்த கோமதி துடிதுடித்துப் போனாள். "ஐயோ என்னங்க இது" என்று சொல்லிக் கொண்டே, அவன் நெற்றியை வருடினாள் தியாகு அவளை ஆச்சரியத்தோடு பார்த்தான் அவனுக்குக் காயம் படுவதும், அவள் அதற்காகத் துடிதுடிப்பதும் இதுதான் முதல் தடவை. இருந்தாலும் வழக்கமான பாணியில் 'தரித்திரம் பிடிச்ச நீ, போகும் போதே கலாட்டா பண்ணியதால் வந்தது' என்று வாய்வரை வந்த சொல்லை அடக்கிக் கொண்டு "இப்போ சரியாயிட்டுது" என்று எந்திரம்போல்

கூறினான் அவன் கையில் இருந்த பூவை, கோமதி கவனித்தாள் தனக்காக 'அவர்' பூ வாங்கியிருக்கிறார். எவ்வளவு அன்பிருக்க வேண்டும் அவருக்கு! இவ்வளவுக்கும், சாயங்காலம் ஏதோ ஆபீஸ் காரியமாய் புறப்பட்டவரிடம் சண்டை போட்டாள். இருந்தும் அவர் பூ வாங்கிக் கொண்டு வந்திருக்கிறார் முதன் முதலாக, கணவன் பூ 'வாங்கிக்' கொண்டு வந்திருப்பதை நினைத்த அந்தப் பேதைக்கு அவன் உலகையே தன் கையில் "இந்தா பிடி" என்று கொடுப்பது போல் தோன்றியது அவன் கரங்கள் இரண்டையும் தூக்கி, தன் கண்களில் ஒற்றிக் கொண்டாள் உணர்ச்சி பொங்க!

"அத்தான் ! உங்க கையாலே இதை தலையில் வையுங்க சாயங்காலம் உங்களைப் புரிஞ்சிக்காமே பேசிட்டேன்" என்று சொல்லி அவன் மார்பில் தலை சாய்த்தாள்

தியாகு துணுக்குற்றான் பிள்ளையார் பிடிக்கப் போனால், அவனையறியாமலே அவனுக்குத் தெளிவு பிறக்கத் தொடங்கியது. புதிய கோமதி ஒருத்தி இருக்கிறாள் என்பதை உணர்ந்த அவன் சிந்தனை பின்னோக்கிச் சென்றது

பூக்காரி அனாதைதான்

ஆனால், கசப்பான அனுபவங்களாலும், தவிர்க்க முடியாத நிகழ்ச்சிகளாலும், துன்பப்பட்டு, எதையும் சமாளித்துக் கொள்வாள் ஆனால் கோமதி இவள்தான்!

கோமதியையும் பூக்காரியையும் ஒப்பிட்டு நோக்கிய தியாகுவிற்கு ஞானம் பிறந்தது. குரங்காட்டம் போட்ட அவன் மனம் மெல்ல மெல்ல சம நிலைக்கு வந்தது

கோமதியின் உயர்ந்த குணமும் அன்புள்ளமும், அவனுக்குத் தெளிவாகப் புரிந்தது!

# எந்நன்றி கொன்றார்க்கும்...

அந்த வீடு ஒரு பன்றிக்குடில் மாதிரி, பனை ஓலைகள், மகுடம் மாதிரி மேல் பரப்பை மறைத்தும், மறைக்காமலும், காற்றோடு போராடி அலுத்த சல்லடைகளை விழுப்புண்ணாக்கி, கண் இமைபோல் மூடிமூடி ஆடிக் கொண்டிருந்தன முத்தையன் மாடுகளை அவிழ்த்து, தொட்டியில் 'தண்ணீர் காட்டிவிட்டு', வைக்கோலை 'அளிக்குள்' வைத்து, மாடுகளை மீண்டும் கட்டிவிட்டு நடையைக் கட்டினான்

அந்தத் தெருவிலேயே, பெரிய வீடான இன்னொரு ஓலை வீட்டிற்குள், அவன் நுழைந்தபோது, அவன் பெரியப்பா முத்துப்புதியவன், நார்க் கட்டிலில் உட்கார்ந்து வேப்பங்குச்சியைப் பல்லில் குத்திக் கொண்டிருக்கையில், மூட்டைப் பூச்சிகள் அவர் முதுகைக் குத்தின முத்தையனின் வருகையை அங்கீகரித்ததுபோல், வேப்பங்குச்சியைக் கீழே எறிந்துவிட்டு வாயைத் துண்டால் துடைத்துவிட்டு அவனை உட்காரச் சொல்வது போல், ஊன்றிக் கொண்டிருந்த ஒரு கையை எடுத்து, மடியில் வைத்தார் முத்துப்புதியவன்.

முத்தையன் உட்கார்ந்து கொண்டே, "என்ன பெரியப்பா நான் சொன்னது" என்றான்

"அது சரிப்பட்டு வராதுப்பா "

"ஏன் சரிப்படாது? போடு போடுன்னு போட்டே ஆகணும். நம்ம தம்பி சப் இன்ஸ்பெக்டர் பதவி ஏத்துக்கிட்டான். இதைக் கொண்டாடாட்டா, எதைக் கொண்டாடறது? இப்போ, பேக்குப்பய பிள்ளைககூட பிறந்த நாளுன்னு கேக் வெட்றான் நீரு என்னடான்னா "

"அதுக்கில்ல முத்தையா எதோ சின்னச்சாமி போலீஸ்ல

சேந்துட்டான் இதை எதுக்குடா பெரிசு படுத்தணும்?"

முத்தையனுக்கு ஆத்திரம் வந்தது. "நீரு சும்மா கிடயும் சின்னப்பய அருமை எனக்குல்லா தெரியும் நீரு நாலு காடு சுத்தியிருந்தா, இப்படிப் பேசியிருக்கமாட்டீர் பாவூர் சத்திரத்தில் ஒரு போலீஸ்காரன்...ஒருவன், நான் வண்டில அதிகமா பாரம் ஏத்திக்கிட்டுப் போனா ஒரு டீயும், இரண்டு போண்டாவும் அபராதம் போடுவான் நேத்து என்னடான்னா, எனக்கு நெஸ்கப் காபி வாங்கித் தரான் நம்ம சின்னப்பய .சின்ன எஜமான் ரூட் வேலையில் சேர்ந்துட்டாரேன்னு கேக்குறான் "

முத்துப்புதியவன், ஒரு தந்தைக்குரிய பெருமையில், கடித்த மூட்டைப் பூச்சியை நசுக்காமல் வெயிலில் தூக்கிப் போட்டுக் கொண்டே, "வேண்டான்னு பாக்குறேன். அதோடு பணம் இல்ல.." என்றார்

"நம்மள, இந்த ஊர்க்காரப் பயல்க என்னபாடு படுத்தறாங்கன்னு உமக்குத் தெரியும் இனிமெ கிட்ட வருவாங்களா? இவங்க முன்னால எங்க சின்னப்பய பெரிய மனுஷனாயிட்டான்னு காட்டவேண்டாமா? நீரு பேருக்கு வந்து நின்னா போதும். பணத்தை நான் கவனிச்சுக்கிடுறேன் "

முத்தையன், பெரியய்யாவின் பதிலுக்குக் காத்திராமல், அங்கே கிடந்த 'கோடாலி'யை எடுத்துக் கொண்டு மரம் வெட்டப் போய்விட்டான் முத்துப்புதியவன், முத்தையன் பணம் செலவழிக்கப் போகிறானே என்று சங்கோஜப்படவில்லை ஏற்கனவே, சின்னப்பயல் என்ற செல்லப் பெயரைக் கொண்ட சின்னச்சாமி, பி ஏ படிப்பதற்காக, நிறையப் பணம் கொடுத்திருக்கிறான். அந்த உதவி சாகரத்தில், பெரியய்யாவின் சங்கோஜகாயம் கரைந்து போய்விட்டது

அந்த ஊரில் முத்துப்புதியவனும், அவரது சொந்தக்காரர்களும் எளியவர்கள் ஆள் பலமும், பண பலமும் இல்லாத அவர்களை, பக்கத்துத் தெருக்களில் உள்ள காரை வீட்டுக்காரர்கள், ஒரு சின்னத் தகராறு வந்தாலும் போதும். கை வைத்துவிடுவார்கள் முத்துப்புதியவனையே எத்தனையோ தடவை அடித்திருக்கிறார்கள் முத்துப்புதியவன் திருப்பி அடிப்பதற்கு எவ்வித முயற்சியும் செய்யமாட்டார் அந்த முயற்சியின் விளைவுகள் அவருக்குத் தெரியும் 'சமாதான சக வாழ்வு' வேண்டுமானால், நூறுக்கும் மேலான தடியன்களைச்

சொக்காரர்களாகக் கொண்டவர்களை அனுசரித்துப் போக வேண்டும் என்பது, அவருக்கு அடிகொடுத்த பாடம் இவர் வீட்டு ஆட்டுக்குட்டி, காரை வீட்டுக்காரன் ஆறுமுகம் வயலில் மேய்ந்தால், ஆறுமுகம் பெரியப்பா பேரன் வந்து, ஆட்டுக்குட்டியைத் தூக்கிக் கொண்டுபோய், சமையல் செய்து விடுவான் இப்படிச் செய்யலாமா என்று முத்துப்புதியவன் கேட்பதில்லை 'ஆட்டைக் கொண்டு போய்த் தின்னதே தின்னான் நமக்கும் கொஞ்சம் 'கறி' கொடுத்திருக்கலாமே' என்றுதான் நினைத்துக் கொள்வார் இவர் வீட்டு வயலில், காரை வீட்டான் ஆடு மேய்ந்து, இவர் அதுமேல் ஒரு கல்லைப் போட்டால் போதும், காரை வீட்டுக்காரர்களின் வேலைக்காரர்கள் வந்து இவரை அடிப்பார்கள் இப்படி அடிபட்டு அடிபட்டு, உடம்பில் வைரம் பாய்ந்த முத்துப்புதியவன், ஊர்க்காரர்களைப் பகைக்காமல் அஞ்சி வாழ்வது பழக்கமாகிவிட்டது அப்போது சின்னப்பையனாக இருந்த முத்தையனிடம் ஆற்றாமையால் வெறுமையும் சினமும் மிஞ்சும், அதை அவன் மாடுகளின் முதுகில் காட்டுவான்

முத்தையனுக்கு அப்போது முப்பது வயதிருக்கும் காரை வீட்டான் ஒருவன், நடுத்தெருவில், பெரியம்மாவை, புளியவிளாறால் ஓங்கி ஓங்கி அடித்துக் கொண்டிருந்தான் ஏதோ அவர்கள் தோட்டத்தில் ஒரு முருங்கைக்காயைப் பறித்துவிட்டாளாம். வண்டியை ஓட்டிக்கொண்டு வந்த முத்தையன், வண்டியிலிருந்து குதித்து, அடித்துக் கொண்டிருந்தவனை நாலு அறை போட்டுக் கீழே தள்ளி, தலையில் காலை வைத்துக் கொண்டான் இதைப் பார்த்த காரை வீட்டார்கள் முப்பது பேர் திரண்டு வந்தார்கள் வண்டியில் இருந்த கோடாலியை எடுத்துக் கொண்டு "ஏல, ஒரு அப்பனுக்குப் பிறந்தவங்கன்னா இங்க வாங்கடா ." என்று கர்ஜித்த முத்தையனைக் 'கை வைக்க'ப் பயந்து, விவகாரம் வைத்தார்கள் வயசுப் பயல் ஒருவன் மட்டும் சிலம்பு ஆடத் தெரிஞ்சவன் மாதிரி ஒரு கம்பைச் சுத்திக்கிட்டு வந்தான் முத்தையன் கோடாலிக் காம்பைப் பிடித்துக் கொண்டு அவனை நோக்கி ஓடியபோது, சென்னையில் சிலம்பு கற்ற அந்தச் சிலம்பன் வீட்டை நோக்கி ஓடினான்

அன்றிலிருந்து முத்துப்புதியவன் வகையறாவை காரை வீட்டார்கள் அடிப்பது கிடையாது இப்போது முத்தையனுக்கு நாற்பது வயதாகிவிட்டது வறுமையின் வெறுமையால் டி பி வந்து,

பிறகு அது குணமானாலும் அவனின் அஞ்சாமைக் குணம் போய்விட்டது இதைத் தெரிந்தவர்கள் போல, மூன்று மாதத்துக்கு முன்னால் காரை வீட்டார்கள், முத்துப்புதியவனின் இளைய மகன் வேலுவை, விலாவில் இரண்டு இடி கொடுத்துவிட்டார்கள் முத்தையனின் ரத்தம் கொதித்தாலும், நாலு நாளில் அது ஆறிய சோறாகியது காரை வீட்டார்கள் பழையபடி வாலாட்டத் தொடங்கியபோது சின்னசாமிக்கு சப்-இன்ஸ்பெக்டர் பதவி கிடைத்ததில், முத்தையனுக்கு ஒரே மகிழ்ச்சி இனி ஒரு பயலும் வாலாட்ட மாட்டான் அவன் பெரியய்யா மகள்களும், சின்னையா மகள்களும் கௌரவத்தோடு நடக்கலாம் பெண் கேட்டு வருகிற வெளியூர்க்காரர்களை, "இந்த ஓலை வீட்டுப் பயல்க வீட்டிலேயா சம்பந்தம் வைக்கப் போறிய? பேசாம வேலையைப் பார்த்துக்கிட்டுப் போங்கய்யா" என்று கேவலமாகப் பேசிய காரை வீட்டார்களே, சின்னசாமிக்குப் பெண் கொடுக்கலாம் சீச்சீ! இந்தப் பயல்க வீட்டிலேயா சம்பந்தம் வைக்கிறது? ஒரு நாளும் நடக்காது

முத்தையன் இன்பக் கற்பனையில் திளைத்தவாறே, ஏற்கனவே சாகப் போவது போல் இருந்த வண்டி மாடுகளை முந்நூறு ரூபாய்க்கு விற்றான் தெரு முழுதும் பந்தல் தென்னை ஓலையால் ஜொலித்த பந்தலுக்குக் கீழே, சலவைத் தொழிலாளி கொடுத்த சேலைக●ாக் கட்டினான் வாழை மரங்களை நட்டு உள்ளூர் நையாண்டி மேளக்காரனை ஒரு போடு போடச் சொன்னான் ஸ்பீக்கர் வைத்து, ஒரு ரிக்கார்ட் டான்சுக்காரியைக் கூட்டிக் கொண்டு வந்து ஆடச் சொன்னான் குடும்பத்தில் இப்போதுதான் இந்த மாதிரி ஒரு விழா நடப்பதில், முத்துப்புதியவனும் பெருமிதம் அடைந்தார். 'அண்ணன் பிள்ளையை விட, தென்னம் பிள்ளை மேல், என்யாங்க இந்தப் பயபிள்ளை தென்னை மரத்தை வித்துல்ல செலவளிக்கிறான்' என்று முத்தையனின் மீது தனிப்பாசம் கொண்டார் முத்தையனின் மனைவி, இவன் இருக்கிற சொத்தை வித்து, செலவளிப்பதைக் கண்டு முணுமுணுத்தாள்

காரைவீட்டார்கள், அழைக்காமல் வந்தார்கள் அவர்களுக்குள்ளேயே சண்டை வந்தால், சப்-இன்ஸ்பெக்டர் சின்னச்சாமியின் தயவு தேவை என்பது அவர்களுக்குத் தெரியும் அழையா விருந்தாளிகளைப் பார்த்ததும், முத்தையனின் உள்ளம் கொதித்தது. பெரியய்யாவிடம் போய், "பெரியய்யா, இந்த நாறப்பய மக்க வெக்கம் மானமில்லாம வந்திருக்கான் பாத்தீங்களா இவங்கள நீரு போகச் சொல்றீரா, நான் சொல்லட்டுமா?" என்றான் தன்னையும், பெண்டு

பிள்ளைகளையும் அடித்த காரை வீட்டார்கள், விழாவுக்கு வந்திருப்பதை ஒரு பெரிய கௌரவமாக நினைத்துக் கொண்டிருந்த முத்துப்புதியவனுக்கு, முத்தையன் சொன்னது எரிச்சலைக் கொடுத்தது

"என்ன பெரியய்யா, இந்தப் பயல்கள தலையில கை வைச்சி வெளிய தள்ளப் போறேன்" என்று வந்திருந்தவர்களுக்குக் கேட்கும்படி, சற்று உரக்கவே கத்தினான் முத்தையன் "முப்பழி செஞ்சி முத்தத்துக்கு வந்தவனைக் கூட வெளில போகச் சொல்லக் கூடாதுடா" என்று முத்துப்புதியவன் சொல்லி, தம்பி மகனின் ரத்தத்தைக் குளிர்ச்சியாக்கினார் முத்தையனுக்கு விழா கையைக் கடித்தது! அவன் எதிர்பார்த்த எஸ்டிமேட்'டை விடப் பணம் அதிகமாகச் செலவானது இதைப் பெரியய்யாவிடமோ, மனைவியிடமோ சொல்லவில்லை

சின்னசாமியின் புகழ், அந்தக் கிராமத்தில் கொடிகட்டிப் பறந்தது அவன் ஜீப்பில் வருவதும், போலீஸ்காரர்கள் அவனுக்குப் பாரா கொடுப்பதுமாகி, முத்துப்புதியவன் ஒரு பெரிய மனிதர் ஆனார் காரை வீட்டுக்காரர்களும், அந்த ஓலை வீட்டிற்குள் சதா காத்துக்கிடந்தார்கள் முத்தையன் மாடுகளை விற்றுவிட்டதால், குழி வெட்[illegible]ற அளவுக்கு இருந்த நிலத்தை, குத்தகைக்கு அடைத்து விட்டு, மரம் வெட்டும் தொழிலில் முழுமூச்சாக இறங்கினான் சில சமயம் அவனைத் தேடி, சில ஆட்கள் சிபார்சுக்கு வருவார்கள் "எங்க சின்னப்பயகிட்ட சொல்லி முடிச்சுடுறேன். ஏன்னா, உம்ம விவகாரத்தில் நியாயம் இருக்கு அவன் செய்யாமலா போவான்" என்று முத்தையன் அடித்துப் பேசுவான்

இரண்டு வருடங்கள் ஓடின முத்தையன், தோட்டத்திற்கு இரண்டு இளநீர் பறிக்கப் போயிருந்தான் அவன் பெரியய்யா முத்துப்புதியவன் மகன் வேலு, நான்கு ஆட்களை அவமானமாகப் பேசிக் கொண்டிருந்தான் அந்த நால்வரும் முத்தையனைப் பார்த்ததும் "பாரு முத்தையா இந்தப் பயலை எங்க மரத்தில மூன்று தேங்காய் மொத்து இருந்தது இன்னைக்கு இல்லியேன்னு சொன்னோம் அதுக்கு 'என்னை எப்படித் திருடன்னு சொல்லலா' முன்னு கண்டபடி பேசுறான்" என்று கம்ப்ளெய்ண்ட் கொடுத்தார்கள் முத்தையன், வேலுவைக் கோபத்தோடு பார்த்தான் வேலு, அதைப் பொருட்படுத்தாதது போல், "எவண்டா பயல், முப்பத்திரெண்டு பல்லும் கீழே விழுந்துடும்" என்று பேசிக் கொண்டே போக,

'பாத்தியா முத்தையா அவன் பேசறதை உன் முகத்துக்காகப் பார்க்கிறோம் இல்லன்னா, இங்கேயே குழி வெட்டி மூடிடுவோம்" என்றான்' நால்வரில் நல்லவன் ஒருவன்

வேலு, "அட மானங்கெட்ட மக்களா எனக்காடா குழி வெட்டுவீங்க குழி?" என்று பொரிந்தான்

முத்தையனுக்கு ஏக ஆத்திரம் வேலுவைப் பார்த்து, "கழுதைப்பயல, ஏண்டா கழுதை மாதிரி கத்தற? பேசாம வீட்டுக்குப் போடா"என்று உரிமையோடு கோபித்தான் வேலு ஒரு துள்ளுத் துள்ளினான் "எங்க இன்ஸ்பெக்டர் அண்ணனே இந்த மாதிரி கேட்க மாட்டாரு, இவரு யோக்கியரு வந்துட்டாரு" என்றான் அண்ணனைப் பார்த்து முத்தையன், காய்ப்பு விழுந்த கையால், லேசாக வேலுவின் தலையைத் தட்டி, "போடா வீட்டுக்கு" என்றான்

வேலு 'குதி குதி' என்று குதித்தான் "கூலிக்குப் போற பயலே, என்னையாடா அடிச்சே? உன்ன என்ன பண்ணறேன்னு பாரு" என்று "ஓ" வென்று கத்திக் கொண்டு ஊரைப் பார்த்து ஓடினான் அவனைத் துரத்திக் கொண்டு பின்னால் ஓடப்போன முத்தையனை, அந்த நால்வரும் பிடித்துக் கொண்டார்கள்

முத்தையனுக்குக் கோபத்தைவிட வருத்தமே அதிகம் அவன் வளர்த்த பிள்ளை, அவனையே 'அடா புடா' என்று சொல்கிறான் இந்த வேலுவை எத்தனை தடவை அடித்திருப்பான்! ஏன்? சின்னப் பயலைக்கூட எத்தனையோ தடவை அடித்திருக்கானே அவன் பெரியய்யா, "முத்தையா, இந்தப் பயல்க காலு தரையில் பாவாம நடக்கிறாங்க கொஞ்சம் மண்டையிலே தட்டி வைடா" என்று எத்தனை தடவை சொல்லியிருக்கிறார் வரட்டும் பெரியய்யாவிடம் சொல்லி, அங்கேயே இந்த வேலுப்பயல இரண்டு போடு போடணும்

முத்துப்புதியவன் வீட்டுக்குக் காலையில் முத்தையன் போனபோது, அவன் பெரியய்யா அவனின் வருகையை அங்கீகரிக்காததுபோல் வேப்பங்குச்சை எடுத்து, பல் தேய்க்கப் போனார் அவன் உட்காரக் கூடாது என்பது போல், மடியில் இருந்த கையை எடுத்து, கட்டிலில்' ஊன்றினார்

முத்தையன் எதையும் பொருட்படுத்தாதது போல் "பெரியய்யா, இந்த வேலுப் பயல் என்னைக் கூலிக்காரங்கிறான் என்னைச் சொன்னாலும் பரவாயில்லை நான் கூலிக்காரன்தான் துள்ளங் கூட்டம் ராமசாமியையும், அவரு தம்பிங்களையும் வாய்க்கு வந்தபடி ஏசுறான்" என்றான்

முத்துப்புதியவன், வேலுவைப் பார்த்துவிட்டு, முத்தையனைப் பார்த்தார் நீண்ட மௌனத்திற்குப் பிறகு, "அதுக்காக அவனை நீ கை வைக்கிறதா?" என்றார்

முத்தையன் இந்தப் பதிலைத் தாங்கிக் கொள்ள முடியாதவன் போல்,"என்ன பெரியய்யா, நீரே இப்படிச் சொன்னா, நான் யாருகிட்ட சொல்றது? நான் இவனை லேசா தட்டாட்டா, அவங்க நாலுபேரும் இவனை உதைச்சிருப்பாங்க இவனை அடிச்சா, நான் பொறுத்துக்கிட்டு இருக்க முடியுமா?" என்றான்

"நீ பெரிய யோக்கியன், போய்யா! எங்க அண்ணனை, எப்பப் பார்த்தாலும் சின்னப்பய சின்னப்பயன்னு கண்டவங்க கிட்டலாம் சொல்ற இதுக்கே உன் முதுகுத் தோலை உரிக்கணும்" என்றான் வேலு

முத்தையன் பரிதாபமாகப் பெரியய்யாவைப் பார்த்தான் அவர், மூட்டைப் பூச்சிகளை நசுக்கிக் கொண்டிருந்தார் வேலு விடவில்லை "உனக்கு சூடு சுரணை இருந்தா எங்க வாசற்படி மிதிக்கக் கூடாது சப்-இன்ஸ்பெக்டர் தம்பியை அடிச்சிட்டானாமுன்னு ஊர்ல கேவலமா பேசறாங்க ஏய்யா நிக்கற? மரியாதையா போ" என்றான்

முத்தையன், "ஏல! நாங்க பெரிய ஆட்கள் பேசுறோம் நீ பேசினன்னா பல்லை உடைச்சுப்பிடுவேன்" என்றான்

உடனே, "உன்னைப் பத்தி என்னடா நினைச்சுக்கிட்டிருக்கே? மரியாதையா ஊர்ல ஒழுங்கா இருக்கணுமுன்னா 'அடிப்பேன் பிடிப்பேன்' என்கிறதை வைச்சுக்காதே" என்று வேலு சொன்னான்.

"பெரியய்யா, அவன் பேசறதைப் பார்த்தீங்களா" என்று முத்தையன் முறையிட, முத்துப்புதியவன், "அவன் பேசறது தப்பா இருந்தா நான் கண்டிச்சிருக்க மாட்டேனா? என் பிள்ளையை நீ எப்படிடா கை வைக்கலாம்?" என்றார் முத்தையனுக்குப் பூமி சுழன்றது ஏதோ புரியாத ஓர் உலகில், பொல்லாத பிராணிகளிடம் இருப்பதுபோல் ஒரு பிரமை, என்ன சொல்வது என்று தெரியாமல், அவன் தவித்துக் கொண்டிருந்த போது, வேலு குறுக்கிட்டு, "ஏல, நீ வேட்டி எதுக்குடா கட்டணும்? நல்ல மனுஷனுக்கு ஒரு சொல், நல்ல மாட்டுக்கு ஒரு அடி இன்னும் நிக்கிறியே" என்றான்

முத்தையனின் அங்கமெல்லாம் கோபாவேசம் கொண்டது வேலுவைப் போய்த் தலையைப் பிடித்தான் பிறகு, "உன்னை எடுத்த

பாசம் போகலடா வேற ஆளாக இருந்தால், இந்நேரம் குடலை உருவி தோள் மாலையாப் போட்டிருப்பேன்" என்று கத்த, முத்துப்புதியவன், "எங்க, என் மவனைத் தொடுடா பார்க்கலாம்" என்று கட்டிலிலிருந்து குதித்தெழுந்தார்

"இந்தப் பய பிள்ளைகள மண்டையில தட்டுடா" என்று சொல்லும் பெரியய்யாவின் வார்த்தை, முத்தையனுக்கு மண்டையில் அடித்ததுபோல் இருந்தது எதுவும் பேசாமல் பொங்கிவந்த விம்மலை, துண்டை வாயில் வைத்து அடைத்துக் கொண்டே வெளியே போனான் இருக்கட்டும், சின்னப் பயகிட்ட சொல்லிக்கிடலாம் பாலைப் பார்க்கிறதா, பால் காய்ந்த பானையைப் பார்க்கிறதா?

நான்கு நாட்கள் கழித்து, சின்னப்பயலிடம் சொல்வதற்காக, முத்தையன் ஒரு எட்டு முழ வேட்டியைக் கட்டிக் கொண்டு, சட்டைக்கு மேலே ஒரு 'மப்ளர்' துண்டைப் போட்டுக் கொண்டு கிளம்பப் போனான் அப்போது நான்கு போலீஸ்காரர்கள், அவன் கையில் விலங்கை மாட்டினார்கள். முத்துப்புதியவனையும், அவர் மகன் வேலுவையும் கொலை செய்ய முயற்சி செய்த குற்றத்தின்படி அவனைக் கைது செய்து, தெருவில் நாயைப் போல் இழுத்துக் கொண்டு போனார்கள். முத்தையன் மனைவியால் ஒப்பாரி வைக்க முடியவில்லை துக்கப் பிரவாகம் அவள் இதயத்தை ஒரேயடியாக அமுத்தியதால் அழுகை நிவாரணம் அவளுக்குக் கிடைக்கவில்லை

ஊரே வேடிக்கை பார்த்தது "நான் 'எங்க குடும்பம், எங்க குடும்ப'முன்னு எப்போதும் பிரிச்சுப் பேசினேன் என் தம்பி அப்படிப் பேசக் கூடாதுன்னு, ரெண்டு கைகளையும் சேர்த்து வச்சிட்டான். பரவாயில்லை உடனே விலங்குமாட்டாம, அண்ணனை தள்ளலாமா, வேண்டாமான்னு நாலு நாளு யோசிச்சிருக்கான் டேய், வேடிக்கை பார்க்காதீங்கடா! உங்கள ஒரே நாளுல தள்ளியிருப்பான் நான் என்கிறதினாலே நாலுநாள் யோசித்திருக்கான்."

முத்தையன் புலம்பிக் கொண்டே திரும்பிப் பாராமல் நடந்தான். வேடிக்கை பார்த்த ஊரார், அந்தச் சிறிது நேர இரக்கத்தில், முத்தையனுக்காக வருத்தப்பட்டார்கள் 'சின்னப்பயல்' என்று அவன் செல்லமாக அழைக்கும் சப்-இன்ஸ்பெக்டர் சின்னசாமி, தன் சக ஊழியரான அந்த வட்டார சப்-இன்ஸ்பெக்டருக்கு, டெலிபோனில் நன்றி சொன்னான்

# உறவின் விலை

சாந்தி அந்தக் கடிதத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள் உறவின் சுமையைத் தாங்கிக் கொண்டிருந்த அந்தக் கடிதத்தை, தந்தையால் தாங்கிக் கொள்ள முடியுமா என்ற சந்தேகத்தோடு, அவள் மனம் அலையாகிக் கொண்டிருந்தது,

' வெளியறையில், ஓர் ஈசிசேரில் அவள் தந்தை சிவராமன் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார் அரசாங்க வேலையிலிருந்து ஓய்வுபெற்ற பிறகு, அந்த ஈசிசேரிடம் அவர் தஞ்சம் புகுந்திருந்தார் அவரைப் போலவே, அந்த ஈசிசேரும் இற்றுப் போயிருந்தது

சாந்திக்கு நல்ல இடத்தில் வரன் அமைந்ததில் அவருக்கு உள்ளூர மகிழ்ச்சி பம்பாயில் ஒரு மகளும், டில்லியில் இன்னொரு மகளும் நல்ல நிலையில் வாழ்வதும், தன் ஒரே மகன் நல்ல வேலையில் இருப்பதும், அவர் மனத்தின் நேர்மை கணக்கில் சேர்ந்த சேமிப்புகள். அந்த சேமிப்போடு கடைசிச் சேமிப்பையும் சேர்த்து விட்டால் அவர் தனது வாழ்க்கை 'அக்கௌண்டை' முடித்து விடலாம்

சாந்தி தயங்கித் தயங்கி அந்தக் கடிதத்தைக் கொடுத்தாள். எதிரே சோபாவில் பத்திரிகை படித்துக் கொண்டிருந்த அவர் மகன் குமார், கடிதத்தையும் தந்தையையும் நோட்டம் விட்டான் வீட்டுப் பொறுப்புகளை சாந்தியிடம் ஒப்படைத்து விட்டு 'ஓய்வு பெற்ற' இருபத்திரண்டு வயது ராஜம்-குமாரின் மனைவி -நேரத்தை எப்படிப் போக்குவது என்று யோசித்துக் கொண்டிருந்தாள்

கடிதத்தைப் படித்த சிவராமன் ஒரு பெருமூச்சோடு மகனிடம் அதை நீட்டினார் அவன் அதை மனைவிக்குக் கேட்கும்படி படித்தான்.

"அன்புள்ள அப்பாவுக்கு,

மகள் கோமதி எழுதுவது, அநேக நமஸ்காரம் சாந்திக்கு எஞ்சினீயர் மாப்பிள்ளை கிடைத்ததில் மிகுந்த சந்தோஷம் ஆனால், மாப்பிள்ளைக்கு என்னைவிட அதிக சந்தோஷம் ஆனால் "சாந்திக்கு பத்தாயிரம் நகையும், ஐயாயிரம் ரொக்கமும் கொடுக்கிற அளவுக்குப் பணம் இருக்கும் உன் வீட்டாருக்கு, உனக்குப் போட

வேண்டிய நகை பாக்கியைப் போட மறந்து போயிட்டோ? நான் என்ன இளைத்த மாப்பிள்ளையா?" என்று கேட்கிறார் அவருக்குப் பணம் பெரிதில்லை "வருகிற மாப்பிள்ளையை விட, வந்த மாப்பிள்ளை மட்டமா?" என்கிற மனப்பான்மை அவருக்கு உன் அப்பாவுக்கு எழுதி, போடுவதாகச் சொன்ன பாக்கி நகையை உடனே அனுப்பி வைக்கச் சொல், அப்போது தான் கல்யாணத்திற்குப் போக முடியும்" என்கிறார் நான் பெண்ணாகப் பிறந்திருக்கக் கூடாது அவர் சொல்வதும் நியாயமாகப் படுகிறது அதே நேரத்தில் உங்களிடம் எழுதவும் தயக்கமாக இருக்கிறது இந்தப் பிரச்சினையை நீங்கள் தான் தீர்க்க வேண்டும்"

பம்பாய்

அன்புள்ள மகள்,
**கோமதி**

சிவராமனிடமிருந்து ஒரு விரக்திச் சிரிப்பு வெளிப்பட்டது "ஆஹா! அவள் பெண்ணாகப் பிறந்திருக்கக் கூடாதாம்; நான்தான் அவளுக்கு அப்பாவாக இருந்திருக்கக் கூடாது எவ்வளவு லௌகீகமாக, அந்த லௌகீக ஊசியை ஆன்மீகப் பழத்தில் ஏற்றி எழுதியிருக்கிறாள்!"

"குமார்! இதுக்குத் தாண்டா உன்னிடம் படித்துப் படித்துச் சொன்னேன் அந்த நகைப் பாக்கியை அப்போதே தீர்த்து, கணக்கை முடித்திருக்க வேண்டும். கொண்டான் கொடுத்தானுக்கிடையில் பணம் குறுக்கே நிற்கக் கூடாது"

மகனிடம் பேசிய தந்தை, ஆற்றாமையால் விம்மினார் தாலுக்கா ஆபீஸில், பணம் கொடுக்க வந்த எத்தனையோ நபர்களைப் புழுக்களைப் போலப் பார்த்த சிவராமன், மகனிடம் கை நீட்டிக் கேட்க வேண்டிய இயலாமையில் எழுந்த நெருப்பு ஜ்வாலையில் ஒரு புழுவைப் போலத் துடித்தார்

குமார் ஒன்றும் பேசவில்லை அவனின் மௌனமே அவன் சொல்ல வேண்டியதைச் சொல்லிற்று 'இங்கே என்ன கொட்டியா கிடக்கிறது' என்று வாய்வரைக்கும் வந்த வார்த்தையை அடக்கிக் கொண்ட ராஜம், "இதுக்குத்தான் விரலுக்குத் தகுந்த வீக்கம் என்கிறது சாந்திக்கு நம்ம அந்தஸ்துக்குத் தக்க இடத்தில் பார்த்திருந்தால் பிரச்சினையே வந்திருக்காது" என்று மாற்றிச் சொன்னாள் குமார் மௌனமாக அவள் கூற்றை அங்கீகரித்தான்

தன் மகன் அவளைத் தடுத்துக் கேட்கவில்லை என்ற

வெம்மையில் சிவராமன், தன் செல்லாக் கோபத்தைச் செலவழிக்க நினைத்தவராய், ‘ “உங்களுக்கெல்லாம் பணம் அதிகமாகிறது என்பதைவிட, சாந்திக்கு நல்ல இடத்தில் வரன் கிடைத்து விட்ட பொறாமை..”

“அப்பா! அவள் அப்படி என்ன பெரிதாகச் சொல்லி விட்டாள்? நீங்கள் என்னவெல்லாமோ பேசுகிறீர்களே...” என்றான் குமார் அவன் குரல், எரிச்சலை வெளிப்படையாகக் காட்டியது

சிவராமனால் கோபத்தை அடக்க முடியவில்லை!

“ஓஹோ! இப்பச் சொன்னது சின்ன விஷயம்; இன்னும் பெரிய விஷயங்களைப் பிரயோகப் படுத்தாமல் வைத்திருக்கிறீர்களோ? பரவாயில்லை. நீங்கள் ஒரு துரும்பைக் கூட எடுத்துப் போடவேண்டாம். என்னால் கோமதிக்கு நகையை அனுப்ப முடியும்” என்று சொல்லிவிட்டு, கிராமத்தில் இருந்த பழைய வீட்டை நினைத்துக் கொண்டார்.

பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைப்பதுபோல் “சாந்தி காப்பி கொண்டு வா” என்று ஆணையிட்டாள் மருமகள். ஒரு வேளை, மாமனாரின் பேச்சுக்குப் பதிலாக வந்த உதாசீனமோ? எதிர்காலக் கணவனோடு, கற்பனையில் லயித்துக் கொண்டிருந்த அந்தத் தூரில் முளைத்த தளிர், தெளிவான உலகத்திற்கு வந்து, தனக்காக மட்டுமல்ல; தந்தைக்காகவும் அழுதது.

கிராமத்திற்குப் போய் வீட்டையும், நிலத்தையும் பணமாக்கி, அதைப் பம்பாய் மகளுக்கு அனுப்பிவிட்டு வந்த சிவராமனை, அவரது இரண்டாவது மகள் - டில்லிக்காரி - இரண்டு பிள்ளைகளோடு வாசலில் வரவேற்றாள்.

“என்னம்மா? மாப்பிள்ளை வரவில்லையா?”

அவள் மௌனமாகக் கண்ணீர் வடித்தாள். சிவராமன் பதறிப் போனார். “என்னம்மா? என்ன நடந்தது?”

“அப்பா! எனக்கு எட்டாயிரம் ரூபாய்க்கு நகை போட்டு விட்டு, சாந்திக்குப் பத்தாயிரத்துக்கு நகை போடுவது என் மாமியாரின் கண்ணை உறுத்துகிறது உங்கள் மாப்பிள்ளையிடம் ஏதேதோ சொல்லிக் கொடுத்து விட்டார். அவர் என்னை இங்கே அனுப்பி விட்டார். இரண்டாயிரம் போனால்தான் அவர் இந்த வாசலை மிதிப்பாராம்; நான் அந்த வாசலை மிதிக்க முடியுமாம்.”

சிவராமன் இப்போது பதறவில்லை முற்றும் நனைந்தார்க்கு

ஈரமில்லை. "உன் கணவரும் கடைசியில்..... நான் அவரை ஜென்டில்மேனாக நினைத்தேன்..."

"அப்பா! அவரை ஒன்றும் சொல்லாதீர்கள். நீங்களும் எல்லாப் பிள்ளைகளையும் ஒரே மாதிரியாகப் பாவித்திருக்கணும்.."

"ஆகக்கூடி, உங்களுக்கு இரண்டாயிரம் கூடுதலாக வேண்டும் என்பதைவிட, சாந்திக்கு இரண்டாயிரம் குறைவாகக் கொடுக்க வேண்டும் என்பதுதான் முக்கியம், இல்லையா?" என்று சொல்லிவிட்டு' நெட்டுயிர்த்தார் சிவராமன்.

"ஐயையோ, நான் அப்படி நினைக்கவில்லை. சாந்தி என் தங்கை. ஆனால், ஊர் உலகத்தையும் பார்க்க வேண்டியிருக்கேன்னு, அங்கே நடந்ததை ஒளிவு, மறைவு இல்லாமல் சொன்னேன். ஏற்கெனவே இளக்காரமாக நினைக்கும் மாமியாரிடம், தலைக் குனிவாக இருக்குமேன்னு நினைச்சிச் சொன்னேன்."

"நீ தலைகுனிய வேண்டியதில்லை அம்மா; அதற்கென்றே, ஆண்டவன் ஒருவனை ஸ்பெஷலாகப் படைத்திருக்கிறான்."

ஒட்டுக்கேட்டே பழக்கப்பட்ட ராஜம், வெளியே வந்து, "சாந்திக்கு என்ன குறையாம்? பேசாமல் எட்டாயிரம் ரூபாய்க்கு நகை போட்டால் போதும்" என்று நியாயம் வழங்கினாள்

வாக்குத் தவறாத சிவராமனுக்கு, வார்த்தை வரவில்லை. மருமகள் சொல்வதை விரும்பினாலும், விரும்பா விட்டாலும் ஏற்றுத்தான் ஆகவேண்டும். மகனிடம் நிலைமையை விளக்கினால், 'பைல்' பழையபடி மருமகளிடம்தான் வரும். "உங்க மகளுக்கு, உங்க இஷ்டப்படி நகை போட்டால் போதும்" என்று ராஜத்தின் அப்பாவிடம் அவர் சொன்னது பழைய கதை. "இன்னும் பெரிய இடத்தில் பார்த்திருக்கலாமே" என்று சொன்ன உறவினர்களைத் துச்சமாகத் தள்ளிவிட்டு, இவளை மருமகளாக்கியது ஒரு பிரசுரமாகாத கதை. அதை அந்த எழுத்தாளன் மட்டும்தான் நினைவுபடுத்திக் கொள்ளலாம்.

பெரும்பான்மை, மருமகள் கட்சியை ஆதரிப்பது அவருக்குத் தெரிந்து விட்டதால், அதை ஏற்றுக் கொண்டார்; ஏற்றுத்தான் ஆகவேண்டும். டில்லி மகள், மன்னியின் கட்சிக்கு ஓட்டுப்போட்டவள் போல, தன்னுடைய கண்களில் பிரகாசத்தைக் காட்டினாள்.

"உன் கணவருக்கு எழுதும்மா! 'சாந்திக்குப் பத்தாயிரம் நகை

இல்லை; எட்டாயிரம்தான். உடனே வந்து உங்கள் மைத்துனியை ஆசீர்வதியுங்கள்' என்று எழுதிவிடு." சிவராமன் மகளைப் பார்க்காமல் சுவரைப் பார்த்துச் சொல்லிவிட்டு வீட்டிற்குள் சென்றார். அவர் கிராமத்துச் சொத்தை விற்றுவிட்ட எரிச்சலில், அவர் வரும்போதெல்லாம் எழுந்திருக்கும் குமார் 'கண்டுக்க' வில்லை.

சாந்தி மீதே அவருக்கு ஒருவித எரிச்சல். இவளும் இப்படித்தான் நடந்துகொள்வாளோ? மாட்டாள். நல்ல வேளையாக அவளுக்குப் பிறகு, அவர் கடமையை நினைவூட்ட எந்த ஜீவனும் இல்லை. சாந்திக்கு ஒரு வழியைக் காட்டிவிட்டால், சிவராமனுக்கு நிரந்தர ஓய்வு கிடைத்துவிடும்.

திருமண நாள் நெருங்க, நெருங்க, உறவினர்களும் வீட்டை நெருங்கினார்கள். பம்பாய்க்காரி மாப்பிள்ளையோடு வந்திறங்கி னாள். டில்லி மாப்பிள்ளை, "பிள்ளைகளைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. வந்து விட்டேன்" என்று முன்னதாகவே வந்து மனைவியிடம் மணிக்கணக்கில் கொஞ்சிக் கொண்டிருந்தார்.

திருமண வைபவம் எளிய முறையில் தொடங்கியது. 'ராஜபார்ட்' மேளம் வைக்காதது பிள்ளை வீட்டாருக்கு ஒரு குறை. வெற்றிலை பாக்கு தேவையான அளவுக்குக் கொடுக்கப்படவில்லை என்பது உறவினர் வருத்தம். சிவராமனுக்குக் காசு தீர்ந்துவிட்டதால், அவர் பெயரில் மகன் குமார் அழாக் குறையாகச் செலவழித்தான். 'கஞ்சன்' சிவராமன் மகனைச் செலவு செய்ய விடாமல் தடுப்பதாகச் செய்தி, மருமகள் மூலம் மாப்பிள்ளை வீட்டார் வரைக்கும் எட்டியது.

சிவராமன் குமாரைப் பார்த்தார். அவன் தங்கைக்கு மாமனாராகப் போகிறவரிடம், "ப்ளீஸ், எட்டாயிரம் ரூபாய்தான் புரட்ட முடிந்தது. பெரிய மனசு செய்யுங்கள்" என்று சொன்னான். 'இந்தாருங்கள் செக். நாளைக்கே பேங்கில் என் கணக்கில் உள்ள பத்தாயிரம் ரூபாயில் இரண்டாயிரம் ரூபாயை எடுத்துக் கொள்ளுங்கள்' என்று சொல்ல அவனால் முடியவில்லை.

டில்லி மாப்பிள்ளை "நான் அப்போதே நினைச்சேன்", என்று பத்திரமாகத் தொலைவில் இருந்து முணுமுணுத்தார். பம்பாய் மாப்பிள்ளை, தன் மாமனார் மோசமானவர் என்பதற்கு இதுவும் ஒரு ஆதாரம் என்று சொல்வதுபோல் பக்கத்திலிருந்தவரைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டினார்.

சம்பந்தியைச் சமாளிக்க யாராலும் முடியவில்லை. அவர் நேராக மணப்பந்தலை நோக்கிப் போனார். அதற்குள் மணமகன் கீழே இறங்கி தந்தையிடம் சென்றான். பெருமை அனைத்தையும் இழந்து தலைகுனிந்தார், சிவராமன்.

சாந்திக்குத் தந்தையின் நிலை கண்டு வருத்தம். அதே நேரம் 'அவர்' தந்தையைச் சமாதானப்படுத்தப் போவதில் ஒரு பெருமை. "அவரல்லவோ ஆண்மகன்! 'பணம் பெரிதில்லை. பந்தம் பெரிது' என்று தன் தந்தையிடம் சொல்லப்போகிறார்..." சாந்தி கற்பனையில் லயித்தாள்.

சாந்தியின் நெற்றியில் சுருக்கங்கள் விழுந்தன. அவள் என்ன காண்கிறாள்? 'அவரும்' தந்தையோடு சேர்ந்து கொள்வதுபோல் தெரிகிறது. அவரும் உரக்கப் பேசுகிறார்!

சாந்திக்குப் பின்னால் நின்றுகொண்டிருந்த அவள் அக்காள், தகராறு நிலவும் இடத்துக்குப் போய்விட்டு மீண்டும் மணப்பந்தலுக்கு வந்தாள்.

"என்னவாம் அக்கா.......... 'அவர்,' என்ன சொல்கிறார்?" என்று சம்பிரதாயத்திற்கு விரோதமாகக் கேட்டாள், சாந்தி.

"உன் மாப்பிள்ளையும் அவர் அப்பாவும் சேர்ந்து கொண்டு வீம்பு பேசுகிறார்கள். இரண்டாயிரம் வராவிட்டால் தாலி கட்டமாட்டாராம்..."

பரபரப்பான கூட்டத்தில் இன்னும் ஒரு பரபரப்பு. சிவராமன் தன் சம்பந்தியின் கால்களில் இரண்டு கைகளையும் குவித்து எழுந்தார். சாந்தி தன் கண்களை மூடிக் கொண்டாள். பிறரின் கைகளைக் கூட கெஞ்சலின் அறிகுறியாகப் பிடிக்காத அவரின் இரு கரமும், சாந்தியின் தலையெழுத்தை நிர்ணயிக்கும் அந்தப் பணக் கடவுளின் காலடியை வணங்கின. கூட்டத்தினிடையே ஓர் உருக்கம். பசுமையாக இருந்த சாந்தியின் உள்ளம் அந்தப் பசுமையின் சில்லிட்ட குளிர்ச்சியில் பனிக்கட்டியாய் உறைந்தது.

திருமணம் காணவந்த உறவினர் அனைவரும் மாப்பிள்ளையின் தந்தையிடம் மன்றாடினர். ஒரு வழியாகச் சம்பந்தி சமாதானமானார்.

"இதெல்லாம் சகஜம்! சம்பந்தி சண்டை இல்லாத கல்யாணமே இல்லை" என்ற குரலைக் கேட்டு அதுவரை கண்களை மூடியிருந்த சாந்தி கரங்களை விடுவித்தாள்.

மாப்பிள்ளைப் பையன் கொஞ்சம் 'பிகு' செய்து கொண்டே மணப்பந்தலை நோக்கி வந்தான்.

"தாலி கட்டுகிற நேரம் வந்துடுத்து...சீக்கிரம், சீக்கிரம்..." என்றார் புரோகிதர். அவர் ஒருவர்தான் நடப்பதை நிதானமாகக் கவனித்துக் கொண்டிருந்தார். எத்தனையோ கல்யாணங்களை நடத்திவைத்த அவருக்கு இவையெல்லாம் ஒரு 'நியூஸே' இல்லை.

"கெட்டி மேளம்" என்றார் புரோகிதர். மேளம் கொட்டியது. நாதஸ்வரங்கள் உச்சஸ்தாயியில் குரல் கொடுத்தன. மாப்பிள்ளை தாலியைச் சாந்தியின் கழுத்தை நோக்கி உயர்த்தினான்...

திடீரென்று கூட்டமே எழுந்தது. நாதஸ்வர வித்வான்கள் பாதி மூச்சை வாய் வழியாக விட்டார்கள்.

மேளத்தை அடிக்கும் கம்புகள் பாதியில் நின்றன.

நடக்கக் கூடாதது - நடக்கும் என்று எதிர் பார்க்காதது நடந்து விட்டது.

சாந்தியின் கழுத்தை நோக்கி வந்த தாலிச் சரட்டுக் கயிறு புரோகிதரின் வாயில் விழுந்தது.

அவள் செய்கை, கூட்டத்தில் நிர்மலமான ஒரு நிசப்தத்தை நிலவச் செய்தது. யாரும் எதுவும் பேசவில்லை. அவமானத்தால் கண் சிவந்த சம்பந்தி, மாப்பிள்ளையைக் கூட்டிக் கொண்டு, உறவு சூழ வெளியேறினார். உறவினர்கள் "இப்படி ஒரு பெண் இருப்பதை விட இறப்பதேமேல்" என்று முணுமுணுத்துக் கொண்டார்கள்.

சிவராமன் மகளை நோக்கி வந்தார். அவர் முகத்தில் சினமா, சிறுமையா, பீதியா எதுவென்று கண்டுகொள்ள முடியவில்லை. சாந்தியின் கண்களை நேராகச் சந்தித்தார். தந்தையின் கண்ணும் மகளின் கண்ணும் ஆன்மீகமாகப் பேசிக் கொண்டன.

"சாந்தி! நான் அந்த ஆளின் காலில் விழுந்ததுபோல் உன் காலிலும் விழுந்து உன்னைச் சம்மதிக்க வைத்திருப்பேன். உன் காலில் விழவில்லை என்கிறாயா? நான் அப்படிச் செய்திருந்தாலும் உன்னை மணக்க அவர்கள் சம்மதித்திருக்க மாட்டார்கள். ஏனென்றால், இந்த நாட்டில் மாப்பிள்ளை கோபிக்கலாம். ஆனால், மணப்பெண் கோபிக்க முடியாதம்மா."

சிவராமன் துண்டை வாயில் வைத்தார். சாந்தி அவர் காலில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்தாள்

"மன்னித்துக் கொள்ளுங்கள் அப்பா! பணத்தை கால் தூசியாக நினைத்த நீங்கள், அந்தத் தூசியின் காலில் விழுந்ததை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அது மட்டுமல்ல, கணவன்-மனைவி என்ற புனிதமான உறவு, இரண்டாயிரம் ரூபாயில் தொங்கிக் கொண்டிருக்கும் என்பதை நினைக்கவே முடியல. என்னை மன்னிச்சிடுங்க அப்பா! பணத்தைக் கொடுத்து, பந்தத்தை வாங்குவதைவிட உங்களையும், உங்களுக்குப் பிறகு கடவுளையும், நினைத்துக் காலத்தைக் கழித்துவிடுவேன். ஒரு வேளை நானும் திருமணத்திற்குப் பிறகு உங்களிடம் லௌகீக உறவை மட்டுமே வைக்க வேண்டியது இருக்கலாம். விலைகொடுத்து வாங்கும் பந்தத்திற்காக, விலை மதிக்க முடியாத இந்தப் பந்தத்தை வெட்டிக் கொள்ள மாட்டேன். இது சத்தியம் அப்பா."

சிவராமன் மகளை நாலு அறை போடுவார் என்று நினைத்தவர்கள் ஏமாந்தார்கள். காலில் இருந்த முகத்தை நிமிர்த்தி தனது மார்பில் அணைத்துக் கொண்டார்.

வீடே அழுதது. டில்லிக்காரி விக்கி விக்கி அழுதாள். அவள் மாப்பிள்ளையின் கைக்குட்டை நனைந்தது. பம்பாய்க்காரி குப்புறப்படுத்து, தலையணையை ஈரமாக்கினாள். குமார் - ஒரு கம்பெனியின் பப்ளிக் ரிலேஷன் ஆபீஸர் - பேமிலி ரிலேஷனின் விநோதத்தால் மனமார அழுதான். அவன் மனைவி எல்லோரையும் விட சத்தம் போட்டு அழுதாள். அவர்கள் அனைவரும் தங்கள் குற்ற உணர்வை அழுகையின் வாயிலாகக் கழுவாய் காண நினைத்தார்களோ? அல்லது அழுதுவிட்டால் அவர்கள் பொறுப்பு தீர்ந்துவிட்டதாய் எண்ணினார்களோ?

ஆனால், சிவராமனும் சாந்தியும் அழவில்லை. அவர்களைக் கண்ணீரும் அனாதையாக்கியது.

# கலெக்டர் வருகிறார்

ஊராட்சி ஒன்றியம் என்ற போர்டு ஒன்று மட்டும் இல்லையானால் அந்தக் கட்டிடத்தை மண்டிக்கடை என்று சொல்லுவார்கள். கட்டிடத்தின் தனி அறை ஒன்றில், ஆணையர், கமிஷனர், பி.டி.ஓ, அப்பாவி, எமகாதகன், பொறுக்கி என்று பல்வேறு தரப்பினரால் பல்வேறு விதமாக அழைக்கப்படும் மனிதர் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்தார்.

"குட் மார்னிங் சார்", என்று சொல்லிக் கொண்டே யூனியன் மானேஜர் அவர் எதிரே உட்கார்ந்தார்.

"புது கலெக்டர் வரார்! சீக்கிரமாய் வரக் கூடாது?"

மானேஜர் ஒரு பெருச்சாளி. சிறிய குற்றம் சாட்டப் பட்டாலும் உடனடியாக இன்னொரு நபர் மீது பெரிய குற்றத்தைச் சாட்டி விடுவார்.

"சார், நம்ம விவசாய வளர்ச்சி அதிகாரி இன்று லீவ்."

"ஏனாம்?"

"அவங்க நிலத்தில் அறுவடையாம்."

"பெர்டிலைஸர் டிஸ்ட்ரிபியூஷன், கிணறு வெட்டுவோன், விவசாயக் கருவிங்க விற்பனை இதையெல்லாம் கலெக்டர் கேட்டாருன்னா யாரய்யா சொல்றது?"

"நம்ம யூனியன் இன்ஜினியரும் லீவ்."

"அவருமா?"

"ஊர்ல வீடு கட்றாரு. அதைப் பார்க்கப் போயிருக்காரு.

"என்னய்யா இது அநியாயம்? கலெக்டர் என் தாலியை அறுத்தால் யாருய்யா திருப்பிக் கட்டுறது? பைனான்ஸியல் இயர் எண்டு, எந்த ஊருக்கு ரோடு வேணும், பாலம் வேணும் என்கிறதைக் கலெக்டர் கேட்டா எவன் பதில் சொல்லுறது?"

"ஸார், இன்னுமொரு முக்கியமான விஷயமுங்க. நம்ம சேர்மென் ஒரு கல்யாணத்துக்குப் போறாராம்."

"போவட்டுமே!"

"அதில்லீங்க, நம்ம ஜீப்பை கேக்கிறாரு."

"அதெப்படி? கலெக்டருக்கு வேணுமே?"

"நான் சொல்லிப் பார்த்துட்டேனுங்க, அவரு கேக்கல."

" இதென்ன பெரிய ரோதனையாப் போச்சே."

"சேர்மன் சுத்த மோசம் சார், இன்னைக்குப் பார்த்துக் கேக்கறாரு."

"உம், சேர்மனுக்கு ஜீப்பைக் கொடுத்துக் கல்யாணத்துக்குப் போகச் சொல்லு. அவங்க அவங்க தலை விதிப்படி நடக்கட்டும்."

"கலெக்டர் வரும்போது எப்படி சார் ஜீப்பைக் கொடுக்கிறது?"

"இந்தாய்யா மானேஜரு! கலெக்டரைப் பகைச்சா அவன் ஜில்லாவுக்குள்ளேதான் மாத்துவான். சேர்மனைப் பகைச்சா, அவரு ஜில்லாவுக்கு வெளியே மாத்திடுவாரு. பேசாம ஜீப்பைக் கொடுத்திடும்."

அரசாங்க ஓய்வு விடுதி ஓய்வின்றிக் கலகலத்தது. தாசில்தார், அவருடைய 'கான்ஃபிடண்ட்' குமாஸ்தா பண்டாரம், கமிஷனர், பஞ்சாயத்துத் தலைவர்கள், சில கிராம சேவகிகள் ஆகிய பல நபர்கள், கலெக்டர் தங்கி இருந்த அறையின் திரைச் சீலையை லேசாக விலக்கி விலக்கிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். உள்ளே ஒரு பெண் பிரசவ வேதனையில் துடிக்கிறாள் என்றும் இவர்கள் வெளியே நிற்க முடியாமலும் உள்ளே போக முடியாமலும் தத்தளிக்கிறார்கள் என்றும் விஷயம் தெரியாதவர்கள் நினைத்துக் கொண்டால் அதில் தப்பில்லை

டவாலி பியூன் திரைச் சீலைக்கு வெளியே தர்பார் நடத்திக் கொண்டிருந்தான்.

"ஏம்ப்பா, ஆர்.டி.ஓ. பிரமோஷன் பைலில் ஐயா கையெழுத்துப் போட்டுட்டாரா?" என்றார் தாசில்தார், பியூனைப் பார்த்து.

● "இந்த ஊரிலே நல்ல அரிசி கிடைக்குமாமே?" என்று அவன் பதில் சொன்னான்.

"என் பைல் எந்த நிலையில் இருக்குதுப்பா?"

"ஏன் சார், இந்த ஊர்'ல அல்வா கூட ரொம்ப விசேஷமாமே?"

"பண்டாரம், இவரு சொல்றதை நோட் பண்ணிக்கோ. ஏம்ப்பா, பைல் எப்படி இருக்கு சொல்லு."

● "ஐயா 'நல்ல மூட்'ல' இருக்கும்போது மேலே எடுத்து வச்சிடறேன். டோண்ட் ஒர்ரி சார். இந்த ஊர் அரிசியைச் சும்மா சொல்லக் கூடாது சார், மல்லிப்பூ."

இப்போது பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் நெளிந்து கொண்டும், கொஞ்சம் உரிமையோடும், "இந்தாப்பா முனுசாமி, என்னை மாத்தப் போறாங்களாமே உண்மையா?" என்றார். அவன் அவருக்கு உடனே பதிலளிக்கவில்லை. ஒரு காலத்தில் வேறு ஓர் ஊரில் இவரிடம் பியூனாக வேலை பார்த்த போது என்ன பாடு படுத்தினார் என்பதை நினைத்துக் கொண்டான்.

கமிஷனர் பழையதை மறந்து புதிய முறையில் குழைந்தார்.

"டோண்ட் ஒர்ரி ஸார். உங்களை மாத்துறதா நாங்க இன்னும் தீர்மானம் எடுக்கல," என்றான் பியூன்.

திடீரென்று எல்லோரும் உஷாரானார்கள். திரைச்சீலை அசைந்தது. கலெக்டர் - வடநாட்டுக்காரர் - வெளியே வந்தார். வயது முப்பது மதிக்கலாம்.

"ஐ ஆம் தாசில்தார், ஹி இஸ் கமிஷனர்," என்றார் தாசில்தார்.

"ஐ ஆம் கமிஷனர். ஹி இஸ் தாசில்தார்," என்றார் ஆணையாளர்.

"ஐ ஸீ " என்றார் கலெக்டர். பிறகு "ரெடியா?" என்றார்.

"ரெடி ஸார். எல்லா பைல்களையும் கொண்டு வந்திருக்கேன்." கமிஷனர் அனலிலிட்ட மெழுகானார்.

டவாலி இடைமறித்தான். "ஐயா பைலுங்களைக்

கேட்கவில்லை. சாப்பாடு ரெடியான்னு கேக்குறாரு.

அறிமுகத்திற்கு அந்தஸ்தில்லை என்பதுபோல ஒதுக்கப் பட்ட குமாஸ்தா பண்டாரம் குறுக்கே புகுந்தான்.

"ஐயாவுக்கு மட்டன் வேணுமா? சிக்கன் இஷ்டமா? ஒரே நிமிஷத்துல கொண்டாந்துடுறேன்."

கலெக்டர் கண்களை மூடித் திறந்தார். "ரெண்டும் வேணும்" என்றார்.

"எல்லா பைல்ஸும் ரெடி" என்றார் கமிஷனர் மறுபடி. அரைக் கண்களாலேயே கலெக்டர் அவரை எரித்தார்.

"ஜீப் கொடு. ஊரைச் சுத்திப் பார்த்துட்டு வர்றேன்" என்றார்.

கமிஷனர் தவித்தார். "ஜீப் சேர்மன்...ரிப்பேர்..."

"ஜீப் ரிப்பேர், ஆர் சேர்மன் ரிப்பேர்?"

"ஸார்... வந்து... ஜீப்பை நோ நோ... சேர்மனை யெஸ் யெஸ் சேர்மனை...ஜீப்பை..."

"நீ என்னா சொல்றே? ஜீப் எங்கே?"தமிழைக் கற்று வரும் கலெக்டர் இன்னும் ஒருமையைத் தாண்டவில்லை.

இருதலைக் கொள்ளி எறும்பானார் கமிஷனர்.

"என்னா மேன்? ஜீப் எங்கு?" என்றார் கலெக்டர்.

"அங்கு, அதாவது சேர்மன் கோ," என்று கமிஷனர் இந்தியில் புகுந்தார்

"நீ யூஸ்லெஸ் ஃபெல்லோ, ஜீப்பைக் கொடுத்திட்டே, வெறி பாட். நான் ஊர் சுத்தணும்."

தாசில்தார், ஆர்.டி.ஓ. ஆகப் பிரமோஷன் ஆகப் போகிறவர் சமயம் பார்த்துச் சொன்னார்.

"என்ன கமிஷனர் சார், ஜீப் இல்லைன்னு என்கிட்ட ஒரு வார்த்தை சொல்லியிருந்தா, நான் கார் ஏற்பாடு செய்திருப்பேனே."

கலெக்டர் தாசில்தாரைக் கனிவாகப் பார்த்துவிட்டுக் கமிஷனரிடம் கத்தினார். "யூ...யூ...நோ யூஸ்!" கத்திவிட்டு

அறைக்குள் போய்விட்டார்.

ஆத்திரத்தைக் கொட்டினார் கமிஷனர்.

"என்ன ஸார் நீங்க, கார் ஏற்பாடு பண்ணியிருப்பேனேன்னு கலெக்டர் முன்னாலே சொல்லுறீங்க, அவன் என்னைப் பத்தி என்ன நினைப்பான்?"

"சரித்தான் சார், உங்களால் எனக்கும் கெட்ட பேரு வரணுமா? கலெக்டருக்குக் கார் ஏற்பாடு செய்யமுடியாத தாசில்தாரும் ஒரு தாசில்தாரான்னு என் தலையில் அவன் கை வச்சா?"

சில நிமிஷங்களுக்குள் சாப்பாட்டுத் தட்டுகளையும் உணவு வகைகளையும், கர்ணங்களும் முன்சிபுகளும் சுமக்க, பண்டாரம் முன்னே வந்தான்.

ஊர்வலம் கலெக்டர் அறைக்குள் புகுந்த உடனேயே பாத்திரங்களின் ஒலி பலமாய்க் கேட்கத் தொடங்கிவிட்டது.

பசியாறிய கலெக்டர் புன்முறுவலோடு வெளியே வந்தார்.

குச்சியால் பல்லைக் குத்திக் கொண்டே, "சாப்பாடு ஏ ஒன், கோலிக் கறி ஏ ஒன். ஒண்டர்புல்!" என்றார்.

தாசில்தார் குமாஸ்தா பண்டாரத்தின் காதைக் கடித்தார் கர்ணம் ஒருவரை இழுத்துக் கொண்டு பண்டாரம் வெளியே ஓடினான். சிறிது நேரத்தில் வியர்க்க விறுவிறுக்கத் திரும்பி வந்த பண்டாரம், கர்ணத்தின் கையிலிருந்த கோழி ஒன்றைப் பிடுங்கி, பியூனிடம் கொடுத்தான்.

"என்னா மேன், கரப்ட் பண்ணுறே? கோலி கொடுத்து இன்புளுயன்ஸ் செய்யறேன்னு சஸ்பெண்டு செய்துடுவேன் சஸ்பெண்டு!"

பண்டாரம் பதறிப் போய், "சார், சார், கோழி சீப்பு ஸார். ஒரு ரூபாய் தான் சார். அதனால்தான் வாங்கினேன்" என்றான்.

கலெக்டர் ஆச்சரியப்பட்டுப் போனார்.

"வாட்? ஒரு கோலி ஒரு ரூபாயா? ஒண்டர்புல்! அங்கே எல்லாம் ஒரு கோலி டென் ருபீஸ்!"

"ஆமாம் ஸார். ஒரு கோழி ஒரு ரூபாய். அதனால்தான் வாங்கினேன்" என்றான் பண்டாரம் மறுபடியும்.

"அதனால்தான் நான் அவனை வாங்கச் சொன்னேன்," என்று தாசில்தாரும் சேர்ந்து கொண்டார்.

கலெக்டரின் கண்கள் பிரகாசத்தைக் கொட்டின. "ஏக் கோலி ஏக் ரூப்யா? நீ ஒண்ணு பண்ணு. டெய்லி ஒரு ரூபாய்க்கு ஒரு கோலி வாங்கி ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பஸ்ல அனுப்பு!"

"யெஸ் சார். ஒரு கோழி ஒரு ரூபாய் வாங்கி அனுப்புறேன் ஸார்" பண்டாரம் கிணற்றடியிலிருந்து பேசினான்.

"ஒன்டர்புல், ஏக் கோலி ஏக் ரூப்யா. இந்தா முப்பது ரூபாய். நாளைல இருந்து அனுப்பு. அடுத்த மாசத்துக்கு அப்புறம் பணம் தரேன். ஒண்டர்புல் டபில்நாட்," என்று கலெக்டர் பரவசமானார்.

கெஸ்ட் ஹவுஸிலிருந்து திரும்பி வரும்போது பண்டாரம் எகிறிக் குதித்தான்.

"என்ன சார் அநியாயம்? உருப்படுமா? ஒரு கோழி ஒரு ரூபாய்னா நம்பிட்டானே?"

"உனக்கு என்ன கொழுப்பு? நீ ஏன் ஒரு கோழி ஒரு ரூபாய்னு சொன்னே? வேணுமய்யா உனக்கு!"

இப்போதெல்லாம் குமாஸ்தா பண்டாரத்தை யாரும் "காக்காய் பிடிப்பவன்" என்று சொல்லுவதில்லை. "கோழி பிடிப்பவன்" என்கிறார்கள்!

# போலீஸ் பொன்னப்பன்

சென்ட்ரல் ரயில் நிலையத்தில் ஒரே கூட்டம். போலீஸ்காரர் பொன்னப்பன் பிளாட்பாரத்தின் ஒரு முனையிலிருந்து இன்னொரு முனைக்குப் பீடுநடை போட்டார். ஜி.டி. எக்ஸ்பிரஸ் தயாராக இருந்தது.

பொன்னப்பனின் இடது கை லாட்டியைப் பிடிக்க, வலது கை மீசையைப் பிடிக்க, அங்குமிங்கும் பார்த்துக் கொண்டே வந்தார். சே! ஒரு கேஸும் அகப்படவில்லையே! அவர் போட்ட சபதத்தை எப்படி நிறைவேற்றுவது? போலீஸ்காரர், அன்று காலையில் அந்த மிலிடேரி ஓட்டலில் தான் போட்டிருந்த வீர சபதத்தை நினைத்துக் கொண்டார். அவருக்கு வயிறு எரிந்தது.

அந்த ஹோட்டலில்தான், அவர் வழக்கமாக 'வறுத்த கறி பரோட்டா' சாப்பிடுவது வழக்கம். அங்கே சாப்பிடுவதை எப்படி வழக்கமாக வைத்திருந்தாரோ, அதேபோல், தின்பதுக்குக் காசு கொடுப்பதில்லை என்பதையும் பழக்கமாக வைத்திருந்தார். அன்றைக்குப் பார்த்துக் கேட்கக்கூடாத கேள்வியை அந்த ஹோட்டல் முதலாளி கேட்டுவிட்டார். ஒரு சானிட்டரி இன்ஸ்பெக்டர் வந்து விட்டு அப்போதுதான் போயிருந்தார். அந்தச் சமயத்தில் போலீஸ்காரர் வாயைக் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டே வந்தார்.

கல்லாவில் இருந்த முதலாளிக்கு வயிறு எரிந்தது. கேட்கக் கூடாத அந்தக் கேள்வியைக் கேட்டு விட்டார்.

"ஸார், சாப்பிட்டதுக்குக் காசு கொடுங்க."

வேறு யாரையோ சொல்வதாக நினைத்த பொன்னப்பன் வாசலைத் தாண்டுகையில் சர்வர் வந்து, அவர் தொப்பியை லேசாகத் தட்டி, "முதலாளி கூப்பிடறாங்க", என்றான். பின்னோக்கி வந்த போலீஸ்காரரிடம் முதலாளி, "ஸார், சாப்பிட்டீங்களே, காசு கொடுக்க வேண்டாமா? மறந்து விட்டீங்களா?" என்றார்.

பொன்னப்பனின் மீசை துடித்தது பரோட்டா சாப்பிட்டதற்குப் பணமா? சமாளித்துக் கொண்டே "காசு கொண்டு வரலிங்க" என்றார்.

"என்னைக்குக் கொண்டு வந்தீங்க? சொல்லுங்க பார்ப்போம்...ம் நானும்தான் இந்த ஹோட்டலை எடுத்துப் பதினைந்து வருஷமாச்சு: ஒருநாள் கூட 'பிரேக்' இல்லாம சாப்பிடுறீங்க. ஒரு நாளாவது காசு கொடுத்திருக்கிங்களா?"

அப்போது பார்த்து, ஒரு மணி நேரம் வரை ஹோட்டலில் இருந்து ஒரு 'சிங்கிள் டீ' சாப்பிட்ட் ஆசாமி ஒருவர், பதினைஞ்சு பைசா பில்லை நீட்டினார். முதலாளிக்கு மீண்டும் கோபம் வந்தது.

"சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்க. நான் எத்தனை பேருக்குத்தான் தண்டத் தீனி போட முடியும்?"

பொன்னப்பனின் மீசை துடித்தது. இவன் முதலாளி மாதிரியா பேசுறான்: சப்-இன்ஸ்பெக்டர் கூட இப்படிக் கேட்க மாட்டார்.

"சூடா வேணும் சூடா வேணுமுன்னு கேட்கிறீங்களே... அதே மாதிரி காசையும் தர வேண்டாமா?" என்றார் முதலாளி, மீண்டும்.

அவருக்குச் 'சூடாக'ப் பதில் சொல்ல வந்த போலீஸ்காரர் பொங்கி வந்த சினத்தை அடக்கிக் கொண்டார்.

அவமானமாகப் பேசிய முதலாளியைக் கெஞ்சலாகப் பார்த்துக் கொண்டு, மனத்தில் வீரசபதம் ஒன்றைப் போட்டுக் கொண்டு நிமிர்ந்த நன்னடையோடு, பொன்னப்பன் ரயில் நிலையத்திற்குள் நுழைந்தார். எப்படியாவது, ஒரு கேஸைப் பிடித்து அந்த முதலாளியின் திமிரை அடக்க வேண்டும்.

அங்கே என்ன? அந்த மைனர், அந்தப் பொண்ணை 'பாலோ' பண்றானா? பண்ணட்டும்... அவகிட்ட போய் ஏதாவது பேசப் போறான்... அவள் அவனைத் திட்டப் போறாள். கேஸ் கிடைச்சிட்டுது...

பொண்ணை பாலோ பண்ணின மைனரை அவர் 'பாலோ' பண்ணினார். அவள், அவனைக் கவனிச்சதாகவோ, 'கேர்' பண்றதாகவோ தெரியலை. குடும்பப் பெண் அவள். பய எக்கச்சக்கமா பேசிட்டு, எக்கச்சக்கமாக மாட்டிக்கப் போறான். கேஸ் கிடைச்சுட்டுது...

அதோ, அந்தப் பயல் அவள்கிட்ட நெருங்கி, அவள் கூடவே நடக்கிறான். அவள் ஒரு முறைப்பு முறைக்கிறாள்; இடது கோடியில் வந்தவள் வலது கோடிக்கு 'லைனை' மாற்றிக் கொள்கிறாள். அந்தப்

பயல், வெட்கம் மானம் இல்லாமல் இன்னும் போறான். போறது மட்டுமா? இடது கோடியில் இருந்து வலது கோடிக்கு 'சைட்' வாங்கறான்! அவள் கையில் உரசுறது மாதிரி நடக்கிறான். அவள் முறைக்கிறாள்..பயல் நடக்கிறான்

பொன்னப்பன் தன் கண்களைக் கூர்மையாக்கிக் கொண்டார். அதோ, அந்தப் பயலும், அவளுக்காகக் காத்து நிற்கிறான். மீண்டும் அவள் 'கையில்' உரசுற மாதிரி அவள் கூடச் சேர்ந்து நடக்கிறான். அவள் முறைக்கிறாள் - உதவிக்கு ஆள் கிடைக்குமா என்று சுற்றுமுற்றும் பார்க்கிறாள். மாட்டிக்கிட்டான், பயல் மாட்டிக் கிட்டான்.

மைனரை மடக்குவதற்காக வேகமாக 'பாலோ' பண்ணினார். என்ன அக்கிரமம்! அவன் ஏதோ கேட்கிறான். அவள் தயங்குகிறள். அப்புறம் கையோடு கைசேர்த்துக் கொண்டு திரும்பி நடந்து வர்றாங்க...சே! இவ்வளவு சீக்கிரத்தில் அவள் சம்மதிச்சிட்டாளே...

தன்னைக் கடந்து போன அந்த ஜோடியை முறைத்துக் கொண்டே அவர் நடந்தார். 'டூ டயர்' பக்கம் வந்தார்.

ஓர் ஆசாமி, முதுகைக் காட்டிக்கிட்டு நிற்கிறான், அவனைப் பிடிக்கலாம். அவர், அவனுக்கு நாலடி தள்ளி நின்றார். திடீரென்று அந்த இடத்தையும் காலி செய்தார். அவன் திரும்பும்போது, அவன் முகத்தில் இருந்த வெட்டுக் காயத்தின் பெரிய தழும்பைப் பார்த்துவிட்டார். அவர் அனுபவப்பட்டவர். வெட்டுத் தழும்பு உள்ளவன்கிட்ட மோதவே கூடாது..

'த்ரி டயர்' பக்கம் நடந்தார் சே! ஒரு பயலும் சிக்கவில்லையே. சபதத்தை எப்படி நிறைவேற்றுவது?ஒரு பன்னாடைப் பயல் கூடக் கிடைக்கலே...சே...

அவரது அலைமோதிய கண்கள், ஓர் ஆசாமி மீது நிலைத்தன. பொருத்தமான கேஸ்! பிடிச்சிடலாம். அந்த ஆசாமி ஓர் உளுத்துப் போன 'டிரங்க்' பெட்டியைக் கையில் வைத்துக் கொண்டு நிற்க, அவன் மனைவி, ஓர் அலுத்துப் போன குழந்தையை இடுப்பில் வைத்துக் கொண்டு நின்றாள். சரியான கேஸ்.. பிடிச்சிடலாம்.

அவர், அவர்களுக்குப் பத்தடி தள்ளி நின்று கொண்டார்.

அவர்களைப் பாராதது போல் பார்த்துக் கொண்டிருந்தார்.

அந்த ஆசாமி ஒரு கிழிந்த சட்டையைப் போட்டுக் கொண்டு, நாலு முழ வேட்டியை இரண்டு முழமாகச் சுருக்கிக் கட்டிக் கொண்டு, நின்றான் அவளும் ஒரு பழைய சேலையைக் கட்டிக் கொண்டு தோள் பக்கம் கிழிந்திருந்த ஜாக்கெட்டைக் கிழிந்திருந்த முந்தானி முனைப்பால் மூடிக் கொண்டிருந்தாள்.

ரயிலுக்குப் பச்சை விளக்குக் காட்டப்பட்டது. விசில் சத்தம் கேட்டது.

பொன்னப்பன் பாய்ந்தார். "யோவ்! பெட்டில என்னப்பா வச்சிருக்க? பெட்டியைத் திறந்து காட்டு."

"வண்டி நகரப் போவுது; இப்போ வந்து கேக்கறீங்களே, நாயமா?"

"டேய், பெட்டியைத் திறந்து உள்ள என்ன இருக்குன்னு காட்றியா? இல்ல, உள்ள தள்ளணுமா?" வண்டி நகரத் தொடங்கியது.

அந்த ஆள் சத்தம் போட்டான்.

"அநியாயம் பண்ணாதீங்க ஸார். இதுவரைக்கும் பேசாம நின்னுட்டு - இப்போப் பேசினா எப்படி? நாயமா?"

"அந்தக் கதை வாணாம். உன் மேல் சந்தேகமா இருக்கு, பெட்டியைத் திறந்து காட்டு. உம் காட்டு."

அந்த ஆசாமி மருண்டான். வண்டி வேகமாகப் போகத் தொடங்கியது. பைக்குள் இருந்து ஓர் இரண்டு ரூபாயை நீட்டினான். பொன்னப்பனின் ரத்தம் கொதித்தது.

"யோவ், என்னை லஞ்சம் வாங்கறவன்னு நினைச்சியா? பெட்டியைத் திற....ம்....திற...... உன்னெ என்ன செய்யறேன் பாரு! நட போலீஸ் ஸ்டேஷனுக்கு." அவர் நறநற என்று பல்லைக் கடித்தார்.

அந்த ஆசாமி "ஐயா லஞ்சம் வாங்காதவர்னு எனக்குத் தெரியாது, " என்று சொல்லி, இரண்டு ரூபாயைப் பைக்குள் வைக்கப் போனான்.

"யோவ், என்னை என்ன ரெண்டு ரூபாய் லஞ்சம் வாங்கறவன்னு நினைச்சியா?"

"என்கிட்ட இதுக்கு மேல இல்லை ஸார்."

"இதுக்கு மேல பேசாத, கீழே இறங்கு. இல்லன்னா பத்து ரூபாயை இறக்கு," என்று போய்க் கொண்டிருந்த வண்டி பின்னால் ஓடினார்.

அந்த ஆசாமிக்கு யோசிக்க நேரமில்லை. பைக்குள் இருந்த ஒரு நோட்டை அவர் கைக்குள் திணித்தான். திணித்துவிட்டு, பிறகு கத்தினான்.

"யோவ்! பத்து ரூபான்னு நினைச்சு, நூறு ரூபாய் நோட்டைக் கொடுத்திட்டேன்; நூறைக் கொடு, பத்து தர்றேன். நூறைத் தா.. பத்து தர்றேன்.. யோவ்.. யோவ்.. நாயமா?"

பொன்னப்பன், அவனைக் கண்டு கொள்ளவில்லை. கேஸைப் பிடித்த திருப்தியோடு நடைபோட்டார். அந்த ஆசாமி திட்டிய திட்டுக்கள் இஞ்சின் சத்தத்தில் கேட்கவில்லை.

அவர் நேராக, அந்தப் பழைய ஹோட்டலுக்கு வந்தார்.

முதலாளிக்கு உதைப்பு, பழையபடி தின்னுட்டு கலாட்டா பண்ண வந்திருக்கானா? எதிலேயும் மாட்ட வச்சிடுவானோ?

பொன்னப்பன், மிடுக்காக உட்கார்ந்து ஆர்டர் கொடுத்தார். சர்வர் ஓசி கிராக்கியாக நினைத்து, சாவகாசமாய் வந்தான். போலீஸ்காரருக்கு ஆத்திரம் பொங்கியது. வார்த்தைகளில் சூடேறியது.

"ஏண்டா, என்னை என்ன போக்கத்தவன்னு நினைச்சியா? சீக்கிரம் கொண்டா, ஒரு பிளேட் பிரியாணி, கோழி குருமா...ம் சீக்கிரம்... வறுத்த கறி...ஈரல், மூளை கொண்டு வர இவ்வளவு நேரமா? மூளை இருக்கா உனக்கு?"

கல்லாவில் இருந்த முதலாளிக்கு இருப்புக் கொள்ளவில்லை. ஒரு நாள் ஏதோ ஆத்திரத்தில் சொன்னதுக்காக, இந்த போலீஸ்காரன் வந்து மிரட்டப் பார்க்கிறானே?

தட்டுக்கள் தவிர மற்றவற்றைத் தின்று முடித்த பொன்னப்பன், 'பில்' கொடுக்காமல் போன சர்வரைப் பார்த்து,

"என்னை என்ன பிச்சைக்காரன்னு நினைச்சியா? பில் கொடுடா" என்று அதட்டினார்.

பிறகு அலட்சியமாக, பில்லை மேலேயும், புத்தம் புது நூறு ரூபாய் நோட்டைக் கீழேயும் வைத்து, முதலாளியிடம் நீட்டினார். முதலாளிக்கு ஒரே ஆச்சரியம்.

"சீக்கிரம் சேஞ்ச் கொடுங்க." போலீஸ்காரர் அதட்டினார்.

"ஐயா தப்பா நினைக்கக் கூடாது. உங்ககிட்ட காலையில மரியாதைக் குறைவா நடந்துக்கிட்டேன். என்னை மன்னிச்சிடுங்க. இந்தாங்க உங்க நூறு ரூபா"

அலட்சியமாக, அந்த ரூபாயை வாங்கிக் கொண்டு நடக்கப் போன அவரை, முதலாளி எழுந்து வந்து குறுக்காக நின்று கும்பிட்டுக் கொண்டே, "ஐயாவைக் காலையில் பேசினதிலிருந்து என் மனசு கேட்கலை; நீங்க என்னை மன்னிச்சதுக்கு அடையாளமா, கூலா ஒரு 'டிரிங்' குடிச்சிட்டுப் போகணும்," என்றார்.

பொன்னப்பனின் மனசும் கேட்கவில்லை வாயும் கேட்கவில்லை. விறைப்பாக நடந்து, ஹோட்டலில் ஒரு மூலையில் இருந்த 'பேமிலி' ரூமுக்குள் உட்கார்ந்தார்.

கோக்கோ கோலாவை உறிஞ்சிக் கொண்டிருந்த போலீஸ்காரர், தன்னைச் சுற்றிப் பத்துப் பதினைந்து போலீஸ்காரர்களும், ஒரு மப்டி ஆசாமியும் நின்று கொண்டிருப்பதைப் பார்த்துத் திகைத்தார். அவர் பையன் ஐ.பி.எஸ். எழுதியிருந்தான். பாஸாகி இருப்பானோ? மாட்டானே! ஒரு வேளை அவன் பாஸாகி, தன்னைப் பாராட்ட வந்திருக்காங்களோ?உம்...

இதற்குள் ஒரு போலீஸ்காரர், "உன் பைக்குள் இருக்கிற நூறு ரூபாய் நோட்டை எடு", என்றார்

பசங்க பங்கு கேட்க வந்திருக்காங்களோ? பொன்னப்பன் தயங்கினார். இதைப் புரிந்துகொண்ட, ஸி.பி.ஐ. (மத்திய புலன் விசாரணை) ஆசாமியான 'மப்டி', "அந்த நூறு ரூபாயை எடுய்யா", என்றார் அதட்டலாக.

பிறகு பொன்னப்பன் தந்த நூறு ரூபாயை உற்றுப் பார்த்தார். "இந்த ரூபாய் உனக்கு எப்படிக் கிடைத்தது?"

பொன்னப்பன் சமாளித்துக் கொண்டே, "என்ன ஸார் கிருமினலை விசாரிக்கிறது மாதிரி விசாரிக்கிறீங்க. ஆபீஸ்ல கொடுத்த சம்பளப் பணத்தில் மிஞ்சியிருந்த நோட்டு இது!" என்றான்.

போலீஸ்காரர்கள், பொன்னப்பனைப் போலீஸ் ஸ்டேஷனில் உள்ள கேஷியரிடம் அழைத்துக் கொண்டு போனார்கள். கேஷியர் ரிக்கார்டைக் காட்டினார். "அவ்வளவும் பத்து ரூபாய் நோட்டா வேணுமுன்னு கேட்டு வாங்கினார். என்கிட்ட நூறு ரூபாய் நோட்டே கிடையாது."

ஒரு போலீஸ் அதிகாரியைப் பார்த்து, மப்டி கண்ணடித்தார். பொன்னப்பனின் கைகளில் விலங்கு மாட்டப்பட்டது. தங்கள் வர்க்கத்தில், 'இப்படி ஒரு காளான் முளைத்து விட்டதே', என்று ஒரு போலீஸ்காரர்கூட பாக்கியில்லாமல், அத்தனை பேரும், பொன்னப்பனைத் தலா இரண்டு கைகளாலும், இரண்டு கால்களாலும் உதைத்தார்கள்.

போலீஸ்காரர் பொன்னப்பன், மன்னிக்கணும், இனிமேல் அப்படி அழைப்பது சட்டப்படி குற்றம் பொன்னப்பன் இப்போது 'லாக்கப்பில்' இருக்கிறான். லாக்கப்பில் இருக்கும் கிரிமினல் குற்றவாளிக்கு 'ர்' என்ன வேண்டிக் கிடக்கு? கள்ள நோட்டு அடித்த குற்றத்தின்பேரில் பொன்னப்பனை 'சஸ்பெண்ட்' செய்து. 'போலீஸ் கஸ்டடியில்' வைத்திருக்கிறார்கள். தீவிர புலன் விசாரணை நடந்து வருகிறது

# குட்டி மஸ்தான்

அந்தக் கடையின் போர்டை எழுதியவர், ஒரு மார்டன் ஆர்டிஸ்டாகத்தான் இருக்கவேண்டும். வி. என்ற எழுத்தின் அடிக் கோட்டை, . கர்ப்பிணிப் பெண்ணின் வயிற்றைப் போல, சற்று வளைத்துவிட்டு. மேலே கொக்கியையும் சுருக்கிவிட்டதால், 'லீ' மாதிரி தெரிந்தது. ஆகையால், கடைக்கு வருபவர்கள், அந்தப் போர்டைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே, நியாய லீலைக் கடை' என்று படிப்பார்கள். இதற்காகக் கடைக்காரர் "அரிசி ஸ்டாக் இல்லை" என்று சொல்வது சரியில்லைதான் அவரிடம் அதைப் பற்றிக் கேட்டால், "எதுதான் சரியாய் இருக்கு?"என்பதுடன் அப்படிக் கேட்டதற்குத் தண்டனையாகச் "சர்க்கரை (உங்களுக்கு) ஸ்டாக் இல்லை" என்பாராம்

இந்த வில்லாதி வில்லன், அன்று வாடிக்கைக்காரர்களை எப்படி விரட்டியடிக்கலாம் என்று யோசித்தவராய், போர்டில், 'இருப்புக்கு'க் கீழே 'இல்லை' என்று எழுதிக் கொண்டிருக்கும் போது, ஒரு ஆசாமி வந்து நின்றார் கடைக்காரர் அவரைப் பார்க்காமலே "ஸ்டாக் ஒண்ணும் இல்லை சார்" என்றார்.

வந்தவர் விடுவதாகத் தெரியவில்லை

"இது நியாய விலைக் கடைதானே?"

கடைக்காரருக்குச் 'சுருக்' கென்றது.

"ஏன், போர்டில எழுதியிருக்கது கண்ணு தெரியலியோ? சரி...சரி. ஸ்டாக் இல்லை போங்க?"

"இது தான் எனக்கு ஆபீஸ் டயம்."

"ஆபீஸ் டைம்ல அரிசி வாங்றது தப்புங்க."

"அரிசி வாங்கறது தப்புதான். அரிசி ஸ்டாக்கை 'செக்' பண்றது தப்பில்ல."

"நீங்க என்ன சொல்றீங்க?"

"செக்கிங் இன்ஸ்பெக்டர்னு என்னைச் சொல்லுவாங்க".

அவ்வளவுதான். கடைக்காரரின் கடுகடு முகம், கிளுகிளுவானது. கடைக்குள் கோணிகளைச் சுமந்து கொண்டிருந்த ஒரு ஸ்டூலை எடுத்து வெளியே போட்டார். தோளில் தொங்கிய துண்டை எடுத்து அதைத் துடைத்தார். 'ஸ்டூல்' மேலும் அழுக்காயிற்று! பிறகு ஆபீசரை உட்காரும்படி சைகை செய்தார். கடைக்காரர் தட்டி விட்ட மின்காற்றில், உள்ளே உறங்கிய மைதாவும், ரவையும். கடைக்குள் ஸ்டாக்காக இருக்க விரும்பாதவைபோல், ஆபீஸரின் முகத்தில் ஸ்டாக்காயின. கடைக்காரர் தலைவிரிகோலமா, கடைக்காரப் பையனிடம் கத்தினார்.

"டேய் முனுசாமி, உடுப்பியில போயி, ஐயாவுக்குச் சூடா ஒரு ஸ்பெஷல் காபி வாங்கி வா."

அரிசி வகையறாக்கள் மாயமாய் மறைவது போல் பையனும் மறைந்தான்.

"ஐயாவுக்குக் காபி மட்டும் போதுமா?"

"போதாது! உன் ரிஜிஸ்டர்களும் வேணும்."

"ஐயா புதுசோ?"

"ஆமாம், உன் கடைக்குப் புதுசு. ஆனால் வேலைக்குப் பழசு."

விடாக்கண்டனும், கொடாக்கண்டனும், ஒருவரை ஒருவர் ஆழம் பார்த்துக் கொண்டிருக்கையில், பாட்டியம்மா ஒருத்தி வந்தாள். இந்தச் சமுதாயத்தில் நடமாடித் திரியும் மனிதர்களைப் பார்க்க விரும்பாததுபோல், அவள் முதுகு நிலத்தைப் பார்த்தது. இரண்டு கைகளும், கால்களுக்கு இணையாக, செங்குத்தாய் தொங்குவது போல் கோணைத் தென்னையைப் போல், அவள் வளைந்திருந்தாள். ஊர்ந்து வருவதுபோல் வந்த அவள் "இன்னைக்காவது அரிசி கிடைக்குமா நயினா?" என்றாள். அந்த வார்த்தை அந்த ஜீவக் கூட்டுக்குள் இருந்து வந்ததே பெரிய காரியம்!

கடைக்காரர் வார்த்தை தவறாதவர். ஆகையால் நேற்று அவளிடம் சொன்னதையே இன்றும் தவறாமல் சொன்னார்.

"அரிசி இன்னும் வரல நாளிக்கு வா."

"தம்மா படி அரிசிக்கு எம்மாந்தரம் வர்ரதய்யா? நாயமா நயினா? கெய்வின்னு நினைச்சாக்காட்டியும் அரிசி தாய்யா, ஐயா."

"ஆயா உன்கிட்ட எத்தனைவாட்டி சொல்றது? ஸிவில் சப்ளை கோடோன்ல இருந்து அரிசி வர்ரப்போதான் தரலாம். நான் என்ன பண்றது?"

"எப்பத்தாம்பா கோடோன் அரிசி வரும்?"

"எனக்கு ஜோஸியமா தெரியும்? வர்ரப்போ வரும். சரி... நடையைக் கட்டு காலங்காத்தாலே ரோதனை பண்ணாதே."

கிழவி, தன்னையே ரோதனை பண்ணிக் கொண்டாள். பர்மாவில் இருந்து, இரண்டாவது உலகப் போரின் போது இங்கே வந்த பலரில் அவள் ஒருத்தி. பசியால் மனிதர்கள் மிருகமாவதைப் பார்த்தவள் ஆனால், இங்குப் பசியறியாதவர்களே மிருகமாவதை இப்போது தான் பார்க்கிறாள். கடைக்காரரிடம் பேசுவதற்குச் செலவிடும் சக்தியை, நடக்கச் செலவிடலாம் என்று நினைத்தவள் போல், வந்தவழியே நடந்தாள்.

செக்கிங் இன்ஸ்பெக்டர், கடையை நோட்டம் விட்டார். "ஏய்யா, உள்ளே முப்பது நாப்பது கிலோ அரிசி இருக்கும்போல தெரியுது...ஸ்டாக் இல்லேங்றே."

"தப்புதான் ஆனால் தப்பாமல் அதைத் தனியே எடுத்து வைக்கும்படி ஒருவர் போன் பண்ணினாரு."

"கார்டு ஹோல்டரா?"

"கார்டு ஹோல்டர்னா எவன் கவலைப்படுகிறான் சார்?"

"பிறகு யாருக்குய்யா?"

கடைக்காரர், புன்முறுவலைப் பூக்க விட்டுக் கொண்டே செக்கிங்கின் காதில், அந்தத் திருநாமத்தைச் சொல்ல, அந்தக் காதின் ஆசாமி, உடம்பை ஒரு சிலிர்ப்பு சிலிர்த்துக் கொண்டே, சிம்ம சொப்பனம் கண்டவர்போல் திடுக்கிட்டு பிறகு "சரி, சரி, எனக்கெதுக்கு வம்பு. ஒன் ரிஜிஸ்டர்ங்கள எடு" என்றார்.

இன்ஸ்பெக்டர் 'ஏ' ரிஜிஸ்டர் என்று வழங்கப்படும்,

கார்டுக்காரர்கள் ரிஜிஸ்டரைப் புரட்டினார். அதுக்குள், உடுப்பிக்குப் போன பையன் ஓடிவந்தான். இன்ஸ்பெக்டர் காபி ஆறுவதற்காக, ரிஜிஸ்டரின் மேல் 'டபராவை' வைத்துவிட்டு, பிறகு அதை எடுத்து எடுத்துக் குடிப்பதும், அப்படி எடுக்கையில் ரிஜிஸ்டரின் பக்கங்களைப் புரட்டிப் புரட்டிப் பார்த்துக் கொண்டு ஆயிரத்து நூறு பெயர்களையும் பார்த்துக் கொண்டு வந்தவர் 18வது சீரியல் நம்பரில் உள்ள காமாட்சி, மீண்டும் 98ஆம் நம்பரில் அவதாரம் எடுத்ததையோ, 80ஆம் நம்பர் கோவிந்தனுக்கு 50ஆம் நம்பரில் பூர்வஜென்மம் இருந்ததையோ, அவர் கவனித்ததாகத் தெரிய வில்லை. ஸ்பெஷல் காபியாச்சே!

என்றாலும், காபி வாசனை மறைந்ததும், செக்கிங் இன்ஸ்பெக்டரின் இரக்கமும் மறைந்தது. ரிஜிஸ்டரைப் புரட்டிக் கொண்டே, கடைக்காரரைப் புரட்டினார்.

"யோவ், நான் வீடு வீடாய் போய், கார்டு கார்டாய்ச் செக் பண்ணணும். போலிக் கார்டு இருக்கான்னு பார்க்கணும்."

கடைக்காரர் "அதுதான் அஸிஸ்டெண்ட் கமிஷனர் ஆபீஸ்ல, கவுண்டர்பாய்ல்ஸ் வச்சி, செக் பண்ணுறாங்க. அப்படிச் செக் பண்ணுன பிற்பாடுதான் சரக்கு வருது. செக் பண்ணுனதை ஏன் செக் பண்ணணும்?" என்றார்.

"அஸிஸ்டெண்ட் கமிஷனர் ஆபீஸைப்பத்தி எனக்குச் சொல்லித் தர்றியா? அந்த ஆபீஸ் இல்லாட்டா, அரிசி இன்னும் நிறையக் கிடைக்கும். நான் அங்கே இருந்துதான் டிபுடேஷன்ல போயிருக்கேய்யா. என்கிட்டேயே காது குத்றியே?"

"ஸார்! உங்க சிவில் சப்ளை கார்ப்பரேஷன் மட்டும் யோக்கியமா? போனமாசம் ஒரு கூத்து கேளுங்க. பொதுவா, கோடோன்ல இருந்து வந்த அரிசி வகைகளை லாரில கொண்டு வரும்போது எடை எத்தனைங்றதையும் லாரி டிரைவர் கிட்ட எழுதி அனுப்புவாங்க. போன மாதம் 'பின்னாலேயே எடை விவரம் வருது. நீ முன்னாலேயே வந்துட்ட லாரியில் இருந்து சரக்கை கிளியர் பண்ணு' ன்றாங்க நான் இறக்கிட்டேன். பத்து நாள் கழிச்சி, எடை பட்டியலை அனுப்பினாங்க. லாரியில் வந்த எடையை விட அரைப்பங்கு அதிகம் போட்டு, என்கிட்ட இருந்து 'ரிகவரி' பண்ணிட்டாங்க இந்த மாதிரி அக்ரமம் எங்கேயும் உண்டா? நீங்களே சொல்லுங்க ஸார் "

இன்ஸ்பெக்டர் சொன்னார். "இவ்வளவு அக்கிரமம் நடந்திருக்கே, நீ ரிப்போர்ட் பண்ணினியா? புட் கமிசனருக்கு எழுதினியா?"

"இல்ல ஸார்.

"ஏன் இல்ல? நான் சொல்லட்டுமா? உன் வீக்னஸ் கோடோன்காரங்களுக்குத் தெரியும். திருடனுக்குத் தேள் கொட்டினது மாதிரி, நீங்க அரிசி மூட்டையில் வாளி வாளியா தண்ணி ஊத்தி, ஓவர்வெயிட் பண்றிங்க. அவரும் போன்ல பேசி ஓவர் வெயிட் பண்ணிட்டார். உங்க 'வெயிட்' பிரச்சினையை ஜனங்களும் பார்த்துக்கிட்டு சந்தர்ப்பத்துக்காக 'வெயிட்' பண்றாங்க. கியூவில் மட்டும் வெயிட் பண்றதா நினைக்காதே! சரி, சரி, வா. .கார்டுங்கள 'செக்' பண்ணலாம்"

கடைக்காரர் ஒரு பரோபகாரி. ஆகையால் "ஐயா, தப்பா நினைக்கக் கூடாது. இப்போ ஏழை ஜனங்க வர்ர நேரம் பாவம். கஷ்டப்படுற ஜனங்க ரவைக்காவது, மைதாவுக்காவது வருவாங்க; அவங்களுக்குச் சரக்குக் குடுக்கிற நேரத்துல, வீடு வீடாய் அலையுறது சரியாய்த் தோணலே" என்றார்.

இன்ஸ்பெக்டரும் ஒரு பரோபகாரி. ஆகையால், "ஆமாய்யா, ஏழை ஜனங்கள காக்க வைக்கிறது தப்பு . நீ ரிஜிஸ்ட்டர எங்கிட்ட கொடு. நானே செக் பண்ணி, ஏதாவது தப்புத் தண்டா இருந்தா, நேரா ஆபீஸ்ல போயி எழுதிக்கிறேன்."

கடைக்காரர் மறுமொழி கூறாமல், திறந்த கடையைப் பூட்டினார். செக்கிங்கும் 'கடையும்' நடை போட்டனர். முதல் நம்பர் முனியாண்டி வீட்டுக்குப் போனார்கள். முனியாண்டியிடம் கார்டு இருந்தது. இன்ஸ்பெக்டர் திருப்தியடைந்தார்.

கடைக்காரருக்கு, போன உயிர் திரும்ப வந்தது. முனியாண்டியிடம் ரேஷன்கார்டு இருப்பது எவ்வளவு உண்மையோ, அவ்வளவு உண்மை, அவன் அந்த கார்டை வேற கடையில் பதிந்து வைத்திருப்பது. இதை அறிய, செக்கிங் ஸாருக்குத் தோன்றவில்லை.

இருவரும் அலையும் கோலத்தைப் பார்த்து, சிலர் தத்தம் வீடுகளை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொண்டார்கள். 'செக்கிங்' இன்ஸ்பெக்டரிடம் இருந்த ரிஜிஸ்டரைப் பார்த்த சிலர், அவர்களை 'டொனேஷனுக்கு' வருவதாக நினைத்து தலை மறைந்தார்கள்.

நாலாவது சீரியல் நம்பரில் ஒரு பெண். இன்ஸ்பெக்டர் அவளிடம் "கார்டு இருக்கிறதா?" என்று கேட்க, அவர் "கார்டு இருக்கு, பணந்தான் இல்லே" என்றார். இன்ஸ்பெக்டருக்குத் திருப்தி. கடைக்காரருக்கு ஒன்றும் புரியாத மகிழ்ச்சி. அந்தப் பெண் சொல்ல வந்தது பால்கார்டைப் பற்றி. எப்படியோ கடைக்காரர் பிழைத்தார். மேலும் சில வீடுகளைப் பார்த்தார்கள். சரியாக இருந்தன இதுதான் சமயம் என்று நினைத்த கடைக்காரர், "ஸார், ஏழை ஜனங்க காத்திருப்பாங்க, போகலாமா?" என்றார்.

"ஆமாய்யா, நீ போயிடு. நான் நிதானமாகப் பார்த்துட்டுப் போறேன்."

கடைக்காரர் பதில் பேசாமல் கோவிந்தசாமி வீட்டைக் கண்டுபிடித்தார் 'கோவிந்தசாமி' வெளியே போயிருப்பதாகவும், அவரிடம் ரேஷன் கார்டு இருப்பதாகவும் அண்டை வீட்டு நாராயணசாமி சொன்னார். 'செக்'கிங் திருப்தியுற 'கடை'க்குப் போன உயிர் திரும்ப வந்தது. 'வெளியே போயிருக்கிறார்' என்ற நாராயணசாமியின் வார்த்தைக்கு 'அந்த ஆசாமி நாலைந்து மாதமாக ஊரில் இல்லை' என்ற டிக்ஷனரி மீனிங்கும், அந்த ஆசாமியின் பேரில் சரக்குப் போட்டு, கடைக்காரர் சக்கைபோடு போடுகிறார் என்பதும் இன்ஸ்பெக்டருக்குத் தெரியவில்லை.

போன வீட்டிற்கே, மீண்டும் போவதைப் பார்த்த இன்ஸ்பெக்டருக்கு ஒரு சந்தேகம் வந்தது. ரிஜிஸ்டரை உற்றுப் பார்த்தார்

"ஏய்யா, இந்த வீட்ல, ராமசாமி இருக்கிறாரான்னு ஏற்கன்வே பாத்துட்டோம் இன்னொரு வாட்டி அவன் எப்படிய்யா முளைச்சான்?"

கடைக்காரர் வெலவெலத்துப் போய், ரிஜிஸ்டரைத் தாங்கிக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டரின் முழங்கைக்குள் முகத்தை நீட்டினார் அவருக்கு ஒரு 'ஐடியா' தோன்றியது. வியாபாரியாச்சே!

"ஸார்! அது ராமசாமி' இது இராமசுவாமி. இரண்டு பேரு ஒரே வீட்டில் இருக்காங்க எழுத்து வித்தியாசம் தெரியுதுல்லா?"

இன்ஸ்பெக்டருக்குப் பாதிச் சந்தேகம் தீர்ந்துவிட்டது. மீதிச் சந்தேகம் தீர்த்துக் கொள்ள நினைத்தவர்போல், அதை விட்டு, படிக்கட்டில் இருந்த நபரைப் பார்த்து "இந்த வீட்டில் ரெண்டு

ராமசாமி இருக்காங்களா?" என்றார்.

'ஒரு ராமசாமி கூட இல்ல; ரெண்டுக்கு எங்கே போறது என்று சொல்லப்போன படிக்கட்டுக்காரர் தற்செயலாக, கடைக்காரரின் 'மெய்ப்பாடுகளை'க் கவனித்தார். 'இந்த வியாபாரிங்களே சுத்த மோசம்; இவங்களை ஒழிச்சிக் கட்டினாத்தான், நாடு உருப்படும்.' இப்படி மனத்தில் நினைத்துக் கொண்டு பேசப்போன அதே நபரின் கண்கள் இன்ஸ்பெக்டருக்குத் தெரியாமல், கும்பிடும் கடைக்காரரின் கைகளைப் பார்த்தன. கடைக்காரர் தம் சைகைகளை விரிவுபடுத்தினார். தனது கழுத்தைச் சுற்றி இரண்டு விரல்கள் வட்டம் போட்டார். (அவருக்குக் கல்யாணம் ஆகிவிட்டதாம்.) கீழே ஒரு கையையும், அதற்கு மேலே ஒரு அடி தள்ளி இன்னொரு கையையும் காண்பித்துவிட்டு எட்டு விரல்களை நீட்டிக் காண்பித்தார் (அவருக்கு எட்டுப் பிள்ளைகள் இருக்காம்.) பிறகு கீழே பூமியை நோக்கி விரல்களைக் குவித்துவிட்டு, பின்னர் அதே கையை வாய்க்குக் கொண்டு வந்தார். (அவர் வாயில் மண்ணைப் போட்டுவிடக் கூடாதாம்) படிக்கட்டு ஆசாமிக்குத் தாராள மனசு! 'எல்லாந் திருடனுங்க இவனும் திருடுகிறான் ஒழிஞ்சி போறான் இவனைப் பிடிச்சிக் கொடுக்கிறதில என்ன லாபம்? இப்போ உதவினால், நாளைக்குக் கார்டு இல்லாமலே எல்லாம் வாங்கிக்கலாம்.' அந்த லட்சிய வீரரின் மனம், இரக்கத்தின் மீது உட்கார்ந்தது.

செக்கிங் மீண்டும் கேட்டார்.

"ராமசாமி இருக்கிறது மாதிரி இராமசுவாமி இருக்காரா?"

படிக்கட்டார் சிரித்தார்

"நான்தான் ராமசாமிங்கிறது. இன்னொரு ராமசாமி இருக்கான் அவன் இப்போ, அரிசி வாங்கப் போயிருக்கான்"

இன்ஸ்பெக்டர், அந்த பாரதபிரஜையின் பதிலினால் திருப்தியடைந்தார் கடைக்காரரும் அவரும், கடைசியில் 'குடிசை மாற்று வாரியத்'துக்குள் நுழைந்தார்கள் 318 ஆம் நம்பர் மாரியாத்தாவைக் கண்டார்கள்.

"ஏம்மா, ரேஷன் கார்டு கீதா?"

"கீது. ஆனால் இப்போ .."

"இப்போ என்ன? சொல்லு."

"வச்சிட்டேம்பா."

"நீ என்ன சொல்ற?"

"அடகு வச்சிட்டேம்பா."

இன்ஸ்பெக்டருக்கு பயங்கரமான கோபம்.

"ஏம்மா, உனக்கு புத்தி இருக்கா? அடகு வைக்கிறது இருந்தா, நம்ம நகை நட்டுகளை வைக்கணும். இல்லன்னா பாத்திரங்கள வைக்கணும். ரேஷன் கார்டையா வைக்கிறது?"

"எல்லாத்தையும் வச்சிட்டேம்பா. அதுங்க தீர்ந்து பூட்டு; அதனாலதான் இது வச்சேன்."

"எந்த மடையங்கிட்ட வச்ச? சொல்லு; அவனையும் உன்னையும் உள்ளே தள்றேன்."

"இதோ கீறாரே, இவரண்டதான் வச்சேம்பா."

இன்ஸ்பெக்டர், கடைக்காரரைப் பார்த்து முறைத்தார். அவர் ஒரு நொடி மயங்கி, மறுநொடி தயங்கி பிறகு சமாளித்தார்.

"ஸார், இந்த அம்மாவுக்கு எதையும் வச்சித் திங்கறது தான் தொழிலு. ரேஷன் கார்டை அடகு பிடிக்கவும் ஆளுங்க இருக்காங்க. எவன் கிட்டேயாவது வச்சித் தொலைச்சி, அரிசி இல்லேன்னு கஷ்டப்படுமேன்னு இரக்கப்பட்டு, நான் பிடுங்கி வச்சிட்டேன்."

இன்ஸ்பெக்டர், கடைக்காரர் சொல்வது சரிதானா என்பதுபோல் அந்தப் பெண்ணைப் பார்த்தார். கடைவாலா, சுதாரித்துப் பேசினார்

"ஏய் பொண்ணு, உள்ளதைச் சொல்லு. இல்லன்னா ஐயா, உள்ள தள்ளிடுவாரு. ஒன் கார்டு என்கிட்ட இருந்தாலும், முந்தாநாள் அரிசி தந்தேனா இல்லியா? உள்ளதைச் சொல்லு. இல்லன்னா ஐயா உள்ள தள்ளிடுவாரு." கடைக்காரர் பயமுறுத்தும் பாணியில் கேள்விகளை அடுக்கினார்.

அந்தப் பெண் பயந்துவிட்டாள். "ஆமாங்க, கடைக்காரர் முந்தாநாள் தந்தாரு. வாய்க்கு அரிசி நல்லா கீது" என்று, 'உள்ளதைச்' சொன்னாள்

செக்கிங்ஸாரும், கடைக்கார அண்ணாச்சியும், நாதித் தெருவில் 'போர் டொண்டி' அதாவது 420 ஆம் நம்பர் நல்லகண்ணுவைக் கண்டுபிடிக்க அலைந்தார்கள் நம்பரையும் காணவில்லை. நபரையும் காணவில்லை. இன்ஸ்பெக்டர் தெருப்பக்கத்தில், பீடிக் கடைக்காரரை விசாரித்தார். கடைக்காரர், கையைப் பிசைந்தார் அந்தத் தெருவில் 317க்குப் பிறகு நம்பரே கிடையாதாம். கடைக்காரர் தலையைப் பிசைந்தார். இன்ஸ்பெக்டர் தன் கண்டுபிடிப்பில் பெருமிதம் கொண்டார்.

"கடைசியில் நீயும் கள்ளக் கார்டு தானா?"

கடைக்காரர் பதில் சொல்வதற்கு முன்னால் இன்ஸ்பெக்டரின் கேள்வியைக் காதிற்போட்டுக் கொண்ட ஜிப்பாக்காரர் ஒருவர், "அந்த அநியாயத்தை ஏன் கேக்கறீங்க? கள்ள கார்டுங்க மட்டுமில்ல, தராசுத் தட்டுல அரிசியை 'தொப்புன்னு' வேகமாகப் போட்டு, தட்டை மேலே தூக்கி, அது கீழே வர்றதுக்கு முன்னாடியே அரிசியை இறக்கிடறது கூட்ட நெரிசலிலே யாரும் இதைப் பார்க்கிறது கிடையாது. இத கேக்க நாதியில்ல. மஸ்தானையும், பாக்கியாவையும் பிடிக்கிறது சரிதான். இந்தக் குட்டி மஸ்தான்களை விட்டு வைக்கிறது நாட்டுக்குச் சனி போகலன்னு அர்த்தம்."

இன்ஸ்பெக்டர் கடைக்காரரைப் பார்த்து கோபமாக முறைத்தார். ஜிப்பாக்காரர் மகிழ்ச்சி அடைந்து அந்த இடத்தை விட்டு அகலும் வரை முறைத்தார். பிறகு கடைக்காரரைப் பார்த்து,

"யோவ் இப்படி எத்தனை போலிப் பெயருங்க வச்சிருக்கே?" என்றார்.

கடைக்காரர் பதறிப் போய் "அப்படியெல்லாம் கிடையாதுங்க ஸார் இந்த ஒண்ணு எப்படியோ பிடிபட்..இல்ல . தப்பா விட்டு.. வேணுமுன்னா செக் பண்ணுங்க."

இன்ஸ்பெக்டர், மீண்டும் ரிஜிஸ்டரைப் புரட்டினார்.

"ஏய்யா, நல்லப்பா தெருவுல 148ஆம் நம்பர் நாகராஜனுக்குக் கார்டு இருக்கா?"

"இருக்குங்க இது தப்புங்றதினாலே அது தப்பாயிடாது. போன வாரம், அவன் நாகராஜன் என் சொந்தக்காரன். ஆனால் குடிகாரப் பயல்

இன்ஸ்பெக்டரின் உதடு கொதித்தது

"யோவ், நான் குடிகாரனா? நான் உன் சொந்தக்காரனா?"

"ஐயா என்ன சொல்றீங்க?"

"நான்தாய்யா நாகராஜன் என்கிற செக்கிங் இன்ஸ்பெக்டர்! எனக்குக் கார்டு இருக்கா? அதுவும் போனவாரம் உன் கடையில் வந்து அரிசி வாங்கினேனா? சொல்லுய்யா..."

கடைக்காரர், இப்போது உண்மையிலேயே பயந்து, முழுப் பூசணிக்காயைச் சோற்றில் திணிக்கும் வேலையை விட்டு பரிதாபமாக இன்ஸ்பெக்டரைப் பார்த்தார்; இருவரும் கடைக்குத் திரும்பினார்கள். கடைக்காரர் இப்போது 'ஸ்டூல்' எடுத்துப் போடவில்லை. பக்கத்து வீட்டுக்குப் போய் ஒரு 'குஷன்' நாற்காலியைக் கொண்டு வந்து போட்டார் இன்ஸ்பெக்டரின் கோபம் அடங்கியதாகத் தெரியவில்லை பாழாப் போகிற உடுப்பிக்காரனும் அப்போது பார்த்து ஹோட்டலை மூடிவிட்டான்.

கடைக்காரர் பேச்சைத் தொடங்கினார்

"நான் பிள்ளை குட்டிக்காரன், ஐயா தான் மன்னிக்கணும்"

"உன் லைசென்ஸை ரத்து பண்றேனா, இல்லையா பாரு."

"ஐயா பெரிய மனசு பண்ணணும்: கடை லைசென்ஸ் போயிட்டா..... நான் பிச்சைதான் எடுக்கணும்"

"உங்களைல்லாம் சும்மா விடக் கூடாதய்யா."

கடைக்காரர் நாகாஸ்திரத்தைப் பிரயோகித்தார்

'ஐயா வீட்ல இந்த நாப்பது கிலோ அரிசியையும் கொண்டு வந்து போடுறேன் எத்தனை மணிக்கு வரச் சொல்றீங்களோ, அத்தனை மணிக்கு வாறேன். சாயங்காலமுன்னா சௌகரியம். அதுக்குள்ள சர்க்கரையும் வந்திடும்"

செக்கிங் இன்ஸ்பெக்டர் யோசித்தார் பாவம்! ஏழை அவன் வேட்டி கூட கிழிஞ்சி இருக்கு. சட்டையில கூட பொத்தல் தலையில் எண்ணெயே இல்ல அலங்கோலமா இருக்கான் வீட்டுக்கு வரவழைச்சி புத்திமதி சொல்லலாம். ஒழிஞ்சி போறான்

இன்ஸ்பெக்டர், கருணை உள்ளம் கொண்டவர்.

"சரி சரி, என் பெயரையும், வீடே இல்லாத ஆசாமி பேரையும் அடிச்சிடு இந்தா என் பால் கார்டு; இதையும் 'ரினிவ்' பண்ணு (66ரூபாய்) இருட்டினதுக்கப்புறம் அரிசியோட வா. ஒழுங்காக இரு! இல்ல.. தொலைச்சிப் பிடுவேன் "

இன்ஸ்பெக்டர் போய்விட்டார்.

கடைக்காரரின் உடலை வெளியே காட்டும் ஆடைகள், 200 போலிப் பெயர்களால் 80 குவிண்டால் சர்க்கரையும், 150 குவிண்டால் அரிசியும் கிடைப்பதை ஊரின் கண்களுக்கு மறைக்கலாம். ஆனால் அவற்றை 'பிளாக்கில்' விற்று மாதா மாதம் சுமார் 4500 ரூபாய் வருமானம் வருவதை மறைக்கலாம் அந்தப் பணத்தினால், கடைக்காரருக்கு இரண்டு பெரிய வீடுகள் சென்னையில் இருப்பதையும், கிராமத்தில் 'இரண்டு கோட்டை' நிலம் இருப்பதையும் மறைக்கலாம். இது கூடப் பரவாயில்லை. இந்த எத்தர்கள் ஏழ்மைக் கோலம் போட்டு, ஏழைகளுக்குக் களங்கம் விளைவிப்பதைத் தான் அந்த ஆடைகள் மறைக்கவில்லை.

குட்டி 'மஸ்தானின்' 'நியாய விலைக் கடை' நன்றாகவே நடக்கிறது. ஸிவில் சப்ளைக் கார்ப்பரேஷனின் செக்கிங் இன்ஸ்பெக்டரின் சோதனையால் பொதுச் சொத்துக்கும் பலன் கிடைத்தது.

கடைக்காரரின் 200 போலிக் கார்டுகளில் இப்போது இரண்டு குறைந்து விட்டன

# அங்கே கல்யாணம்
# இங்கே கலாட்டா

குட்டாம்பட்டியில், வடக்குத் தெருவும், தெற்குத் தெருவும் அல்லோலகல்லோலப்பட்டன மற்றத் தெருக்கள் அல்லோல கல்லோலப்படவில்லை ஏனென்றால், அந்த ஊரில் வேறு தெருக்கள் கிடையாது. வடக்குத் தெரு மாடசாமியின் மகனும் கல்லூரி வரைக்கும் காலெடுத்து வைத்த பிள்ளையாண்டானுமாகிய சண்முகத்திற்கும், தெற்குத் தெரு, சுடலையாண்டி மகளும், டீச்சரம்மாவுமான அமுதாவுக்கும் திருமணம் நடக்கப் போவது ஊர் வாய்க்கு அவலாக வந்தது.

சண்முகமும், அமுதாவும் அடிக்கடி சந்தித்துப் பேசிக் கொண்டார்கள். அவர்கள் இரவில் சந்திக்கும்போது அதை அருகிலிருந்த முருங்கை மரத்தில் ஏறி, மறைவாக இருந்து ரசித்த சில மைனர்களுக்கு இது 'திரில்' லாக இல்லைதான். ஆனால், அந்த மைனர்கள் சொல்வதைக் கேட்ட ரசிகப் பெருமக்கள் 'முருங்கை மரத்தில் ஏறும் பாக்கியம்தான் கிடைக்கவில்லை திருமணத்தைப் பார்க்கும் பாக்கியமாவது கிடைக்கிறதே' என்று மகிழ்ச்சியடைந்தார்கள். "என் உழவு மாடுங்ககூட இவ்வளவு பொருத்தமில்ல. இந்தப் பய பிள்ளைக அவ்வளவு பொருத்தமாய் இருக்கு" என்று ஓர் ஆசாமி சொல்லும் அளவிற்கு அமுதாவும், சண்முகமும் கனப் பொருத்தமாக இருந்தார்கள்

ஆனால், பெற்றோர்கள், உறவினர்கள்.

நிச்சய தாம்பூலத்திற்குக் குறிக்கப்பட்ட நாளும் வந்தது. காலையில் இருந்தே ஆண் பெண் வீட்டுப் பங்காளிகள், கடைக்குப் போய் வெற்றிலை வாங்குவதும், வாங்கிய வெற்றிலை நன்றாக இல்லை என்று திருப்பிக் கொடுப்பதும், கருப்புக் கட்டி வாங்குவதும், அதை காபியாக்கிக் குடிப்பதுமாக இருந்தார்கள். அந்த ஊர் வழக்கப்படி மாப்பிள்ளை வீட்டுப் பங்காளிகள், பெண் வீட்டிற்குத் திரண்டு சென்று திருமணத்திற்குரிய நாளையும், நகை, ரொக்க

விவரங்களையும் முடிவு செய்யவேண்டும்.

மாப்பிள்ளை வீட்டில் சுமார் ஐம்பது பங்காளிகள் கூடி அண்டாவில் கொதித்துக் கொண்டிருந்த காபியையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்

"வந்து.. காபி குடிக்கலாம். ராகு காலம் வர்றதுக்கு முன்னாடி போயிடணும்" என்றார் ஒரு நடுத்தர ஆசாமி

"ராகு வந்தா வரட்டும் அது முடியற வரைக்கும் காபி குடிக்கலாம்" என்றார் வயிறு காய்ந்த ஆசாமி ஒருவர்

சண்முகத்திற்கு இருப்புக் கொள்ளவில்லை. "நிச்சயத் தாம்பூலம் எதற்கு? பேசாமல் இன்றைக்கே கல்யாணத்தை வைத்துக் கொள்ளலாம்" என்று முணுமுணுத்தான்.

"ஏலே, மடப் பய மவனே! எவன் கடையிலடா பாக்கு வங்கின? பாக்காடா இது?" என்றார் பல்போன தாத்தா ஒருவர்

ஒரு வழியாக மாப்பிள்ளை வீட்டார் பெண் வீட்டை நோக்கி நடை போட்டார்கள் "ஏல, சண்முகம்! நீ வரக் கூடாதுடா" என்று அவர்களோடு வந்த மாப்பிள்ளையைத் துரத்திவிட்டு, துள்ளு நடை போட்டது கூட்டம். பெண்ணைப் பெற்றவரும், அவரது பங்காளிகளும் வாசலிலேயே வந்து நின்றார்கள்.

"என்னவே மச்சான்! எப்போ புது வீடு கட்டப் போறீர்? இந்த வீட்டை இடிச்சித் தள்ளிட்டு, புதுசா கட்டும்" என்றார் மாப்பிள்ளையின் பெரிய தாத்தா மகன்.

"இழவு எடுத்த பய பிள்ளை,, அபசகுனமாய்ப் பேசறான் பார்" என்று 'சுப மங்கலமாக' ச் சொன்னார் கிழவர் ஒருவர். மாப்பிள்ளை வீட்டார் பெண் வீட்டிற்குள் நுழைந்து, அங்கு ஏற்கனவே விரித்திருந்த ஓலைப் பாயில் உட்கார்ந்து இருந்து, பெண் வீட்டுப் பங்காளிகளோடு சங்கமமாகி, லாரி விபத்தில் இறந்த முனுசாமியைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

இதற்குள் பெண் வீட்டுப் பேர்வழி ஒருவர், ஒருசிறு துண்டுக் கருப்புக் கட்டியை ஒவ்வொருவருக்கும் கொடுத்துக் கொண்டு போக, அவர் பின்னால் வந்த ஒருவர் தலைக்கு ஒரு டம்ளர் தண்ணீரைக் கொடுத்தார். அது தான் காபி.

"என்னவே, கருப்பட்டியை வச்சுக்கிட்டு. ஆளுக்கு ரெண்டு வாழைப்பழமும், சீனியும் வைக்கிறதை விட்டுப்புட்டு..." என்றார் மாப்பிள்ளை வீட்டார் ஒருவர்.

"வே மச்சான்! இதுகூடக் கிடைக்காம நீர் திண்டாடுனது எனக்குத் தெரியாதா?" என்று பழைய குப்பையை ஒருவர் கிளற, கூட்டத்தினர் கை தட்டிச் சிரித்தார்கள்.

"வந்த வேலையைப் பார்க்கிறதை விட்டுப்புட்டு மடப்பய மவனுக மட்ட ரகமா பேசறாங்க பாரு" என்று அறுபதைத் தாண்டிய ஐயாசாமி சொல்லிக் கொண்டே சம்பந்தி ஆகப் போகிறவர்களை அழைத்தார்.

"டேய், மாடா! நீ கொஞ்சம் குறைச்சி கேக்கணும் என்னடா சுடலை! நீ கொஞ்சம் கூட்டிக் கொடுக்கணும்" என்றார் ஐயாசாமி.

"மச்சானும் நானும் முன்னாடியே முடிவு கட்டியாச்சி. அவர் சொன்னபடி முப்பது கழஞ்சி நகையும், மூவாயிரம் ரூவாயும் கொடுத்தால் போதும்" என்றார் சண்முகத்தின் தந்தை மாடசாமி.

"எங்க குடும்பத்தில் பொண்ணு எடுக்க நீங்க தவம் இருக்கணும்; நகை எதுக்காம்?" என்றார் வக்கில்லாத வாயாடி ஒருவர்

மாப்பிள்ளை வீட்டார்க்கு ரோஷம் வந்தது.

"ஏது ஏது, நாங்களா தவம் இருக்கணும்? ஏதோ பய சண்முகம் விரும்புறானேன்னு உங்க வீட்டுக்கு வந்தோம்."

"காடிப் பானைக்குள் காலை விட்டிருப்பியளோ? பேச்சைப் பார், பேச்சை. எங்க அமுதா விரும்புறாளேன்னு உங்களை வீட்டுக்குள் விட்டோம்" என்றார் பெண்ணின் பெரியப்பா.

ஐயாசாமி துள்ளிக் குதித்தார். "சல்லிப் பயல்களா! சல்லித் தனமா பேசாதிங்கடா! சுடலையாண்டி! தாம்பாளத்தில் கொஞ்சம் வெத்திலை பாக்கும், வாழைப்பழமும், ரூவாயும் வச்சி கொண்டு வா வர்ற வெள்ளிக்கிழமை ராத்திரி பதினோரு நாழிகையில் தாலி கட்டணும்" என்றார். உடனே சுடலையாண்டி, தயாராக வைத்திருந்த தாம்பாளத்தை நீட்டினார். சாளரத்தின் வழியாக, நடப்பது அனைத்தையும் நாணத்தோடு கவனித்துக் கொண்டிருந்த அமுதா. பூரிப்பால் பௌர்ணமியானாள்

அந்தச் சமயம் பார்த்து மாப்பிள்ளை வீட்டைச் சேர்ந்த கல்லூரிப் பையன் ஒருவன், "ஒரு சின்ன விஷயம், எங்க பெரியப்பா மகன் கல்யாணத்துக்கு, வேளாண்மைக் கட்சித் தலைவர் 'வெற்றித் திரு' வெண்தாமரையார் தலைமை தாங்கணும்" என்றான்

"அந்தத் தோலிருக்க சுளை விழுங்கும் வெண்தாமரை

வேண்டாம். நல்லார் கட்சித் தலைவர் 'நயமிகு' நாராயணன் தான் தலைமை தாங்கணும்" என்று பெண் வீட்டைச் சேர்ந்த பி.யூ.சி. ஃபெயிலான ஒருவன் சொன்னான்

"யாரு, நாராயணனா? அவன் அகப்பட்டதைச் சுருட்டும் அயோக்கியனாச்சே? அவன் வந்தால் கல்யாணம் நடக்காது, கருமாதி தான் நடக்கும்."

"எங்க தலைவரை, அப்படி மட்டமாய்ப் பேசாதே மச்சான்! உங்க வெண்தாமரை தான் அயோக்கியன்."

"நாராயணன் வந்தால் அவன் காலை ஓடிச்சி, கையில் கொடுப்போம்."

"வெண்தாமரை வராம கல்யாணம் இல்லை."

"நாராயணன் தலைமை ஏறாமல் தாலி, கழுத்தில் ஏறாது."

பிள்ளை வீட்டாரும், பெண் வீட்டாரும் (சம்பந்திகளாகப் போகிறவர்கள் தவிர) வெண்தாமரையாகவும், நாராயணனாகவும் மாறினார்கள். விஷயம் கௌரவப் பிரச்சினையாகியது

ஐயாசாமி எம்பிக் குதித்தார் பெண்ணின் அப்பாவும், பிள்ளையின் அப்பாவும் கையைப் பிசைந்தார்கள். இப்போது அவர்களால், தத்தம் பங்காளிகளின் பேச்சுக்கு மறுவார்த்தை சொல்ல முடியாது. அப்படிச் சொன்னால், பங்காளிக் கூட்டம் 'பாய்காட்' செய்து விடும்

"தலைமை கிலைமை எதுவும் வேண்டாம். எவனையும் கூப்பிட வேண்டாம்" என்றார் ஐயாசாமி.

"முடியாது; 'வெற்றித்திரு' வெண்தாமரை வரணும்."

"அந்த முடிச்சி மாறி வந்தால், கழுத்தில் முடிச்சி விழாது. நாராயணன் வந்தே ஆகணும்."

ஐயாசாமி சிந்தித்தார்; "இதுக்கு நான் ஒரு வழி கண்டு பிடிச்சிட்டேன். நான் சொல்றதைக் கேளுங்க" என்றார்.

"சீக்கிரமா சொல்லுங்க மாமா; நாராயணன்தான் தலைமை தாங்கணும்."

"வெண்தாமரை வரணும்னு சொல்லுங்க."

ஐயாசாமி நிதானமாகச் சொன்னார்.

"பேசாம நானே தலைமை தாங்குகிறேன்.

கூட்டத்தினர் சிரித்தார்கள்.

"தலைமை தாங்குறவர் ஒரு மணி நேரமாவது பேசணும். உங்களால் முடியுமா தாத்தா" என்றான் ஃபெயிலான பி.யூ.சி.

ஐயாசாமி, "ஒரு மணி நேரம் என்ன, அதுக்கு மேலே வேணுமுன்னாலும் பேசுவேன்" என்றார்.

"நீங்க பேசுவீங்க; யார் கேட்கிறது? எங்க தலைவர் வெண்தாமரை, பேசினால், மாப்பிள்ளை தாலி கட்டக் கூட மறந்து போவான்."

"கூடாது, கூடவே கூடாது. வெண்தாமரையும் ஆமையும் ஒண்ணு. போற இடம் உருப்படாது; ஒருக்காலும் நடக்காது. அந்தச் சோமாறி வந்தால் கல்யாணம் நடக்காது, கருமாதிதான் நடக்கும்."

ஐயாசாமி மேடைப் பேச்சாளியானார்.

"மடப்பய மவங்களா, .சொல்றதைக் கேளுங்க: அழிஞ்சி போகாதீங்க. நம்ம கிராமத்தில் கட்சிங்க வந்த பிறகு ஊரு ஊரா இல்லை. அதுவும் பஞ்சாயத்துத் தேர்தல் இழவுக்குப் பிறகு ஒரே இழவாப் போச்சி. எங்கயோ இருக்கிற பயல்களுக்காக நாம் ஏண்டா சண்டை போடணும்? அவங்க ஒருவனோட ஒருவன் கூடிக்கிறான். நம்ம பசங்க, இழவு வீட்டுல கூட கலந்துக்க மாட்டேங்கறான். இது என்ன அரசியலுடா? நாம ஒன்னோட ஒண்ணு: சின்னஞ் சிறிசுக, அந்த ரெண்டும் நூறாண்டுப் பயிருடா; ஒன்னை ஒண்ணு விரும்புது, அழிச்சிடாதீங்க; அழிஞ்சி போவீங்கடா. சுடலையாண்டி, தாம்பாளத்தைக் கொண்டு வா!"

"முடியாது, முடியாது, நாராயணன் வராம கல்யாணம் நடக்கப் போறதில்லை."

"வெண்தாமரை வராம, கல்யாணத்தை நடத்த விடப் போறதில்லை."

"முடியாது. வெண்தாமரை அயோக்கியன்; போக்கிரி; பொறுக்கி."

"வே, மச்சான்! என்னைத் திட்டும்; ஆனால் எங்க தலைவரைத் திட்டினா, பல்லு உடைஞ்சு போயிடும்."

"எங்கே, உடைடா பார்க்கலாம்."

"உடைச்சா என்னடா பண்ணுவே?"

இரு தரப்பும், கைகலக்க முற்பட்டன. உள்ளே இருந்த பெண் பிள்ளைகள் வெளியே வந்து ஒப்பாரி வைத்தார்கள்.

அமுதா, செய்வதறியாது சண்முகத்தை நினைத்தாள். ஊரே கூடியது. சத்தம் கேட்டு, சண்முகமும் அங்கே வந்தான். பழைய ஜாதிகள் மறைந்து கொண்டிருக்கையில் புதிய ஜாதிகள் அரசியல் ஆடையில் உலவத் தொடங்கின.

இப்போது, ஐயாசாமி அடிதடியில் அகப்படாமல் தப்பிப்பதைத் தவிர ஒன்றும் செய்ய முடியவில்லை. செய்ய முடிந்ததைச் செய்தார்.

"வாடா சண்முகம்! இந்த ரௌடிப் பயல்க வீட்டில் ஒண்ணும் வேண்டாம்."

"நீ உள்ளே போம்மா! இந்த ரௌடிப் பயல்க வீட்டில் சம்பந்தம் வேணாம்."

இரு தரப்பும் ஒருவாறு கலைந்து, வெளியேறிற்று. அமுதாவும், சண்முகமும் அழுது கொண்டே பிரிந்தார்கள். திருமணம் நின்றுபோன வெறுப்பில் சண்முகம் ராணுவத்தில் சேர்ந்து, காஷ்மீருக்குப் போய்விட்டான். அவன் பிரிவில், அமுதா அரையுருவானாள். இரு தரப்பினரும் தங்கள் தன்மானத்தைத் தலைவர்களோடு ஐக்கியப்படுத்தி, தீராப் பகை கொண்டனர்.

உறவு, பகையாக மாறிய ஒரு மாதத்திற்குள் எல்லாப் பத்திரிகைகளும் ஒரு செய்தியைக் கொட்டை எழுத்தில் வெளியிட்டன. செய்தி இதுதான்.

வேளாண்மைக் கட்சித் தலைவர் வெண்தாமரை மகனுக்கும், நல்லார் கட்சித் தலைவர் நாராயணன் மகளுக்கும் சென்னையில் திருமணம்; தலைவர்கள் வாழ்த்து!

# பழத்தோட்டம்

ஒரு கிராமப் பஞ்சாயத்துக்குத் தனியாக அலுவலகம் இல்லையானால், அந்தப் பஞ்சாயத்துத் தலைவரின் வீடு அலுவலகமாகக் கருதப்பட வேண்டும் என்று, சட்டம் சொல்கிறது. அந்த ஊர் பஞ்சாயத்துத் தலைவர் பரமசிவமோ, ஓர் ஊரில் பஞ்சாயத்து அலுவலகம் இருந்தால், அது தலைவரின் வீடாகக் கருதப்பட வேண்டும் என்று, சட்டத்தைத் தாமாகவே திருத்தி, அமுல் செய்பவர். அப்படிப்பட்டவருக்கு எதிராக அந்தக் கிராமத்தில் ஆர்ப்பாட்டங்கள் நடப்பதில் வியப்பில்லை. அவர், அந்த ஆர்ப்பாட்டங்களை அநாவசியமாகச் சமாளிப்பதிலும் வியப்பில்லை. அவரை எதிர்ப்பவர்களுக்கும், அவரிடம் ஒரு பயம் கலந்த மரியாதை உண்டு. சிலர், அவரை "பலே கில்லேடி" என்று பாராட்டுவதும் உண்டு. கொள்ளைக்கார ஜம்புலிங்கத்திற்கும் சாம்பல் பள்ளத்தாக்கு கொள்ளைக்காரர்களுக்கும், மக்கள் மத்தியில் இருக்குமே ஒரு மரியாதை, அந்த மரியாதை பரமசிவத்திற்கும், பஞ்சாயத்துச் சொத்து மாதிரி, நன்றாகக் கிடைத்தது.

பரமசிவத்திற்கு எதிராக, பஞ்சாயத்து அலுவலகத்திற்குச் சற்றுத் தொலைவில் உள்ள கிராமக் 'கச்சேரியில்' ஒழிக கோஷங்கள் ஒலித்தன. கோஷங்களைச் செவி மடுக்கக் கூட்டம் கூடி வழிந்தது.

ஓடு. ஓடு;

ஊரைவிட்டு ஓடு!

கலை; கலை;

பஞ்சாயத்தைக் கலை!

நடத்து, நடத்து,

நீதி விசாரணை நடத்து!

பஞ்சாயத்துத் தலைவர் பரமசிவம்!

ஒழிக! ஒழிக!

ஊர்ப் பொதுமக்களில் பெரும்பகுதியினர், எதிர்க் கட்சித் தலைவர் ஏகாம்பரம் (முன்னாள் பஞ்சாயத்துத் தலைவர்) தலைமையில், கோஷங்களை, கோஷ்டிக் கனமாக்கிக் கொண்டிருக்கையில், பஞ்சாயத்து வளர்ச்சி அதிகாரி சிவகுமார், கணக்குகளைத் தணிக்கை செய்வதற்காக, அந்தத் திருவூரில் காலடி வைத்தான். காதில் எட்டி உதைப்பது போல், சத்தம் கேட்டு, கூட்டத்தைத் திரும்பிப் பார்த்தான். அவனுக்கு இருபத்து மூன்று வயதிருக்கும். தமிழக சர்வீஸ் கமிஷனில் "குருப் டூ" எழுதி, பதவிக்கு வந்தவன் அவன் வயதுக்கேற்ற துணிச்சலில் (அல்லது மடத்தனத்தில்) சிவகுமார், கூட்டத்திற்குள் நுழைந்தான். அவனைப் பார்த்ததும் கூட்டத்தில் நிசப்தம். அவன் உடனடியாக பஞ்சாயத்துத் தலைவரை டிஸ்மிஸ் செய்யப்போவது போல் கூட்டத்தில் ஒரு பிரமை; கூட்டம், மௌனத்தின் மூலம் கொடுத்த மரியாதையில் சிவகுமார் பெருமிதமடைந்தான்.

நெடிய அந்த மௌனத்தை, ஒரு பியூஸி பெயிலன் கலைத்தான்.

"பஞ்சாயத்து ஆபீஸர் சார்! ஊராட்சி மன்றத்திற்கு எதற்காகத் தையல் மிஷின்கள் கொடுக்கிறாங்க?"

சிவகுமார், ஒரு (இன்றைய) அதிகாரிக்குரிய பாணியில் பதிலளித்தான்:

"ஏழைப் பெண்கள் மிஷின்களில் தையல் கற்றுப் பிழைப்பதற்காக, இந்தத் திட்டம்."

பெயிலன் விடவில்லை: "பஞ்சாயத்துத் தலைவர் வீட்டில் தான் மிஷின்கள் இருக்கணுமுன்னும், அதில, அவரு பிள்ளைங்கதான் தைக்கணுமுன்னும் ஏதும் சட்டம் இருக்கா ஸார்?"

சிவகுமார், இந்தக் கேள்விகளுக்கு மௌனத்தைப் பதிலாக்கினான்.

பியூஸியாரின் வழியில், இன்னொரு ஆசாமி நடை போட்டார்: அவருக்குப் பஞ்சாயத்துத் தலைவர் வீட்டு வரியை அதிகமாகப் போட்டிருந்தார்.

"ஆபீஸர் ஸாரே! பஞ்சாயத்தில் இருந்து ஸ்கூலுக்கு, ஒரு பிள்ளைக்கு நாலு பைசா வீதம் கொடுக்கிறாங்களே, எதுக்கு?"

"அரசு ஆறு பைசாவும், பஞ்சாயத்து நாலு பைசாவுமாகப்

போட்டு, ஆக, பத்து பைசாவில், ஒவ்வொரு பிள்ளைக்கும் நடுப்பகல் உணவு கொடுக்க வேண்டுமென்ற உயர்ந்த லட்சியமே காரணம்" என்றான் சிவகுமார்.

"அப்படியா சங்கதி! பஞ்சாயத்துத் தலைவரும், ஹெட்மாஸ்டரும் பங்கு போட்டு ஹோட்டலில் சாப்பிடலாமுன்னு சட்டம் சொல்றதா நான் நினைச்சேன்!"

சிவகுமார் மௌனியானான். இப்போது எதிர்க்கட்சித் தலைவர் ஏகாம்பரம் துள்ளிக் குதித்தார்.

"இ.ஓ.பி. ஐயா! கிணறு வெட்றதுக்காக, சர்க்கார்ல விவசாயி ஒவ்வொருவருக்கும் ஐயாயிரம் ரூபாய் லோன் கொடுக்கிறாங்களாமே; ஏன் கொடுக்கிறாங்க?"

"இது என்னங்க கேள்வி? நிலத்தில் நீர்பாய்ச்சி, உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற அரசின் நோக்கமே, அடிப்படைக் காரணம்" என்றான் சிவகுமார். ஏகாம்பரம் இரண்டு தடவை சிரித்துவிட்டு, "இந்த ஊர்லே பத்துப் பேரு கிணறு வெட்ட லோன் வாங்கினாங்க அதில ஐந்து பேருக்குச் சொத்தே கிடையாது; இரண்டு பேர் ஊரிலேயே இல்ல பத்தில் ஒருவன் கூட கிணறு கிடக்கட்டும், ஒரு குழி கூட வெட்டல. ஒரு வேளை, பஞ்சாயத்துத் தலைவரை, பைக்குள்ள போட்டா, ஒண்ணும் வெட்ட வேண்டாமுன்னு சட்டம் சொல்லுதோ?" என்றார்.

"டேய்! இப்படியே பேசிக்கிட்டுப் போனால், உன்னை வெட்டுவேண்டா" என்று ஒரு குரல் கேட்டது; பஞ்சாயத்துத் தலைவரின் ஆதரவாளர்கள், கூட்டத்திற்கு எதிர்ப்புறமாகத் திரண்டு வந்தார்கள். முன்னணியில் நின்று, கூட்டத்திற்குப் பின்னணி பாடியது, பஞ்சாயத்துத் தலைவரின் மச்சான் (காண்டிராக்டர்) ராமசாமி. எதிர்பாராத் இந்தப் 'பஞ்சாயத்துத் தலைவர் பாதுகாப்புப். படை'யின் தளபதி ராமசாமிக்கு, ஏகாம்பரம் பதிலளிக்கு முன்னால், படையின் துணைத் தளபதி கத்தினார்.

"யோவ்! பரமசிவத்தைத் திட்டுற பரமயோக்யரே! நீயும்தான் தலைவராய் இருந்தே! நீ என்னத்தைக் கிழிச்சே?"

எதிர்க்கட்சி ஏகாம்பரம் என்ன கொக்கா?

"நான் என்ன கிழிச்சேனோ, தெரியாது. ஆனால், என் மாமன் மச்சானுக்குக் காண்டிராக்ட் கொடுக்கல. என் பிள்ளிங்களை தையல் மிஷின்களில் தைக்க விடல."

பதில் பேசப்போன தொண்டர்களை அடக்கிவிட்டு பஞ்சாயத்துத் தலைவர் மச்சான் பதிலளித்தார்

"நீ மாமன் மச்சானுக்கு ஏய்யா கண்டிராக்ட் கொடுக்கிற? நீயே வேறு பேர்ல காண்டிராக்ட் எடுத்தியே, மறந்துட்டியா? நீ தையல் மிஷின்கள்ள உன் பிள்ளிங்கள தைக்க விடலங்கறதும் வாஸ்தவம்தான். நீதான் அவ்வளவு மிஷினையும் வித்துப்பிட்டியே; பிறகு எப்படித் தைக்கிறது?"

ராமசாமியின் பதிலுக்கு, அவரது தொண்டர்கள் கை தட்டினார்கள். உடனே எதிர்க் கட்சிக்காரர்கள் கல் தட்டினார்கள். தினவெடுத்த தோளினராய் இரு கோஷ்டிகளும் பகைப்புலம் நோக்கிப் பாயத் தொடங்கியதும் பஞ்சாயத்து வளர்ச்சி அதிகாரி சிவகுமார் குறுக்கிட்டான். கல்லூரிப் பேச்சுப் போட்டிகளில் சிறப்புப் பரிசு (மூன்றாவது பரிசு) பெற்ற அவன் "அமைதி, அமைதி, வன்முறை வழியல்ல. கல்லடி நல்லடியாகாது பஞ்சாயத்துத் தலைவர் தவறு செய்திருந்தால் நான் நடவடிக்கை எடுக்கிறேன். பஞ்சாயத்தைக் கலைக்க (சிபார்சு) செய்கிறேன். ஆனால், தலைவர் தவறு செய்தாரா என்பதை நான்தான் கவனிக்கவேண்டும். நீங்களே நீதிபதிகளாகக் கூடாது.

எதிர்க்கட்சி அணி, சிவகுமார் 'மனுநீதி' வழங்குவான் என்று நம்பியதைப் போல், "நடத்து நடத்து! நீதி விசாரணை நடத்து! பஞ்சாயத்து அதிகாரி சிவகுமார் வாழ்க!" என்று சொல்லிக் கொண்டே நடந்து கலைந்தது.

பஞ்சாயத்து (தலைவர்) மச்சான், சிவகுமாரை ஒரு புழுவைப் பார்ப்பது போல் பார்த்துவிட்டு "யோவ் இ ஓ பி! நீ ஏய்யா இந்த அற்பப் பயல்ககிட்ட வந்தே? நீ பாட்டுக்கு பஞ்சாயத்துக்கு வந்தியா, கணக்கைப் பார்த்தியான்னு போகாம உனக்கு ஏய்யா வீண் வேலை?" என்றார்.

சிவகுமாருக்கு ஏகப்பட்ட கோபம்; ராமசாமி 'நான் நீ' என்று பேசுவதால், ஆத்திரமடைந்த அவன், பொறுமையை கடைப்பிடித்தான். (செல்லாக் கோபம் பொறுமை என்பது பழமொழி.) ராமசாமி எங்கே பல்லை உடைத்துவிடுவானோ என்று எண்ணி, பல்லைக் கடித்துக் கொண்டான். பஞ்சாயத்து அலுவலகத்தை நோக்கி நடந்தான்.

பஞ்சாயத்துத் தலைவர் பரமசிவம், பாதிக் கண்களை மூடிய வண்ணம், ஒரு ஈஸிசேரில் மல்லாந்து கிடந்தார். பக்கத்தில்

பார்ட்-டைம் கிளார்க், விசிறியால் அவருக்கு வீசிக் கொண்டிருந்தான். அவரது பிள்ளைகள் அலுவலகத்தில் 'கண்ணாம் பூச்சி' விளையாடிக் கொண்டிருந்தார்கள். உலகத்தில் எதுவுமே நடக்கவில்லை என்பது மாதிரி, பரமசிவம் ஒரு பாட்டை முணுமுணுத்துக் கொண்டிருந்தார்.

வளர்ச்சி அதிகாரி சிவகுமார் அலுவலகத்திற்குள் நுழைந்ததும், தலைவர் லேசாகச் சிரித்தார். அதுதான் வரவேற்பு. சிவகுமார், 'பிஸினஸ் லைக்காக' "நான் ஆடிட்டிக்கு வந்திருக்கேன்" என்றான்.

"தெரியும்! நேற்று ஆர்.டி.ஓ. ஆபீஸில் உங்கள் டூர் புரோக்ராமைப் பார்த்தேன்," என்றார் பஞ்சாயத்து பரமசிவம்.

"நான் உங்களுக்கு லெட்டர் போட்டிருந்தேனே!"

"நான் பார்க்கல...எங்கேயாவது வீசி எறிஞ்சிருப்பாங்க." பஞ்சாயத்துத் தலைவர் பரமசிவம் அலட்சியமாகக் கூறினார்.

சிவகுமார் பேச்சை விரும்பாதவன்போல், "எல்லா ரிக்கார்ட்ஸும் ரெடியா?" என்றான்.

பரமசிவம் சாவதானமாக, "இன்னும் கர்ணம் டிமான்ட் புக்கையே எழுதல; எப்படிக் கணக்கைப் பார்க்கப் போறீங்க? வி.எம். ஊரிலேயே இல்ல; வரி வசூல் புக் அவருகிட்டதான் இருக்கு" என்றார்.

"நான் உங்களுக்கு முன்னாலேயே லெட்டர் போட்டது, இப்படி நேரக் கூடாது என்பதற்காகத்தான்."

இதற்குள் மச்சான்காரர் ராமசாமி குறுக்கிட்டு "யோவ், எங்க மாமா பஞ்சாயத்துக்குன்னு உழைச்சி உழைச்சி ஓடாய்ப் போனவரய்யா: அவரைப் போலீஸ் விசாரிக்கிறது மாதிரி விசாரிக்கிறியே!"

தலைவர், மச்சான் பேசுவதைத் தடுக்கவில்லை. அவன் அப்படிப் பேசுவது ஒரு சர்வசாதாரண நிகழ்ச்சி என்பது போல், முகத்தை ரப்பர் மாதிரி வைத்துக் கொண்டு "சிவகுமார்! உங்களுக்குப் புரோமோஷன் வரப் போவுதாமே? கலெக்டர் என்கிட்ட சொன்னார்" என்றார்.

"எனக்கு இன்னும் புரபேஷனே டெக்லேர் ஆகலியே! வேலைக்கு வந்து மூணு மாதங்கூட ஆகல; அதெப்படி வரும்?" என்றான் சிவகுமார்.

"சாரி! கலெக்டர் சொன்னது சிவகுமாரை: உன்னை... உங்களைப் பத்தியில்ல."

சிவகுமார், கணக்கே கண்ணாயினான். "இப்போ, என்ன செய்யுறது? எப்படியும் ஆடிட் செய்தாகணுமே."

"நான்தான் சொல்லிவிட்டேனே தம்பி: டிமாண்ட் புக் எழுதறவன் எவனோ ஐம்பது ரூபாய் கொடுத்தான்னு நிலம் அளக்கப் போயிட்டான். இன்னொரு நாளைக்குப் பார்த்துக் கிட்டாப் போச்சு."

சிவகுமார் சிறிது யோசித்து விட்டு, "1966-67ஆம் ஆண்டுக் கணக்கைத் தானே பார்க்கப் போறேன்: அந்த ரிக்கார்டுங்கெல்லாம் இருக்கத்தானே செய்யும்" என்றான்.

துடித்துக் கொண்டு எழுந்த மச்சானைக் கண்களால் அடக்கிவிட்டு, "அந்த கேஷ்புக் எங்க இருக்கோ, தேடணும். உம்...தம்பி! நான் சொல்றதைக் கேளுங்க. நான் கொஞ்சம் பிஸியாய் இருக்கேன். மினிஸ்டர் வராரு. ஒரு கூட்டம் நான் தலைமை தாங்கறேன்; இன்னொரு நாளைக்கு வச்சிக்கலாம்."

சிவகுமார் விடவில்லை "நீங்க வேணுமின்னா போங்க: உங்க கிளார்க் இருக்கார்ல, அவரை வச்சி முடிச்சிக்கிறேன்."

பஞ்சாயத்துத் தலைவர், சிவகுமாரை மேலும் கீழும் பார்த்துவிட்டு, பார்ட்-டைம் கிளார்க்கை கீழும் மேலுமாகப் பார்த்தார். பிறகு "டேய், ஐம்பு! நம்ம வீட்ல போயி கேஷ் புக்கைத் தேடி எடுத்தா. பசங்க எங்கேயாவது அவங்க நோட் புத்தகங்களுக்குள்ள வச்சிருப்பாங்க" என்றார்.

பார்ட்-டைம் கிளார்க், உடம்பெல்லாம் பார்ட்-பார்ட்டாக ஆட, பறந்தான். பஞ்சாயத்துத் தலைவர், "சரி சிவகுமார், நான் ஆர்.டி.ஓ. வைப் பார்த்துவிட்டு வந்துடுறேன். உங்களுக்கு உதவி செய்ய என் மச்சான்காரன் இருக்கான். எதையும் கேளுங்க, தயங்காம கொடுப்பான்" என்று சொல்லிவிட்டு வயிறு குலுங்க எழுந்தார். சிறிது யோசித்துவிட்டு, "என் கணக்குப் புக்கைப் பார்த்திங்கன்னா தெரியும்: கிராமத்துக்கு எவ்வளவோ சேவை செய்திருக்கேன். சொந்த முறையில் கூட எவ்வளவோ சேவை செய்திருக்கேன் பெண் பிள்ளிங்க நெல்லை உரலில் போட்டுக் குத்தி கஷ்டப்படறாங்களேன்னு ஒரு ரைஸ் மில் வச்சேன்; கிணறு வெட்டி விவசாயிங்க பிழைக்கட்டுமுன்னு வெடி மருந்துக் கடை வச்சேன். ஜனங்களுக்குக் கடன் கிடைக்கட்டுமுன்னு கோ-ஆப்ரேட்டிவ்

சொஸைட்டிக்கு தலைவராய் ஆனேன் கிராமத்துக்காரங்க வீடு கட்ட கஷ்டப்படக் கூடாதுன்னு சிமென்ட் கோட்டா எடுத்தேன் இவ்வளவு சேவை செய்தும் சில நன்றி கெட்ட பயலுக இருக்காங்க " தன் சாதனைகளை அடுக்கடுக்காக எடுத்து வைத்தார், பஞ்சாயத்துத் தலைவர்

"காய்ச்ச மரத்தில்தான் மாமா கல்லு விழும்" என்றான் மச்சான் ராமசாமி சிவகுமார் 'கல்' மாதிரி பேசாமல் இருந்தான் தலைவர் பரமசிவம் நீண்ட பெருமூச்சை விட்டு விட்டு, "சரி, எனக்கு நேரமாயிட்டு டேய் ராமசாமி, சிவகுமாருக்குச் சாப்பாடு போடு" என்று பிச்சைக்காரனுக்குச் சோறு போடச் சொல்வது போல் சொல்லிவிட்டுக் கிளம்பினார்

இதற்குள் பார்ட்-டைம் ஆசாமி தலைவர் வீட்டுக்குப் போகையில், தலைவரின் தலைவியான அவர் மனைவி, சில பழைய காகிதங்களைப் பேப்பர்காரனுக்குப் போட, விலை பேசிக் கொண்டிருந்தாள் அந்தக் குப்பைக்குள் படுகுப்பையாக இருந்த கேஷ் புக்கையும், டிமாண்ட் புக்கையும் கொண்டு வந்து சிவகுமாரிடம் நீட்டிவிட்டுப் பணிவாக நின்றான் வளர்ச்சி அதிகாரி, ஒவ்வொரு செலவையும் ரசீதையும் பார்த்தான் சும்மா சொல்லக் கூடாது கணக்கு கச்சிதமாக இருந்தது பார்ட் டைம் கிளார்க்கு பதினைந்து ரூபாய், நடுப் பகல் நிதி முப்பது ரூபாய், ரோடு போட்டது ஆயிரம் ஆக பஞ்சாயத்துத்தான், தலைவருக்குக் கடன்காரனாக இருந்தது

கையிலிருந்து மனிதர் செலவழித்திருக்கிறார்

சிவகுமாருக்கே ஆச்சரியம், அத்தனை செலவுக்கும் ஸ்டாம்ப் போட்ட ரசீதுகள், ஒரே ஒருவிடத்தில் மட்டும் ஒரு கேள்வியைக் கேட்டான்

"ஏம்பா, உழுவதற்குக் கூலி 20 ரூபாய்னு போட்டிருக்கு, எதுக்கு?" என்றான்

" பழத்தோட்டத்துக்கு" என்று பார்ட்-டைம் பதில் சொல்லும் முன்னால், மச்சான்காரன் முந்திக் கொண்டான் மரஞ்செடி வாங்க ரூ 300, அவற்றை நடுவதற்கு ரூ 100, உரம் போட ரூ 200, மருந்து தெளிக்க ரூ 50, வேலி போட ரூ 50 எல்லாவற்றுக்கும் ரசீதுகள்! அவன் பார்த்த பஞ்சாயத்துக்களில் இந்தப் பஞ்சாயத்தில் தான் கணக்கு கச்சிதமாக இருந்தது ஆனால், கேஷ் புக்கில் அவரு பசங்க படம் போட்டிருந்தாங்க பரவாயில்லை, கணக்குதான் சரியாக

இருக்கே!

சிவகுமார் கேஷ்புக்கில் கையெழுத்துப் போட்டுவிட்டு எழுந்தபோது, பஞ்சாயத்துத் தலைவர் பரமசிவம், "இந்த ஆர் டி ஓ சுத்த மோசம் மனுஷன் 'வீட்டுக்கு வாங்க, வீட்டுக்கு வாங்க' ன்னு உயிரை எடுக்கிறார் அன்றைக்கு மினிஸ்டர் 'கெஸ்ட் ஹவுஸிலேயே தங்கிடு' ன்னார் எனக்கென்ன வேற வேலை கிடையாதா?" என்று முனங்கிக் கொண்டே வந்தார்

"கணக்கெல்லாம் கச்சிதம் ஸார், ஒரு சின்னத் தப்புக்கூடக் கிடையாது" என்றான் சிவகுமார் தலைவர் சிரித்துக் கொண்டார், மச்சானைப் பார்த்து, சோடா வாங்கிக் கொண்டு வரச்சொன்னார்

"பிரஸிடெண்ட் ஸார், பழத்தோட்டம் போடுறதுக்குக் கூட கையில இருந்து பணம் செலவழிச்சிருக்கீங்களே சினிமா செஸ் வந்ததும் அதை எடுத்துக்கங்க" என்றான் சிவகுமார் மூட மக்கள், இவரைப் போய் 'கரெப்ட்' என்கிறார்களே!

"பணம் என்ன தம்பி பணம், இன்னாரு இருந்தாரு, இவரு போட்ட பழத்தோட்டம் இது! என்று செத்தபிறகு சொன்னால் போதும் ஏழை எளியவங்க நல்லா இருக்கணும், அவ்வளவுதான் அந்தப் பழத்தோட்டத்துல என் கையால ஒரு பழத்தைக்கூட இன்னும் எடுத்து ருசி பார்க்கல "

"பிரஸிடென்ட் ஸார், அப்படியே ஒரு பொடி நடையா நடந்து பழத்தோட்டத்தைப் பார்த்துவிட்டு வந்திடலாமா?" என்றான் சிவகுமார் தலைவரின் கறுத்த முகம் சிவந்தது

"நேரமாயிட்டு! இன்னொரு நாளைக்குப் பார்க்கலாம்

"இல்ல, பழத்தோட்டத்தைப் பார்த்துட்டு வந்தால் தேவல

"உங்களுக்குப் பழம் வேணுமுன்னா, என் வீட்ல இருக்கு, தர்றேன் "

"அதுக்குக் கேட்கல இவ்வளவு பணம் செலவழிச்ச பஞ்சாயத்துப் பழத்தோட்டத்தைப் பார்க்காமப் போறது முறையில்ல "

"அப்படின்னா நான் பழத்தோட்டம் போடவே இல்லை என்கிறீங்களா?"

பஞ்சாயத்துத் தலைவர், பிறிதொரு அவதாரம் எடுத்தவர் போல் 'எங்க அப்பன் குதிருக்குள் இல்லை' என்கிற முறையில் பேசியதால், சிவகுமார் 'அப்படி ஏன் இருக்கக் கூடாது?' என்று முதன் முதலாகச் சந்தேகப்பட்டான் இதற்குள் மச்சான்காரன்,

சோடாவோடு வந்தான்

"நான் உங்களை நம்பாமல் இல்லிங்க. எதுக்கும் அதைப் பார்த்து ஆகணும். உங்களால் வரமுடியாட்டா பரவாயில்லை, கிளார்க்கை அனுப்புங்க" என்றான் சிவகுமார்.

தலைவரின் முகம் சினத்தில் தடித்தது "இப்போ என்ன செய்யணுமுங்கிறீங்க?"

"பழத்தோட்டத்தைப் பார்க்கணுமுங்கிறேன்."

"பார்க்காவிட்டால்..."

"பழத்தோட்டம் இல்லை என்கிற முடிவுக்கு வருவேன்."

சோடாவை உடைக்கப் போன மச்சான்காரன் அந்தப் பாட்டிலை எடுத்து சிவகுமாரை ஓங்கிக் கொண்டே, " டேய், கணக்கு சரியாய் இருக்கிறபோது பழத்தோட்டம் எதுக்குப் பார்க்கணும்? பழத்தோட்டம் பழத்தோட்டமுன்னு சொன்னால் முகம் பழமாயிடும். எங்களை, என்ன திருட்டுப் பயல்கள்னு நினைச்சியா?" என்றான்.

சிவகுமார், பேச வாயெடுக்குமுன், "பேசினால் உதைப்பேன். மரியாதையாய்ப் போயிடு இல்ல, பூமிக்குள்ளே போயிடுவ" என்றான் மச்சான்

பஞ்சாயத்துத் தலைவர், உலகத்தில் எதுவுமே நடக்காதது போல், ஈஸிசேரில் மல்லாந்து, பாதிக் கண்ணை மூடியவாறு, ஒரு பாட்டை முணுமுணுக்க, பார்ட்-டைம் விசிறியால் அவருக்கு வீசினான். மச்சான் சோடாவை உடைத்துக் குடித்தான்.

சிவகுமார், அவசர அவசரமாக யூனியன் ஆபீஸ் வந்து, சட்டத்தின் சரத்துக்களை மேற்கோள் காட்டி, ஒரு பெரிய ரிப்போர்ட் தயாரித்தான். "பழத்தோட்டத்தைக் காணவில்லை" என்று மேலிடத்திற்குப் புகார் செய்தான்.

அந்தப் புகார் போன பதினைந்து நாளில், பலன் கிடைத்தது.

பஞ்சாயத்து வளர்ச்சி அதிகாரி சிவகுமாரை, அந்த யூனியனில் காணவில்லை!

# சாமியாடிகள்

சுடலை மாடசாமி கோவிலில் ஊரே திரண்டிருந்தது. சுடலைமாடன், கோட்டை மாடன், சங்கிலி மாடன் என்ற இருபத்தோரு தேவதைகளுக்குப் 'படைப்பு' வைத்திருந்தாலும், சுடலை மாடசாமிதான் அந்த ஊருக்கு ஹீரோ. கோவில் முகப்பு வாயிலுக்குச் சற்று உள்ளே, வில்லுப்பாட்டு நடந்துகொண்டிருந்தது. *'பாடகி' வடிவு போடு போடென்று* பாட்டுக்களைப் பொழிந்து கொண்டிருந்தாள். காத்தமுத்து ஆடிக்கொண்டிருந்தான்.

அவனை சுடலை மாடசாமி ஆட்டுவிப்பதாகச் சொன்னார்கள். வில்லடிப்பவள் பெண் என்பதாலும் - அதிலும் அழகிய பெண் என்பதாலும் - கூட்டம் அதிகம்.

வடிவு இடது கையை லாவகமாய் மேலே உயர்த்த, அவளுடைய முறை மாப்பிள்ளை அவள் கையை உரச, 'சுடலை மாடசாமி' இரண்டு பேர் கைகளிலும் தன் கையை வைத்து ஆட, ஒரே உல்லாசம்.

**தூக்கி வைக்கும் கால்களுக்கு**
**சுடலை மாடசாமிக்கு துத்திப்பூ-சல்லடமாம்**
**எடுத்து வைக்கும் கால்களுக்கு**
**சுடலை மாடசாமிக்கு எருக்கணம்பூ**
**- சல்லடமாம்**

என்று வடிவு பாடினாள்.

'வடிவின் நல்லதங்காள்' குரலும், இறுகக் கட்டிய சேலையில் துள்ளிய வாளிப்பான உடலும், சிலம்பைப் போல, கோலாட்டத்தைப் போல, வில்லை அவள் அடித்த நேர்த்தியும், முன்னும் பின்னும் பக்கவாட்டிலும் சாய்ந்து, சிரித்துக் கொண்டே ஆடிய லாவகமும் கூட்டத்தின் கவனத்தை முற்றிலும் அவள் பக்கமே திருப்பிவிட்டன. பாவம், சுடலை மாடசாமி ஒரு கையில் தீப் பந்தத்தையும், மற்ற கையில் வெட்டரிவாளையும், வாயில் இரண்டு முழு வாழைப்பழங்களையும் வைத்துக் கொண்டு, சமத்காரமாய்,

ஆர்ப்பாட்டமாய் ஆடியபோதிலும், 'அப்ளாஸ்' கிடைக்க வில்லை.

மற்ற சில சாமிகளும் 'அம்போ' என்று ஆடிக் கொண்டிருந்தன.

வடிவு பாடுவதை நிறுத்திவிட்டாள்.

ஊரின் கண்களும், முறை மாப்பிள்ளையின் சிவந்த விழிகளும் வடிவை மொய்க்க, வடிவின் கண்களோ 'அவன் எங்கே இருக்கிறான்?' என்று வட்டமிட்டன. அவன் இன்னும் வரவில்லை. வடிவுக்கு ஒரே ஏமாற்றம். திடீரென அவள் குரல் உயர்ந்தது. 'பெரியபுள்ளி' என்றால் லேட்டாகத்தான் வரவேண்டும் என்பதைத் தெரிந்து கொண்டிருந்த அவன், அப்போதுதான் வந்து கல்தூணின் மீது சாய்ந்து உட்கார்ந்தான். அவனுக்குப் பலத்த வரவேற்பு, சுற்றிலும் பரபரப்பு. காரணம், அவன் ஒரு சினிமாத் துணை நடிகன். சென்னையிலிருந்து கோவில் கொடைக்காக வந்திருந்த அவனைப் பலர் வளையமிட்டார்கள்.

வடிவின் உற்சாகத்திற்குக் காரணம் அவள் இந்த ஹீரோவைக் காலையில் தற்செயலாகச் சந்தித்த போது, அவளை எப்படியும் பிரபல பின்னணிப் பாடகி ஆக்கிவிடுவதாக அவன் அளித்திருந்த வாக்குறுதிதான். அவளை முன்னுக்குக் கொண்டு வருவதாக அவன் திரித்த கயிறு, வில்லின் கயிற்றை விட உறுதியானது என்று, வடிவு நம்பினாள். சுடலைமாடனுக்கும், கோட்டைமாடனுக்கும் பாடி, வடிவுக்கு அலுத்துவிட்டது.

ஹீரோ வந்ததும், அவன் இங்கேயே 'வாய்ஸ் டெஸ்ட் செய்யட்டும் என்று நினைத்தாளோ என்னவோ, சினிமா மெட்டில் தொடங்கிவிட்டாள் வடிவு.

"இவரு, சுடலைமாடசாமி - நல்லா துள்ளி ஓடும் சாமி ஓ...ஹோ...நல்லா ஆடும் சாமி - ஓ...ஹோ!" என்று பாடிய ஜோரில் "சினிமாவில் பாடப்போறேன் சாமி" என்று பாடிவிட்டு நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

ஆனால், அவள் பாடியதைக் கேட்காமல் 'பாடி' யையே பார்த்துக் கொண்டிருந்த வடிவு பக்தர்கள் இதையும் ரசித்து மகிழ்ந்தார்கள்.

வடிவின் சினிமா மெட்டை ரசிக்காத ஒரே ஆத்மாவும்

அங்கே இருந்தது. அது முதியவர் ஐயாசாமி. ஆனால் அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. வடிவைக் கொண்டு வந்ததே அவர்தான்.

கோவில் கொடைக்காக 'வரி' போட்ட போது, வாலிபர்களான தீவிரவாதிகள் (லெஃப்ட் அட்வெஞ்சரிஸ்ட்) கனவுக் கன்னி காந்தா, கோவிலில் ரிக்கார்டு டான்ஸ் ஆட வேண்டும் என்று துள்ள, வயதான வலதுசாரிகள் (ரைட் ரியாக்ஷனரி) எழுபது வயது மதுரை வீரன் தான் வில்லுப்போடவேண்டும் என்று வாதாட, முற்போக்கு நடுத்தரவாதி (லெஃப்ட் ஆஃப் தி சென்ட்டர்) ஐயாசாமி ஒரு 'காம்ப்ரமைஸ்' யோசனை சொன்னார். கவர்ச்சியையும் வில்லுப்பாட்டையும் சேர்த்து வடிவை ஏற்பாடு செய்யலாம் என்பது அவர் சொன்ன யோசனை தான். இப்போது மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் திணறினார்.

ஐயாசாமியைப் போல, முப்பது வயது ரத்தினமும் திணறிக் கொண்டிருந்தான். ஆனால், அவன் துக்கத்திற்குக் காரணம் வேறு. போன வருஷம் இதே நாளில் அவன் அப்பா முத்துப்புதியவன், 'சுடலை மாடசாமி' ஆடினார். இப்போது அவர் உயிருடன் இல்லை.

காத்தமுத்து ஆடுகிறான்.

பக்கத்தில் யாரோ பேசிக்கொண்டது அவன் காதில் விழுந்தது.

"உம் - முத்துப்புதியவன் ஆடினா எப்படி இருக்கும்? இந்தக் காத்தமுத்து மேலயா சாமி வரணும்?"

"நீரு ஒண்ணு. காத்தமுத்து அகம்பாவத்துல ஆடுகிறான். இந்த ஊத்தப்பல்லுப் பயகிட்ட சாமி வருமாக்கும்?"

"வே, அப்பன் ஆடின சாமி மகன்கிட்டதான் வரும். இப்ப சங்கரன் ஆடின மாடத்தி அவன் மண்டையைப் போட்டதும் அவன் மவன் மாடக்கண்ணு தானே ஆடறான்?"

"நீரு சொல்றது சரிதான் மச்சான். இப்ப ரத்தினம் பய மொகத்தைப் பாரும், சாமிக்களை தெரியுது. உடம்புகூட குலுங்குறாப் போல இருக்குது."

இவர்கள் சொல்வதைக் கேட்கக் கேட்க ரத்தினத்தின் உடல் குலுங்கத் தொடங்கியது.

"சரியாச் சொன்னீர். சுடலைமாடசாமி அர்த்த ராத்திரிலே தான் ஆடும். இந்தக் காத்தமுத்துப் பய சும்மா தண்ணி போட்டுட்டு இப்பவே குதிக்கறான்."

"நல்லாச் சொன்னீர்! அர்த்த ராத்திரி இதோ வரப்போவுது. உண்மையான சுடலைமாடசாமி நம்ம ரத்தினத்தைப் புடிச்சுத்தான் ஆட்டப் போவுது.'

ரத்தினத்தின் உடல் ஆடிக்கொண்டிருந்தது. அந்த இரண்டு பேர்வழிகளும் ஒரு மேளத்தைக் கொண்டு வந்து அவன் முன்னால் முழக்கினார்கள். 'டங்கு டங்கு' என்று எழுந்த மேளத்தின் ஒலியில் ரத்தினத்தின் உடம்பு இன்னும் வேகமாய்க் குலுங்கியது. உடனே அவன் மீது சந்தனத்தை அப்பினார்கள். ஒரு தீவத்தியைக் கொளுத்தி அவன் கையில் கொடுத்துவிட்டு, "அர்த்த ராத்திரியில ஆடுறதனால, உண்மையான சுடலைமாடசாமி இதுதான்" என்று வத்தி வைத்தார்கள். ரத்தினத்துக்கு இப்போது 'சூடு' பிடித்துவிட்டது.

வேறொரு பக்கத்தில் இன்னும் ஆடிக்கொண்டிருந்த காத்தமுத்து திடீரென்று தன் கழுத்தில் ஆடிய மாலைகளில் ஒன்றை எடுத்து அந்தத் துணை நடிகனின் கழுத்தில் போட்டுவிட்டு, "டேய்! அடுத்த வருஷத்துக் குள்ளார நீ பயாஸ்கோப்புல ஈரோவா, நடிக்கலேன்னா நான் சுடலை மாடசாமி இல்லடா, என் பேரை மாத்திடு" என்று கூச்சலிட்டான்.

ஒரு குரல் காத்தமுத்துவை அதட்டியது. "டேய், நீ சுடலைமாடனே இல்லடா. எப்படிடா பேர மாத்த முடியும்?" என்று இரைந்து கொண்டே அங்கு வந்த ரத்தினம் சுழன்று சுழன்று ஆடினான்.

காத்தமுத்துவா, அசறுகிறவன்? அவன் சமாளித்துக் கொண்டு ரத்தினத்தைக் கட்டிப் பிடித்துக் கொண்டு, "பேச்சியம்மா, வந்துட்டியா.. வா... ரெண்டு பேரும் சேர்ந்து ஆடலாம்" என்று குலுங்கிக் குலுங்கி ஆடினான்.

ஆடிக்கொண்டே இரு 'சாமியாடி'களும் போர் தொடுத்தார்கள்

ரத்தினம் கேட்டான். "நீ யாருடா?" காத்தமுத்து . "நான் சுடலைடா" என்றான்.

"சீ...ஊத்தப்பயலே...உன்கிட்ட நான் வருவனாடா? இதோ... (மார்பைத் தட்டிக் கொண்டு) இவன் அப்பன் என்னை ஆடினான். இப்போ இவங்கிட்ட வந்திருக்கேன்...நான் என்ன மனுஷனா கட்சி மாற...நான் தெய்வண்டா? அப்பங்கிட்டே இருந்து மவன்கிட்ட வந்த தெய்வண்டா .." என்று ரத்தினம் குதித்தான்.

காத்தமுத்து விட்டுக்கொடுக்காமல் "நீ சாமியே இல்லடா. நான் சுடலையாண்டி - நீ பூச்சாண்டி" என்று நையாண்டி செய்தான்.

ரத்தினம் அரிவாளை ஓங்க, பதிலுக்குக் காத்தமுத்துவும் அரிவாளை ஓங்க, கூட்டம் எழுந்தது. ரத்தினத்தின் பங்காளிகள் ''அவன்தான் ஒரிஜினல் சாமி'' என்று வாதாட, காத்தமுத்துவின் சொந்தக்காரர்கள் ''அவன்தான் அசல் சுடலை மாடசாமி'' என்று கட்சியாடினார்கள்.

வாதம் பிடிவாதமாகிக் கைகலப்பு ஏற்படும் நிலை. ''என்னைப் பார்த்துப் பாடு'' என்று காத்தமுத்து கத்த, வடிவு நடுங்கிக்கொண்டே பாடத் தொடங்கினாள். உடனே ரத்தினம் உரித்த தேங்காய் ஒன்றை எடுத்துத் தன் தலையில் அடித்து உடைத்தான். "நான்தான் உண்மையான மாடன்...என்னப் பாத்துப் பாடல.... உன் தலைய வெட்டி.." என்று மிரட்டினான். வடிவுக்குக் குலை நடுங்கியது.

பார்ப்பவர்கள் திகைத்து நின்றனர்.

ஐயாசாமிக்குப் பொறுக்கவில்லை "மடப்பய புள்ளைகளா, முதல்ல கூச்சலை நிறுத்துங்கடா" என்று கத்தினார்.

கூட்டம் கேட்கவில்லை.

"ரத்தினம் ஆடுவதே சுடலைமாடன்!"

"காத்தமுத்துவே சுடலைமாடன்" என்ற கோஷங்கள் வலுவடைந்தன.

இந்த அமளியில் இதர சாமியாடிகளும் இரண்டு கோஷ்டிகளாகப் பிரிந்து 'இவன்தான் அசல் சுடலை' 'அவன் தான் நிஜமான சுடலை' என்று சர்டிபிகேட் கொடுத்தார்கள். ஆனால், உதிரமாடசாமியாடி தன் பீடத்தில் இருந்து அங்கு வந்து, ஒரு கோஷ்டியோடு ஒன்றிப்போன 'அம்மன்சாமி'யைத் தன் பக்கம் சேர்த்துக் கொண்டு "இவங்க ரெண்டு பேருமே சுடலையில்லை, பேயுங்க" என்றார். உடனே மூன்றாவது கோஷ்டி ஒன்று உருவாகி,

"காத்தமுத்து ஆடாதே! ரத்தினமே குதிக்காதே!" என்று கூச்சலிட்டது. இதைக் கேட்டதும் உதிரமாடசாமிக்கு ஒரே மகிழ்ச்சி. அம்மன் சாமியையும் இழுத்துக் கொண்டு தன் பீடத்திற்குப் போய்ச் சேர்ந்தது.

இதற்கிடையே "இரண்டு பேருமே ஆடட்டுமே" என்றார் ஒருவர்.

"அதெப்படி? யார் சுடலைமாடன்னு தெரிய வேண்டாமா?" என்றார் ஒரு சந்தேகவாதி.

ஓசியில் கிடைக்கும்போது மட்டும் பேப்பர் படிக்கும் ஆசாமி ஒருவர் "ரத்தினம் ஆடுவது ஸ்தாபன சுடலைமாடன். காத்தமுத்து ஆடுவது, ஆளும் சுடலைமாடன் என்று வச்சுப்பமே" என்றார்.

"அது இப்ப பாஷன் இல்லிங்களே. அப்பா ஆடினதைத்தான் ஆடுறதா ரத்தினம் சொல்றதால அதுக்கு 'அப்பா சுடலைமாடன்'னு பேர் வைக்கணும்; காத்தமுத்து ஆடுறதை 'வெறும் சுடலை மாடன்'னு கூப்பிடணும்" என்று வேறொருவர் வியாக்கியானம் செய்ததைக் கூட்டத்தார் ஒப்புக் கொண்டார்கள்.

வடிவு கெட்டிக்காரி; பிடித்துக் கொண்டாள்.

"இவரு அப்பா சுடலைமாடசாமி சும்மா தப்பா ஆடாதசாமி" என்று வடிவு துணிந்து அவள் பாடியதை ரத்தினம் கோஷ்டியினர் கரகோஷம் செய்து வரவேற்றார்கள். உடனே காத்தமுத்து ஆதரவாளர்கள் "ஏடி, அப்பா சுடலைக்கா ஆதரவு கொடுக்கறே? லோலாக்கு பிஞ்சிடும் பிஞ்சி" என்று எச்சரித்தார்கள்.

வடிவு பயந்து போய்,

"இவரு அப்பாவே இல்லாத சாமி எல்லார்க்கும் அப்பாவான சாமி' என்று பாடினாள்.

அப்பா சுடலைமாடசாமி தரப்புக்கு ஆத்திரம் பொங்கியது.

உடனே எதிர்க்கோஷங்கள் கிளம்பின.

ஐயாசாமி பதறிப்போய் இன்னும் கதறிக் கொண்டிருந்தார்:

"டேய்.. நா சொல்றதக் கேளுங்கடா! ஒரு காலத்துல சாமியாடினா சபை 'கப்புசிப்புனு' அடங்கும். இப்போ எவன்தான்

சாமியாடறதுன்னு கணக்கே இல்லாமப் போயிடுச்சு. சாமிகளும் ஒளிஞ்சுகிட்டுதுங்க. இவனுங்க ரெண்டுபேரும் சுடலைமாடசாமி இல்லாம போயிரலாம். ஒரு வேளை மாடன், ரெண்டு பேரையுமே ஆட்டி விளையாடலாம். நீங்க சும்மா இருந்தீங்கன்னா சாமி ஆவேசம் இல்லாதவன் கொஞ்ச நேரத்துல டப்புன்னு நின்னுடுவான். சத்தம் போடாதீங்கடா. நீங்க சாமிங்களையே பிரிக்கப் பாக்குறீங்களே..."

ஐயாசாமியின் அப்பீலுக்கு சக்தி இல்லை.

"ரெண்டு பேரும் ஆடக்கூடாது - ஆட முடியாது."

"காத்தமுத்துதான் ஆடவேண்டும், ரத்தினத்தை ஆடவிட மாட்டோம்."

"ரத்தினம் 'ஆடியாகவேண்டும்!"

"காத்தமுத்து ஓடியாக வேண்டும்" என்பன போன்ற கோஷங்கள் மேன்மேலும் எழும்பின.

ஐயாசாமி தள்ளாடிக் கொண்டே கோவிலிலிருந்து 'வாக் அவுட்' செய்தார். 'வாழ்க - ஒழிக' கோஷங்கள் வெகு தூரத்திற்கு அவரைத் துரத்தின.

# ஆட்டுத் தலை

அந்தக் கம்பெனியின் பிராஞ்ச் மானேஜர் தங்கசாமி தங்கமான மனிதர். அவர் பேசுவது, அவருக்கே கேட்காது. அந்த அளவுக்கு மெதுவாகப் பேசுவார். சாந்த சொருபி, சன்மார்க்க சீலர். நேர்மையின் திலகம். காரில் இருந்து இறங்கியதும், தனது சூட்கேஸை பியூன் எடுத்துக் கொண்டு வரவேண்டும் என்று எதிர்பார்க்க மாட்டார். ஊழியர்கள் காண்டீன் போய்விட்டு, கண்ட கண்ட நேரத்திற்கு வந்தாலும்,'கண்டுக்க' மாட்டார். கரெக்டாகப் பத்து மணிக்கு வந்து, கறாராக ஐந்து மணிக்குப் போய்விடுவார். இடியே விழுந்தாலும் இதில் மாற்றம் கிடையாது. ஊழியர்கள் எழுதி வைக்கும் பைல்களை, மேலெழுந்த வாரியாகப் பார்த்துவிட்டு, கையெழுத்துப் போட்டுவிடுவார். சில சமயம் இல்லஸ்தரேட்டட் வீக்லியைப் பார்த்துக் கொண்டே, கையெழுத்துப் போடுவார். நேர்மைக்கு நீட்டிய இடத்தில் எல்லாம் கையெழுத்துப் போட்டு விடுவார். அதனால் நேரம் நிறைய இருந்தது. ஆகையால், தமிழ்ப்பத்திரிகைகளில் இருந்து, ஆராய்ச்சிப் புத்தகங்கள் வரை அவருக்கு அத்துபடி.

இந்தத் தங்கமான மனிதரிடம் பணிபுரிய தவம் செய்திருக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டே, ஊழியர்கள் காண்டீனில் தவம் கிடப்பார்கள். எத்தனையோ பழைய பெருச்சாளிகளையும், அவர்கள் கட்டிய வீடுகளின் மதிப்பு, வாங்குகிற சம்பளத்திற்கு 'டிஸ்புரபோஷனேட்டாகவும்' இருப்பதை அறிந்த, அறிவித்த ஊழியர்கள், வாடகை வீட்டில் வாழும் அவரை விநோதமாகப் பார்ப்பார்கள். டில்லியில் இருந்து வரும் ஆபீசர்களை, அவர் விமான நிலையத்தில் போய் எதிர்பார்த்து, அவர்கள் பின்னால் ஆட்டுக்குட்டி மாதிரி அவர் அமைதியாகப் போவார். 'பிராப்ளம்' இல்லாத கிளை அலுவலகத்தைப் பார்வையிடுவதில், காஞ்சிபுரத்துப் பட்டுப் புடவை பிரியர்களான தில்லி ஆபீசர்களுக்கு ஒரு மகிழ்ச்சி. மொத்தத்தில் அந்த அலுவலகம் அமைதியாக நடந்து கொண்டிருந்தது.

புயலுக்குப்பின் அமைதி ஏற்படுமோ என்னமோ, அங்கே நிலவிய அந்த அமைதிக்குப் பின் புயல் வீசத் தொடங்கியது. பண்டாரம், அங்கே அட்மினிஸ்டிரேட்டிவ் ஆபீசராக வந்து

சேர்ந்தான். பம்பாயில் வேலை பார்த்து வந்த அவன், ஒரு நாள் அலுவலக விஷயமாக டாக்சியில் போவதாக வவுச்சர் போட்டான். அந்த 'வவுச்சரில்' குறிப்பிடப்பட்ட டாக்சியின் ரிஜிஸ்ட்ரேஷன் நம்பர், ஒரு லாம்பரட்டா ஸ்கூட்டரின் நம்பர். இன்னொரு நாள் போட்ட வவுச்சரில், குறிப்பிடப்பட்ட டாக்சியின் நம்பர், 'ஜெனரல்' மானேஜரின் காரின் நம்பர். ஸ்கூட்டர் டாக்சியானதை மானேஜர் மன்னிக்கத் தயாராகத்தான் இருந்தார். ஆனால், தனது காரையே, அவன் டாக்சியாக்கியதும், அதனால் தன் பெயரும் அனாவசியமாக இழுக்கப்படும் என்பதை அறிந்த அவர், பண்டாரத்திடம் "ஜெயிலா? ராஜினாமாவா?" என்றார். மறு வார்த்தை பேசாமல் ராஜினாமாக் கடிதத்தைக் கொடுத்துவிட்டு, பண்டாரம் சென்னைக்கு வந்தான். அவன் யோகம், இந்த வேலை உடனே கிடைத்து விட்டது.

பண்டாரம் பழைய பைல்களை நன்றாகப் படித்தான். வெளியே வேலை பார்க்கும் 'விற்பனை ஊழியர்களை' அருமையாகக் கண்காணித்தான். அவர்கள் போட்ட 'வவுச்சர்களை' செக் பண்ணினான். அவன் எதிர்பார்த்தபடியே, ஒரு போலீஸ்வானின் நம்பர், ஒரு ஹெவி லாரியின் நம்பர் முதலியவை டாக்சி நம்பர்களாகக் காட்டப் பட்டிருந்தன. சம்பந்தப்பட்டவர்கள் வந்த போது அவர்களிடம் நாசூக்காக விசாரித்தான். அவன் ஒருத்தன் மட்டும் அங்கே இல்லையானால், அவர்கள் வேலூருக்குப் போக வேண்டியிருக்கும் என்று விநயமாக எடுத்துரைத்தான். நேர்மைக்குத் தான் முதலிடம் கொடுப்பதாகவும், ஆத்ம நண்பர்களுக்கு, அதைவிட முதலிடம் கொடுப்பதாகவும் வாக்களித்தான். ஆத்ம நண்பர்கள் என்போர் ஐம்பது ரூபாய்க்கு மேல் 'தள்ளுபவர்கள்' என்றும் நட்புக்கு வியாக்கியானம் கொடுத்தான். ஆக, பண்டாரத்திற்கு நிறைய ஆத்ம நண்பர்கள் சேர்ந்தார்கள்

ஓர் ஊழியர், ஹைதராபாத்தில் இருந்து சென்னைக்கிளைக்கு மாற்றலாகி வந்தார். ரயிலில் இரண்டாவது வகுப்பில்தான் வந்தார். டி.எ.பில் போடும்போதும் இரண்டாவது வகுப்பு டிக்கெட்டுக்குரிய பணத்தைத்தான் எழுதினார் பண்டாரம் அவரை காண்டீனுக்குக் கூட்டிக் கொண்டு போனான்.

"என்ன ஸார் பிழைக்கத் தெரியாத ஆளா இருக்கிங்களே; பஸ்ட் கிளாஸில் வந்ததா போட்டால், குடியா முழுகி விடும்?"

"ஐயையோ.. அது தெரிஞ்சா... ஆபத்தாச்சே!"

ஆசாமி 'தெரிந்து விடுமே' என்று தான் அஞ்சுகிறாரே தவிர, நாணயத்துக்காக அல்ல என்பதைப் புரிந்து கொண்ட பண்டாரம், அவருக்கு 'உலக அறிவை'ப் போதித்தான். 'எவன் யோக்கியன்? கம்பெனிக்கு மாடாக, மனிதனாக உழைக்கிறவர் இரண்டாவது வகுப்பை, முதல் வகுப்பாகப் போட்டால், என்ன தப்பு?' அந்த ஆசாமியும் பண்டாரத்திடம் மயங்கி, முதல் வகுப்பையே காட்டி விடுவதாகக் கூறினார். அன்று பண்டாரமே ஹோட்டல் 'பில்லுக்கு' பணம் கொடுத்தான்

ஒரு மாதம் கழித்து அவரிடம் அவன் பணம் கேட்டான். அவர் கையை விரித்தார். "பஸ்ட் கிளாஸ்ல நீங்க புறப்பட்ட தேதியில் யார் யாரெல்லாம் டிராவல் பண்ணினாங்கன்னு விசாரிக்க எவ்வளவு நேரம் ஆகும்? ஆத்ம நண்பராச்சேன்னு சும்மா இருக்கேன்" என்றான் பண்டாரம்

அந்த ஆசாமி, இப்போது பண்டாரம் சாப்பிடுவதற்கும் சேர்த்து 'பில்' கொடுப்பது இல்லாமல், அவர் கொடுத்திருக்கும் இதர பணத்தை வைத்து அவர் குடும்பத்தோடு ஹைதராபாத்துக்கு பத்துத் தடவைக்கு மேல், பிளேனில் சவாரி செய்திருக்கலாம். என்றாலும் அவர் இப்போது அவனுக்கு ஆப்த நண்பர்.

கம்பெனியின் 'சேல்ஸ் ரேப்சென்டேட்டிவ்' ஒருவன் விற்பனைக்குத் தமிழ்நாடு முழுவதும் டூர் போய்விட்டு, டி.எ.பில் போட்டிருந்தான். பில் பணம் ஐநூறு ரூபாய்க்கு மேல் தேறும். பண்டாரம் கை ஊறியது அந்த ரெப்ரசென்டேட்டிவ்வைப் பார்த்ததும் "ஜமாய் ராஜா! உன் காட்ல மழை பெய்யுது. இந்த டூர்ல முந்நூறு ரூபாயாவது தேறியிருக்குமே? பரவாயில்ல, நீயும் நல்லா இருக்கணும், நானும் நல்லா இருக்கணும்" என்றான்

விற்பனையாளன், டூரில் இருந்தபோது வயிற்றுவலியில் தவித்து, சரியாகச் சாப்பிட முடியாமல் கஷ்டப்பட்டவன் வந்ததும் வராததுமாகப் பண்டாரம் இப்படிப் பேசியது, அவனிடம் குணமாகிய வயிற்று வலி மீண்டும் எட்டிப் பார்த்தது. அந்த ஆத்திரத்தில், "என்ன மிஸ்டர் பண்டாரம், அவனவன் வயித்து வலியுல அவஸ்தப்பட்டு, நாயா அலைஞ்சிட்டு வரான். நீங்க, ஜோக் பண்றீங்க! இந்த மாதிரி வேலையெல்லாம் நம்மகிட்ட வேண்டாம்" என்று பத்துப்பேர் முன்னிலையில் பகிரங்கமாகச் சவால் விட்டான்.

பண்டாரம், இந்த அவமானத்திற்குக் கூட, அதிகமாக வருத்தப்படவில்லை. கடைசியில் பயல், பணம் கொடுக்க மாட்டானோ? அவன் மூளை, கம்ப்யூட்டராகியது. விற்பனையாளரின் டயரியையும், டூர் புரோக்ராமையும் ஒப்பிட்டுப் பார்த்தான். பிறகு நாற்காலியில் இருந்து கொண்டே குதித்தான்.

பண்டாரம், மானேஜருக்கு ஒரு 'நோட்' 'புட்டப்' பண்ணினான். 'சேல்ஸ் ரெப்ரசென்டேட்டிவ் சிவராமன், கம்பெனி வானுக்கு கோயம்புத்தூர் பெட்ரோல் ஸ்டேஷனில், புதன்கிழமை மாலை நான்கு மணிக்கு பெட்ரோல் போட்டதாக பில் கொடுத்திருக்கிறான். ஆனால், அந்தப் புதன்கிழமை, மத்தியானம் பன்னிரண்டு மணிக்கு, கன்னியாகுமரியில் இருந்ததாக 'டூர்' டயரியில் எழுதியிருக்கிறான். அது எப்படி முடியும்? ஆகையால், சிவராமன், கம்பெனியை மோசடி செய்திருக்கிறான். அவன் டூர் போனானா அல்லது கோயம்புத்தூரில் இருந்தானா? விற்பனை செய்யும் பொறுப்புள்ள பதவியில் இருக்கும் சிவராமன், பொறுப்பாக நடந்து கொள்ளாதது மட்டுமல்ல, கம்பெனிப் பணத்தை டூர் என்ற பெயரில் செலவழித்து மோசடி செய்திருக்கிறான். அவனுக்கு "உன்னை ஏன் டிஸ்மிஸ் செய்யக்கூடாது?" என்று கேட்கும் 'ஷோகாஸ் நோட்டீஸ்' கொடுக்க வேண்டும். சிவராமன் போன்ற நேர்மையற்றவர்களைக் கம்பெனியில் வைத்திருப்பது தப்பாகும்!'

பண்டாரம் எழுதிய 'நோட்டீஸை' மானேஜர் தங்கசாமி படித்துக் கொண்டிருந்தார். அவரின் ஸ்டெனோ அங்கே வந்தாள். தங்கசாமி "எஸ்" என்று இழுத்தார்.

"ஸார், நான் சொல்றதைத் தப்பா நினைக்காதீங்க. மிஸ்டர் பண்டாரத்திற்கும் சிவராமனுக்கும் தனிப்பட்ட விரோதம். அதனால்தான், பண்டாரம் அவர் உத்தியோகத்துக்கே உலை வைக்கிறார்."

மானேஜர் ஸ்டெனோ மங்கையை ஒரே ஒரு வினாடி ஏறிட்டு நோக்கினார். பிறகு "மிஸ்டர் பண்டாரம், ஆபீஸ் ரூலைக் காட்டி மோசடின்னு கரெக்டா எழுதியிருக்கார். எனக்கு ரூல்ஸ்தான் முக்கியம். அவங்க தனிப்பட்ட விரோதத்தைப் பத்தியோ, கூட்டுறவு விரோதத்தைப் பத்தியோ எனக்குக் கவலையில்லை" என்றார்

மங்கைக்கு மனசு கேட்கவில்லை அதுவும், ஆஜானுபாகான சிவராமன் மாட்டிக் கொள்வது, அவளுக்குத் தான் மாட்டிக்

கொள்வது போல் தோன்றியது.

"ஸார், நம்ம அட்மினிஸ்டிரேட்டிவ் ஆபீசர் மிஸ்டர் பண்டாரம் எல்லார் கிட்டேயும் 'பிரசன்டேஜ்' கேட்கிறார். 'சம்திங்' கொடுக்காத ஆட்களைப் பத்தி, சம்திங்கா எழுதி வைத்து விடுகிறார். அவர் வாங்கி, உங்களுக்கும் பங்கு கொடுப்பதாக வேறு அவர் சொல்லிக்கிட்டு திரியுறார். ஆபீஸ் குட்டிச்சுவராய்ப் போச்சு. அவருக்கிட்ட காசு கொடுக்காம ஒரு காரியமும் நடக்காது என்கிற நிலைமை வந்துட்டு."

ஸ்டெனோ மங்கை, இன்னும் பேசிக் கொண்டே போயிருப்பாள். ஆனால், மானேஜர் அவளை விடவில்லை. "இது என்ன அக்கப் போராப் போச்சி. ரூல்ஸ்படி என்ன நடக்கணுமோ அது நடக்கும். பண்டாரத்துக்கும் மற்றவர்களுக்கும் ஆயிரம் இருக்கும். எனக்கென்ன வந்தது? நீங்க போகலாம்."

மங்கை மருவித் தயங்கி வெளியேறினாள். அவள் வெளியேறவும், பண்டாரம் உடனே உள்ளே போகவும் சரியாக இருந்தது. அவளுக்கும் சிவராமனுக்கும் ஒரு வகையான 'இது' இருப்பது அவனுக்குத் தெரியும். அவள் ஏதாவது வத்தி வைத்திருப்பாள் என்று யூகித்துத்தான் அவன் உள்ளே போனான்.

மானேஜர், அவனைக் கோபமாகப் பார்த்தார்: "எனக்கு வேற பங்கு கொடுக்கிறதா சொல்றியாமே" என்று கேட்கவில்லை. கேட்கப் போனார். அதற்குள் பண்டாரம் முந்திக் கொண்டு "ஸார், இன்றைக்கு 'மிர்ரர்' பத்திரிகையில் சேக்ஷ்பியரின் ஹாம்லட்டைப் பற்றி ஒரு 'ரிசர்ச்' கட்டுரை வந்திருக்கு. படித்தீங்களா?" என்றான். மானேஜர், நினைத்ததை மறந்து, மறந்ததை நினைத்தார்.

"ஆமாம், வீட்ல, ஒரு கிளான்ஸ் பார்த்தேன். ஆனால் கொண்டு வர மறந்துட்டேன்."

"இதோ, நான் கொண்டு வந்திருக்கேன் ஸார்..."

மானேஜர் மிர்ரரைப் புரட்டினார். "ஸார்...சிவராமன் பைல்ல, கையெழுத்துப் போட்டிட்டிங்களா?" என்றான் பண்டாரம். மானேஜர், அவசர அவசரமாக கையெழுத்துப் போட்டுவிட்டு, மிர்ரரைப் புரட்டினார். பண்டாரம் அவசர அவசரமாக வந்து, டைப்பிஸ்டை டைப் அடிக்கச் சொன்னான்.

'மெமோவைப்' பார்த்ததும் சிவராமன் பயந்து விட்டான். அவனைப் போலீசில் ஒப்படைக்கப் போவதாகவும், பண்டாரம் 'பார் மானேஜர்' கையெழுத்துப் போட்டு மிரட்டியிருந்தான். ஸ்டெனோ மங்கை அழுதே விட்டாள். சிவராமனுக்கு ஒரு வழியைத் தவிர வேறு வழி தெரியவில்லை.

ஒரு கூடை ஆப்பிள் பழத்துடன், நேராகப் பண்டாரம் வீட்டிற்குப் போய், அவன் காலின் முன்னால் குப்புற விழுந்தான். பண்டாரம், விழுந்தவனை நிறுத்தி ஆசீர்வாதம் செய்து கொண்டும், ஒரு ஆப்பிள் பழத்தைக் கடித்துத் தின்று கொண்டும் "நல்லா பழுத்திட்டு; அதனால்தான் டேஸ்டாக இருக்கு!" என்றான்.

"மிஸ்டர் பண்டாரம், நான் ஒரு அறிவு கெட்ட மடயன். நீங்கதான் என்னைக் காப்பாத்தணும். நீங்க என்ன சொன்னாலும் கட்டுப்படுறேன்' என்றான்.

பண்டாரம் அவனுக்கும் 'உலக அறிவைப்' போதித்தான்.

மறுநாள் பண்டாரம் சொன்னபடியே சிவராமன் 'எக்ஸ்பிளனேஷன் ' எழுதிக் கொடுத்தான். கோயமுத்தூரில் புதன் கிழமை மாலையில் பெட்ரோல் போட்டதும், கன்னியாகுமரியில் அதே நாள் மத்தியானம் அவன் போய்ச் சேர்ந்ததும் முரண்பாடானவை அல்ல. வானுக்கு, கோவையில், செவ்வாய்க்கிழமை இரவில் 'நோய்' ஏற்பட்டதாம். உடனே டிரைவரிடம் வண்டியை ரிப்பேர் செய்து விட்டு, பெட்ரோலும் போட்டுக் கொண்டு வரும்படி சிவராமன் சொல்லி விட்டு, அன்று இரவோடு இரவாக கம்பெனியின் விற்பனை நலனைக் கருதி, நண்பரின் காரில் கன்னியாகுமரி போய்விட்டானாம். கம்பெனிக்காக, இரவு கூட பாடுபடும் அவனை குறை கூறுவது, வேதனையைக் கொடுக்கிறதாம்!

சிவராமன் நீட்டிய காகிதத்தை வாங்கிக் கொண்டே "வெரிகுட் வெரிகுட்! ஆனால் ஒண்ணு, நீ கோயமுத்தூர்ல வேனை ரிப்பேர் பார்த்ததுக்கு ஒரு ஒர்க்ஷாப்பின் லெட்டர் பாட்ல ஒரு பில் போட்டுக் கொடுத்துடு. உனக்கும் ஸரி. நமக்கும் அதுக்குரிய பணம் கிடைச்சிடும். மானேஜருக்கும், நீ யோக்கியன் என்கிறதுக்கு ஆதாரம் கிடைச்சிடும்" என்றான்.

"என்கிட்ட லெட்டர்பாட் இல்லியே. ஸார்" (இப்போது

மிஸ்டர் என்று கூப்பிட மாட்டான்).

"டோண்ட் ஒர்ரி. உன்னை மாதிரி ஆட்களைக் காப்பாத்துறதுக்குன்னே நான் பல பேர்ல, பல ஊருங்களைக் காட்டி லட்டர் பாட் வச்சிருக்கேன். நீயே ஓனர் மாதிரி கையெழுத்துப் போட்டுடு. அந்த டிரைவரையும் சரிக்கட்டிக்கோ; அவனையும் கையெழுத்துப் போடச்சொல் அதுவே போதும்."

"தேங்க் யு ஸார்! நீங்க இல்லாட்டி என் வேலை போயிருக்கும். கம்பியும் எண்ணியிருப்பேன்."

பண்டாரத்திற்கு மகிழ்ச்சி பொங்கியது.

வான் டிரைவர் வாகிப்மியான், முதலில் முடியாது என்றான். அவன் அப்படி முடியாது என்றால், தன் கதை முடிந்துவிடும் என்று சிவராமன் அழுது கொண்டே சொன்னதால், டிரைவருக்கு மனமிரங்கியது. அவனது - அதாவது ஒரு டிரைவரின் - ஒரு அங்குலக் கையெழுத்தில் ஒரு சேல்ஸ்மேனின் எதிர்காலம் தொங்குகிறது என்பதை அறிந்ததும், அவன் போட்டே விட்டான்.

பண்டாரம், சிவராமனின் எக்ஸ்பிளனேஷனுக்குப் 'பரிந்துரை' கொடுத்தான். சிவராமன், வான் ரிப்பேரானாலும், அந்தச் சாக்கில் கோவையில் தங்காமல், கருமமே கண்ணாகி, நண்பனின் காரில் கன்னியாகுமரி போனான் என்றால், அவன் எவ்வளவு 'டிவோட்டட்' ஊழியனாக இருப்பான்! சிவராமன் போன்ற ஊழியர்களினால், கம்பெனியே பெருமைப்படலாம்! சொல்லப் போனால், அந்த உண்மையான ஊழியன்மீது சந்தேகப் பட்டதற்காக, கம்பெனி வருத்தம் தெரிவிக்க வேண்டுமாக்கும்!

மானேஜர், பைலைப்படித்தார். முன்னால் அப்படியும் இப்போது இப்படியும் ஏன் எழுதப்பட்டிருக்கிறது என்று அவர் சந்தேகப்படவில்லை. 'இம்பிரிண்ட்' பத்திரிகையில் ஒரு கண்ணும், பைலில் ஒரு கண்ணுமாக வைத்துக் கொண்டு வருத்தம் தெரிவிக்கும் கடிதத்தில் கையெழுத்துப் போட்டதோடு அல்லாமல், வார்னிப்பேருக்காகச் சிவராமன் செலவழித்த இருநூறு ரூபாய் 'பில்லையும்' பாஸ் செய்தார்.

சிவராமன், பண்டாரத்திற்கு ஆப்தமாகி விட்டான்.

பண்டாரம் டிரைவர் வாகிப்மியானை, இளக்காரமாகப்

பார்த்தான். பார்த்தது மட்டுமல்ல. "என்ன மியான், இன்னைக்கு, டியூப் போட்டு எத்தனை லிட்டரை உறிஞ்சி எடுத்து வித்தே..மூணு லிட்டர் தேறியிருக்குமா?" என்றான்.

டிரைவருக்கு பெட்ரோல் மாதிரி பற்றி எரிந்தது. கோபத்தை அடக்கிக் கொண்டான். நான்கு நாள் கழித்து, 'ஸார், என்னோட டி.ஏ. பில்லை பாஸ் பண்ணுங்க; சிவராமன் பில்லை பாஸ் பண்ணிட்டிங்க; என்னுத ம்ட்டும் வச்சிருக்கிங்க. நாளைக்கு ஆட்டுத்தலை வாங்கி சாப்பிடணுமுன்னு நினைக்கிறேன். தயவு பண்ணி இன்னைக்காவது பாஸ் பண்ணுங்க" என்றான்.

"ஆ..ஆட்டுத் தலையா? எவ்வளவு ருசியா இருக்கும்! மியான் எனக்கும் ஒரு தலை வாங்கித் தந்திடு."

"நீங்க பாஸ் பண்ணுங்க. நான் வாங்கித் தாறேன்."

"நீ வாங்கித் தா. நான் பாஸ் பண்ணுறேன்."

வாகிப்மியான், பல்லைக் கடித்துக் கொண்டான். மானேஜரை அன்று சாயங்காலம் வீட்டில் 'டிராப்' செய்யப் போகும்போது, "ஸார், நீங்க எவ்வளவு நேர்மையாக இருக்கிங்க; ஆனால், பண்டாரம் என்கிட்ட ஆட்டுத்தலை கேக்கிறார். அது கொடுக்காட்டா டி.ஏ.வை பாஸ் பண்ண மாட்டாராம்" என்றான்.

மானேஜர் "அப்படியா?" என்று கேட்டுவிட்டு, இந்தியன் எக்ஸ்பிரஸ்ஸை எடுத்தார். வாகிப்மியான் வருத்தப்பட்டான். ஒரு மானேஜர், ஊழியன் ஒருவன் சொல்லும் பிரச்சினையை 'குத்துக்கல் மாதிரி' உணர்ச்சி இல்லாமல் கேட்டுக் கொண்டு, கண்டுக்காமலா இருப்பது? டிரைவர் மனசைத் தேற்றிக் கொண்டான். மானேஜர் பெரிய ஆபீஸர். டிரைவர் கிட்ட கேட்டும் கேட்காதது மாதிரிதான் இருக்கணும். நாளைக்கு பண்டாரத்தை விடுவிடுன்னு விடுவார்.

மானேஜர் விடுவிடுன்னு விடவில்லை. பண்டாரம், முன்னை விட மகிழ்ச்சியாகத்தான் இருந்தான். சாட்சியை விட சண்டைக்காரன் தேவலை என்பதை உணர்ந்த டிரைவர் பண்டாரத்திடம் போய் "ஸார்.டி.ஏ, இன்னும் நான் ஆட்டுத்தலை வாங்கல" என்றான்.

"ஒன் வான் ரிப்பேர் சமாச்சாரம் இப்போ எனக்கு மட்டுந்தான் தெரியும். மானேஜருக்குத் தெரியணுமுன்னா,

ஆட்டுத்தலை வந்துட்டா. உன் தலை தப்பும்" என்றான் பண்டாரம்.

டிரைவருக்கு வேறு வழியில்லை. மறுநாள், ஒரு ஆட்டுத் தலையுடன், டிரைவர் பண்டாரம் வீட்டிற்குப் போனான். அவனோடு, இன்னொரு அழுக்கு வேட்டி ஆசாமியும் போனார். பண்டாரம், ஆட்டுத்தலையை வாங்கிக் கொண்டே "ஏம்பா, ஆட்டுக்காலும் வாங்கிட்டு வரக்கூடாதா?. சூப் போட்டுக் குடிச்சா நெஞ்சு வலி போகுமாம்" என்றான்.

"அடுத்த டி.ஏ. பில்லுக்கு, ஆட்டுக்கால் தாரேன் ஸார். ஆட்டுத் தலையை வெட்டுறதுக்காக இவரைக் கூட்டி வந்தேன்"

"எப்படியோ! உனக்குப் பிழைக்கத் தெரிஞ்சா சரி..."

பண்டாரம், ஆட்டுத்தலையைப் புரட்டிப் பார்த்தான். பெரிய தலை, ருசியாக இருக்கும். "வாகிப்மியான், ரெண்டு காதுலேயும் கலர் பென்சிலால் கோடு போட்டிருக்கே, எதுக்கு?" என்று கேள்வி கேட்டான் பண்டாரம்.

"அதுவா? ஸார் காலையிலேயே கசாப்புக் கடைக்குப் போனேன். அப்போ ஆடு கீடு வெட்டல. எங்க ஐயாவுக்கு, இந்த ஆட்டுத்தலைதான் வேணுமுன்னு சொல்லி உயிரோட நின்ன ஆட்டுக்காதில் கோடு போட்டுட்டு வந்தேன்; அது தான் இது".

பண்டாரம், ஆட்டுத்தலையின் காதைப் பிடித்துத் தூக்கிக் கொண்டு, கிச்சனில் இருந்த அம்மாக்காரியிடம் கொடுக்கப் போனான். அப்போது அழுக்கு வேட்டி ஆசாமி ''நில்'' என்று சொல்லிக் கொண்டே, ஒரு விசில் எடுத்து ஊதினார். நான்கைந்து பேர், சொல்லி வைத்தாற்போல் பல மூலைகளிலிருந்து ஓடிவந்து பண்டாரத்தை மறித்துக் கொண்டார்கள்.

வாகிப்மியான் சிரித்தான். "டேய் பண்டாரம், என்னை என்ன சிவராமன்னு நினைச்சியா? நீ ஆட்டுத்தலை கேக்குற விவகாரத்த நம்ம மானேஜர் சரியா கேக்காததினால, நம்ம கம்பெனி மேல் ஆபீஸருங்களுக்கு எழுதினேன். அவங்க, இந்த லோகல் போலீஸ் ஐயாவையும் கூட்டிக் கிட்டுப் போய். ஆட்டுத்தலையில் காதுல குறி போட்டாங்க. எனக்கு காது குத்தப் பார்த்தே: கடைசியில ஆட்டுக்காதிலே குத்தி, உன் காதுலே."

பண்டாரம், ஆட்டுத்தலையுடன், ஐந்தாறு பேர் புடைசூழ,

கம்பெனி அலுவலகத்தில், மானேஜர் தங்க்சாமியின் முன்னால் ஆஜர் செய்யப்பட்டான். ஐந்தாறு பேரில் ஒருவரான கம்பெனி செகரட்டரியைப் பார்த்ததும் தங்கச்சாமி வெலவெலத்துப் போனார். செகரட்டரியை கெஞ்சும் பாவனையில் பார்த்துக் கொண்டே, "ஸார் என் ஆளுங்ககிட்ட வேணும்னா கேளுங்க. எனக்கும் இதுக்கும் சம்பந்தமே இல்ல. நான்..பிறத்தியார் சொத்துல ஒரு பைசாவுக்குக் கூட ஆசைப்பட்டது இல்லே."

யூனிபாரத்தில் இருந்த போலீஸ்காரர் பேசினார் .

"மிஸ்டர் தங்கசாமி, எங்களுக்கு எல்லா விவரமும் தெரியும். நீங்க நேர்மையானவர்தான், சந்தேகமில்லை.ஆனால், ஸ்டெனோ, பண்டாரத்தைப் பற்றிச் சொல்லிய போதும் சரி, வாகிப்மியான் சொல்லும்போதும் சரி, நீங்க பொறுப்புள்ள ஆபீசர் மாதிரி, விவகாரத்தை அக்கறையோடு விசாரிக்கல. ஒரு ஆபீசர் சட்டத்தின் எழுத்தை மட்டும் பார்க்கக் கூடாது. அதன் உணர்வையும் பார்க்கணும். 'எவனும் எக்கேடும் கெடட்டும். நாம் ஒழுங்கா இருந்தாச் சரி' என்று பல நேர்மையான ஆபீசருங்க இருக்காங்க. இந்த மனப்பான்மை ஒருவிதமான சுயநலந்தான்; வாங்குகிற சம்பளத்துக்குரிய பொறுப்பை தட்டிக் கழிக்கிற மாதிரி நடந்து கொள்ளும் போக்கும், ஒருவித லஞ்சந்தான். என்னைக் கேட்டால், இதுதான் பல லஞ்சங்களுக்கு வழிவகுக்கும் 'கரெப்ஷன்'. ஆட்டுத்தலை வாங்கின பண்டாரத்தைத் தண்டிக்க சட்டமிருக்கு. ஆனால் தலையை ஆட்டிக் கொண்டே நிலைமையை தலைக்குமேல் விட்ட, உங்கள மாதிரி 'நேர்மையான' ஆட்களைத் தண்டிக்க சட்டம் இல்லை."

கம்பெனி செகரட்டரி போலீஸ்காரர் பேச்சுக்குத் தலையாட்டினார்.

பண்டாரம், ஐந்தாறு பேரில் ஒருவர் தவிர, மற்றவர் சூழ வெளியே கொண்டுப்போகப்பட்டான்.

அவன் கையில், ஆட்டுத்தலை சிரித்துக் கொண்டிருந்தது!

# மேதைகள் தோற்றனர்

பத்துக்கும் அதிகமான குடித்தனங்கள் உள்ள 'பெரிய' வீட்டின் முதல் போர்ஷன் பள்ளி ஆசிரியர் சங்கரனின் வீடு. மாணவர்களிடம் கத்திய மயக்கத்தில், வீட்டுக்குள் சோர்ந்து போய் போனபோது வராந்தாவில் புத்தகங்களோடு போராடிக்கொண்டிருந்த மகன் கணேசனைப் பார்த்ததும், ஒரு 'ஆஸ்ப்ரா' சாப்பிட்டது போல் இருந்தது அவருக்கு. கணேசன், காலடிச் சத்தங் கேட்டு, புத்தகத்திலிருந்து கண்ணை விடுவித்து, தந்தையின் வருகையைப் புன்முறுவலால் வரவேற்று விட்டு, மீண்டும் புத்தகத்தில் சங்கமமானான்.

சங்கரன், செருப்பைக் கழற்றிவிட்டு, வீட்டிற்குள் போனபோது அவர் மனைவி 'டீ' போடத் தொடங்கினாள். சட்டையைக் கழற்றப்போன அவர் ஜன்னல் வழியாகத் தன் மகனைப் பார்த்தார். பெருமிதமாக இருந்தது அவருக்கு.

அவனுக்கு, தான் கற்றுக் கொடுத்த யோகாசனங்கள் வீண் போகவில்லை என்பதில் அந்தத் தந்தைக்கு ஒரு திருப்தி. சர்வாங்காசனத்தால், கணேசனின் மார்பு பரந்தும், தனுராசனத்தால் முதுகு நேர்க்கோடு போலவும், பத்மாசனம் செய்து, புருவத்திடையே கண் பார்வையை ஒருமுனைப்படுத்தியதால் உறுதியின் நிழல்போல் நெற்றியில் தெரிந்த துல்லியமான ஒரு நரம்புக் கோடும், மூக்கின் நுனியில் சுடர்விட்ட ஒருவித ஒளியும், சாவாசனத்தால் ஏற்பட்ட உறுதி கலந்த அமைதிக் களையும், கணேசனிடத்தில் ஒருவிதக் கவர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. மகனை 'விழுங்கிவிடுபவர் போல்' பார்த்த சங்கரனுக்கு நிகழ்காலத்தை உருவாக்கிய கடந்தகால நினைவோட்டம் நெஞ்சுக்கு முன்னால் நின்றது.

சங்கரன் பி.ஏ. படித்தபோது பெரிய பெரிய பதவிகளை யு.பி.எஸ்.ஸி. மூலம் பெறமுடியும் என்பது அவருக்குத் தெரியாது. அப்படித் தெரிந்தவர்கள் அவருக்கு ஆசிரியர்களாகவும் வரவில்லை. ஐ.ஏ.எஸ். என்ற ஒன்று இருப்பதே, வயது வரம்பு தாண்டிய பிறகுதான் அவருக்குத் தெரியவந்தது. எல்.டி.ஸி., யு.டி.ஸி.

தான் அவர் காதில் சதா ஒலித்த உத்தியோக மந்திரங்கள். அவற்றிலும் தோல்வியடைந்து, அதன் பலனாக உயர்நிலைப் பள்ளியில் எல்.டி. அஸிஸ்டெண்டாகச் சேர்ந்தார். கல்லூரியில் படிக்கும்போது 'நோட்ஸ்'களை மட்டும் படித்த குற்ற உணர்வில், கையில் கிடைத்த புத்தகங்களைப் படித்து அறிவை விரிவாக்கினார். மாணவர்களோடு, தோழமையோடும். அன்போடும் பழகுவதை அவரின் பலமாகக் கருதிய பள்ளி நிர்வாகி, தலைமை ஆசிரியர் பதவியில் யாரைப் போடலாம் என்று வந்தபோது அவரின் மாணவர் தோழமையை ஒரு பலவீனமாகக்கருதினார். ஆகையால், அவருக்கு ஜூனியரான ஒரு ஆசிரியரைத் தலைமை ஆசிரியராக்கி, தனது தங்கையைக் கொடுத்தார். இதனால் மனமுடைந்த சங்கரன், தனது மகனை ஒரு 'இன்டெலக்சுவலாக்கி' ஒரு பெரிய பதவியில் அமர்த்தி, தன்னைப் போன்றவர்களுக்கு ஏற்படும் அநீதிகளை, அவன் தனது பிரிவில் நிகழாமலாவது பார்த்துக் கொள்வான் என்ற மானசீக எண்ணத்தோடு இருக்கிறார்.

கணேசன், ஆசனப் பயிற்சியினால் பிரத்யட்ச உலகை மறக்கக் கூடாது என்பதற்காக மார்க்ஸ், ஏஞ்சல்ஸ் ஆகியோரின் புத்தகங்களைப் படிக்க வைத்தார். நேரு, காந்தி, அரவிந்தர், பெர்னாட்ஷா போன்ற மேதைகளின் படைப்புக்களையும் சொல்லிச் சொல்லி படிக்கச் செய்தார். பல நூல்களைக் கற்ற கணேசன், எம்.ஏ.வில் முதல் வகுப்பில் தேறி, அறிவுச் சுடராய் விளங்குகிறான் என்ற எண்ணத்தோடு, மகனைப் பார்க்கப் பார்க்க சங்கரனுக்குத் திகட்டாத தேனாக இருந்தது.

கணேசனின் 'செல்பில்' அரவிந்தரின் 'பவுண்டேசன் ஆப் இந்தியன் கல்சர்' நேருவின் 'டிஸ்கவரி ஆப் இந்தியா' மகாத்மா காந்தியின் 'எக்ஸ்பிரிமென்ட்வித் ட்ருத்', சர்ச்சிலின் . 'ஹிஸ்டரி ஆப் தி ஓர்ல்ட் வார்' கா.சு. பிள்ளையின் 'தமிழ் இலக்கிய வரலாறு' ஆகியவை உட்பட பல புத்தகங்கள் இருந்தன. மேஜையில் காவான், ரீடர்ஸ் டைஜெஸ்ட், இம்பிரின்ட், நியூஸ்வீக், விகடன், தாமரை, தீபம், இந்தியா-74 ஆகியவை விரிந்து கிடந்தன.

கணேசன் தற்செயலாகக் கண்களை நிமிர்த்தியபோது, தந்தை தன்னையே உற்றுப் பார்ப்பதைக் கவனித்து லேசாக சங்கோஜப்பட்டபோது, சங்கரன் வெளியே வந்து, ஒரு முக்காலியில் உட்கார்ந்து கொண்டே "இன்டர்வியூ என்றைக்கு?" என்றார். அரசாங்கத்தில் ஒரு பெரிய வேலைக்கு அவன்

விண்ணப்பித்திருக்கிறான் எப்போதும் படிக்கும் அவன், அந்த வேலைக்குத் தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்வதற்காக விழுந்து விழுந்து படித்தான்.

"ஓர்லட் சிட்சுவேசனை சர்வே பண்ணு பார்க்கலாம்" என்றார் சங்கரன். அவன் வாயில் இருந்து வரும் வார்த்தைகள், அவருக்கு ஒருவித மோன நிலையைக் கொடுக்கும்.

கணேசன் விளக்கினான் : ஈஸ்ட்-வெஸ்ட் டிடெண்ட், வில்லி பிராண்ட் ராஜினாமாவாலும் அதை 'சோவியத் திரிபு வாதமும்' மேற்கத்திய ஏகாதிபத்யமும் சேர்ந்து செய்த தந்திரம் என்று சீனா வர்ணிப்பதாலும், நல்லுறவு பாதிக்கப்படுமோ என்ற உலக அச்சம்; அந்த அச்சம் அவசியமற்றது என்பது போல் மாஸ்கோவில் நடந்த பிரெஸ்நேோ-நிக்ஸன் உச்ச கட்டப் பேச்சுக்கள், அமெரிக்காவின் தார்மிக ஆதிக்கத்தில் இருந்து விடுபட நினைத்த கனடாவில், பிரதமர் ட்ரூடோ புதிய பலத்தைப் பெற்றிருப்பது; ஐரோப்பிய பொருளாதார பொதுச் சந்தை, ஐரோப்பா, அமெரிக்காவின் செல்வாக்கில் இருந்து தன்னை விடுவிக்க நினைப்பது; ஜப்பானில் பிரதமர் தானகோவின் சகாக்கள் பதவிகளைத் தூக்கியெறிந் திருப்பது; கம்போடியாவில் நடக்கும் உள் நாட்டுப் போர்; லாவோஸில் பிரதமர் சௌமிபௌமா கயிறு மேல் நடப்பது; தென்வியட்நாமில் முனிஸிபல் தேர்தலை ஒட்டி மீண்டும் நடக்கும் கொரில்லா தாக்குதல்கள்; இந்தியா அணுவாயுத சோதனையில் வெற்றி பெற்று, பாரத துணைக்கண்டத்தில் 'சூப்பர் பவராகவும்', தென் கிழக்காசியாவில் 'வல்லரசு' என்ற அந்தஸ்தையும் பெற்றிருப்பது; சைப்ரஸ் நிலைமை ஆகியவற்றை எடுத்துக் கூறினான்.

பெருமையால் பூரித்த சங்கரன், மகனை இன்டர்வியூவிற்காக 'டிரிம்' செய்வதை மறந்துவிட்டு, பொதுப்படையான விவாதத்தில் இறங்கினார்.

"சீனா அணுகுண்டு வெடித்த போது பேசாமடந்தைகளாக இருந்த நாடுகள், நம்நாடு சோதனை நடத்தியதும் கத்துவதைப் பார்த்தியா?"

"தொடக்கத்தில் கத்திய நாடுகள் இப்போது அடங்கிட்டே. சீனா கூட நாம் சோவியத் தூண்டுதலில் செய்ததா சொல்லுது"

"சோவியத் யூனியனிடமே உதவி பெற்றுவிட்டு, இப்போ அந்த நாட்டையே அது திட்டுது."

"இது இயற்கை; இப்படி ஒரு நிலைமை வரும் என்று 40 ஆண்டுகளுக்கு முன்பு ஜான்கந்தர் 'இன்சைட் ஆசியா' என்ற புத்தகத்தில் 'சீன-சோவியத் தேசியங்கள், மார்க்ஸியம் வலியுறுத்தும் சர்வ தேசியத்தையும் மீறி, ஒரு நாள் மோதும்' என்று தீர்க்க தரிசனமாகச் சொல்லியிருக்கிறார்."

"அப்பா ஒரு ஆச்சரியமான விஷயம் என்னன்னா, மா-ஸே-துங்கை அவரது ஆரம்ப கால அரசியலில், சீன கம்யூனிஸ்ட் கட்சியே 'எக்ஸ்பெல்' செய்திருக்கிறது."

"இன்னொரு விஷயம் தெரியுமா? சீன கம்யூனிஸப் புரட்சிக்கு வழி காட்டுவதற்காக, ஸ்டாலின், இந்தியரான எம்.என்.ராயை அங்கு அனுப்பினார். இது மாஸேதுங்குக்குப் பிடிக்கவில்லை."

"எம்.என்.ராய், புரட்சிவாதியாய் ஒளிவிட்டது போல், இன்னொரு இந்தியரான ஜே.கிருஷ்ணமூர்த்தி தத்துவத்துறையில் ஜொலிச்சுக்கிட்டு இருக்கார். அன்னிபெஸண்ட் அவரை மகனாகத் தத்து எடுத்து, அவர் 'கடவுளின் அவதாரம்' என்று அறிவிக்க முயற்சி செய்த சமயத்தில், கிருஷ்ணமூர்த்தி, 'நான் ஒரு சாதாரண மனுஷன்தான்'னு சொல்லி, அதுக்கு மறுத்திட்டாரு. கிருஷ்ண மூர்த்தியைப் பத்தியோ, அவர் எழுதிய புத்தகங்களைப் பத்தியோ நம்முடைப் பலபேருகாத் தொரியாது. ஆனால் மேற்கு நாடுகளுள்-குறிப்பா-அமெரிக்காவுல. அவர் தத்துவமும், அவரும் ஒரு இனிஸ்டிடூஷன். 'அன்னி பெசண்ட் அம்மாவே' தத்து எடுத்தா அவரு எப்படிப் பட்டவரா இருப்பாரு.."

"அப்பா ஒரு இன்ட்ரெஸ்டிங் சமாசாரம், அன்னி பெசண்ட்டும், பெர்னாட்ஷாவும் காதலர்கள். ஆனால், கடைசில. ஷா காலை வாரிட்டார்."

"ஷாவை சர்ச்சிலுக்குக் கட்டோடு பிடிக்காது. அந்த மேதை சாவும்போது, சர்ச்சிலின் கைங்கரியத்தால் அரசாங்க மரியாதையோடு அவர் அடக்கமாகல."

"ஷா கோமாளித்தனமா பேசினது போலத் தெரிஞ்சாலும், அவரு பேசுறதிலே அர்த்தம் இருக்கும். அப்பா 'குடித்து'க் கெட்டதை உணர்ந்த அவர், மதுபானங்களைத் தொட்டது கிடையாது. பீடி, சிகரெட், சாரி..பிரிட்டனில் பீடி ஏது? புகை

பிடிச்சதும் கிடையாது..."

"அதனாலதான் சிகரெட்டின் ஒரு நுனியில் தீயும், இன்னொரு நுனியில் முட்டாளின் வாயும் இருக்குன்னு சொன்னாரா?"

"ஆமாம்; மகாத்மா காந்தி இறந்தபோது", உலகில் மிக நல்லவர்களாக இருப்பது மிக மிக ஆபத்து" என்று அருமையாகச் சொன்னார்.

"ஆனால், ஷாவை காந்திஜிக்கும் பிடிக்கல.. டால்ஸ்டாய்க்கும் பிடிக்கல.. டால்ஸ்டாய்க்கு காந்திஜியை பிடிச்சுது."

"டால்ஸ்டாயின் 'அன்னாகரினாவை' விட, அவர் 'எப்படி?' வாழ்க்கையே சிறந்த நாவல்."

"டால்ஸ்டாய்க்கு, பேரும் புகழும் கிடைச்சதும், டால்ஸ்டாயிஸம் அவரைவிட சக்தி வாய்ந்ததா ஆச்சுது. டால்ஸ்டாய், அந்த 'இமேஜிக்கு' தக்கப்படி வாழணுமுன்னு நினைச்சி, தன் புத்தகங்களுக்கான ராயல்டியை ஒரு பப்ளிக் டிரஸ்டா ஆக்க நினைச்சாரு. இது அவரு மனைவிக்குப்பிடிக்கல. ஒரே சண்டை. கடைசில மனுஷன். மனைவியை விட்டு ஓடிப்போயி ஒரு ரயில்வே ஸ்டேஷன் மாஸ்டர் வீட்ல இறந்தாரு. அவரு வாழ்க்கையைக் குறைந்தபட்சம் எழுத்தாளங்களாவது படிக்கணும்!.

"இந்த வகையில் பார்த்தா, திருப்தியோடு இறந்த ஒரே இலக்கியவாதி இரவீந்திரநாத் தாகூர்தான். தாகூர் பூமித் தாயிடமிருந்து விடை பெறுறதா எழுதின கவிதை, என்னைக்குமே நெஞ்சைவிட்டு விடைபெறாது. சாவை. வாழ்க்கையின் இன்னொரு பகுதியாக, அதாவது, குழந்தை, தாயின் மார்பகத்தின் ஒரு பகுதியில் இருந்து இன்னொரு பகுதியில் பால் அருந்த தலையை எடுப்பதாகத் தாகூர் வர்ணிச்சாரு. ஆனால், ஷாவுக்கும் மரணபயம்!"

"ஷாவை ஏன் சர்ச்சிலுக்குப் பிடிக்கல?"

"அவரு யாரைத்தான் நேசிச்சாரு? சர்ச்சில் ஒரு இம்பிரியலிஸ்ட். நம்ம காந்திஜியையே 'அரை நிர்வாணப் பக்கிரி'ன்னு சொன்னார். காந்தியடிகள் இறந்தபோது கூட ஒரு அனுதாபச் செய்தி சொல்லல. நம்ம பத்திரிகைதான் அவரை அனாவாசியமாப் பெரிசுபடுத்தின.

"உண்மைதான்; சர்ச்சில் 'நான் பேசும்போது மற்றவங்களை

முட்டாள்கள்னு நினைப்பேன். அதனால் நல்லா பேசினேன்'னார்"

"ஆனால், அரவிந்தரோ 'நான் பேசுகிறபோது, மக்களை, நாராயணனின் சொரூபங்களாக நினைப்பேன். அதனால நல்லா பேச்சு வந்தது'ன்னார். சர்ச்சில் அரவிந்தர் வேறுபாடுதான், கிழக்கத்திய - மேற்கத்திய நாடுகளின் அடிப்படைக் கலாச்சார வேறுபாடு."

"சர்ச்சில் இம்பீரியலிஸ்டா இருக்கலாம்; ஆனால், அவரு இல்லன்னா ஹிட்லரை ஒழிச்சிருக்க முடியாது."

"உண்மைதான். சேம்பர்லின் மூனிச் உடன்பாடு செய்து, விட்டுக் கொடுத்தாரு. சர்ச்சில்தான் ஹிட்லரை ஒழிச்சது."

ஜெர்மன் மக்கள் மத்தியில் தேசிய வெறியை உண்டு பண்ணினவர் ஹிட்லர். ஹிட்லர் ஒரு ஜெர்மானியர் கிடையாது. ஆஸ்திரிய நாட்டைச் சேர்ந்தவர்.

"இதே மாதிரி நெப்போலியன் பிரெஞ்ச் ஆசாமி இல்லை. பிரெஞ்ச் காலனியான கார்ஸியா தீவைச் சேர்ந்தவர். இவர் அப்பா, அந்தத் தீவை மீட்கிறதுக்காகப் பிரான்சோட போராடிச் செத்தார்."

"சமத்துவம் - சகோதரத்துவம் சுதந்திரம் ஆகிய தத்துவங் களைக் கொடுத்த பிரெஞ்ச் புரட்சிதான் கடைசில சர்வாதிகாரி களையும் கொடுத்தது."

"இதனால்தான் தத்துவம் இல்லாத புரட்சி எடுபடாதுன்னு சொல்றது. மார்க்ஸிய தத்துவத்தையும் பார்லிமெண்டரி ஜனநாயகத்தையும் இணைச்சி ஒரு புதிய சித்தாந்தத்தை பரீட்சித்துப் பார்க்க சிலியில் அல்லெண்டே பாடுபட்டார். பாவம் அவரைக் கொன்னுட்டாங்க."

தந்தைக்கும் மகனுக்கும் இடையே பேச்சு சுவாரஸ்யமாகப் போய்க்கொண்டிருப்பதைக் கவனித்த சங்கரன் மனைவி, கணவன் காய்கறி வாங்கப் போக மாட்டார் என்று தெரிந்தவள் போல், ஒரு பையை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள். கணேசன் கா.சுப்பிரமணிய பிள்ளை எழுதிய இலக்கிய வரலாற்றின் முதல் பகுதியை எடுத்தான். சங்க காலம், சங்கம் மருவிய காலம், சமயகாலம், சிற்றிலக்கிய காலம், ஐரோப்பியர் காலம், நிகழ்காலம் ஆகிய காலக்கூறுகளில் தமிழின் வளர்ச்சியை அவன் மனம் எடை போட்டது.

சங்கரன் உடனே "தமிழ் இலக்கியத்தைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்" என்றார்.

"அருமையான கருத்துச் செல்வங்கள்: சங்க நூல்களையும் பிற நூல்களையும் பார்க்கிறபோது திகைப்பு வருது".

"நீ திகைக்கிற: ஆனால், டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் பழைய சுவடிகளை அலசினதோடு எப்படி விளக்கம் கொடுத்திருக்கிறார் தெரியுமா? அவர் இல்லாட்டி இன்னைக்கு பழைய இலக்கியமே கிடைச்சிருக்காது. இன்றையத் தமிழ் இலக்கியத்தைப் பத்தி நீ என்ன நினைக்கிற?"

"தமிழ் இலக்கியத்தில் ஆராய்ச்சித்துறை இன்னும் பழமை மீட்பு வாதத்திலேயே இருக்கு, உதாரணமா பாரி, தேரைக் கொடுத்தது கொடைத்திறன்னு சொல்றதில்தான் இருக்கோமே தவிர, அது அதிகப் பிரசங்கித்தனம் ஆகாதான்னு நாம் ஆராயல. அகத்திணையில. தலைவி, தலைவனுடைய தோழன் கிட்ட பேசக்கூடாது. ஆனால், அவள் தோழி தலைவங்கிட்ட பேசலாம் என்கிறது மாதிரி காட்சிகள் அமைஞ்சிருக்கு. இரண்டு பெண்களுக்கு, பொருளாதார ஏற்றத்தாழ்வாலே இரண்டு கற்பு நிலைகள் வந்தது என்று ஆராய மனம் வரல. ஆராய்றவனை தமிழ்த் துரோகி என்பாங்க. நம்ம ஆராய்ச்சி ஔவையை அதியமான் காதலி என்கிறதிலேயும்' ராமனைத் தமிழன்னு நிரூபிக்கிறதிலேயும் அல்லது ஆரியன்னு சொல்றதிலேயுந்தான் இருக்கு."

"நீ சொல்றது உண்மைதாண்டா. கண்ணகி மதுரையை எரிச்சான்னு கை தட்றோம். ஆனால், அது எப்படி எரிக்க முடியு முன்னு நினைக்கிறதில்ல. அதோட, மணிமேகலையில், மதுரையை எரிச்ச பாவத்துக்காக, பழையபடி மானிடப் பிறவி எடுக்கப் போறதா, கண்ணகி சொல்வி வருந்துறா: இது பலருக்குத் தெரியாது!"

"என்னைக் கேட்டால், கண்ணகி பாத்திரத்தை விட, மணிமேகலைப் படைப்புத்தான் மேலானது. ஒரு இளந்துறவிப் பெண்ணின் உள்ளப் போராட்டத்தை, சாத்தனார் அழகாப் பாடியிருக்கிறார். 'புதியோன் பின்னே போனதென் நெஞ்சே!
மறக்க முடியாத கவிதை."

"புது கவிதையைப் பத்தி உன் அபிப்பிராயம் என்ன?"

நிலவையும், பொண்ணுங்க முகத்தையும் பாடிக்கிட்டிருந்த மரபுக் கவிஞர்களுக்கு, வியத்நாம் இருக்கு, ஆப்ரிக்கா இருக்குன்னு சாட்டையால் அடிச்சது மாதிரி சொன்ன பெருமை புதுக்கவிதை களுக்குச் சேரும். சில புதுக்கவிதைங்க ரொம்ப நல்ல இருக்கு, ஆனால், சில கவிதைங்க. மட்டரகமாய், உங்ககிட்ட கூட சொல்ல

முடியாதபடி அசிங்கமாவும் இருக்கு."

"ஆனால், நம்ம நாவல்கள் தேவல. சுஜாதா ஒரு மாடர்னிட்டியை கொண்டு வந்திருக்கிறார்."

"அப்படித்தான் ஒரு அபிப்ராயம் நிலவுது. ஆனால், பத்து வருஷத்துக்கு முன்னாடி இதை ரா.கி.ரங்கராஜன் செய்திருக்காரு."

"எப்படியோ போகட்டும் தாமரை மணாளனின் சட்டயர்; நா.பார்த்தசாரதியின் இப்போதைய யதார்த்தவாதம்; மணிசேகரனின் சொல்வளம்; சாலியின் வர்ணனை; மணியனின் அக ஆய்வு; ஜெயகாந்தனின் தத்துவார்த்தம்; இப்படி ஒவ்வொருவர் கிட்டேயும் ஒவவொரு அழகு."

"உண்மைதான்; ஆனால், வேறு சில எழுத்தாளர்கள் உதவாத கருத்தை விடாப்பிடியாகப் பிடிச்சிக்கிட்டு இருக்காங்க. 'மகன், குழந்தையாய் இருக்கையிலேயே, தாயைக் காதலிக்கிறான். இதனால் தந்தைமேல் பொறாமைப்படுறானாம். இதுமாதிரி மகள். தந்தையைக் காதலிச்சி, தாய் மேல் பொறாமைப்படுறாளாம். அடி மனசில் ஏற்படும் இந்த உணர்வுகளை, கான்ஸியஸ் மைண்டல' ஈத்துன்னு ஒன்னு தடுக்குதாம். இதனால் மகளும், மகனும் பொறாமையை அன்பா மாத்திக்கிறாங்களாம். இதுக்கு 'ஓடிபியஸ் காம்பௌக்ஸ்'ஸின்னு பெயர்னு பிராய்ட் சொன்னாலும் சொன்னாரு நம்மவங்கள்ல சிலர் அதையே பிடிச்சிக்கிட்டு கதை எழுதுறாங்க."

"நல்லா சொன்னீங்க..பிராய்ட் தத்துவமே தப்புன்னு அவருக்குப் பின்னால வந்த சைகாட்ரிஸ்ட்கள் நிரூபிச்சிட்டாங்க. ஆனால், நம்ம ஆளுங்க அதை இன்னும் விடல. என்ன எல்லாமோ எழுதுறாங்க. இதே நேரத்தில். சாமர்ஸெட்மாம் ரமண ரிஷியின் தத்துவத்தை வைத்தே ஒரு நாவல் எழுதினார். அதோட தமிழில் டிராவலர்க்ஸ் அதிகமாக வரலே."

"வந்திருக்கு. ஆனால், நம்மவங்க வெளிநாடுகளுக்கு தாழ்வு மனப்பான்மையோடு போயிட்டு, இங்கே வந்து இங்கிலீஸ் டிஷ்களைப் பத்தித்தான் அளந்தாங்க. சி.எஸ். ஸின் உலகம் சுற்றினேன் ஒரு விதிவிலக்கு. ஆனால், கொஞ்சம் டெக்னிக்கல்".

" இந்த வகையில் மணியனின் "இதயம் பேசுகிறது" ஒரு எக்ஸலன்ட் கிரியேஷன். பிரயாணக் கட்டுரைகளுக்கு ஒரு ஸ்டேடஸ்ஸைக் கொடுத்த பெருமை, அவரைத்தான் சேரும். அவர் கட்டுரைகள் தன்மானமான தேசியத்தையும் மனிதாபிமான சர்வ

தேசியத்தையும் தூண்டுது."

"தமிழ் இலக்கியம் இப்போ பரவாயில்லை. டாக்டர் உதயமூர்த்தியின் கட்டுரைகள், மோகன் சுந்தரராஜனின் விண்வெளிக்கட்டுரைகள். மார்டனாய் இருக்கு. நம்ம இலக்கியம் ஒழுங்காய் உருப்படணுமுன்னா திறனாய்வு பெர்ஸனலாப் போகக்கூடாது. திறனாய்வை பெர்ஸனலாயும் எடுத்துக்கக் கூடாது."

"என்ன எழுதி என்ன செய்ய. நாடு இன்னும் அறியாமைலதான் இருக்கு. நாம எல்லாம் கஷ்டத்தை ரசிச்சிக்கிட்டு. துன்பத்த சுவைச்சிக்கிட்டுத் தார்மீக கோழை களாகத்தான் இருக்கோம்."

"அமெரிக்கப் பல்கலைக்கழகம் ஒண்ணுல, ஒரு பெரிய கண்டை எடுத்து, மூணு பிரிவாக்கி, ஒரு பிரிவை வெறுமனேயும், மத்தில இருந்த பிரிவுல கொஞ்ச உணவையும் வச்சாங்களாம்.. நிறைய எலிகளையும் விட்டாங்க. இன்னொரு பிரிவுல, நிறைய உணவை வைச்சாங்களாம். ஒரு பிரிவுல இருந்து இன்னொரு பிரிவுக்குப் போக வழியும் வச்சாங்க. குறைந்த உணவிருந்த தட்ல இருந்த எலிகள். அங்கே சண்டை போட்டன. திருடு, ரேப்பு எல்லாம் நடந்தது. கொஞ்சம் எலிகள் அங்கே இருந்து. உணவு அதிகமாக இருக்கிற தட்டுக்கு வந்ததுங்க. ஆனால், அந்த இடம் ரசிக்கல. இருந்த இடத்துக்கே போயிட்டுதுங்க. போர், பொறாமை, திருடு ஆகியவற்றை விட்டு எலிகளால் மீள முடியல கஷ்டமே ஒரு ரசனையாயிட்டு; நாமும் அப்படித்தான் இருக்கோம்."

*கணேசன் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்த சங்கரன்,* அவன் கல்லூரித் தோழன் மோகன் வந்ததும் அவன் வரவு பிடிக்காதவர் போல உள்ளே போனார். கணேசன் 'காரவானை'ப் புரட்டினான். மோகனின் கையில் ஒரு சினிமாப்பத்திரிகை இருந்தது.

"என்னடா கணேஷ், இன்டர்வியூன்னா இப்படியா விழுந்து விழுந்து படிக்கணும்?"

"இண்டர்வியூவில விழாம இருக்கணுமின்னா விழுந்து விழுந்துதான் படிக்கணும்."

"சொல்றேன்னு தப்பா நினைக்காதேடா. வாழ்க்கையை என்ஜாய் பண்ணணும் 'கில் ஜாயா' இருக்கக் கூடாது. சினிமா பார்க்கறதில, அதிலும் பார்த்த சினிமாவை பழையபடி பார்க்கறதில,

பீச்சுக்குப் போறதிலே, கேர்ல் பிரண்டோட அரட்டை அடிக்கிறதில இருக்கிற இன்பமே தனி. இது ஈடில்ல."

கணேசன், "பாரதி ஓரிடத்தில்" என்றான். "நடிகை பாரதியா எதில பேட்டி கொடுத்திருக்கு?" என்றான் மோகன்.

"நான் மகாகவியைச் சொல்றேன். ஒரு மனுஷன், சாபத்தால் பன்றியாய் மாறினான். சாபம் விமோசனம் ஆகும்போது நான் பன்றியாவே இருக்க விரும்புறேன்னு சொல்லி, பன்றியாய் இருந்து என்ஜாய் பண்ணினானாம். 'பன்றி போல வாழ்ந்தனர்' என்று பாரதியார் சொல்கிறார். உன்னைப் போன்ற ஆட்கள் அப்போதும் இருந்திருக்காங்க."

கணேசனின் பேச்சைக் கேட்டதும், மோகனுக்கு முதலில் ஷாக். கணேசன் முன்னால் குவிந்து கிடக்கும் புத்தகங்களைப் பார்த்ததும், தான் உண்மையிலேயே ஒரு பன்றி தான் என்று எண்ணத் தொடங்கினான். அந்த அவமானத்தில் ரீடர்ஸ் டைஜஸ்ட்டை எடுத்துக்கொண்டு, இன்றிலிருந்து படிக்க வேண்டும் என்ற தீர்மானத்தோடு, வீட்டுக்குப் போனான். அங்கே அவன் தந்தை ஒரு 'காண்டிராக்டர். *அரசியல்வாதி, பையனைப்பார்த்ததும்,* "ஏண்டா இடியட், அந்த இண்டர்வியூ கமிட்டியில யார்லாம் மெம்பருங்கன்னு கோமேதகம் சொல்றதா சொன்னாரே கேட்டியா?" என்றார். கணேசன் விண்ணப்பித்திருந்த அந்தப் பெரிய வேலைக்கு மோகனும் அப்ளை செய்திருந்தான்.

மோகன் தந்தையிடம் பேச மனமில்லாதவன் போல் *"இல்லை" என்று ஒரு வார்த்தையில் முடிக்க, அவர் பல வார்த்தைகள்* தொடுத்தார்.

"நீ கெட்ட கேட்டுக்குப் புத்தகம் வேறயா? இது நல்ல சான்ஸ், கெடுத்துடாதே. இந்த வேலை கிடைக்காட்டா உனக்கு இருக்கிற அறிவுக்கு பியூன் வேலைகூடக் கிடைக்காது. உடனே போய் மெம்பருங்க லிஸ்ட்டை கேட்டு வாங்கி என்கிட்ட கொடு. நான் அதை அந்த எம்.எல்.ஏ. கிட்ட கொடுக்கிறேன்" என்றார்.

'பியூன் வேலை கூடக் கிடைக்காது' என்ற உண்மை மோகனின் கையிலிருந்த ரீடர்ஸ் டைஜஸ்டை கீழே தள்ளியது. அவன் வைராக்கியம், மயான வைராக்கியமாக, மெம்பர்களின் பெயர்களைத் தெரிந்து கொள்ள தலைகால் தெரியாமல் ஓடினான்.

இன்டர்வியூ நாள் நெருங்க நெருங்க, கணேசன் புத்தகங்களை நெருங்கினான். இந்தியன் எக்கனாமிக் பிராப்ளம், சமீபத்தில் அவசரச் சட்டங்கள் அத்தனையும் அவன் சொற்படி கேட்டன. தந்தை சங்கரனும் மகனுக்கு பாயின்ட்கள் எடுத்துக் கொடுத்தார்.

மோகன் வீட்டில் கார்கள் பறந்தன. பார்ட்டிகள் மிதந்தன. மோகனும், அவன் தந்தையும், ஒரு எம்.எல்.ஏ. யும் காரை வைத்துக் கொண்டே, சென்னையைச் சல்லடை போட்டார்கள்.

நூற்றுக் கணக்கான எம்.ஏ. பட்டதாரிகள் இண்டர்வியூவிற்கு வந்தனர். கணேசனிடம் மெம்பர்கள் முக்கால் மணி நேரம் விவாதித்தார்கள். பலரை இரண்டு மூன்று நிமிடங்களில் அனுப்பிவிட்டார்கள். இந்த லிஸ்டில் மோகன் டாப். எல்லோரும் கணேசனுக்கு அல்லது அவனை மாதிரி அதிக நேரந் தங்கிய வேறு ஒருசிலரில் ஒருவனுக்குக் கிடைக்கும் என்று தோல்வியை முன்னதாக ஒப்புக் கொண்டார்கள்.

ஒரு வாரம் கழித்து ரிசல்ட் அறிவிக்கப்பட்டது.

மோகன் அந்தப் பெரிய வேலைக்குத் தெரிந்தெடுக்கப்பட்ட அறிவிப்பு வந்தது.

தன்னைவிடச் சிறந்த ஒருவனுக்குக் கிடைத்திருந்தால் கணேசன் வருத்தப்பட்டிருக்கமாட்டான். ஆள் இடிந்து விட்டான். ஒரே கவலை. ஒருவனை இல்லீகலாகத் தெரிந்தெடுப்பதை நியாயப்படுத்த நூற்றுக்கணக்கான இளைஞர்களின் நேரத்தையும் பணத்தையும் ஏன் வீணடிக்க வேண்டும் என்று ஆத்திரப்பட்டான். அவன் தந்தை சங்கரன் மகனுக்கு ஆறுதல் சொன்னார்:

"இது உனக்கும் மோகனுக்கும் நடந்த போட்டியல்ல. நீ தெரிந்து வைத்திருந்த காந்திஜி, நேருஜீ, டால்ஸ்டாய், தாகூர், அரவிந்தர் முதலிய மேதைகளுக்கும், அவனுக்குத் தெரிந்த அந்த எம்.எல்.ஏ.வுக்கும் நடந்த போட்டி. மேதைகள் தோற்று விட்டார்கள். கவலையை விடு."

# சத்தியம்

கமலை அடித்துக் கொண்டிருந்த கந்தசாமி 'அவள் வருகிறாளா' என்று குளத்துக் கரையைப் பார்த்தான். மணி பத்துக்கு மேலாகிறது. இன்னும் அவள் 'கஞ்சி' கொண்டு வரவில்லை. இரண்டு 'செவலைக்' காளைகள் 'நோக்கரவின்' இருபுறத்திலும் கழுத்தைக் கொடுத்து 'கமலைக் கிடங்கில்' முன்னும் பின்னுமாக வந்து கொண்டிருக்க, அவன் 'வால் கயிற்றைப் பிடித்து' லாவகமாகக் கிணற்றுத் தண்ணீரை 'கூனையில்' ஏற்றி, பிறகு, அதே லாவகத்தோடு 'வடத்தில்' ஏறி உட்கார்ந்து கொண்டு, 'இடத்தை' மாட்டின் வாலைத் திருகிக் கொண்டு, 'வலத்தை' மாட்டின் அடிவயிற்றைக் காலால் வருடிக் கொண்டே 'ம்பா... ம்பா... பய மாடு... ம்பா...' என்று சொல்லிக்கொண்டும், சாட்டைக் கம்பால் லேசாகத் தட்டிக் கொண்டும், கிடங்கில் அத்துமானம் வந்ததும், ஒரு அழுத்தத்தோடு உட்கார்ந்து, வால் கயிற்றைச் சுண்டி, தண்ணீரைக் கொட்டினான். அக்கம் பக்கத்து வயல்களிலும் இதே மாதிரி 'கமலை' அடிக்கும் வேலைகள் நடந்து கொண்டிருந்தன.

கந்தசாமி, அலுப்போடு ஒரு 'சொக்கலால்' பீடியை எடுத்து, பற்றவைக்கப் போனான். அதற்குள் காத்தாயி 'கஞ்சிக்' கலயத்தோடு வந்துவிட்டாள். அவளுக்கு இருபத்தைந்து வயதிருக்கும். உழைப்பின் முத்திரையாக அவளுக்கு ஆண்டுக்கு ஒரு வயது குறைந்துகொண்டிருந்தது. சிம்மம்போல் பார்வையும், தேக்குக் கட்டைபோல உடம்பும் கொண்ட முப்பது வயது கந்தசாமிக்கு, அவள் சரியான ஜோடிதான்.

"என்ன பிள்ளே, கரையிலே ஆளைக் காணோம். திடீருன்னு மதுரைவீரன் மாதிரி வந்து நிக்கே?"

கந்தசாமியின் நகைச்சுவைக்குக் காத்தாயி, சிரிக்காமல் கடுகடுப்பாகப் பதிலளித்தாள்.

"தோட்டத்து வழியா வாறேன். நேத்து மிளகாய் கொத்துக் கொத்தாய்க் கிடந்தது. எந்த 'இருசாதிப்பய மவனோ' பறிச்சிட்டு

போயிட்டான். தங்க நகையை தவிட்டுக்கு வித்து, பொன்னு நகையைப் பொடிப்பொடியாய் வித்து, பயிர் வச்சால் கட்டையிலே போற பய, பறிச்சிக்கிட்டுப் போயிட்டான். பேச்சியம்மா, நீதாம்மா பறிச்சவன் கையைப் படக்குன்னு ஒடிக்கணும்."

'மிளகாய்' களவு போன செய்தி, கந்தசாமியை ஒரு கலக்குக் கலக்கிவிட்டது. அந்த அதிர்ச்சியை வெளிக்காட்டாமலே, "யாருடி பறிச்சிருப்பா?" என்றான்.

"இல்லாதவன் வயது எல்லாத்துக்கும் மயனியாம்! இதுக்கு வேறே போயி சாஸ்திரம் பாக்கணுமாக்கும். ஓங்க அண்ணன்தான் பறிச்சிருப்பாரு. நேத்து அவுக வீட்ல துவையல் வாடையைப் பார்த்தபோதே எனக்குத் தெரியும். ஓங்களுக்குன்னு வாச்சிருக்காரே அண்ணாத்த, அவரு சும்மா இருந்தாலும், அவரு கையி சும்மா இருக்காதே."

கந்தசாமி ஒன்றும் பேசாமல், 'கமலையை' அவளிடம் கொடுத்துவிட்டு, கை காலை அலம்பிவிட்டு கமலக் கல்லில் இருந்த கலயத்தை மூடியிருந்த 'கும்பாவை' எடுத்தான். பானையில் இருந்த 'அவிச்ச அவித்திக் கீரையையும் சோளச் சோற்றையும்' கும்பாவில் வைத்து, வாய்க்கால் தண்ணீரை ஊற்றி, நாலு மிளகாய்களை, முனைகளை முறித்து விட்டு, உப்பை எடுத்துக் கரைத்து விட்டு, ஒரு கவளத்தை வாயில் வைத்தான். காத்தாயி, 'வடத்தில்' அமர்ந்து மாடுகளை "ம்பா..பய மாடு..ம்பா..நான் மாடு" என்று சொல்லிக் கொண்டே முன்னாலும் பின்னாலும் வந்தாள்.

"ஏ, புள்ளே! உப்பு கொஞ்சம் அதிகமா கொண்டு வரக்கூடாது?"

"என்னமா, வாயி நீளுது? இதுக்கு மட்டும் குறைச்ச இல்ல; அண்ணனுக்கு அநியாயமா நிலத்தை அளந்து கொடுத்திருக்காங்கன்னு நான் நாய்மாதிரி கத்துறேன்; சண்டைபோட்டு நிலத்த வாங்க துப்பு இல்ல. உப்பு வேணுமாம் உப்பு."

"எங்க அண்ணன சொன்னியான்னா ஒன்வாய் அழுவிப் போகும்."

"இதனால்தான் ஊரே ஒம்மப் பாத்துச் சிரிக்கிது. துப்புக் கெட்ட பிராந்தன்னு நேத்துக்கூட மாடசாமி தாத்தா சொல்றாரு. அதனால்தான் ஒம்ம அண்ணன் மிளகாயைப் பறிச்சிருக்காரு.

இருக்கிறவன் இருக்கிறபடி இருந்தா, சிரைக்கிறவன் சரியாய் சிரைப்பாங்கறது சரிதான்." (பிராந்தன் என்ற வட்டாரமொழிக்கு, தேசீய மொழி 'லூஸ்'.)

"நான் என்னடி சரியில்லாமப் போயிட்டேன்?"

"உம்ம அண்ணன், நீரு சரியா இருந்தா மிளகாய் பறிப்பானா?" (' ர் ' 'ன்' ஆகியது.)

"அவர் பறிச்சான்னு எதை வச்சி சொல்ற?"

"நான் கும்பிடுற பேச்சியம்மா கேளாம போகமாட்டா. அவன் கையில கரையான் அரிக்கும். மிளகா பறிச்ச அவன் விரல்ல வீக்கம் வராம போவாது."

கந்தசாமி, அவளை உரக்கத் திட்டுவதற்காக எழுந்த போது, அவன் அண்ணன் சுப்பையா அங்கே வந்தான். வீங்கியிருந்த அவன் பெருவிரலில் விளக்கெண்ணெய் போட்டு ஒரு துணி சுத்தியிருந்தது. கந்தசாமிக்கு அண்ணனிடம் ஏதோ பேச வேண்டும் போலிருந்தது. அதற்குள் காத்தாயி முந்திவிட்டாள்.

"கையில என்ன மச்சான் கட்டு? வீங்கியிருக்கு?"

"நேத்து ராத்திரி தோட்டத்திலே குத்துக் காலுல கையை வச்சேன். ஏதோ கடிச்சது தோணிச்சி. இதுக்குள்ள வாழைக்காய் மாதிரி வீங்கிட்டு. நீ என்னடா ஒரு மாதிரி இருக்கே? காலா காலத்தில சாப்பிடக் கூடாது?"

காத்தாயி, கந்தசாமியை ஓரக்கண்ணால் பார்த்துத் திருப்தி தெரிவித்தாள்.

"சரி நான் வாறேன். செங்கோட்டைக்குப் பாரம் ஏத்திக்கிட்டுப் போவணுமுன்னு நினைச்சேன், விரலைப் பாத்தா முடியாது போலிருக்கு. சீக்கிரம் சாப்பிட்டு கமலையை வாங்கேண்டா. பொம்பளையை எவ்வளவு நேரம் வடத்தில விடுறது? பிராந்துப் பயலுக்கு எப்பவும் அசமந்தந்தான்."

சுப்பையா செல்லமாகத் திட்டிக் கொண்டே எங்கேயோ போனான். காத்தாயி, "பேச்சியம்மா, அவன் விரலு வெள்ளரிக்காய் மாதிரி வீங்கணும்" என்றாள், மச்சான் போனதும்.

கந்தசாமி அண்ணனுக்கு வக்காலத்து வாங்கினான்.

"பார்க்கிறவ கண்ணுக்குப் பச்சையெல்லாம் பாம்பாம். அவருக்கு விரல் வீங்கிட்டா மிளகாய் பரிச்சதா ஆயிடுமா? போடி!"

"இதனால்தான் ஒம்ம அண்ணாங்கூட, ஒம்ம பிராந்துப் பயன்னு சொல்லிட்டுப் போறான்."

காத்தாயி, தான் நேரடியாகக் கூறமுடியாததை மச்சான் மூலமாக 'பிராந்துப் பய' என்று புருசனைச் சொன்னதில், மகிழ்ந்து போனாள். கந்தசாமிக்குப் பகீரென்றது. அவள் சொல்வது மாதிரி, அண்ணனுக்கு மிளகாய் பறிச்சதால்தான், பேச்சியம்மா ஒரு வேளை பாம்பா வந்து கடிச்சிருப்பாளோ?

அண்ணனுக்குப் 'பாம்பு' கடிச்சிருக்கும் என்ற எண்ணத்தால், அவனுக்கு சகோதர பாசத்தால் பயமும், அதே நேரத்தில், அண்ணனும் தன்னை 'பிராந்துப் பய' ன்னு சொன்னதால் கோபமும் ஒருங்கே வந்தன. பேச்சியம்மா காட்டிக் கொடுத்திட்டாள்! மிளகாய் பறிச்சவன், நிலத்திலேயும் ஏன் ஏமாத்தியிருக்கக் கூடாது?

"நீ சொல்றதப் பாத்தா, என் அண்ணன் கிட்ட பாகத்துக்கு அதிகமான நிலமிருக்குமோ?"

காத்தாயி பிடித்துக் கொண்டாள்.

"இதுக்குப் போயி பஞ்சாங்கம் பார்க்கணுமாக்கும். நீங்க பிராந்தன்னு அவனுக்குத் தெரியும். உங்க அய்யா மண்டையைப் போட்ட கையோடு கர்ணத்துக்குக் கையில கொடுத்து நிலத்திலே பிடிச்சிட்டான்"

கந்தசாமி, ஒன்றும் பேசாமல் 'கமலையை' வாங்கினான். கொஞ்ச நேரம் கழித்து, மாட்டை அவிழ்த்துவிட்டு. தண்ணீர் பார்த்த பையனை வீட்டுக்கு, மாடுங்கள 'பத்திக்' கிட்டுப் போகும்படி சொன்னான். காத்தாயி அவனைப் பத்திக்கிட்டு, வயலுக்குள் போனாள்.

"பாத்தியா, பத்து மரக்கா விதப்பாட்ல நமக்கு நாலு மரக்காதான் இருக்கும். அவனுக்கு ஆறு மரக்கா. ஒம்ம கண்ணு நல்ல கண்ணா இருந்தால் சரியாப் பார்க்கலாம்."

அந்தச் சமயத்தில், கந்தசாமி வயலை உற்றுப் பார்த்தான். அவன் இப்போது 'பிராந்தன்' இல்லை. அவனை யாராலும் ஏமாற்ற

முடியாது. நிலத்தைப் பார்த்தான். பார்த்துக் கொண்டே நின்றான்.

அப்போது காத்தாயியின் அண்ணன், அதாவது பெரிய தாத்தா பேரன் கருப்பசாமி வந்தார். அவர் 'பஞ்சபாண்டவர் வனவாசத்தை' ராகம் போட்டுப் படிப்பவர். சகுனி, அவருக்கு ரொம்பப் பிடிக்கும். கந்தசாமி நிலத்தை கண்ணால் அளந்து கொண்டே, "நீ சொல்றது மாதிரி இருந்தாலும் இருக்குண்டி; பேசாம கர்ணத்தைக் கூட்டியாந்து அளந்திட வேண்டியதுதான்" என்றான்.

பேசப்போன 'தங்கச்சியை' கண்களால் அடக்கிவிட்டு, "மாப்பிள்ளை மச்சான். சொல்றேன்னு தப்பா நினைச்சாலும் சரிதான்; கலகம் பிறந்தாதான் நியாயம் பிறக்கும். பாண்டவங்க கலகம் பண்ணுன பிறகுதான் நாடு கிடைச்சுது. வரப்ப வெட்டி வயலுக்குள்ள வைக்கறத விட்டுப்புட்டு, கர்ணத்துக்கிட்ட போகணுமாம். ஆம்பிள பேசற பேச்சா இது?"

"நான் எதுக்குச் சொல்றேன்னா..." கந்தசாமி இழுத்தான்.

"இதுக்குத்தான் ஒம்ம ஊர்க்காரங்க பிராந்தன்னு சொல்றாக" என்றாள் காத்தாயி.

"வாயை மூடுடி!"

"என் வாயை மூடலாம். ஆனால், ஊர் வாய மூட உலமூடியா இருக்கு?"

"அவளை ஏன் கோபிக்கிறிய? ஊர்க்காரங்க ஒம்ம பிராந்தன்னு சொல்றதக் கேட்டு அவள் மனசு பொறுக்காம சொல்றா. ஒமக்கு ஒண்ணுன்னா அவ மனசு கேக்குமா?"

அண்ணனின் பேச்சால், காத்தாயி, முதல் தடவையாகக் கணவனைப் பிராந்தன்னு சொல்றதுக்காக வருத்தப்பட்டு, அந்த வருத்தத்திற்குச் சாட்சியாகப் 'பொல பொலவென்று' கண்ணீர் வடித்தாள்.

கந்தசாமிக்குக் கோபம் வந்துவிட்டது. அவனா பிராந்தன்? அண்ணன் ஏமாற்றினால், அவனா விடுவான்?

'மம்பெட்டியை' எடுத்து, வரப்பை வெட்டினான். காத்தாயி வெட்டப்பட்ட கற்களையும், மண்ணையும் எடுத்து 'மச்சான்' வயலுக்குள் சரியாக பாதி வயலில் வைத்தாள்.

"இன்னும் கொஞ்சம் தள்ளி வை. இதில வச்சாலும் சுப்பையாவுக்குத்தான் அதிக நிலம் இருக்கும்" என்றார் கருப்பசாமி.

காத்தாயி, ஒரிஜினல் எல்லைக் கோட்டிற்கு அப்பால், இரண்டு மரக்கால் விதப்பாடு 'தள்ளி' வைத்தாள். ஆலோசனை கூறிய கருப்பசாமி 'நைஸாக' நழுவினார். விவகாரத்தைச் சொல்லிக் கொடுக்கலாம். ஆனால் விவகாரம் நடக்கும்போது ஸ்தலத்தில் இருக்கக் கூடாது. அப்புறம் எனக்குத் தெரியாதுன்னு சொல்ல முடியுமா?

புது வரப்பும், புது வயலும் உருவாயின. அன்று சாயங்காலம், நிலத்தைப் பார்வையிட வந்த சுப்பையா மனைவி பாப்பம்மாள் "இந்த அநியாயத்தைக் கேக்க ஆளில்லையா...ஆளில்லையான்னு" கத்தினாள். கந்தசாமியின் வயலுக்குள் "பேச்சியம்மா கேளு, கேளு" என்று மண்ணை அள்ளித் தட்டினாள். அக்கம் பக்கத்து வயல்காரர்கள் ஓடிவந்தார்கள்; "சுப்பையா வரட்டும், விவகாரத்தைத் தீர்த்திடலாமு"ன்னு பலர் சொன்னார்கள். "இப்பவே வரப்பை வெட்டிக் கந்தசாமியின் பங்கு வயலுக்கும் அப்பால் எல்லைக் கோட்டை வைக்க வேண்டும்" என்று பாப்பம்மாளின் தாய்-மாமா கத்தினார்.

"வாங்க மாமா, வெட்டி வைப்போம்" என்றாள் பாப்பம்மாள்.

தாய்மாமா, "இருட்டிட்டு...நாளைக்கு வச்சிடலாம்' என்று சொல்லிவிட்டு நழுவினார்.

பொழுது புலர்ந்தது. புள்ளினங்கள் ஆர்த்தன.

செங்கோட்டைக்குப் போன சுப்பையா, திரும்பி வந்தான். தனது நிலம் சுருங்கியது கண்டு, அவன் முகம் சுருங்கியது. நேராய்த் தம்பி வீட்டிற்குப் போனான்.

"ஏலே பிராந்துப் பயல! எந்தப் பய பேச்சைக்கேட்டு வரப்ப வச்சேல?" என்றான் கோபமாக.

கந்தசாமிக்கு ஒரே கோபம் அவன் என்ன பிராந்தனா? காத்தாயியைப் பார்த்தான். அவள் 'அசிங்கமாக'ப் பேசுவாள் என்று நினைத்து, அவனே பதிலளித்தான்.

"அய்யா செத்ததும், நீ அவசரம் அவசரமாக நிலத்தப் பிரிக்கணுமுன்ன போதே, எனக்குச் சந்தேகம். ஒனக்கு ஆறு

மரக்கால், எனக்கு நாலு மரக்காலா?"

சுப்பையா, சூடானான்.

"ஏல, பிராந்துப் பயல! கேட்பார் பேச்சைக் கேட்டுக் கெட்டுப் போகாதல."

கந்தசாமி, அண்ணனைப் பார்த்து முறைத்தான். அவன் விரலைப் பார்த்தான். பேச்சியம்மாள் இன்னும் அந்த விரலில் வீக்கமாக இருந்தாள். மிளகாய் பறிச்சான். இப்போ பிராந்துப் பய என்கிறான். அவன் என்ன பிராந்தனா?

கந்தசாமி, ஒரு முறைப்பை ராக்கெட்டாக்கிப் பேச்சை வெடித்தான்.

"அப்படித்தான் வைப்பேன். உனக்குத் தைரியமிருந்தா என்ன வேணுமுன்னாலும் பண்ணிக்க."

சுப்பையா, பக்கத்தில் கிடந்த 'மம்பெட்டியை' எடுத்து ஒரே போடாய்ப் போடலாமோன்னு நினைச்சான். பிறகு என்ன நினைத்தானோ, நேராகக் கர்ணத்திடம் போனான்.

அந்த ஊர் கர்ணத்திற்கு, அப்போது பணமுடை. எஸ்.எஸ்.எல்.சி.க்காரியான தன் மகளை, ஒரு எம்.பி.பி.எஸ் டாக்டருக்கு 'வரன்' பேசிவிட்டார். அந்தப் பிள்ளையாண்டான் 'ஸ்கூட்டர் வேண்டும்' என்று உயிரை எடுத்து வருவது, அவரது 'ஆஸ்துமா கம்ப்ளைன்டை' அதிகமாக்கியது. அந்த ஆஸ்துமா மூச்சில், சுப்பையாவை ஏற இறங்கப் பார்த்தார்.

"நீ வேறே என் உயிரை எடுக்கிறியா? மனுஷன் கல்யாணத்தை நிச்சயிச்சிட்டு அவஸ்தப்படுறான். நிலத்தை அளக்கிறதுக்கு இப்பவா நேரம்? நிலம் ஓடியா போவுது? அளக்கலாம், பொறுத்து அளக்கலாம்" என்றும், சுப்பையாவை அளந்தார்.

"அப்படி இல்ல ஐயா. அந்த பிராந்துப் பய, பெண்டாட்டி பேச்சைக் கேட்டு வரப்ப வெட்டிட்டான். விபரீதமாகப் போகுமுன்னால, ஐயாதான் வந்து அளக்கணும்."

"நான் நிலத்த அளக்கிறதில நேரத்த செலவழிச்சா எனக்குப் படியளக்குறது யாரு? ஒரு கோட்டை நெல்லுக்கு எங்க கிடைக்கு

முன்னு தேடிக்கிட்டிருக்கேன். அது இன்னிக்குக் கிடைச்சால் நாளைக்கி வரேன்; நாளைக்குக் கிடைச்சா, நாளைக் கழிச்சி வாறேன். அடுத்த மாசம் கிடைச்சால், அதுக்கு அடுத்த. "

சுப்பையா புரிந்து கொண்டான். இரவோடு இரவாக ஒரு கோட்டை நெல், கர்ணத்தின் வீட்டில் அடைக்கலமானது. கர்ணத்தை மச்சான் 'மசக்குறான்' என்பதைப் புரிந்த காத்தாயி, கந்தசாமியின் முதுகில் ஒரு மூட்டை நெல்லை ஏற்றிவிட்டாள். பிறகு இரண்டு மூட்டை சோளத்தை ஏற்றி விட்டாள். பிறகு இருவரும் போட்டி போட்டுப் படியளந்தார்கள். கர்ணம், நகர்ந்தபாடில்லை. ஸ்கூட்டர் வாங்க, இவ்வளவு போதாது. "தாசில்தார் நாளைக்கு வர்றாரு;" நாளக் கழிச்சி வருவதாய் சொன்னார்." பிறகு, ஆர்.டி.ஓ. மீது பழியைப் போட்டார். அதற்குப் பிறகு ரெவின்யூ இன்ஸ்பெக்டர் மீது பழி சுமத்தினார். கடைசியில் "நாளைக்கு வரேன்" என்றார்.'நாளை நாளை என்னாதே' என்று சும்மாவா பாடினார்கள்? நாளை வரவே இல்லை.

சுப்பையா பொறுமை இழந்தான். ஆக்கிரமிப்பை எப்படி முறியடிப்பது என்று திட்டம் போட்டான். ஊர்க்காரர்கள் எல்லாம், அவனைப் பார்த்து, கண்ணைச் சிமிட்டினார்கள். அவன் மனைவியின் சொந்தக்காரர்கள் சிலர், அவனைப் பார்த்து "இந்த உடம்ப வச்சிக்கிட்டு எதுக்குய்யா இருக்கணும் நீ?" என்றார்கள்.

பெண்டாட்டிக்காரி கடைசியாக இருந்த ஒரு ஆயுதத்தை பிரயோகித்தாள். "நீ ஒரு ஆம்பிளையா? இந்தப் பிராந்தங்கிட்ட இருந்து நிலத்தைப் பிடுங்க முடியல; இதுக்கு மட்டும் குறைச்சலில்ல. நிலத்தைப் பிடுங்குறதுக்கு முன்னால என்கிட்ட வரக் கூடாது. ஆம்பிளையாம், ஆம்பிளை."

மனைவி இரவில் கொடுத்த அடி, சுப்பையாவுக்கு பகலிலும் வலித்தது. நேராக வயலுக்குப் போனான். அவன் மனைவி, பாப்பம்மாளும் பின்னால் போனாள்.

வயலில் கந்தசாமி, 'ஏழு மரக்கால்' விதப்பாட்டிலும், எரு போட்டுக் கொண்டிருந்தான். சுப்பையாவுக்கு ரத்தம் கொதித்தது. பிராந்துப் பயலுக்குத் திமிரைப் பாரேன்!

"ஏலே கந்தசாமி, கடைசியா சொல்றேன்...வயலை விடப் போறியா இல்லியா?"

"முடியாது! என்ன செய்யணுமோ செய்துக்கோ."

"ஏ பிராந்தா, கேட்பார் பேச்சக் கேக்காதல!" கந்தசாமிக்கு மூக்கு முட்டக் கோபம். அவன் பிராந்தனா?

"நீ ஆம்பிளையா இருந்தால் செய்யுறத செய்துக்க. நிலத்த விட முடியாது."

கந்தசாமிக்கு வயிறு முட்ட ஆத்திரம். அவன் ஆம்பிளை இல்லையா?

'மம்பட்டியை' எடுத்து, வரப்பை வெட்டப் போனான்: தம்பி கந்தசாமி மம்பட்டியைப் பிடித்தான்.

காத்தாயியும், பாப்பம்மாளும் ஒருவர் தலைமுடியை, இன்னொருவர் பிடித்தார்கள். அவர்கள் 'நகராத' மாடுகளை வாலைப் பிடித்து முறுக்கி நகர வைத்தவர்கள். ஒவ்வொருத்தியும், இன்னொருத்தியின் தலைமுடியை மாட்டு வாலாக நினைத்துக் கொண்டார்கள்.

பெண்கள் சண்டையிடும்போது, ஆண்கள் சும்மா இருக்கலாமா? கூடாது. ஆகையால் கந்தசாமியும், சுப்பையாவும் கட்டிப் புரண்டார்கள் பயிர்கள் மேலே உருண்டார்கள். வரப்பு மேலே கட்டிப் புரண்டார்கள். பயிர்கள் மேலே அந்த நான்கு பேரும், இரண்டு இரண்டு பேராக வயல் முழுவதும் உருண்டு, அடுத்த வயலுக்கு உருளப் போனார்கள் இப்படியே போனால், எல்லா வயலிலும் பயிர்கள் பாழாகும் என்பதைப் புரிந்து கொண்ட, அக்கம் பக்கத்து ஆசாமிகள் ஓடிவந்து 'விலக்கு'த் தீர்த்தார்கள். அவர்கள் வந்தபிறகும் பிடியை இறுகவிடாத அண்ணன் தம்பி இருவருக்கும் 'தர்ம அடி' (பொதுமக்கள் கொடுக்கும் அடி) கொடுத்துப் பிரித்தார்கள்.

கந்தசாமிக்கு மூச்சு இளைத்தது. சுப்பையாவுக்குக் கை வலித்தது. அவர்களின் மனைவிமார்கள், திட்டிக் கொண்டே கட்டி உருண்டதால், அவர்களுக்கு வாய்தான் அதிகமாக வலித்தது, விவகாரம் பேசப்பட்டது.

"கந்தசாமி, நீ என்ன இருந்தாலும் இவ்வளவு தூரம் வரப்பைத் தள்ளி வைக்கக் கூடாதுல. ரெண்டு மரக்கால் விதப்பாட்டை எடுத்திருக்கியே" என்றார் நியாயத்தை நியாயமான

முறையில் பேசும் ஐயாசாமி. எல்லோரும் ஆமாம் போட்டார்கள். கந்தசாமிக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. தெரியவேண்டிய அவசியமுமில்லை. அவன் மனைவி காத்தாயி பேசினாள். அவளுக்குப் பொய்யோ, மெய்யோ, சமயோசித அறிவு உண்டு.

"என்ன தாத்தா, நியாயம் பேசுறிய நியாயம்? என் நாத்தனார் நாலு பேருக்கும், அவங்க பொண்ணுக 'சமஞ்சதிலிருந்து' கல்யாணம் வரைக்கும் வரவு செலவு பாத்திருக்கேன். மொத்தம் ரெண்டாயிரம் ரூவா ஆச்சுது. அவரு பாதியைக் கொடுக்கணுமில்ல. கொடுத்தாரா?"

"அவள் சொல்றது அநியாயம். ஒவ்வொரு விசேஷத்துக்கும் என் கையாலேயே பணம் கொடுத்தேன். வேணுமுன்னா பிராந்துப் பயகிட்ட கேட்டுப்பாருங்க" என்றான் சுப்பையா.

'பிராந்தன்' அண்ணன் கொடுத்ததுக்கு அடையாளமாக 'ஆமாம்' என்று தலையாட்டுவதற்காக, முகத்தைத் தூக்கிக் கீழே கொண்டு போடப் போனான். அதற்குள், மின்னல் வேகத்தில் காத்தாயி குறுக்கே புகுந்து, "பேச்சியம்மா சத்தியமா, அவரு ஒரு பைசாக் கூட பொதுச் செலவுக்குத் தரல. ஆயிரம் ரூவாயைத் தந்திரட்டும், நிலத்தை விடுறோம்" என்றாள் 'சபையில்' மனைவியைக் காட்டிக் கொடுக்க விரும்பாமல் கந்தசாமி, இப்போது அவளுக்குத் தலையை ஆட்டினான்.

அதுமட்டுமல்ல; எப்படியும் தூக்கிய தலையைக் கீழே கொண்டுவந்துதானே ஆகவேண்டும்?

"அடி காத்தாயி நீ உருப்படுவியாடி. ஆயிரம் ரூவாய்வேற அந்த மனுஷங்கிட்டே (அதாவது தன் புருஷன்கிட்ட) வாங்கிப்புட்டு இப்போ நாக்கு மேலே பல்லைப் போட்டு இல்லன்னா சொல்லுற. நீ வெள்ளச் சீலை கட்டலன்னா என் பேரு பாப்பம்மா இல்லேடி!"

"நீலிக்குக் கண்ணீரு நெத்தியிலேயாம். ஒன் புருஷன் எங்களப் பண்ணியிருக்கிற கொடுமைக்கு, நீங்க துள்ளத் துடிக்கப் போகலன்னா என் பேரு காத்தாயி இல்லை"

ஐயாசாமி குறுக்கிட்டார்.

"பிச்சைக்காரத்தனமா பேசாதிய பிச்சைக்கார

பயவுள்ளியளா...எதுக்கு இவ்வளவு சண்டை சச்சரவு? நாளைக்கி வெள்ளிக்கிழமைதான். நம்ப வீரபத்திர காளியம்மன் முன்னால சத்தியம் பண்ணிடுங்களா. அவ கேட்டுட்டுப் போறா. போன வருஷம் கள்ளச் சத்தியம் பண்ணுன காடசாமி பாம்பு கடிச்சி செத்தான். பொய் சொல்றவன் மாட்டிக்கிடுவான்."

மறுநாள் வீரபத்ர காளியம்மன் முன்னால் ஊரே திரண்டது. கந்தசாமியும், சுப்பையாவும் குளித்துவிட்டு ஈரத்துண்டியோடு வந்தார்கள். காத்தாயியும், பாப்பம்மாவும் கணவன்மார்க்கு முன்னால், கேடயம் போல் நின்றார்கள்.

"வீரபத்திர காளியம்மன் அறிய, நான் சொல்றது: என் தம்பி கந்தையா பொதுச் செலவுக்கு செலவளிச்ச எல்லாப் பணத்திலேயும் பாதியை நான் குடுத்திட்டேன்; நான் சொல்றது பொய்யின்னா, அம்மன் என்னையோ, என்னோட பொண்டாட்டியையோ கையோட கால முடக்கலாம்." என்று சொல்லி சுப்பையா ஏற்றி வைக்கப் போகும் கர்ப்பூரத்தை "அவன் காசே தரல; நான் சொல்றது பொய்யின்னா, என்னையோ, என்னோட பொண்டாட்டியையோ அம்மன் கையோட காலோட முடக்கலாம்" என்று கந்தசாமி கற்பூரத்தை அணைத்துவிட்டால் போதும். ரெண்டு மரக்கா விதப்பாடோ அல்லது 'சுளையாய்' ஆயிரம் ரூவாயோ மிஞ்சும்.

காத்தாயிக்குப் பகீரென்றது. அம்மனிடம் 'முழுப் பூசணிக்காயை' மறைக்கலாமா? கைநீட்டி வாங்கிய பணத்தைத் தரலேன்னு சொல்லலாமா? பொய் சொல்றதுக்காக குடலை உருவிடுவாளோ? கையைக் கால முடக்கிடுவாளோ? ஏற்கனவே அவளுக்குக் கை கால் உளைச்சல்.

ஆனால், கந்தசாமி கலங்கவில்லை. காத்தாயி சொல்லி விட்டாள். அவன் சத்தியம் செய்தே ஆகவேண்டும். சத்தியம் செய்யறதா சபதம் போட்டுட்டு, இப்போ பின்வாங்கறதுக்கு அவன் என்ன பிராந்தனா?

"என் தம்பி கந்தசாமி செலவளிச்ச..." என்று சொல்லிக் கொண்டே கர்ப்பூரத்தை ஏற்றப் போனான் சுப்பையா. அதற்குள் அவன் கை நடுங்கியது. "என் தம்பி" என்ற வார்த்தை, அவனிடத்தில் சகோதர பாசத்தைக் கிளப்பி விட்டது. பிராந்துப் பயலை சின்ன வயசில் எத்தனை தடவை தோளில் தூக்கி வச்சி விளையாடி இருக்கிறான். எத்தனை தடவை, பெரிய பசங்க தம்பியை

அடிக்கும்போது, அவன், அந்தப் பசங்களை அடிச்சி, தம்பியை சிரிக்க வச்சிருக்கிறான். அவன் தம்பியை அடிக்கலாம். காயம் ஆறிடும். ஆனால், அம்மன் அடித்தால்? அவள், காத்தாயி, பழி பாவத்திற்கு அஞ்சாதவ; கள்ளச் சத்தியம் பண்ணுற வம்சத்துல பிறந்தவ. ஆனால், அவன் வம்சம் அப்படியா? தம்பி கள்ளச் சத்தியம் பண்ணினாலும், அவன் வம்சத்துக்குத் தானே கெட்ட பேரு! தம்பி அழிஞ்சாலும் அவன் அழிஞ்சாலும் ஒண்ணுதானே! தம்பியை-அன்போடும் ஆசையோடும் வச்சி விளையாடுன தம்பியை-அழிய விடுறதா? ரெண்டு மரக்கா விதப்பாடுதானே, போனால் போகட்டும்!

சுப்பையா கர்ப்பூரத்தை ஏற்றவில்லை. "சத்தியமும் வேண்டாம், கித்தியமும் வேண்டாம். நான் அவனுக்குக் குடுக்க வேண்டியது நிசந்தான்; குடுத்திடுறேன்" என்று சொல்லி விட்டு கோவிலை விட்டு வேகமாக வெளியேறிய சுப்பையாவைப் பார்த்து ஊரே சிரித்தது. அவன் தம்பி கந்தசாமி கூட, மார்பை நிமிர்த்திக் காட்டினான். காத்தாயிக்கு ஒன்றுமே புரியவில்லை.

இப்போது, சுப்பையாவை, யாரும் லட்சியம் செய்யவில்லை. நியாயஸ்தன் என்று நினைத்த சுப்பையா, கடைசியில் ஒரு 'மொள்ளமாறிதானா!' அவன் மனைவி பாப்பம்மாளும் "தம்பி கிட்ட குடுக்கிறதா வாங்குன பணத்தை எவர்கிட்ட குடுத்தீரு? நீங்க ஆம்பளையா?" என்கிறாள்.

சுப்பையா, எதற்கும் கவலைப்படவில்லை. "எக்குடி தோற்பினும் தோற்பது நின்குடியே" என்று ஒரு புலவர், மன்னன் ஒருவனிடம் ஒரு காலத்தில் கூறியது அவனுக்குத் தெரியாததுதான். ஆனால், அந்தக் கவிதைக்கு, அவன் ஒரு கருத்தாவாகி, விளக்கமாகி, ஊருக்கு விளங்காமலே நிற்கிறான்.

# கூட்டுக் கணக்கு

அந்த வட்டாரத்தில் வேலை கிடைக்காமல் திண்டாடும், அத்தனை பேரும் பிரமுகர் பிரபாகரின் வீட்டின் வராந்தாவில் உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள் எம்ப்ளாய்மெண்ட் ஆபீசுக்குப் போவார்களோ, இல்லையோ, பிரபாகரன் வீட்டுக்குப் போகாமல் இருக்கமாட்டார்கள். எம்.எல்.ஏக்கள், டாக்டர்கள், என்ஜினீயர்கள் ஆகியோரின் எண்ணிக்கை, பியூன் வேலைக்காக, சிபாரிசு தேடி வந்தவர்களின் எண்ணிக்கையைவிட அதிகம்.

பிரமுகர் பிரபாகரன், அவர்களுக்குத் 'தரிசனம்' கொடுப்பதற்காக, தம்மைத் தயார் செய்து கொண்டிருந்தார். வராந்தாவை அடுத்த அறையில் உட்கார்ந்திருந்த அவருக்கு நாற்பது வயது இருக்கலாம். எல்லாரையும் முன்னுக்குக் கொண்டு வர முடியும் என்பதைச் சொல்லாமல் சொல்லும் குண்டுக்கட்டி வயிறு, ஸில்க் ஜிப்பா, ஜரிகை வேஷ்டியின் நீளத்துக்குப் போட்டி போட்டுத் தொங்கும் அங்கவஸ்திரம்; இவை பிரபாகரின் வெளித் தோற்றங்கள். அவர் போகாத பொதுக்கூட்டங்களோ, கலந்து கொள்ளாத கல்யாணங்களோ, பங்கேற்காத கருமாந்தரமோ இருக்க முடியாது. அழைக்காத இடங்களுக்கும், தாராளமாகப் போகும் பரந்த மனசுக்காரர். மற்றவர்களுக்கு வேலை வாங்கிக் கொடுப்பது தான் அவருடைய 'ஹாபி'.

பிரபாகர் தம் கையாளைப் பார்த்துக் கையைக் காட்டினார். கையாள், வெளியே நன்கு டிரஸ் செய்திருந்த ஓர் என்ஜினீயர் பைய னையும், அவனைச் சார்ந்து வந்த இரண்டு பேரையும் உள்ளே கூட்டி வந்தான். 'என்ன விஷயம்?' என்று பிரபாகர் அவர்களிடம் கண்களால் வினவினார்.

"சீக்கிரமா விஷயத்தைச் சொல்லுங்க: ஐயாவுக்கு எங்கேஜ்மெண்ட் இருக்கு" என்றான் கையாள்.

வந்தவர்களில் ஒருவர் வாய் மலர்ந்தார்:

"இவன் பேரு ரமேஷுங்க. என்ஜினீயருக்குப்

படிச்சிருக்கான். இந்தக் கம்பெனியிலிருந்து இன்டர்வியூ வந்திருக்கு" என்று சொல்லி ஒரு தாளை நீட்டினார்.

பிரபாகரன் தாளைப் பார்த்தார். பிறகு முகத்தைச் சுளித்துக் கொண்டே, "இந்தக் காலத்தில் வேலை கிடைக்கிறது தண்ணீர் கிடைக்கிறது மாதிரி. நீங்க வேறே காரியத்துக்கு வந்திருப்பீங்கன்னு நான் நினைச்சேன்" என்றார்.

"அப்படிச் சொல்லக் கூடாது. ஐயாதான் தயவு வச்சு அந்த வேலையிலே இவனைத் தள்ளணும்."

"கஷ்டங்க!"

என்ஜினீயர் பையன் எழுந்து நின்று பேசினான்: "அந்தக் கம்பெனி மானேஜிங் டைரக்டர் கிட்ட நீங்க ஒரு வார்த்தை சொன்னால் போதும்."

என்ஜினீயர் பேசி முடிக்குமுன், ஓர் ஆசாமி திடீரென்று காட்சியாகி, பிரபாகரன் கழுத்தைத் தேடிக் கண்டுபிடித்து, கையாள் உதவியோடு ஆறடி உயரமுள்ள ஒரு மாலையைப் போட்டு விட்டு, அவருடைய இடக் கையில் ஓர் எலுமிச்சம் பழத்தையும், வலக்கையில் ஒரு பூச்செண்டையும் கொடுத்தான்.

பூமாலையைப் போட்டுவிட்டு பாமாலை தொடுத்தான் அவன்:

"ஐயா தயவுல எனக்கு அந்த வேலை கிடைச்சுட்டுது. உங்களை நான் வேலையில் இருக்கிற வரைக்கும் மறக்க மாட்டேன். நீங்க 'ரெகமண்ட்' பண்ணாட்டா வேலை வேறு ஆளுக்குக் கிடைச்சிருக்கும்."

பிரபாகர் பேசினார்:

"இந்த மாலைக்குப் பதிலா ஏழைப் பையன் ஒருத்தனுக்கு ஒரு பேனா வாங்கிக் கொடுத்திருக்கலாம். பரவாயில்லை. ஏதோ சொன்னேன்; செய்திட்டீங்க. நீ நல்ல முறையில் வேலை செய்தா, அதுதான் எனக்குப் பெருமை."

"நீங்களே போகப் போகத் தெரிஞ்சுக்குவிங்க ஸார், என் வேலைத் திறமையை."

மாலை போட்டவன் போய்விட்டான். என்ஜினீயர் பிள்ளையாண்டான் 'அஸ்திவாரம்' போட்டான்.

"ஸார், நீங்க மனசு வச்சா எனக்கு வேலை கிடைக்கும். உங்க வாயிலிருந்து வர்ற ஒரு வார்த்தையில என் எதிர்காலமே இருக்கு."

பிரபாகர் லேசாகச் சிரித்தார். பிறகு அந்தப் பையனைப் பார்த்து, "என்ன படிச்சிருக்கே, அப்பா?" என்றார்.

"பி. ஈ. பஸ்ட் கிளாஸ் ஸார்."

"ஏதாவது முன் அனுபவம் இருக்கிறதா?"

"என் மாமா கட்ற வீட்டுக்கு ஐடியா கொடுத்தது நான்தான்.

"ரெபரன்ஸ், அதாவது, உனக்கு எந்தப் பெரிய மனிதரையாவது தெரியுமா?"

பிரபாகர், கையாளைப் பார்த்து மானேஜிங் டைரக்டருக்குப் போன் போடச் சொன்னார். கையாள் நீட்டிய 'ரிஸீவரில்' பேசினார்.

"ஹலோ, நான்தான் பிரபாகரன் பேசுகிறேன். ஹா...ஹா... அப்படில்லாம் ஒண்ணுமில்லே. ஹா..ஹா....என்ன? நேத்து என் வீட்டுக்கு வந்தீங்களா? ஐ ஆம் சாரி. நான் லயன்ஸ் கிளப்ல பேசப் போயிருந்தேன். அப்புறம், ஐ ஆம் இண்டரஸ்ட்டெட் இன் ஏ கேண்டிடேட்...பேரு என்னப்பா?"

"ரமேஷ் ஸார்."

"ஆமாம், ரமேஷ்.ஸார்...நோ, வெறும் ரமேஷ் இல்லே; பி.ஏ. படிச்சிருக்கான்."

"பி. ஈ. ஸார்."

"ஐ ஆம் ஸாரி. பி.ஈ. படிச்சிருக்கான். ஒங்க கம்பெனியிலே இண்டர்வியூ வந்திருக்கு. பாத்துக்குங்க. என்ன? அப்படியா? ஐ.ஸி. எதுக்கும் டிரை பண்ணுங்க. நாளைக்கு வேண்டாம். எனக்கு சி. எம்மோட டின்னர் இருக்கு. ஹா. .ஹா...ஓகே! நான் சொன்னதைக் கவனிச்சுக்கங்க. ஓகே."

பிரபாகர் போனை வைத்துவிட்டு, "கஷ்டமாம்" என்றார்.

"அப்படிச் சொல்லக்கூடாது, ஐயா மனசு வைக்கணும். நீங்க மனசு வச்சா நடக்காதது இல்லே."

"இந்தக் காலத்துல எல்லாப் பயலும் துட்டுக் கேக்கறான்."

"கொடுத்திட்டாப் போச்சு."

"சீச்சி, பணங்கொடுத்து வேலை வாங்கறதாவது? வாணாம். இந்த வேலையிலே சேரக் காசு வேணும். வேற வேலை வரட்டும்; வாங்க கவனிச்சுக்கிறேன்."

"காசைப் பத்திக் கவலைப்படாதீங்க. கொடுத்திடலாம்.

"நீங்க சொல்றதைக் கேட்க, மனசுக்குக் கஷ்டமா இருக்கு."

"பரவாயில்லீங்க, வேலை கிடைக்காம இருக்கிறது அதைவிடக் கஷ்டங்க."

பிரபாகர் சுற்று முற்றும் பார்த்தார். குரலைத் தணித்தார். "நீங்க வற்புறுத்துகிறதனால சொல்றேன். முதல்லே அவனுக்குப் பணம் கொடுக்கக் கூடாது. மூவாயிரம் ரூபாயை உங்கள்ல ஒருவர் பேருக்கும் என் பேருக்கும் பேங்க்ல ஜாயின்ட் அக்கவுண்ட்ல போட்டிடலாம். வேலை கிடைச்சா அதை எடுத்துக் கொடுத்திடலாம்."

கையாள் குறுக்கிட்டான்:

"அதோடு ஐயாவுக்கு நூறு ரூபாய் கொடுத்திடுங்க. டாக்ஸியில் கண்டவனை எல்லாம் போயிப் பார்க்கணுமே."

"இந்தாங்க முந்நூறு. நூறு எந்த மூலைக்கு? நாளைக்கு மூவாயிரம் ரூபாயோட வர்றோம். ஜாயின்ட் அக்கௌண்ட்ல போட்டுடலாம்."

பிரபாகர், வருங்கால என்ஜினீயரைப் பார்த்து, "இந்தா பாருப்பா, நீ இன்டர்வியூவுக்குப் போகும்போது மானேஜிங் டைரக்டர் கிட்ட நான் போன் பண்ணினதைச் சொல்லாதே; அவருக்குப் பிடிக்காது."

என்ஜினீயர் பையன் தலையை ஆட்டினான். கையாள் குறுக்கிட்டான்.

"சரி, நாளைக்குப் பணத்தோட வாங்க. ஐயாவுக்கு இப்போ ஒரு மீட்டிங் இருக்கு."

அவர்கள் திரும்பிச் சென்றார்கள்.

கையாள் கியூவில் நின்ற இருவரைக் கூட்டிக் கொண்டு

வந்தான். வந்தவர்கள் ஒரு தாளை நீட்டினார்கள். பிரபாகர், "கஷ்டம்" என்று ஆரம்பித்தார். பிரபாகரின் கையைப் பிடித்தார் ஒருவர்

"ஐயா, இந்தக் கையைக் காலுன்னு நினைச்சிப் பிடிக்கிறேன். நீங்க உதவாட்டா இந்தப் பய நடுத்தெருவில்தான் நிக்கனும்."

"சரிப்பா, இவனை எதுக்காகச் சஸ்பென்ட் செய்தாங்களாம்?"

"இவன் நைட் வாட்ச்மேன் வேலையை ஒழுங்காச் செய்றானான்னு செக் பண்றதுக்கு அவங்க ஆபீஸர் ராத்திரி ஒரு மணிக்கு வந்திருக்காரு. தூங்கிட்டு இருந்த அவன் அரவம் கேட்டு எழுந்திருச்சி ஆபீஸரைத் திருடன்னு நினைச்சி, ஒரு பல்லுல பாதியை உடைச்சிட்டான். இவன ஆபீசரு, வேணுமின்னு அடிச்சதாச் சொல்லிச் சஸ்பெண்ட் செய்திருக்காரு."

"சிக்கலான கேஸ். நான் ஒண்ணும் பண்ண முடியாது."

"ஐயா அப்படிச் சொன்னா, இந்தப் பய நடுரோட்லதான் நிப்பான் எல்லாருக்கும் உதவி செய்ற மாதிரி இவனுக்கும் செய்யணும்."

"என்னப்பா இது? சரி, நான் யாருக்குப் போன் பண்ணணும்?"

"டெபுடி செகரட்டரிக்கிட்ட சொன்னால் போதும்" என்றான் முன்னாள் வாட்ச்மேன்.

கையாள் கொடுத்த ரிசீவரை எடுத்துப் பிரபாகர் ஊதினார்: "ஹலோ நான்தான் பிரபாகர். நாளைக்கு டின்னருக்கா? நோ பிளீஸ்! ஒரு சிலையைத் திறந்து வைக்கக் கூப்பிட்டிருக்காங்க. அப்புறம், உங்க ஆபீசில நைட் வாட்ச்மேன், அவன் உங்க டிபார்ட்மென்ட் ஆபீஸரை அடிச்சிட்டானாமில்ல. நோ...நோ...அந்த ஆபீசருக்காகப் பேசல. அந்த வாட்ச்மேனை எப்படியும் சேர்த்திடணும். என்ன போலீஸ் கேஸா? அந்த இன்ஸ்பெக்டர் தானே? என் பிரண்ட். ஓகே, பைல் வந்ததும் கவனிச்சிக்குவீங்களா? நன்றி, அடுத்த வாரம் வரேன்."

பிரபாகர் முகத்தைச் சுளித்தார். கடிகாரத்தைப் பார்த்தார் வாட்ச்மேனும் கடிகாரத்தைப் பார்த்தான். பிறகு டேபிள் வெயிட்டைப் பார்த்தார். வாட்ச்மேனும் டேபிள் வெயிட்டைப்

பார்த்தான்.

"என்னப்பா இது, பேஜாரு பிடிச்ச விஷயம். போலீஸ் கேஸாயிட்டதாம். அந்த இன்ஸ்பெக்டர் என் சிநேகிதர்தான். ஆனால், நண்பரானாலும் காசு கேக்காம இருக்க மாட்டான். ரேட்டை வேணும்னா குறைப்பான்."

"குடுத்திடலாங்க. என் பெண்டாட்டி கழுத்தில தங்கத் தாலி இருக்கு "

"நீ சொல்றதைக் கேட்கக் கஷ்டமா இருக்கு."

"பரவாயில்லீங்க, குடுத்திடலாம்."

பிரபாகர் குரலைத் தணித்துக் கொண்டு, "உனக்குச் சஸ்பென்ட் ஆர்டர் ரத்தாகிறவரைக்கும் பணம் கொடுக்கக் கூடாது. ஒரு ஐநூறை என் பேர்லேயும், உன் பேர்லேயும் பேங்க் ஜாயின்ட் அக்கௌண்ட்ல போட்டிடலாம். வேலையில சேர்ந்ததுக்கப்புறம் எடுத்துக் கொடுத்திடலாம் முதல்லே கொடுக்க வேண்டாம். எல்லாம் திருட்டுப் பசங்க."

வாட்ச்மேனுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை.

"ஜாயின்ட் அக்கௌண்ட்டெல்லாம் எதுக்குங்க? ஐயாகிட்ட ஐநூறையும் கொடுத்திடறேன். நீங்க என்ன வேணுமுன்னாலும் செய்யுங்க."

கையாள் இடைமறிததான்.

"ஐநூறு அந்த ஆபீசருக்கு. ஐயா டாக்சில போய்ப் பேசவேண்டியதைப் பேசிப் பெற வேண்டியதைப் பெறணும். அதுக்கும் ஒரு நூறு ரூபாய் கொண்டு வாங்க" என்றான்.

பிரபாகர் வாட்ச்மேனோடு வந்த ஒருவரின் திருநீறு அப்பிய நெற்றியை நோட்டம் விட்டுக் கொண்டே, "நீங்க என்ன செய்யுறீங்க?" என்றார்

"நான், நான் எம்பிரான் சிவனைத் தேடி அலையறேன் திருவாசகமும் தேவாரமும் படிச்சிப் பார்க்கிறேன். எம்பிரானுக்கு இன்னும் என் மேல மனசு இரங்கல "

பிரபாகர் இரங்கினார்

"நான் வேணுமுன்னாச் சொல்றேன். அவரு டெலிபோன் நம்பரைச் சொல்லுங்க."

கையாள், அவர்களை அவசர அவசரமாக அனுப்பிவிட்டு, வெளியே நின்ற ஒரு பெண்ணையும் ஒரு ஆணையும் அழைத்து வந்தான்.

"வணக்கங்க."

"வணக்கம்."

"ஸார், அறம் செய்வோர் சங்கச் செயலாளர் அன்பு நம்பி உங்களைப் பார்க்கச் சொன்னார். இவள் என் மனைவி, பேரு பிரமீளா."

பிரபாகர், அந்தப் பெண்ணை நோட்டம் விட்டார். மற்றதை மறந்து விட்டார். பிறகு நினைத்துக் கொண்டவராய் "என்ன விஷயம்?" என்றார்.

"இவளுக்கு ஒரு டைப்பிஸ்ட் வேலைக்கு இன்டர்வியூ வந்திருக்கு. இந்தாங்க, இதில் விவரமா இருக்கு அந்தச் செக்ஷன் ஆபீசர் கிட்ட நீங்க ஒரு போன் போட்டாப் போதும். விஷயம் முடிஞ்சிடும்."

பிரபாகர் முகத்தைச் சுளித்து உதட்டைப் பிதுக்கினார். கையாள் கொடுத்த போனைச் சுற்றினார்; பேசினார்.

அவர் பேசுவதையே உற்றுக் கேட்ட தம்பதியர், அவர் பேசி முடித்ததும், அவர் முகத்தைப் பார்த்தார்கள்.

"ஏகப்பட்ட போட்டியாம். கஷ்டங்கிறார்."

"நீங்க அப்படிச் சொன்னா நாங்க எப்படிப் பிழைக்கிறது?" என்றாள் டைப்பிஸ்ட் ஆகப் போகும் மங்கை.

"செக்ஷன் ஆபீசர் ஒரு பணம் பிடுங்கி."

"நீங்க கொடுக்க வேண்டியதைச் சொல்லுங்க கொடுத்திடலாம்."

"அதிருக்கட்டும். என்ன படிச்சிருக்கீங்க?"

"பி.யூ.சி."

"முன்னால் எங்கேயாவது டைப்பிஸ்டா வேலை பார்த்திருக்கீங்களா?"

"ஜாப் டைப்பிங் பண்றேன்."

"ரெபரன்ஸ், அதாவது பெரிய மனிதர்கள் யாரையாவது தெரியுமா? எதுக்குக் கேட்கிறேன்னா, கண்டவங்கல்லாம் வர்றாங்க. நானும் இரக்கப்பட்டு ஏதோ செய்யறேன். கடைசியில என் பேரை ரிப்பேராக்கிடுறாங்க."

"நீங்க கவலையே படவேண்டாம் ஸார். இவள் ரொம்ப நல்லவள். அதனால்தான் நான் லவ்-மேரேஜ் பண்ணிக்கிட்டேன்."

"அந்தச் செக்‌ஷன் ஆபீசர் பணந்தின்னி. ஒரு ரெண்டாயிரமாவது போடணுங்றான்."

"ஸார், ஹஸ்பெண்டுக்கும் வேலையில்ல; ஒய்புக்கும் வேலையில்லே; எப்படி ஸார் பணம் போடறது?" என்றான் கணவன்.

பிரபாகர் சிறிது யோசித்தார். பிறகு, "ஆல்ரைட். சாயங்காலம் வாங்க, யோசிக்கலாம்" என்றார்.

கையாள் குறுக்கிட்டான்.

"ஸார், உங்களுக்கு நேரமாயிட்டது. இந்நேரம் அந்தச் சிலையை நீங்க திறந்து வச்சிருக்கணும்."

தம்பதியர் எழுந்தார்கள். "அப்போ, சாயங்காலம் வரட்டுமா?"

"வாங்க, நீங்க வரணுமின்னு அவசியமில்ல. வேலை இருந்தா போங்க. ஒங்க மனைவி மட்டும் வந்தாக்கூடப் போதும். அவங்க சாயங்காலம் வரட்டும். நான் கவனிச்சுக்கிறேன்."

மாலை வந்தது. மங்கை இன்னும் வரவில்லை. பிரமுகர் பிரபாகர் தவியாய்த் தவித்தார். ஒருவேளை வராமல் போயிடுவாளோ? காலையிலேயே எங்கேயாவது கொண்டு போயிருக்கணும்.

பிரபாகர், ஜன்னல் வழியாகக் கழுத்தை நீட்டி நீட்டி அலுத்துப்போன சமயத்தில், அவள் வந்தாள். தலையை மறைக்கும் மல்லிகைப் பூ. 'பார்த்துக் கொண்டே இருக்கலாம்' என்று

தூண்டுமளவுக்கு அலங்காரம். பிரபாகர் நெளிந்தார்; ஸில்க் ஜிப்பாவைத் தடவிக் கொண்டார்.

"வாம்மா வா, உட்காரு."

"அதிக நேரமா காத்திருந்தீங்களா ஸார்?"

"நோ, நோ. இப்பத்தான் ஒருவருக்குப் பொன்னாடை போர்த்திட்டு வந்தேன். நீ வந்திட்டுப் போயிட்டியோன்னு நினைச்சேன்."

"ஸார், ஜாயின்ட் அக்கௌண்ட்ல போடப் பணம் இல்லே ஸார்."

"நாமதான் ஜாயிண்ட் ஆயிட்டோமே, அக்கௌண்ட் எதுக்கு? மினிஸ்டர் லெவல்ல போயி முடிச்சிட மாட்டேனா?"

"நீங்க தயவு வைக்கணும் ஸார்."

"தயவு வைக்காமலா வரச் சொன்னேன்? பூ வாசனை பிரமாதமாய் இருக்கே. உன் தலையில் இருக்கிறதினால வாசனை அதிகமுன்னு நினைக்கிறேன்."

*பிரபாகர்* 'இறையனார் அகப்பொருள் ஆராய்ச்சியில்' இறங்கிவிட்டு, அவள் தலையில் இருந்த பூ மொத்தையில் ஓர் இதழை எடுத்தார். அப்படி எடுக்கையில் அவர் கை, அவள் தலையை அழுத்தியது. அவள் *சிரித்தாள்*. *அவருக்கு 'ஊக்கம்' அளித்தது* போல் உணர்ந்தார்.

"உன் மோதிரம் நல்லா இருக்கே. கழட்டு பார்க்கலாம்."

"கழட்ட முடியலை சார்!"

"நான் கழட்றேன்."

பிரபாகர், அவள் கையைப் பிடித்து, மோதிரத்தைக் கழற்றும் சாக்கில், அவள் கைக்கு 'மசாஜ்' செய்தார். அவள் கையைத் தன் பக்கமாக இழுத்து அவளைச் சரித்தார். அவ்வளவுதான்.

அவள் விசுவரூபம் எடுத்தாள்.

"யோவ், உன்னை நம்பி வேலைக்குன்னு வந்தா, நீ வேலை கொடுக்கிற லட்சணமா இது? அயோக்ய ராஸ்கல்."

பிரபாகருக்கு விரகதாபம் அதிகமாகிவிட்டதால், அவள் சொன்னது, மேலும் அவர் தாபத்தைக் கூட்டியது.

"சரிதாண்டி நிறுத்துடி. நீ என்ன பாப்பாவா? கையைக் கொடுத்திட்டு இப்போ கத்துறியே?"

பிரபாகர், அவளை மேலும் சரித்தார். அவள் கூச்சலிட்டாள்.

"ஐயையோ! இந்த அநியாயத்தைக் கேட்க யாரும் இல்லியா? இல்லியா? ஐயையோ!"

அவள் அலங்கோலமாகிற சமயம், திடீரென்று ஒருவன் உள்ளே வந்தான். இப்போது, பிரபாகர் அலங்கோலமாக விழுந்தார். தலையில் இரண்டு குத்தும், கழுத்தில் ஒரு வெட்டும் விழுந்ததால், அவரால் எழுந்திருக்க முடியவில்லை.

அவள் கணவன் பயங்கரமாகச் சிரித்தான்.

பிரபாகர், தள்ளாடி எழுந்து கொண்டே, ஏதோ சொல்வதற்கு வாயைத் திறந்தார். அவர் வாய், ஒரு முரடான முஷ்டியை விழுங்குவது போல் விரிந்து, பிறகு ரத்தத்தைக் கொட்டியது.

"அயோக்ய ராஸ்கல்! பொண்ணுக்கிட்ட நடந்துக்கிற முறையா இது?"

பிரபாகர் கும்பிட்டார்:

"உன் மனைவிகிட்ட நடந்துக் கிட்ட விதம் தப்புத்தாம்பா. தயவு செய்து மன்னிச்சிப்பிடு."

"உனக்கு மன்னிப்பா? கிடையாது."

"அப்படிச் சொல்லக் கூடாது."

"உன்னை மன்னிக்கணும்னா நீ ஒரு காரியம் பண்ணணும்."

"நீ என்ன சொன்னாலும் கட்டுப்படறேன். எவ்வளவு ரூபான்னாலும் தர்றேன்."

கணவன் எகிறினான்.

"உன் ரூபாயைக் குப்பைத் தொட்டிலே போடுய்யா. நீ எனக்கு வேற காரியம் பண்ணணும்."

"சொல்லு, சத்தியமாச் செய்யறேன்."

"நீ எனக்கு ஒரு வேலை வாங்கித் தரணும்."

"ஐயையோ! எதை வேணுமான்னாலும் கேளு. வேலை மட்டும் கேட்காதே. சத்தியமா யாரையும் தெரியாது."

"என்னய்யா காது குத்தறே? டெலிபோன்ல யார் யார் கிட்டல்லாமோ பேசறே?"

"ஐயோ! உனக்கு விஷயம் தெரியாது. என் டெலிபோன் நம்பரை நானே சுழற்றி, அப்படிப் பேசுவேன்."

"அன்னிக்கு ஒருவன் வேலை கிடைச்சதுக்காக ஆறடி மாலையை, உன் எருமைக் கழுத்தில் போட்டான்."

"உனக்கு விஷயம் தெரியாது. மூலிகை விக்கிறவன் தன் ஆளையே வச்சி, மருந்து வாங்கச் சொல்றது மாதிரி என் ஆளே, எனக்கு வந்து மாலை போட்டுட்டுப் போவான். வியாபார தந்திரம்."

மங்கை குறுக்கிட்டாள்.

'யோவ், முந்தாநாள் ஒரு பையன் உன்னால் வேலை கிடைச்சிட்டதாக எங்ககிட்டச் சொன்னானே?"

பிரபாகர், அவளைப் பார்க்காமலே, கணவனைப் பார்த்துப் பேசினார். காரணம், வலி இன்னும் தீரவில்லை.

"நான் சொல்றதை நம்புப்பா. வர்றவங்ககிட்ட ஜாயின்ட் அக்கௌண்ட் போட்டுக்கிடுவேன். எவனுக்காவது தற்செயலா வேலை கிடைக்கலாம். மதிப்பு எனக்குத்தான்; பணமும் வந்துடும். அப்படிப் பார்க்காதே. நான் செய்றது தப்புத்தான். உன் ஒய்ப்கிட்ட தப்பா நடந்தது தப்புத்தான்."

கணவன் சிரித்தான்.

"இந்தா பாருய்யா, இவள் என் ஒய்பே இல்லே. உன்னை மாட்ட வைக்கிறதுக்காக எனக்கு ஒத்தாசை செய்தாள். சரி, அதெல்லாம் உனக்கு எதுக்கு? நீ பேசியது எல்லாம் டேப் ரிக்கார்ட்ல இருக்கு. மரியாதையா எனக்கு வேலை வாங்கிக் கொடு. இல்ல, டேப்பு கோர்ட்டுக்குப் போகும். என் கை உன் உடம்பைப் பதம் பார்க்கும். என்ன சொல்றே?"

"ஐயையோ! தயவு செய்து வேலை மட்டும் கேட்காதே. நிஜமா எவனையும் எனக்குத் தெரியாது."

"அந்தக் கதையே வேண்டாம். என் குவாலிபிகேஷன் எஸ்.எஸ்.எல்.சி. பெயிலு. எக்ஸ்பீரியன்ஸ். ஆட்களை உதைக்கிறது. ரெபரன்ஸ். ஜி.எச் ஹாஸ்பிட்டல்ல, தங்கசாமின்னு ஒருவன் கால் ஒடிஞ்சி கிடக்கறான் ஸ்டான்லிலே ஒருத்தன் பல்வலியால் துடிக்கிறான். வேணுமுன்னா கேட்டுக்க. மரியாதையா ஒரு வேலை வாங்கிக் கொடுக்கலே...."

"என்கிட்ட இல்லியே. நீயே மிரட்டினா நான் யார்கிட்ட போவேன்?"

பிரபாகர் அழாக் குறையாகப் பேசினான். 'ஹஸ்பெண்ட் யோசித்தான். பிறகு அவருக்கு ஒரு யோசனை சொன்னான்.

"வேற வேலை கிடைக்கிறவரைக்கும் என்னையும் உன் உதவியாளாப் போட்டுக்கோ. பிஸினஸையும் நடத்து."

"எனக்கு ஏற்கனவே ஒருத்தன் இருக்கான். அவனும் உதைச்சா உடம்பு தாங்காது."

"அவன் அற்புதமா உதைப்பான். நான் இப்பவே உதைப்பேனே. இந்தா பாரு, இதுதான் கடைசியாச் சொல்றது. நான் உனக்குப் 'பஸ்ட்' அஸிஸ்டெண்டா இருக்கேன். அவன் 'செகண்ட்' அஸிஸ்டெண்டா இருக்கட்டும். யோசிக்காதே. இவளிடம் தப்பா நடக்கிறதுக்கு முன்னால் யோசித்திருக்கணும். சீக்கிரமாச் சொல்லு. எட்டு மணிக்கு ஒரு 'என்கேஜ்மெண்ட்' இருக்கு."

பிரமுகர் பிரபாகர், வேறு வழியில்லாமல் அவனை முதல் உதவியாளர்கச் சேர்த்துக் கொண்டு, 'சமூக சேவை' செய்து வருகிறார். என்றாலும், அவனுக்கு வேறு ஒரு வேலை வாங்கிக் கொடுத்து, அவனிடமிருந்து கழற்றிக் கொள்வதற்காக, நிஜமாகவே பல பிரமுகர்களின் கைகால்களைப் பிடித்து வருகிறார். அதற்காகப் பேங்கில் 'ஜாயின்ட் அக்கௌண்ட்டி'ல் பணம் போடவும் அவர் தயாராக இருக்கிறார்.

# குற்றம் பார்க்கில்....

"என்ன பொண்ணுடி நீ! இதுக்குள்ளே 'பிராக்கை' ச் சுவர்ல தேய்த்து நாசம் பண்ணிட்டியா?" என்று சொல்லிக் கொண்டே விமலா, தன் மகள் நளினாவின் கன்னத்திலும் முதுகிலும் பளார் பளாரென்று 'மத்தளம்' கொட்டினாள். நளினா சுவரில் பிராக்கைத் தேய்த்தபோது, விமலா வீட்டைப் பெருக்கிக் கொண்டிருந்தாள். துடைப்பத்தைப் போட்டுவிட்டு, அதே கையோடு மகளுக்குச் 'செமத்தை'யாகக் கொடுத்தாள். நளினாவின் பிராக் மேலும் அழுக்கானது அதுவரை ஓரளவு உற்சாகமாக இருந்த நளினா, மலங்க விழித்தாள். மனோதத்துவ முறையில் சொல்லப் போனால், நிர்மலமாகப் பார்த்தாள் அவள் கண்கள், எதற்கும் எட்டாத தொலை தூரத்தைத் துழாவித் தோல்வி யுற்றவை போல் காட்சியளித்தன. நளினாவுக்கு ஒன்பது வயது. 'டிராய்ல்' எடுக்கப்பட்டுத் தைத்த உடைபோலக் கச்சிதமாக இருந்தாள்.

நளினா, எவ்வித மாறுதலும் காட்டாமல் இருப்பதைக் கண்ட விமலாவுக்கு மேலும் எரிச்சல் வந்தது "அதுக்குள்ள கண் மையை நெத்தியில் தேய்ச்சிட்டியா" என்று நெற்றியில் ஒரு தட்டுத் தட்டினாள். அந்தக் குழந்தை, அம்மா 'டிரஸ்' செய்வதையும் உணவூட்டுவதையும் எப்படிக் கடமையாகச் செய்கிறாளோ, அதே போல் அடிப்பதும் அவளுடைய கடமை என்று நினைத்துச் சர்வ சாதாரணமாக நின்று கொண்டிருந்தது. பள்ளிக்கு அழைத்துக் கொண்டு போக ஆயா வந்துவிட்டாள் விமலா அவசர அவசரமாக மகளுக்குப் பூட்ஸ்களை மாட்டினாள். "காலில் ஏண்டி இவ்வளவு அழுக்கு?" என்று கேட்டுக் குதிகாலில் ஒரு கிள்ளுக் கிள்ளினாள். பிறகு புத்தகங்களைப் பார்வையிட்டாள். கணக்குப் புத்தகத்தில் கணக்கில்லாத கிறுக்கல்கள்: சரித்திரப் புத்தகத்தின் அட்டையைக் காணவில்லை. விமலாவுக்கு ஆத்திரம் அதிகமாகியது. "தரித்திரம்...உனக்கு எத்தனை தடவைடி சொல்றது? இதைக்கூட ஒழுங்கா வைக்கத் தெரியாத உதவாக்கரைச் சனியனுக்கு ஒன்பது வயசாகுது. அஞ்சு வயசுப் பெண்ணுக்கு இருக்கிற அறிவுகூட இல்லை" என்று மகளைப் பார்த்தும், ஆயாவைப் பார்த்தும் சொல்லிக்

கொண்டே, நளினா ஒரு யோகியைப் போல், ஆயாவைப் பார்த்தாள். நளினா, 'உதைப் படலத்தை'ச் சர்வ சாதாரணமாக எடுத்துக் கொண்டாலும் ஆயாவால் அப்படி எடுத்துக் கொள்ள முடியவில்லை; அவள் இன்னும் பல வீடுகளுக்குப் போக வேண்டுமே!

"நல்ல பொண்ணு, ஏம்மா இப்படிச் சொல்றீங்க?" கேட்டுக் கொண்டே, ஆயா நளினாவுடன் வெளியேறினாள். வாசல் வரைக்கும் வந்த விமலா பொருமினாள்.

பக்கத்து வீட்டுப் பிள்ளைகள் மம்மிகளுக்கு "டாட்டா" "பைபை" என்று சொல்லிக் கொண்டே போகிறார்கள். ஆனால், நளினா அம்மாவுக்கு "டாட்டா" சொல்வது இருக்கட்டும்; திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

விமலாவுக்கு ஆத்திரம் அழுகையானது. 'இந்தப் பொண்ணுக்கு எப்போ புத்தி வரப்போவுதோ? லேசாகக் கையை ஆட்டி 'போயிட்டு வர்றேம்மான்னு' சொல்ற புத்தியில்லியே! பக்கத்து வீட்டிலுந்தான் அந்தப் பையனை அடிக்கிறார்கள். ஆனால் அந்தப் பையன் ஸ்கூலுக்குப் போகும்போது, எவ்வளவு அழகாக அம்மாவுக்கு மட்டும் பட்டும் பதியாமலும் முத்தம் கொடுத்துவிட்டுப் போகிறான்!'

வாசலில் இருந்து திரும்பி வந்த விமலா, கதவைத் தாழிட்டுவிட்டு ஹாலில் மாட்டியிருந்த கணவனின் போட்டோவிற்கு எதிரே வந்து நின்றாள். கண்ணீரை அவளால் கட்டுப்படுத்த முடியவில்லை. விம்மி விம்மி அழுதாள். 1965 ஆம் ஆண்டில் நடைபெற்ற பாரத பாகிஸ்தான் போரில் அவள் கணவன் வீரமரணம் எய்திய பிறகு, அந்தப் போட்டோவைப் பார்த்துப் பார்த்தே, அவள் கண்ணீரால் கன்னத்தைச் சுத்தி செய்வது வழக்கம். எமர்ஜென்ஸி கமிஷன் ஆபீசராக ராணுவத்தில் சேர்ந்த தன் கணவன் 'யூனிஃபாரத்தோடு' 'லெப்ட் ரைட்' போட்டுக் கொண்டே வீட்டுக்கு வருவான் என்று கற்பனையில் திளைத்துக் கொண்டிருந்த அவளுக்கு, வெறும் சீருடைகளே பார்சலில் வந்தன

விமலாவுக்கு, இருபத்தொன்பது வயசிருக்கும். அழகாக இருப்பாள். ஆனால், கவர்ச்சியாக இருக்கமாட்டாள் அப்படிப் பார்க்கவும் மாட்டாள்; பழகவும் மாட்டாள். கணவனின் பெற்றோர்கள் கொடுத்த வீட்டில், தாய் தந்தையர் தாராளமாகக் கொடுத்த பணத்தைப் பேங்க்கில் போட்டு, ஓரளவு வசதியாக

வாழும் அவளுடைய இளமை, இன்னும் செழிப்பாக இருந்தாலும், அவள் அடக்கமாகவும், எளிமையாகவும் பழகியதால் அவளைப் பற்றி உற்றார் உறவினர்கூட இதுவரை 'கசமுசா' என்று பேசியது இல்லை.

கட்டுக் குலையாத இருபத்து மூன்று வயசு வாலிப உருவைத் தாங்கிய பொலிவு பெற்ற அந்தப் போட்டோவின் முன்னால், கண்ணீர் விட்டுக் கொண்டிருந்த விமலா, மணி ஒலி கேட்டு, முன்றானையால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே, கதவைத் திறந்தாள். "வாங்க....வாங்க! இப்போதான் வழி தெரிஞ்சுதா?" என்று கேட்டுக் கொண்டே வந்தவர்களை வரவேற்றாள். வந்திருந்த அவள் கணவனின் சித்தியும், அவள் மகள் ரேணுகாவும் நாற்காலியில் அமர்ந்தார்கள்

"என்ன விமலா, ஒரு மாதிரியா இருக்கே?" என்று கேட்டாள் அந்த அம்மாள். "பேபி ஸ்கூலுக்குப் போயிட்டாளா?" என்று ரேணுகாவும் தொடர்ந்து கேட்டதால் விமலா இரண்டுக்குமே பதில் சொல்லாமல் லேசாகச் சிரித்தாள்.

"என்ன அண்ணி! கண்ணு சிவந்திருக்கு? டாக்டர் கிட்டே டெஸ்ட் பண்ணிக்கக் கூடாது?" என்றாள் ரேணுகா. அவள் மருத்துவக் கல்லூரியில் எம்.பி.பி.எஸ். படித்துக் கொண்டிருப்பவள். ரேணுகா அப்படிச் சொல்லும்போது, விமலா கணவனின் போட்டோவைப் பார்ப்பதை அத்தைக்காரி புரிந்துகொண்டு ஆறுதல் சொல்லவும் தொடங்கினாள்.

"எப்போ பார்த்தாலும் அவனையே நினைச்சிக் கிட்டிருந்தா எப்படி? என்ன செய்யறது? நீ கொடுத்து வச்சது அவ்வளவுதான். பாழாப்போன பகவான் உன்கிட்ட வந்து சோதிச்சிட்டான். நீ ஏம்மா அழறே? அழாதே, அழாதே!"

அத்தை மேற்கொண்டு பேச முடியாமல் 'அழாதே அழாதே' என்று சொல்லிக் கொண்டே தான் அழுதாள். இதைப் பார்த்ததும் விமலா உள்ளங்கையில் நெற்றியைப் புதைத்துக் கொண்டு, குலுங்கிக் குலுங்கி அழுதாள். அத்தையம்மா, தன்னைச் சரிப்படுத்திக் கொண்டு, "அசடே, ஏன் அழறே? நாம மட்டும் இந்த உலகத்தில் நிரந்தரமாவா இருக்கப் போகிறோம்? அவன் முன்னால போனான், நாம் பின்னால் போகப் போறோம். உன் குணத்துக்கு இப்படி நடக்க வேண்டாம். போனதுதான் போனான் கண் தெரியாத

காட்டிலேயா சாகணும்? குண்டு பட்டா சாகணும்? என் பிள்ளை குண்டு விழுந்து எப்படித் துடிச்சானோ, எப்படிச் செத்தானோ, நீ ஏம்மா அழறே? அழாதே! அழாதே!"

இப்போது விமலாவால் சத்தம் போட்டு அழாமல் இருக்க முடியவில்லை. "சில வீடுகளில் நடக்கிறமாதிரி அவர் கோபத்தில் அடித்திருந்தால் கூட மனசு தேறியிருப்பேன் அத்தே. ஒரு நாள் கூடச் சத்தமாப் பேசமாட்டாரு. நான்தான் சில சமயம் சத்தம் போடுவேன் அப்போது கூடச் சிரிப்பார். என் கண் கலங்கினா அவரு கண்ணும் கலங்கிவிடும். அவரு காலிங் பெல்லை அடிச்சதும் கதவைத் திறப்பேன்: கை நிறைய மல்லிகைப்பூ வாசனை எப்படி அடிக்கும்! என் வாழ்க்கை வாசனை இல்லாமல் போயிட்டுதே அத்தே! நான் தான் எப்படியோ போறேன். நளினா கூட மூளைக் கோளாறு உள்ளவள் மாதிரி நடந்துக்கிறாள். என் விதியை யார் கிட்டே அத்தே சொல்றது?" என்று புலம்பினாள்.

ரேணுகாவுக்கு மனம் என்னவோ போலிருந்தது. வறட்சியில் பாதிக்கப்பட்ட குழந்தைகள் படத்தைப் பார்த்தபோது ஏற்பட்ட இனம் புரியாத வேதனை மீண்டும் அவளுக்கு ஏற்பட்டது. என்றாலும் விமலாவை ஒரு நோயாளியாகக் கற்பனை செய்து கொண்டு, "அண்ணி எனக்குப் பசிக்குது ஏதாவது சாப்பிடக் கொண்டு வாங்க" என்று பேசி ஒரே பேச்சில் இரண்டு காரியங்களை நிறைவேற்றிக் கொண்டாள்.

அத்தையும் ரேணுகாவும் சாவகாசமாக மாலைவரை தங்கி இருந்தார்கள் அவர்கள் புறப்படுகிற சமயத்தில் கான்வென்டில் இருந்து நளினா உற்சாகத்தோடு வந்தாள். "எப்போ பாட்டி வந்தீங்க?" என்று கேட்டபடி, பாட்டியம்மாளின் நாற்காலியில் செல்லமாகச் சாய்ந்தாள்: விமலாவுக்கு உடம்பெல்லாம் எரிந்தது. ஒரு நாள்கூட, பெற்ற தாயான அவளிடம் நளினா இவ்வளவு அன்போடு நடந்தது கிடையாது. திருட்டுக் கழுதை!

"பாட்டி! நீங்க எப்போ வந்தாலும் ஒண்ணும் வாங்கிட்டு வர்றது கிடையாது, புரசைவாக்கம் மாமா வரும்போதெல்லாம் பாக்கெட் பாக்கெட்டாய்ச் சாக்லெட் வாங்கி வருவாரு."

நளினாவின் விமரிசனம் கேட்டு அத்தை திடுக்கிட்டாள். அவள், ஒரு நாள் கூட நளினாவுக்கு எதுவும் வாங்கி வந்தது இல்லை என்பது உண்மை. அந்த உண்மை அவளைச் சுட்டது. என்ன

பதில் சொல்வது என்று தெரியாமலே, 'நீயாவது சமாளியேன்' என்று கெஞ்சுவது போல் ரேணுகாவைப் பார்த்தாள்.

நளினா இப்படி அடாவடித்தனமாகப் பேசுவதைக் கேட்ட விமலா, "திருட்டுக் கழுதை! எவ்வளவு தின்னாலும் திருப்தி யில்லாத ஜென்மம். இதுக்கு வயிறே நிரம்பாது. எப்போ புத்தி வரப் போவுதோ?" என்று கடுகடுத்தபடி மகளைத் தன் பக்கம் இழுத்தாள். "பெரியவர்களைப் பார்த்து இனிமேல் அப்படிப் பேசமாட்டியே, மாட்டியே' என்று 'பளார் பளார்' என அறைந்துவிட்டாள். 'அத்தையும் ஒருநாள் கூட எதுவும் வாங்கிக்கிட்டு வரல்லியே' என்ற குற்ற உணர்வில் தவித்ததாலோ அல்லது 'வாயாடிப் பெண்ணுக்கு, இன்னும் வேணும்' என்று நினைத்ததாலோ, விமலா அடிப்பதைக் கண்டு கொள்ளவில்லை. அதுவரை அம்மாள் ஒன்றும் பேசாமல் இருந்த ரேணுகா, "என்ன அண்ணி, அவள் குழந்தைதானே?" என்று இரக்கம் மேலிட அண்ணியின் கைக்குள் கசங்கியும், நசுங்கியும் இருந்த நளினாவின் முடியை, சிரமப்பட்டுச் சிக்கெடுத்தபடியே விடுவித்தாள். நளினா விடவில்லை. மலங்க மலங்க விழித்துக் கொண்டு உதட்டைப் பிதுக்கினாள். உள்ளங்கை இரண்டையும் பின் கழுத்தில் வைத்துக் கொண்டு வெறித்துப் பார்த்தாள். அம்மா அடித்ததற்கான வெளிப்பாடு எதையும் காட்டிக் கொள்ளாமல், ஹாலைவிட்டு உள்ளறைக்குப் போய்விட்டாள்.

அத்தை பிராயச்சித்தம் செய்யத் தீர்மானித்தாள் "ரேணு, நாளைக்கு ஒன் பிரண்டோட பிறந்தநாள் விசேஷத்துக்கு நளினாவையும் கூட்டிக் கிட்டுப் போயேன்."

"நல்ல ஐடியா! அண்ணி, நாளைக்குச் சாயந்திரம் நளினாவுக்கு டீக்கா டிரஸ் செய்து வையுங்க; நான் ஆறு மணிக்குள்ளே வந்துடறேன்" என்றாள் ரேணுகா

விமலாவின் மௌனம் சம்மதம் கூறியது. அத்தையும் ரேணுகாவும் போய்விட்டார்கள்; நளினா கட்டிலில் தூங்கிக் கொண்டிருந்தாள். விமலா மகளைப் பார்த்துக் கொண்டே நின்றாள். கேள்வித்தாளில் இருப்பதை அப்படியே எழுதிவைத்துவிட்டு இதனால் இன்னும் இரண்டாவது வகுப்பிலேயே முடங்கிக் கிடக்கும் மகளின் எதிர்காலத்தை நினைத்த போது, அவளால் பயப்படாமல் இருக்க முடியவில்லை. மீண்டும் ஹாலுக்கு வந்து கணவன் படத்துக்கு ஓர் ஊதுபத்தியைக் கொளுத்திவிட்டுக் கண்ணீர்

விட்டாள். படத்திற்குக் கீழே உட்கார்ந்தவள் அப்படியே தூங்கி விட்டாள். மற்றவர்கள், விழிப்பதற்காகத் தூங்குவார்கள். அவளோ தூங்குவதற்காக விழிப்பவள்.

மறுநாள் மாலை ஆறு மணிக்கு முன்னதாகவே ரேணுகா வந்து விட்டாள். "அண்ணி! பேபி ரெடியா?" என்று அவள் வந்ததும் வராததுமாகக் கேட்டபோது, நளினா துள்ளிக் குதித்து அவள் கையைப் பிடித்தாள். விமலாவுக்குப் பயங்கரமான கோபம்

"ஏண்டி பறக்கிறே? திருட்டுக் கழுதைக்கு ஊர் சுத்தணுமுன்னாக் கொண்டாட்டம்" என்று மகளை உற்றுப் பார்த்தாள். "ஏண்டி, இதுக்குள்ளே தலையில கட்டின ரிப்பனை எடுத்திட்டியா?" என்று குட்டினாள்.

ரேணுகாவுக்கு என்னவோ போலிருந்தது. ஊர் சுற்றவேணுமென்றால் கொண்டாட்டம் என்று யாரைச் சொல்கிறாள்? அவள் சந்தேகம் வேறு ரூபத்தில் வெளியானது.

"அண்ணி, உங்களுக்குக் குழந்தையை வளர்க்கவே தெரியலே. இப்படியா குட்டுறது?"

"உனக்குக் கல்யாணம் நடந்து இந்தமாதிரி கோளாறு உள்ள குழந்தை பிறக்கட்டும். அப்புறந்தான், உன் குட்டுத் தெரியும்."

"ஊரு உலகத்திலே பிள்ளை பெத்தவங்க இல்ல; நீங்க மட்டுந்தானா?"

ரேணுகாவின் குத்தலான கேள்வி விமலாவின் நெஞ்சைக் குடைந்தது. அவள் குமுறினாள்.

"இருக்காங்க, கணவன்மாரோடு இருக்காங்க. இந்தத் தடிக்கழுதையை இன்னும் பத்து வருஷத்துலே ஒருத்தன் கையிலே பிடிச்சுக் கொடுக்கணும். இப்படி விவரமில்லாம இருந்தா எப்படி நடக்குமோ?"

"அண்ணி! எனக்குத் தெரிஞ்ச சைக்கியாட்ரிஸ்ட், அது தான் மனநல டாக்டர் இருக்காரு. நளினாவைக் காட்டுவோமா? மனோதத்துவ மருத்துவம் பார்ப்பது நல்லது அண்ணி!"

"என் பொண்ணுக்கு என்ன பைத்தியமா பிடிச்சிருக்கு?"

"பைத்தியக்காரங்கதான் மனோதத்துவ நிபுணரிடம்

போகணுன்னு அர்த்தமில்ல. யார் வேணுமுன்னாலும் போகலாம்."

"வேண்டாம்மா, ஊரே சிரிக்கும்."

"படிச்சிருந்தும் இப்படிப் பேசுறீங்களே! மனநோய், தலைவலி, வயிற்று வலி மாதிரி நம்மை அறியாமலே வருகிற நோய். மேதைகளுக்கெல்லாம் வரும்போது நாமெல்லாம் எந்த மூலை?"

"ஏதேது, இன்னும் கொஞ்ச நேரத்திலே எனக்குக்கூட மனநோய் இருக்குன்னு சொல்லுவே போலிருக்கே! இந்த சைக்கியாட்ரிஸ்ட் வம்பே வேண்டாம், பைத்தியம் பிடித்து முத்தட்டும், அப்புறம் பார்க்கலாம்."

விமலா சொல்லிவிட்டுச் சிரித்தாள். ரேணுகா சிரிக்கவில்லை. மனசுக்கு யோசனை கேட்கணுங்கறதைக் கேட்டுச் சிரிக்கிறதே ஒருவித மனநோய்தான்.

விமலாவுக்கு ஒரு சந்தேகம், ஒருவேளை தனக்கும் மனநோய் இருந்து அதனால்தான் சைக்கியாட்ரிஸ்ட்டிடம் போகத் தயங்குகிறாளோ? தனக்கு மனநோய் இல்லை என்று நிரூபிப்பவள் போல் "சரியம்மா, உன்பாடு நளினாபாடு, எப்படியோ போங்க" என்று சொல்லிவிட்டு ஜாக்கிரதையாகச் சிரித்தாள்

ரேணுகாவும், நளினாவும் பிறந்த நாள் விழாவுக்குப் போய்விட்டார்கள். தன் மகள் மூளைக்கோளாறு உள்ளவள் மாதிரி நடந்து கொள்கிறாளோ என்ற வேதனையில், விமலா கணவன் படத்திற்கு எதிரில் நின்று அதுவரை அடக்கியிருந்த அழுகையை விடுவித்தாள்.

ரேணுகா விமலாவையும் நளினாவையும் சைக்கியாட்ரிஸ்டிடம் கூட்டிக் கொண்டு போனாள். மனநல டாக்டர் என்றால் கிழவராக இருப்பார் என்று கற்பனை செய்திருந்த விமலாவுக்கு முப்பது வயது இளைஞரைப் பார்த்ததும் 'வந்திருக்க வேண்டாம்' என்பது போல் தோன்றியது. ரேணுகா சைக்கியாட்ரிஸ்ட்டைப் பார்த்து ஒரு புன்னகை செய்துவிட்டு, "நான் சொன்னது இவர்களைத் தான். பாவம் அண்ணி! அண்ணா பத்து வருஷத்துக்கு முன்னாலே யுத்தத்திலே இறந்துட்டாரு. அண்ணிக்கு அண்ணாமேல் உயிரு. எப்படித்தான் நாளைக் கழிக்கிறாளோ? போதாக் குறைக்கு இந்தப் பொண்ணு மைண்ட் சரியில்லே" என்றாள்.

பிறத்தியார் முன்னிலையில் அதுவும் ஒரு மனநல வைத்தியரிடம் பேசவேண்டிய அளவுக்குத் தன் நிலைமை வந்து விட்டதே என்ற எண்ணமே மனத்தை வாட்ட, விமலா பொங்கி வந்த கண்ணீரை விழிகளிலேயே தேக்கி வைத்தாள்.

சைக்கியாட்ரிஸ்ட் அறை விசாலமாக இருந்தது. ஓர் ஓரத்தில் ரப்பர் மெத்தை தாங்கிய கட்டில்; அதற்கு எதிரே சிறிய வட்டங்களை உள்ளடக்கிய பெரிய வட்டம் வரையப்பட்ட ஒரு போர்டு. பலவித வர்ணங்களால் அலங்கரிக்கப்பட்ட சுவர்கள், தூய வெண்மையான ஒருவித வேற்றுமைக்கு ஒற்றுமை கூட்டியது. விமலாவும், ரேணுகாவும் அந்த அறையைச் சுற்றிக் கண்களைச் சுழலவிட்டபோது நளினா கட்டிலருகே சென்று அதன்மேல் கையை வைத்துக் குத்தினாள். விமலாவுக்கு எரிச்சலுக்குமேல் எரிச்சல். "சனியனே! இங்கே வந்து உட்காருடி. தரித்திரத்துக்கு உடம்புதான் மிச்சம். மூளை கொஞ்சங்கூட இல்லை" என்று கடுகடுத்தாள். டாக்டரின் அறையைத் தன் வீடாக நினைத்து தன்னை மறந்து சொன்னதற்கு வருந்தித் தலை குனிந்தாள். இந்தத் தலைக் குனிவுக்குத் தன் மகள் தானே காரணம் என்று நினைத்தாள். நளினாவைப் பார்த்து முறைத்துக் கொண்டே நாக்கைக் கடித்துக் கொண்டாள். நளினா திரு திருவென்று விழிக்க, சைக்கியாட்ரிஸ்ட் உதட்டைக் கடித்தார்.

"ரேணு! நான் இவர்களிடம் தனியாய்ப் பேசணும்" என்று அவர் சொன்னதும் நாசூக்காக ரேணு அறையை விட்டு நகரத் தொடங்கினாள். நளினாவையும் அழைத்துக் கொண்டு போகும்படி அவர் சைகை செய்தார்.

விசாலமான அறையில் முன்பின் அறியாத இளைஞருடன் தனித்து விடப்பட்ட விமலா தவித்தாள். அதைப் புரிந்து கொண்ட சைக்கியாட்ரிஸ்ட் "தயவு செய்து என் கேள்விகளுக்கு ஒளிவு மறைவு இல்லாமல் பதில் சொல்லுங்கம்மா டாக்டரிடம் உடம்பு முழுவதையும் காட்ட வெட்கப்படக் கூடாது. அது போல் ஒரு சைக்கியாட்ரிஸ்டிடம் உள்ளத்தையும் திறந்து காட்டுறதில் தப்பில்லை" என்றார். விமலா அவரை ஆச்சரியத்தோடும், ஓரளவு எரிச்சலோடும் பார்த்தாள். சைக்கியாட்ரிஸ்ட் இளைஞர் சோதனையைத் தொடங்கினார்,

"உங்கள் கல்யாணம் காதல் கல்யாணமா?"

"காதலுன்னும் சொல்ல முடியாது, இல்லேன்னும் சொல்ல

முடியாது "

"அதாவது ஒருவரை ஒருவர் மானசீகமாக நேசிச்சிங்க; பெற்றவர்கள் புரிஞ்சிக்கிட்டுக் கல்யாணம் பண்ணி வச்சாங்க; அல்லது உங்க இருவருக்கும் திருமணம் நடக்கும் என்ற எண்ணமே உங்களுக்கிடையே ஒருவித அன்பை ஏற்படுத்தியது இல்லை?"

விமலாவுக்கு அந்த இளைஞன் மீது நம்பிக்கை பிறந்தது. "ஆமாம்" என்று தலையை ஆட்டினாள்.

"ஒங்க புருஷர் எப்போதாவது உங்களிடம் கோபமாய் நடந்திருக்கிறாரா?"

"ஒருநாள் கூடக் கிடையாது."

"தாம்பத்திய வாழ்க்கையில்?..."

"குறை கூற இடமில்லை."

"ஐ ஸீ! அவரு எதுக்காக ராணுவத்தில் சேர்ந்தாரு?"

"அவருக்கு வேலை கிடைக்குமுன்னாலேயே திருமணம் ஆயிட்டுது அதுவரைக்கும் அவருக்குப் 'பாக்கெட்மணி' கொடுத்த பெற்றோர்கள் கொஞ்சம் அலட்சியமாக நடந்துகிட்டாங்க. என்னையும் மதிப்புக் குறைவா எண்ணினாங்க. எப்படியாவது ஒரு வேலையில் சேர்ந்திடணுமுன்னு அவரு பல ஆபீஸ்களுக்கு நடந்தாரு. ஆனால்..."

"கிடைக்கலே. எமர்ஜென்ஸி ரெக்ரூட்மெண்ட் வந்ததும் சேர்ந்துட்டாரு."

"கரெக்ட்."

"அவரு ராணுவத்திலே சேரும்போது உங்களுக்கு திருமணமாகி எத்தனை மாதம்? குழந்தை பிறந்திருந்ததா?"

"ஒண்ணே கால் வருஷம், நான் எட்டு மாதக் கர்ப்பம்."

"அவரை ராணுவத்தில் சேர வேண்டாமுன்னு நீங்க தடுக்கலியா?" வினாவை எழுப்பிய டாக்டர் விமலாவின் முகத்தைக் கூர்ந்து கவனித்தார்.

"எவ்வளவோ சொன்னேன் வழக்கத்துக்கு விரோதமாய்

இருந்திட்டாரு. அவரு போகும்போது என் கையால் உணவு கொடுக்காத பாவியாயிட்டேன்."

"அதாவது, அவர் மேல் இருந்த கோபத்துல சமைக்காமல் இருந்திட்டிங்க."

விமலா விக்கி விக்கி அழுதாள். அவள் அழுது முடியட்டும் என்று நிதானமாகக் காத்திருந்து விட்டு சைக்கியாட்ரிஸ்ட் மீண்டும் கேட்டார்.

"போகட்டும்! இப்போதான் நாம் உண்மைகிட்ட நெருங்கி வந்து கொண்டிருக்கிறோம். நான் உங்க சகோதரர் மாதிரி. எட்டுமாத கர்ப்பிணி மனைவியை விட்டுப் போறவரு ஒரு புருஷனா என்று நினைத்ததோடு, வேறு யாரையாவது கல்யாணம் பண்ணியிருக்கலாமே என்று உங்களுக்குத் தோன்றியதா?" என்ற வினாவைக் கேட்டு விமலா திகைத்துப் போனாள்

"உங்களுக்கு எப்படி இது தெரியும்?"

"எப்படியோ. உங்க பொண்ணு ஒழுங்கா ஆகணுமுன்னா, உண்மையைச் சொல்லிடுங்க. இன்னாரைக் கட்டியிருக்கலாமுன்னு யாரையாவது நினைச்சீங்களா?"

"காலேஜில் என்னையே ஒருவன் சுற்றிச் சுற்றி வந்தான். ஆனால், நான் லட்சியம் பண்ணலே!"

"உங்கள் கணவர் ராணுவத்தில் சேர்ந்ததும், 'காலேஜ் பையனைக் கட்டியிருக்கலாமே! போயும் போயும் இரக்கமில்லாத ஒருவரைக் கட்டினோமே'ன்னு வருத்தப்பட்டீங்க இல்லையா?"

விமலா மௌனமாகத் தலை குனிந்தாள். டாக்டர் விமலாவின் நிலைமையை உணர்ந்து பேச்சைத் தொடர்ந்தார்;

"சும்மா சொல்லுங்க."

"அந்தப் பையனை மனத்தில் நினைத்தது உண்மைதான். ஆனால், நளினா பிறந்த பிறகு அவனைப் பற்றிய சிந்தனை அடிக்கடி வரலே. இப்போ என் லட்சியம் எல்லாம் என் மகள் நல்ல நிலையில் வாழணும் என்பதுதான். ஆனால், அவளும் மனக் கோளாறு உள்ளவளாய் இருக்கிறாள்."

"கோளாறு உங்ககிட்டதான் இருக்கு குழந்தை

சாதாரணமாய்த்தான் இருக்கிறாள்."

"ஸார்?"

"எஸ் மேடம். கணவர்மேலே உங்க மனத்தின் அடித்தளத்திலே இருந்த கோபம், கொஞ்சம் கொஞ்சமாக வெறுப்பாகி, தங்கிட்டு, நளினாவைப் பார்க்கும் போதெல்லாம் மனைவியை அநாதையாய் விட்டுட்டுப் போனவருடைய மகள் தானேன்னு உங்களை அறியாமலே, வெறுக்கிறீங்க. இந்த வெறுப்பை, உங்கள் வெளி மனமும் இயல்பான தாய்மையும் அங்கீகரிக்கத் தயாராய் இல்லே. அதனால் அடிமனத்தில் குழந்தையைத் திருத்தணுங்கற பாசாங்கு உணர்வாக வெளிவருது. இது நின்றால் நளினா சீராக வளர முடியும்."

"அப்படீன்னா நான் குழந்தையை வெறுக்கிறேன் என்கிறீர்களா?"

"நிச்சயமாக. ஆனால் வேணுமுன்னு வெறுக்கலே. அடி மன உணர்வு, சந்தர்ப்பக் கோளாறால் வந்துட்டுது இதனால், எந்தச் சராசரி சின்னப் பொண்ணும் செய்யக்கூடிய காரியங்களை நளினா செய்ததும் உங்க வெறுப்பு குற்றம் கண்டு பிடிக்கும் போலீசாகவும், அவற்றைத் தண்டிக்கும் நீதிபதியாகவும் போலி உருவங்களோடு வெளி வருகிறது."

விமலா கையைப் பிசைந்தாள்

"வருத்தப்படாதீங்க. இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் எந்தப் பொண்ணும் உங்களை மாதிரியே நடந்துக்குவாள். ஆனால், ஒன்று. உங்கள் கணவர், தம் சுயமரியாதையைவிட, உங்க சுயமரியாதையைப் பெரிசா நினைத்திருக்காரு பெற்றோர்கள் உங்களை 'இன்சல்ட்' செய்தவுடன், அவர் தாம் உழைக்கிற பணத்தில்தான் நீங்க சாப்பிடணுமுன்னு ஆசைப்பட்டிருக்காரு. சுகபோகமாய் வாழ்ந்த அவர், ராணுவத்தில் சேரக் காரணமே அவர் உங்கள் மீது வைத்திருந்த அன்புதான்"

"இப்போ புரியுது ஸார் நான்தான் புரிஞ்சுக்காத பாவியாய் இருந்திட்டேன்"

"கழிவிரக்கம் தேவையில்லை. அந்த உணர்வே வேண்டாம். அபாயமானது இந்த மாதிரி அசாதாரண நிலைமை வருவது

சகஜந்தான் உங்கள் கணவர், உங்களுக்காகவே உயிர் விட்டதை நினைச்சுப் பாருங்க! உங்களிடம் எப்படியெல்லாம் அன்பைக் கொட்டி நடந்து கொண்டார் என்பதைச் சிந்தியுங்கள் தூங்கப் போகும் போதெல்லாம் என் கணவர் என் மீது வைத்திருந்த பாசத்தாலேயே ராணுவத்தில் சேர்ந்தார் என்று திரும்பத் திரும்ப மனத்தில் சொல்லிக் கொள்ளுங்கள் இந்தச் சுயசிந்தனை அடி மனத்தில் இருக்கிற வெறுப்பை நீக்கிடும் அப்படியும் உங்க பொண்ணு திருந்தாவிட்டால் என்னிடம் வாங்க மெஸ்மெரிக் டிரீட்மெண்ட் கொடுக்கிறேன் அந்த வசீகரமான முறை மருத்துவத்தில் குழந்தை திருந்திடுவாள் "

"மிக்க நன்றி ஸார் "

"குழந்தை திருந்திடுவாள்" என்ற அந்த இளைஞன் தனது குறையை நாசூக்காகச் சொன்னவிதம், விமலாவைப் பெரிதும் கவர்ந்தது. லேசாகச் சிரித்துக் கொண்டே பணத்தைக் கொடுத்துவிட்டு வெளியேறினாள்."

விமலா மீண்டும் சைக்கியாட்ரிஸ்ட்டிடம் வரவுமில்லை இப்போது நளினா மலங்க மலங்க விழிக்கவும் இல்லை

# ஒரு சந்தேகத்தின் நன்மை

காற்றில் சாய்ந்த வாழையைப் போல, அவள் சாய்ந்து கிடந்தாள். வகிடெடுத்த தலைமுடி, கைகளில் உடைந்து போன வளையல்கள். எந்தவிதக் கோரமும் இல்லை அலங்கோலம் இல்லாமல் அசந்து தூங்கியவள் போல் மீனாட்சியின் உடல் கிடந்தது.

வழக்கப்படி ஒப்பாரி' வைக்கும் கிழவிகள் கூட, வழக்கத்துக்குப் புறம்பான அந்தச் சாவைக் கண்டு அஞ்சியவர்கள் போல், மூலையில் சாய்ந்து உட்கார்ந்திருந்தார்கள். மீனாட்சியின் அம்மா மட்டும் "அட, கடவுளே! என்னைக் கொண்டுக்கிட்டு போயிருக்கக் கூடாதா? என் மவதானா கிடைச்சா?" என்று புலம்பிக் கொண்டிருந்தாள். ஒரே ஒரு பெண் மட்டும் மீனாட்சியின் காதோடு உரசிக் கொண்டிருந்த காலி டம்ளரை எடுத்து வைத்துக் கொண்டு, "கொலைகாரப் பாவிப்பய மவனே, நீ விளங்குவியாடா? உன் அக்கா தங்கச்சிக்கும் இந்த மாதிரி வராதா?" என்று கேவிக் கேவி அழுதாள்

வீட்டிற்கு வெளியே, ஆண்கள் திரண்டு நின்றார்கள். சிலர் வாதமடக்கி மரத்திலிருந்து பத்துப் பதினைந்து கம்புகளைச் செதுக்கி, குறுக்கும் நெடுக்குமாகப் போட்டு, மீனாட்சியின் கடைசிப் பயணத்துக்கு தயார் செய்து கொண்டிருந்தார்கள்

ஆம்பிள்ளைகள் கூட்டத்தில் அச்சந்தரும் நிசப்தம். எப்படி அவள் இறந்திருப்பாள் என்பதை, மீனாட்சியின் அண்ணன் உதிரமாடன் சொன்னதில் இருந்து, அவர்கள் புரிந்து கொண்டார்கள். என்றாலும், ஒவ்வொருவருக்கும் தெரிந்த அந்த ரகசியத்தை, அவர்களால் பகிர்ந்து கொள்ள முடியவில்லை. உதிரமாடன் மாட்டுத் தொழுவத்தில் கல்தூணில் தலையைச் சாய்த்துக் கொண்டு பித்துப் பிடித்தவன் போல் கிடந்தான்.

வெளியூர்க்கார சொந்தக்காரர் ஐயாசாமி, துஷ்டி கேட்பதற்காக வந்தார்.

"நேத்து தாய, வயக்காட்டில் பார்த்தேன். அடிச்சி கொன்னாக்கூட ஆறு மாசம் ஆகும்... எப்படி இறந்துட்டா?" என்றார் ஐயாசாமி.

கூட்டத்தில் ஒருவர் பதிலளித்தார்.

"மீனாட்சி, மூணு மாசமா இங்க இருக்காதது உமக்குத் தெரியுமல்லா...?"

"தெரியும். நான் தான் அவ புருஷனை முந்தா நாளுப் பாத்து சத்தம் போட்டேன். 'அப்பன் பேச்சைக் கேட்டுக்கிட்டு ஆடாதல; நகைப் பாக்கியை உதிரமாடன் போடாம போகமாட்டான்'னு புத்திமதி சொன்னேன். 'நாளைக்குப் போயி மீனாட்சிய கூட்டிக்கிட்டு வரப்போறேன், மாமா'ன்னு எங்கிட்ட அவன் சொன்னானே."

"அந்த அநியாயத்தை ஏன் கேக்கிறீரு? அவ புருஷன் நேத்து ராத்திரி வந்தான். ரெண்டு பேரும் ரொம்ப சந்தோஷமா இருந்திருக்காங்க. காலையில் ஒண்ணா காபி சாப்பிட்டிருக்காங்க. அவா காபி சாப்பிட்டவுடனே, அந்தப் பய பக்கத்து ஊருக்குப் போயிட்டு வந்துடுறேன், தயாராய் இரு'ன்னு சொல்லிட்டுப் போயிருக்கான். அரை மணி நேரத்துல செத்துட்டா. காபி டம்ளரை முகந்து பாத்தா, ஒரே வாடையாய் இருக்கு."

"நீர் சொல்றதைப் பார்த்தா..."

"சொல்றதைச் சொல்லிப்புட்டேன். புரிஞ்சிக்கிடும்."

"வே, அந்தப் பய, அப்பன் பேச்சைக் கேட்டு, அட்டியல் போடணும்னு சொல்லி, அவள இங்க விட்டுட்டுப் போறது எல்லாப் பயலுஞ் செய்யறதுதான். அதுக்காகக் கட்டின பெண்டாட்டிய கொல்லுவானா?"

"ஏன் மாட்டான்? அய்யா அட்டியல் கேக்குறார்னு சொல்லி இங்க அவளை விட்டது, சும்மா ஒரு சாக்கு. வேணுமுன்னு அந்தக் கிழவன சந்தியில இழுக்கிறான். அந்தப் பயலுக்கு நம்ம மீனாட்சி பிடிக்கலையாம்."

"ஏனாம்?"

"அந்தப் பய ஒரு சினிமாவை ஒன்பது தடவ பாப்பான்னு

ஓமக்குத் தெரியும். மீனாட்சி சினிமாக்காரிங்க மாதிரி ஸ்டைலா இல்லியாம். 'முன் கொசுவம்' வச்சிக் கட்டிக்க மாட்டேனுட்டாளாம். இப்போ பட்டணத்துல இருக்கிறவங்க போடுறதுகளே, பிராவோ, பருந்தோ அதை வாங்கிக் கொடுத்தானாம். அவள் அதைத் தூக்கி எறிஞ்சுட்டாளாம். அன்னைக்கே அந்தப் பொண்ண அடி அடின்னு அடிச்சு இங்க கொண்டு வந்து விட்டுட்டான். சும்மா வெளில மெய்க்கிறதுக்கு நகைப் பாக்கின்னு சொல்லுதான்."

"நீரு என்னதான் சொல்லும்...நாம் அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வந்திடக் கூடாது. விஷங்குடுத்து கொன்னுருப்பான்னு உடனே சொல்றது தப்பு."

"நீரு ஒண்ணு: ஆவுடையானூர்ல, சவுடையாங்குட்டம் வகையறாவுல போயி, இந்தப் பய, ஒரு பொண்ண கட்டிக் குடுக்கும்படி கேட்டிருக்கான். அதுக்கு அவங்க, 'ஒன் பெண்டாட்டி செத்தா போயிட்டா, எங்க பொண்ண குடுக்கிறதுக்குன்னு' சொல்லி இருக்காங்க."

"அதனால ரெண்டாவது கல்யாணம் பண்ணிக்கிறதுக்காக, மீனாட்சியை கொன்னுட்டான்னு சொல்றீரா? நீரு சொல்றபடி நடந்திருக்கலாம். ஆனால், இப்பவும் சொல்றேன். கண்ணால பாக்குதும் பொய்யி: காதால கேக்குதும் பொய்யி: தீர விசாரிக்கதே மெய்யி. விசாரிக்காம, நீங்க பாட்டுக்குப் பேசாதீங்க."

கல்தூணில் சாய்ந்து கொண்டிருந்த உதிரமாடன், சட்டென்று எழுந்து வீட்டுக்குள் போனான். இடங்கொள்ளாமல் இருந்த கூட்டத்திற்குள் இருந்து, அவன் தங்கையான பத்து வயதுச் சிறுமியை, பரபரவென்று இழுத்துக் கொண்டு வந்து கூட்டத்திற்கு மத்தியில் நிறுத்தினான். "தாத்தா, நீங்களே...இவள விசாரியுங்கோ" என்றான்.

ஐயாசாமி விசாரணையைத் துவக்கினார்:

"ஏய்... லச்சுமி, நடந்ததை நடந்தபடியாகச் சொல்லணும். நேத்து ஒன் அத்தான் எப்போ வந்தான்? சொல்லும்மா...அழாமச் சொல்லு."

"ராத்திரி எட்டு மணிக்கு."

"அக்கா என்ன சொன்னா?"

"அத்தானப் பாத்து 'இப்பதான் கண்ணு தெரிஞ்சதா'ன்னு சொல்லிட்டு, சுவர்ல தலையை வச்சி அழுதாள்.

"அப்போ, வீட்ல யாரும் இருந்தாங்களா?"

"நான் மட்டும்தான் இருந்தேன்."

"சரி, அக்கா அழுதிச்சில... ஒன் அத்தான் என்ன பண்ணுனான்?"

"அக்காவோட தோளப் போயி பிடுச்சி அவரு பக்கமாகத் திருப்பினாரு. அப்புறம்...அப்புறம்... அக்கா முகத்துல... அப்புறம்..."

"சரி போதும்! நீ அப்போ என்ன பண்ணுனே?"

"எங்க அக்கா, 'ராமசாமி மாமா சந்தைக்குப் போயிட்டு வந்திருக்காரான்னு பாத்துட்டு வான்னு' என்கிட்ட சொன்னா. அத்தான் பத்துப் பைசா குடுத்தாரு. நான் வெளில போயிட்டேன்."

"அப்புறம் நீ ராத்திரி சீக்கிரமா தூங்கிட்டியா?"

"இல்ல."

"ஏன்?"

"அத்தானும் அக்காவும் போட்ட சிரிப்புல என்னாலே தூங்க முடியலே."

"சரி, காலைலே அவங்க காபி சாப்பிடும்போது பாத்தியா?"

"நான் தான், கொண்டு போயி குடுத்தேன் அத்தான் 'நீ போ புள்ளே'ன்னு என்ன துரத்தினாரு."

"நீ போயிட்டியோ?"

"இல்ல."

"ஏன்?"

தயங்குகிறாள்.

"சொல்லுழா, வாய்க்குள்ளே கொழக்கட்டையா வச்சிருக்க?"

"நான் வெளியே போற மாதிரி போயி கதவு இடுக்குலே

நின்னேன்."

"எதுக்கு?"

"சும்மா."

"தோல உறிச்சுப்புடுவேன். எதுக்குக் கதவு இடுக்கிலே நின்ன?"

"அத்தான் அக்காள என்ன பண்ணுறார்னு பாக்கறத்துக்காக. ராமசாமி மாமா மவன் பாத்துட்டு வரச் சொன்னான். பத்துப் பைசா குடுக்கிறதாயும் சொன்னான்."

"அத்தான் என்ன பண்ணுனான்?"

"அக்காவோட வாயில காபி டம்ளரை வச்சாரு. உடனே அக்கா அதை எடுத்து அத்தான் வாயில் வச்சா..." சிறுமி சொல்ல முடியாமல் நிறுத்தினாள்."

"அத்தான் குடிச்சானா?"

"குடிக்கலே; அக்காளயே குடிக்கச் சொல்லிட்டு, அவள் கழுத்துல..."

"சரி, போவட்டும், காபி குடிக்கும்போது, அக்கா ஏதாவது சொன்னாளா?"

"கடைசி முடுக்க, கசக்குதுன்னு சொல்லித் துப்புனா."

"அத்தான் அப்போ என்ன பண்ணுனான்?"

"துண்ட எடுத்து, அக்கா வாயைத் துடைச்சாரு."

"அப்புறம்..."

"உடனே புறப்பட்டாரு. அக்கா அழுதாள். அதுக்கு-அவரு, 'நான் ஏமாத்த மாட்டேன். பக்கத்து ஊருக்குத் தான் போறேன். இன்னும் அரை மணிலே வந்திடுவேன். இன்னைக்கு முன்கொசுவம் வச்சி கட்டியிருக்கது மாதிரி இருக்கணும். பிடிக்கலன்னு சேலய அவுத்தியானா? நான் வந்து முன்கொசுவம் வச்சி கட்டுவேன்'னு சொல்லிட்டு வெளில வந்தாரு... அக்காளும் வெளில வந்தாள்."

"போகும்போது எதுவும் சொன்னானா?"

"ஏன் ஒரு மாதிரி இருக்க? எதுவும் பண்ணுதான்னு கேட்டாரு. அக்கா, 'லேசா தலை வலிக்குது'ன்னு சொன்னா. 'பேசாமப் படு...நான் வந்துடுறேன்'னு சொல்லிட்டுப் போனாரு.

"வேற எதுவும் சொன்னானா?"

"இல்லே."

"அவன் போகையில், திரும்பித் திரும்பிப் பார்த்தானா?"

"ஆமாம்! பாதித் தூரம் போனவரு, திரும்பி வந்து, 'உடம்புக்கு ஒண்ணுஞ் செய்யலியே'ன்னு கேட்டாரு. அதுக்கு அக்காள், 'ஒண்ணுமில்ல! நீங்க வரமாட்டியான்னு பயமா இருக்கு. .நான் முன்கொசுவத்தை அவுக்கல. நீங்க சொல்றது மாதிரி பவுடர் வேணுமுன்னாலும் பூசிக்கிடுறேன். சீக்கிரமா வந்துடுங்க'ன்னு சொன்னாள்."

"அப்புறம் என்ன நடந்தது?"

"கால்மணி நேரத்தில் அக்கா வாந்தி எடுக்கறது மாதிரி வாயப் பண்ணுனா. அப்புறம் கட்டுல்ல போயி, படுத்தாள். கையி, காலை வெட்டுனா. அம்மா வந்து, 'என்னம்மா பண்ணுது'ன்னு கேட்டா. அக்கா.. அந்த தம்ளரையே பாத்தா; அப்புறம் அதை எடுத்து சீலய வச்சி நல்லா துடைச்சா. என்னக் கூப்பிட்டு, அத்தான் வாறாரான்னு பாக்கும்படி சைகை காட்டினாள். நான் வெளில வந்தேன் அதுக்குள்ளே அம்மாவும் அண்ணாச்சியும் சத்தம் போட்டு அழுதாங்க "

ஐயாசாமி தாத்தா, தன் கண்களைத் துடைத்துக் கொண்டார். அதைப் பார்த்த கூட்டத்தில், ஒரு பரபரப்பு ஏற்பட்டது

"பழி வாங்காம விடக்கூடாது. அந்தப் பய இங்க வரத்தான் செய்யுவான். அவனையும் வெட்டி, அவளோடயே புதைக்கணும்."

ஐயாசாமி ஏதோ பேச வாயெடுத்தார் அதற்குள், கூட்டத்தில் ஒரு கொந்தளிப்பு. உதிரமாடன், ஆவேசம் வந்தவன் போல் வீட்டுக்குள் ஓடினான் பாளை அரிவாள் ஒன்றை எடுத்துக் கொண்டு வந்தான். இதற்குள் அவனின் 'முதல் பங்காளிகள்' ஆளுக்கொரு ஆயுதத்தை எடுத்துக் கொண்டார்கள். எல்லாரும் மீனாட்சியின் கணவன் வருகைக்காகக் காத்து நின்றார்கள். ஒருவர், "ஏல.. நம்ம கிட்ட ஆயுதம் இருக்கறதைப் பாத்துட்டாமுன்னா அந்தப் பய ஓடிப்

போயிடுவான். மறைச்சு வச்சிப்புட்டு பேசாம இங்க வந்து உக்காருங்க. அவன இன்னைக்கி தீட்டித் தள்ளிடணும்" என்றார்.

எங்கும், மயான அமைதி

உதிரமாடன், சுமாரான வசதியுடையவன் அவன் அய்யா, அவனுக்குப் பதினைந்து வயசிருக்கும்போதே போய்விட்டார். பள்ளிக்குப் போவதை நிறுத்திவிட்டு வயல் வேலையில் அவன் இறங்கினான். பலர், பெண் கொடுக்க முன்வந்தார்கள். அவன் மறுத்துவிட்டான். தங்கை மீனாட்சியை 'நாத்தினாக்காரி' கொடுமைக்குள் ஆழ்த்த அவன் விரும்பவில்லை. அவள் மீது உயிரையே வைத்திருந்தான். கொஞ்சம் முன்கோபக்காரன். ஒரு தடவை, பக்கத்துத் தெருக்காரர் ஒருவர் கையில் இருந்த அவுத்திக் கீரையைப் பார்த்து விட்டு, அது தன் தோட்டத்துக் கீரையாகத்தான் இருக்க வேண்டும் என்ற அனுமானத்துடன் தெரு வழியாகப் போனவரின் துண்டைப் பிடித்து இழுத்துக் கொண்டே, "உள்ளதச் சொல்லாட்டா முப்பத்திரண்டு பல்லையும் தட்டிடுவேன். எங்க தோட்டத்துல தான பறிச்சே?"என்று அதட்ட, அதற்கு அந்த அவுத்திக்கீரை, "டேய், நான் பறிச்சதப் பாத்தியா?" என்று கெஞ்சுங் குரலில் கேட்க, அடிக்கப் போன உதிரமாடன் கையை வந்து பிடித்தாள் மீனாட்சி "அண்ணாச்சி! அவரு பறிச்சத நீ கண்ணால பார்க்கல. அவரு வேற தோட்டத்துலகூட பறிச்சிருக்கலாம். எதுவும் உறுதியா தெரியுறதுக்கு முன்ன, ஒருவர் மேல குத்தம் சுமத்தறது தப்பு. இந்த மாதிரி சமாசாரங்களைக் கடவுள் கிட்ட விட்டுடணும், அண்ணாச்சி" என்று சொன்னவுடனே, உதிரமாடன் பெட்டிப் பாம்பாகி, வீட்டுப் பெட்டிக்குள் அடங்கி விட்டான்

அடிக்கடி தங்கையிடம், சின்ன விஷயங்களுக்கெல்லாம் கூட ஆலோசனை கேட்கும் உதிரமாடன், அவள் திருமணத்தை ஓர் உயிர்ப் பிரச்சினைக்குரிய பெரிய விஷயமாக நினைத்து, பக்கத்து ஊரிலேயே பணக்காரரான ஒரு வீட்டின் 'ஒத்தைப் பிள்ளை'க்கு ஆறாயிரம் ரூபாய் 'சுருளோடு' ஐம்பது 'கழஞ்சி' நகையோடு கொடுத்தான்.

நான்கு வேளை சாப்பிட்டுவிட்டு. மூன்று வேளை சினிமாப் பார்க்கும் மீனாட்சியின் கணவன் மருதராசாவுக்கு, மனைவி பிடிக்கவில்லை. அவளை, அடிக்கடி அடித்தான். 'உன் அண்ணனை இன்னொரு செயினு போடச் சொல்லு'ன்னு சொல்லி அடிக்கடி

பிறந்தகத்துக்கு அனுப்பி வந்தான். உதிரமாடன், மச்சான்காரன் கேட்பதை எல்லாம் கொடுத்தான். ஒரு தடவை கடைசியாக அவள் வந்தது 'அட்டியல்' கேட்டு.

உதிரமாடனுக்கு அப்போது நல்ல விளைச்சல். அட்டியல் போட்டிருப்பான். ஆனால், மீனாட்சியை வைத்து வாழ விருப்பமில்லாமல்தான் அவன் இப்படி அடித்து அலைக்கழிப்பதாக உணர்ந்ததும், தங்கையை அழைத்து 'உண்மையா?' என்று கேட்டான். அவள் முதலில் மறுத்தாள். இறுதியில் கண்ணீர் விட்டாள். எனவே, நாலு பெரியவர்களை வைத்து விவகாரம் பேசி, கேட்பதை யெல்லாம் போட்டு, 'இனிமேல் அடிக்க மாட்டேன்' என்று மருதராசாவிடம் உறுதி வாங்கிக் கொண்டு, தங்கையை அனுப்பலாம் என்று நினைத்தான். அதற்குள் மீனாட்சியோ, அவனை விட்டுப் பிரிந்து விட்டாள், இப்படி.

உதிரமாடன், பாளை அரிவாளை கூர் பார்த்துக் கொண்டான்.

தூரத்தே இரண்டு தலைகள் தெரிந்தன. மருதராசாவும் இன்னொருவனும் ஓடிவந்து கொண்டிருந்தார்கள். மருதராசா, தலையில் அடித்துக் கொண்டே வர, அருகில் வந்தவன் அவனை அணைத்தபடியே வந்தான்.

"செருக்கி மவனுக்கு சினிமாப் பார்த்துப் பாத்து நடிப்பு வந்துட்டு. பொண்டாட்டியைக் கொன்னுப்புட்டு, நடிச்சிக்கிட்டு வாரான் பாரேன்!"

"ஏல, சத்தம் போடாதீங்க. பூனை மாதிரி இருங்க. அவன் வந்ததும் புலி மாதிரிப் பாயணும். இங்கேயே பொலி போட்டுடணும். ஏல...தருமரு, இன்னொரு 'பாடை' கட்டுடா!'"

மருதராசா நெருங்கிக் கொண்டிருந்தான். அனைவரும் அவனைத் தாக்குவதற்குத் தயாரானார்கள்.

ஐயாசாமி தாத்தாவால் பொறுக்க முடியவில்லை.

"ஏய், சொல்லுறதைக் கேளுங்கடா! அவன் குத்தம் செய்யாம இருந்தால், அந்தப் பாவம் நம்ம விடாது."

"நீரு சும்மா கிடயும். அவன் போன அரைமணி நேரத்துல மீனாட்சி இறந்துட்டா; இதைவிட என்ன அத்தாட்சி வேணும்?"

"மாரடைப்புலகூட அவள் செத்திருக்கலாம்."

"அப்படியே வச்சிக்கிருவோம்; மீனாட்சி எதுக்கு டம்ளரைத் தொடைக்கணும்?"

"புருஷன் ஆசையா வாயில வச்ச டம்ளர்னு அதை

எடுத்திருக்கலாம்; அவன் மருந்து போட்டிருந்தா, மீனாட்சி ஏன் தங்கச்சிய, அத்தான் வாறாரான்னு வெளில நின்னு பாக்கச் சொல்லணும்? சொல்லுங்கடா."

"மீனாட்சி தங்கச்சி பேக்குப் பய மவா; ஒண்ணு கிடக்க ஒண்ணு சொல்லுவா!"

"நீங்க சொன்னதைத்தாண்டா நான் சொல்லுறேன். மீனாட்சியோட தங்கச்சி பேக்குப் பய மவா; ஒண்ணு கிடக்க ஒண்ணு சொல்லுவா."

"அப்படின்னா இந்தப் பய, அவள கொல்லலன்னு சொல்றீரா?"

"நான் அப்படியும் சொல்லல, இப்படியும் சொல்லல. பொண்டாட்டியைக் கொல்லுதவன் காலையில வந்து எதையாவது போட்டுக் குடுத்துட்டுப் போவான். ராத்திரில பொண்டாட்டிகிட்ட தூங்கிட்டு, காலையில கொல்ல மாட்டான். அப்படிக் கொன்னுருந்தால் அவன் கையி காலு அழுவி சாவான். நாம ஒரு நாளையிலே காரியத்தை முடிச்சிக்கக் கூடாது. அது அவனுக்கு உபகாரம் பண்ணுவது மாதிரி..."

"தாத்தா! நீரு பூசி மெழுகாதேயும். அவனைக் கண்டங் கண்டமா வெட்டாட்டா, நாங்க உடல வச்சிருக்கதுல அர்த்தமில்ல."

உதிரமாடன், அரிவாளை எடுத்துக் கொண்டான். எல்லோரும் ஆயுதங்களைப் பிடித்துக் கொண்டார்கள். ஐயாசாமி தாத்தா, செய்வதறியாது திகைத்து நின்றார்.

இதற்குள் மருதராசா, நெருங்கி விட்டான். கூட்டத்தினர், ஓர் ஆளைப் போல் எழுந்து போர்க்கோலத்துடன் நின்றனர்.

திடீரென்று, காட்சி மாறிற்று. உதிரமாடன், அரிவாளை ஓங்கிக் கொண்டு, ஆவேசம் வந்தது போல் கத்தினான்:

"என் உடன்பிறப்ப கொன்னுட்டு, நாக்கு மேல பல்லப் போட்டுக்கிட்டு வாறியா? வா...உன்ன, இன்னைக்கு கண்டதுண்டமா வெட்டிப் போடுறோமா இல்லியான்னு பாரு!" இப்படிக் கத்திக் கொண்டே உதிரமாடன் ஆவேசம் வந்தவன் போல் மருதராசாவை நோக்கி ஓடினான்.

தலையில் அடித்துக் கொண்டே ஓடிவந்த மருதராசா, திடுக்கிட்டு நின்றான். அடுத்த கணம் நிலைமை புரிந்துவிட்டது. உயிர் காக்கும் முயற்சியாகத் திரும்பி, கூட்டத்தினர் பிடிக்க

முடியாத அளவிற்கு வேகத்துடன் ஓடினான்.

சற்று தூரம் துரத்திவிட்டு உதிரமாடன், சோர்ந்து போய் திரும்பி வந்து கல்தூணில் சாய்ந்தான். அவன் கண்களிலிருந்து கண்ணீர் பெருகி வழிந்தது.

கூட்டத்தினர் அவனை எரிச்சலோடு பார்த்தார்கள்.

"இந்தப் பயலுக்கு எப்பவும் அவசரம். அப்போ அவனுக்கு கேக்குற நேரமுல்லாம், குடுத்துக் கெடுத்தான். இப்போ, அவசரப்பட்டுக் காரியத்தைக் கெடுத்துட்டான்."

"அவசரப் பட்டுட்டியே; பேசாம இருந்திருந்தா, அவன் தானா சிக்கி இருப்பான். கோழிக்குஞ்ச நசுக்குறது மாதிரி நசுக்கியிருக்கலாமே! அறிவு கெட்ட பயலே!"

உதிரமாடன்ா, அறிவுகெட்ட பயல்...! அவன் தனக்குள்ளே துயரத்தோடு சிரித்துக் கொண்டான். ஐயாசாமி தாத்தா உபதேசம் செய்கையில், அவன் காதுகளில் மீனாட்சியின் குரல்-அவுத்திக்கீரை தகராறின் போது பேசிய பேச்சுக்கள் - ஒலித்துத் தடுத்துவிட்டன. சட்டத்தில், 'பெனிபிட் ஆப் டவுட்' குற்றவாளிக்குச் சேர வேண்டும் என்று இருப்பதையே அறியாத நிலையில்...ஆனால், அதற்கு மூலமாக விளங்கும் இயல்பான பகுத்தறிவால், மீனாட்சி சொன்ன அந்த வார்த்தைகள், மருதராசாவைக் கொல்லக்கூடாது என்று உடனே தீர்மானித்து விட்டான். ஆனால் இப்போது, தான் மட்டும் அவனைக் கொல்லக்கூடாது என்று சொன்னால், மற்றவர்கள் ஒத்துக்கொண்டு கேட்பார்களா? அவனையே அடித்துப் போட்டுவிட்டு, மருதராசாவை அக்குவேறு ஆணிவேறாக ஆக்கியிருப்பார்கள்! ஆகையால், மருதராசாவுக்கு வரப்போகும் அபாயத்தை உணர்த்தி, அவனைத் தப்பிக்க வைக்கும் உபாயமாகத் தான் உதிரமாடன், முன்னதாகவே குரல் கொடுத்துக் கொண்டு அப்படி ஆவேசமாக ஓடினான் என்பது யாருக்குத் தெரியும்?

திரும்பி வந்து தூணில் சாய்ந்து கொண்டு, கேவிக் கேவி அழுது கொண்டிருந்த உதிரமாடனின் செவிகளில் மீண்டும் மீனாட்சியின் குரல் கேட்டது.

'நீங்க செஞ்சது 'ரைட்டு' அண்ணாச்சி! எதுவுமே உறுதியா தெரியுறதுக்கு முன்ன, ஒருவரு மேல குத்தம் சுமத்துவது தப்பு. அதுக்காக அவங்க மேலே பாயறது அதைவிடத் தப்பு. இந்த மாதிரி சமாசாரங்களைக் கடவுள்கிட்ட விட்டுடணும் அண்ணாச்சி..!'

'நான் அப்படித்தான் விட்டுட்டேன், தங்கச்சி...!' என்று கேவினான் உதிரமாடன்.

# போதும் உங்க உபகாரம்

சென்னை நகரில், வீட்டு வசதி வாரியத்தின் மார்க்கெட் பகுதியான 'ப' வடிவில் அமைந்த அந்தக் கட்டிடத்தின் தாழ்வாரங்களில் பலர் படுத்துக் கிடந்தனர். இரவு மணி பன்னிரண்டு இருக்கும். 'பல்லவ'யுகம் முடிந்து, 'வஸ்தாதுகள் யுகம்' துவங்கிய சமயம். திடீர்க் கோடை மழை விட்டு விட்டு விளாசிக் கொண்டிருந்தது. ஒவ்வொரு கடையின் முன்னாலும், பத்துப் பன்னிரண்டு உடல்கள், குளிராலும், மழைத் தூவானத்தாலும் வேட்டியை உறிந்து மூடிக்கொண்டும், புடவைகளை இழுத்துத் தலைகளைப் போர்த்திக் கொண்டும் கிடந்தன. இங்கு யார் வேண்டுமானாலும் வரலாம் என்பது போல் தோன்றினாலும், நிலைமை அப்படி அல்ல; இன்னின்னார் இந்திந்த இடத்தில்தான் படுக்க வேண்டும் என்று ஒரு மரபு நிலைநாட்டப் பட்டிருந்தது. வரையப்படாத அந்த எல்லைக்கோட்டை மீறினால், நிலைமை வன்முறையாகும். அப்படிப் பல அடிதடிகளும் ஏற்பட்டிருக்கின்றன. வெளி ஆசாமி ஒருவன் அங்கே புக முடியாது. அப்படிப் புகுந்தால், வெளித் தேனீயை, ஒரு கூட்டின் தேனீக்கள் மொத்தமாகத் தாக்குவது போல, புகும் ஆசாமியை 'பூந்து' விளையாடி விடுவார்கள்.

இத்தகைய சாம்ராஜ்யத்தின் விசாலமான கடையின் முன்னால், நான்கு ஆசாமிகள் அரட்டையடித்துக் கொண்டிருந்தார்கள். நால்வரில் ஒருவன், எவரும் எளிதாக அடையாளம் காணக்கூடிய, கிருதா மீசை 'வாத்தியார்'. இருவர், சராசரியைவிட அதிக வலுவுள்ளவர்கள். ஒருவன் நோஞ்சான் பையன். அவர்கள் உட்கார்ந்திருந்த தோரணையையும், அவர்கள் ராஜ்யத்தின் விசாலத்தையும் பார்த்தாலே, ஆசாமிகள் 'கில்லாடிகள்' என்பதைப் புரிந்து கொள்ளலாம். படுக்கிறவர்களிடையே 'மாமூல்' வாங்குபவர்கள்போல் தோன்றியது.

மழை விட்டிருக்கிறதா என்பதை அறிவதற்காக, கையை வெளியே நீட்டிய நோஞ்சான், "ஏதோ ரெண்டு சாவுக் கிராக்கிங்க

தெரியுது. ஒண்ணு கைல ஒரு பாய் கீது. இங்க, இடம் பிடிக்க வர்றாப்போல தோணுது" என்றான். "கஸ்மாலங்க, இடம் பிடிக்கத்தான் வர்துங்க," என்றான் டெப்டி-வாத்தியார். "வர்ட்டும், வர்ட்டும், சாத்திப் பூடலாம்" என்றான் அஸிஸ்டெண்ட் வாத்தியார்.

ஆனால் வாத்தியார் ஒன்றும் சொல்லவில்லை. கையில் இருந்த மலிவான சிகரெட் துண்டை, நோஞ்சானிடம் நீட்டிவிட்டு, கருமையான மையிருட்டில் வந்து கொண்டிருந்த அந்த உருவங்களையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"ஐய...இந்தண்ட வா, அந்தண்ட...சேறு கீது," என்று ஓர் உருவம் சொல்லிக் கொண்டே, இரண்டு கைகளையும் பூமியில் ஊன்றித் தவழ்ந்து வந்தது.

வந்தவர்களில் ஒருத்தி கிழவி. அவள் முதுகு, இடுப்பில் இருந்து, பூமிக்கு இணையான நேர்க்கோடு போல இருந்ததால், அவளை 'கூன்' என்று சொல்லவும் முடியாது. சொல்லாமலும் இருக்க முடியாது. வயது, அறுபதைத் தாண்டியிருக்கும். சரியான கண் தெரியாதவள் போல் தோன்றியது. இன்னொருத்திக்குப் பதினெட்டுதான் இருக்கும். உருண்டையான படர்ந்த முகம். நாமம் போட்டிருப்பது போல், ஒரு முடி நெற்றியிலிருந்து மூக்குத்தண்டு வரை நளினமாகப் படர்ந்திருந்தது. முழங்காலுக்கு மேலே இருந்த அந்த வனப்பிற்குத் திருஷ்டி பரிகாரமாக இரண்டு கால்களும், வெள்ளரிப் பிஞ்சு மாதிரி கூம்பி, செயலிழந்து கிடந்தன. இரண்டு முட்டுக்களிலும், தவழ்வதற்காக, தோல் மாதிரி ஏதோ ஒன்று கட்டப்பட்டிருந்தது.

வந்தவர்கள் இருவரும், அவர்கள் அழைப்பிற்கு ஏங்கி நிற்பது போல, தாழ்வாரத்தின் அடியில், மண்ணில் நின்றார்கள். தாழ்வார ஆசாமிகள் 'வாத்தியார்' பேசுவார் என்று நினைத்து, அவன் முகத்தைப் பார்த்தார்கள். 'அவர்' பேசாததால், ஒருவன் தன்னை டெம்பரரி வாத்தியாராக, தானாகவே அங்கீகாரம் செய்து கொண்டு "என்னாலே...ஒண்டுறதுக்கு வேற இடம் கிடைக்கல்ல?" என்றான் அதட்டலாக.

அவனைக் கண்களால் அடக்கிக் கொண்டே, இப்போது வாத்தியார், பேசினான்.

"ஏய் கிழவி...இங்க, எங்களுக்கே இடமில்ல. தம்மாத்துண்டு

இடத்துல தரிகிணதத்தோம் பூடுறோம் நீங்க வேறயா? இத சத்திரமுன்னு நினைச்சிக்கினியா? பூடு: குய்க்கா பூடு"

"அப்படி சொல்லப்படாது நயினா. நாங்க திக்கத்தவங்க: நீ தெய்வம் போல. அண்டிட்டோம்...புண்ய முண்டு."

"அந்தக் கதையே வாணாம். பொம்மனாட்டிங்களா இருக்கேன்னு பார்க்கிறேன். இல்லேன்னா, இந்நேரம், முதுகு பிஞ்சிருக்கும் மழைவிட்டதும் பூடணும்....நான் சொல்றது புரியுதா?"

"நீ சொல்றது புரியுது நயினா. ஆனா எங்க பூறதுன்னு தான் புரியல?"

"எங்கே காட்டியும் போ. ஆனால், இந்தண்டை ஜகா பூடலாமுன்னு மட்டும் நெனக்காதே."

"இந்தக் காலில்லாத நொண்டிப் பொண்ணுக்கும் ஒரு இடம் குடுப்பா: ஒன்கு புண்யம் உண்டு!"

வாத்தியார், கிழவிக்குப் பதில் சொல்லாமல், அந்தப் பெண்ணையே உன்னிப்பாகக் கவனித்தான். உடனே டெப்டி, அஸிஸ்டெண்ட் வாத்தியார்களும், அந்த மூவருக்கும் சேவை செய்வதற்காகவே பிறவியெடுத்த நோஞ்சான் பையனும், அந்தப் பெண்ணைப் பார்த்தார்கள். அவள், இன்னும் மழையில் நனைந்து கொண்டிருந்தாள். முகம், வானத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தது ஆயா இடம் பிடித்து விடுவாள் என்ற தன்னம்பிக்கையா அல்லது இடம் பார்த்துப் பெயராத கால்கள் எந்த இடத்தில் கிடந்தாலும் சரிதான் என்கிற விரக்தியா, எது அவள் முகத்தில் பிரதிபலித்தது என்பதைச் சொல்ல முடியாது. கிழவி, கெட்டிக்காரி. 'வாத்தியார்' மௌனத்தைச் சம்மதமாக எடுத்துக் கொண்டு, படியேறி, கையில் இருந்த ஓலைப்பாயை ஒரு ஓரமாகப் போட்டுவிட்டு, "காத்தாயி...வா மே.." என்று குரல் கொடுத்தாள்.

பிறரிடம் அடிபட்டதைத் தவிர, வேறு எதையுமே அறியாத நோஞ்சான், கிழவியிடம் சண்டைக்குப் போனான்.

நீ படா கில்லாடிதான் கிழவி. வாத்தியார் சொல்லிக்கினே இருக்கார், நீ வந்துக்கினே இருக்கே படா தில்லுக்காரிதான்..."

வாத்தியார், நோஞ்சானின் பிடரியில் ஒன்று கொடுத்தான்.

பிறகு, கிழவியைப் பார்த்து "எங்கிருந்து மே வர்ற?" என்றான்.

"அத ஏன் கேக்குற நயினா? நான் பூமில பொறந்திருக்கக் கூடாது. பொட்டுன்னாவது பூடணும்... இவளோட ஆத்தா... எனக்குன்னு பொறந்து தொலச்சதில் பிடிச்ச சனி, இன்னும் வுடல. எவனையோ இஸ்துகின்னு போயி, அப்புறமா என்கிட்ட 'வாயும், வயிறுமா' வந்தா. நானும், பொறுத்துக்கினேன். ஆனால், கால் விளங்காத இவளை, கண் விளங்காத என்கிட்ட பூட்டுட்டுப் பூட்டா..."

"செத்துப் பூட்டாளா."

"எவனோ ஒரு கஸ்மாலத்த கணக்குப் பண்ணிக்கினு, ரயில்ல போயிட்டத பார்த்தாங்களாம் போனவா, போனவாதான். பதினைஞ்சு வருஷமாச்சு. சிவப்பா... குண்டா... அயகா இருப்பா... இப்போ, என்ன ஆனாளோ, எவன்கிட்ட மாட்டிக்கினு முழிக்கிறாளோ...மாரியாத்தாவுக்குத்தான் வெளிச்சம்..."

"அப்போ...நீ தான் இத வளத்துக்குனு வர்றியா?"

"அதை ஏன் கேக்குற? கூலிக்குப் போயி மாரடிச்சே என்னால முடியல. கட்சில, இவளோட காலக் காட்டி பிச்ச எடுத்தேன். இவளுக்கு விபரம் வந்ததும், பொழப்புல மண்ணைப் பூட்டுட்டா. கயிதக்கி கால காட்டுறது பிடிக்கல காட்டியும். ஒரு நாள் என்கிட்ட 'ஆயா...ஆயா... என் கால காட்டினா, ஒன்கு அர ரூவாதான் கிடக்கீது. அதனால ஒரு விஷங்குடுத்து என்னக் கொன்னுடு; அப்போ என் பிணத்தக் காட்டினா பத்து ரூவாயாவது தேறும். நீயும் ஒரு தொழில் செய்யலாம். என் காலுதான் உடம்பு மாதிரி ஆகப் போறதில்லை. உடம்பாவது காலுபோல ஆவட்டும். உனக்கும் பாரமில்ல'ன்னு சொன்னா. நான் ஓவுன்னு அயுதேன். இதப் பாத்துக்கினு நின்ன புண்ணியவான் ஒருவரு, எனிக்கு, ஆலந்தூர்ல அவரோட பங்களாவுக்குள் ஒரு குடிசபூட்டு தந்தாரு. இந்தப் பொண்ண அங்க வச்சிக்கினு, அவங்க வீட்டுலேய பாத்துக்கினு இருந்தேன்."

"என்ன ஆச்சு?"

"இவ கெட்ட கேட்டுக்கு, திடீர்னு பெரியவளா ஆயிட்டா. எசமானுக்கு அறியாத வயசுல ஒரு பிள்ளை கீறான். அவன் முறைச்சா இவ என்ன பண்ணுவாள்? காலா இருக்கு, ஓடி

ஒளியறதுக்கு? ஒரு நாள் எசமானி, 'என் பிள்ளையை உன் பேத்தி முறச்சிருப்பா போலிருக்கு. அதனாலதான் அவனும் மொறக்கிறான். வயசுப் பையன் கெட்டுப்பூடுவான். ஜல்தியா இடத்தக் காலி பண்ணிட்டு மறு ஜோலி பாரு' ன்னு சொல்லிட்டா மகராசி."

"அப்படியும் பொறுத்துக்கினுதான் இருந்தேன். ஆனால் இந்தக் கஸ்மாலம் இன்னா கேட்டா தெரியுமா? 'என் ஆத்தாதான் கெட்டுப் போனாள். இவளும் போகட்டுமேன்னு நீ அசால்ட்டா இருக்கியா'ன்னா. பொறுக்கலை. உடனே கூட்டிக்கிட்டு வந்துட்டேன். பெத்த பிள்ளைக்கிட்ட சொல்றது மாதிரி சொல்லிட்டேன் நயினா."

"நானும் மன்ஷன் தான் ஆயா, உன் பேஜார கேட்டது, ஏதோ டிராஜிடி கஸ்மால சினிமாவப் பார்த்தது போல கீது. அதனால, இன்னிக்கு நைட்ல மட்டும் தங்கிக்கோ. ஆனால் நாளக்கி காலங் காத்தால சொல்லாம கொள்ளாம பூடணும். ஏன்னா இங்க சௌரியப்படாது. டேய் பசங்களா, ஏதாவது கலாட்டா பண்ணுனிங்கன்னா, அப்புறமா, உங்க ஆத்தாளுங்களுக்கு புள்ளிங்களா இருக்க மாட்டீங்க, ஆமா, சொல்லிட்டேன்."

'வாத்தியார்' போய்விட்டான். மத்தியில் கிழிந்து போயிருந்த ஓலைப் பாயை, கிழவி, 'மடிப்பு'க் கலையாமல் விரிப்பதற்கு முயற்சி செய்தாள். "உள்ளே வா காத்தாயி" என்று பேத்திக்கு ஒரு குரலையும், "ஏன் நய்னா அந்த பிள்ள பூட்டுது? இந்தண்ட தங்கறதில்ல?" என்று மூவருக்கும் ஒரு குரலையும் கொடுத்தாள்.

"எங்க வாத்தியார கேக்குறியா? அவருக்கென்ன, எத்தனையோ பணக்காரங்க, என் கடை முன்னாடி படுத்துக்கோன்னு சொல்லி பணம் குடுக்கிறாங்க. வாத்தியார் 'வைத்தின்னா' சிரிக்கிற குயந்தயும் அயும். இந்த ஏரியாவுல, அவரோட போட்டி போட ஆளு இல்ல."

காத்தாயி, சிரமத்துடன், கைகளைப் படியில் ஊன்றிக் கொண்டு, அழகான குழந்தை மாதிரி தவழ்ந்து வந்தாள் கிழவியின் பக்கமாகப் படுத்துக் கொண்டாள்.

காத்தாயிக்குத் தூக்கம் வருகிற சமயம்- மூவரில் ஒருவனான டெப்டி-வாத்தியார், ஒரு துண்டை மடித்துக் கொண்டு வந்து, 'இதுல தல வச்சுக்கம்மே!" என்று சொல்லி, காத்தாயியின் தலையைத்

த்தாங்கிப் பிடித்துக் கொண்டு, மடித்த துண்டை வைத்தான். கருணையினால், அவன் அப்படிச் செய்வது போலத் தெரிந்தது. காத்தாயியும் ஒன்றும் பேசவில்லை.

இது, இன்னொருவனுக்கு உற்சாகத்தைக் கொடுத்திருக்க வேண்டும். "இந்தாம்மே, இத போர்த்திக்கோ" என்று சொல்லிக் கொண்டே, ஒரு கிழிந்து போன போர்வையை எடுத்து அவள் மேல் போர்த்தினான். காத்தாயி, போர்வையின் ஒரு பகுதியை ஆயாவுக்கு மூடுவதற்குப் போராடிக் கொண்டிருந்த போது, தலையணை கொடுத்த ஆசாமி, நெருங்கி வந்து 'நல்லா மூடும்மே' என்று குரல் கொடுத்துக் கொண்டே, அந்தப் போர்வையை, அவள் மேல் சமமாக இழுத்துப் போடுவது போல் பாசாங்கு செய்தான். அவன் கைகளில் ஒன்று அவள் உடம்பிற்கும் போர்வைக்கும் இடையே உரசியது.

காத்தாயி, துள்ளிக் கொண்டு எழுந்து உட்கார்ந்தாள். "கர்மம், அந்த பணக்கார புள்ளதான் கவல இல்லாம திங்ற ஜோர்ல கஸ்மாலமா நடந்துகின்னான்னு நெனச்சா, இங்க கூடவா? ஆயா, எழுந்துடு. இந்த இடத்துல ஒரு செகண்ட் கூட இருக்கப்படாது."

தூங்கிக் கொண்டிருந்த கிழவி எழுந்தாள். நிலைமையை ஊகித்தவள் போல், "ஏண்டாப்பா, அனாதையா. பட்டமரம் மாதுரி நிக்றோம். வாலாட்றதுக்கு நாங்கதானா வாச்சோம்? வாத்தியாரு பிள்ளையாண்டான் இரக்கமுள்ளவனாத் தோணுது. இருந்தும் எதுக்காவ இங்க தங்க சௌகரியப் படாதுன்னு சொன்னான்னு நான் குழம்புனதுக்கு அர்த்தம் இப்போதான் புரியுது...நீங்க சோதாப் பசங்கங்கறது..."

"ஏம்மே! இப்ப இன்னா தான் நடந்து போச்சி, லபோ லபோன்னு கத்துறே?"

*காத்தாயியால் காத்திருக்க முடியவில்லை*

"வா ஆயா, ஜல்தியா பூடுவோம். நடு ரோட்ல படுப்போம்; லாரி மோதியாவது சாவோம். கிளம்பு ஆயா. நீ வர்றியா, நான் பூட்டுமா?"

கிழவி, ஓலைப்பாயைச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள். காத்தாயி, தவழ்வதற்காக உள்ளங் கைகளை ஊன்றப் போனாள். அவள் போவதைப் பொறுக்க முடியாத நோஞ்சான், அவள் கையைப் பிடித்து, தரதரவென்று இழுத்து, ஒரு மூலையில் போட்டான்.

இன்னொருவன், "இந்த இருட்ல எங்க கண்ணு புறப்படுற" என்றான்.

ஆயா, கூப்பாடு போட்டுக் கூட்டத்தை எழுப்பவேண்டும் என்று நினைத்தாள். ஆனால், தொண்டைக்கு மேல் வார்த்தை வரவில்லை. இந்தச் சமயத்தில் தூரத்தில் சீட்டிச் சத்தம் கேட்டது. 'வாத்தியார்' வருவதைப் புரிந்து கொண்ட சிஷ்யர்கள் சப்த நாடியும் ஒடுங்கியவர்களாய் ஆளுக்கொரு மூலையில் பதுங்கினார்கள்.

'வாத்தியார்' வந்தார்; பேட்டரி அடித்துப் பார்த்தார். பிறகு "இன்னா ஆயா, நீ பாயச் சுருட்டிக்கினு நிக்ற?பாப்பா அழுவுது? சாமி சத்யமா நடந்தத... நடந்தபடியே சொல்லிடு. இந்த சோமாறிங்க கலாட்டா பண்ணுனாங்களா? சொல்லு ஆயா!"

'இப்படித்தான்'ஆயா சொல்லப் போகிறாள் என்பதை எதிர்பார்த்தவன் போல், வாத்தியார் இடுப்பில் இருந்த பெல்டைக் கழட்டிக் கொண்டே, சிஷ்யர்களைப் பார்த்தான். அழுது கொண்டிருந்த காத்தாயி, ஏதோ சொல்லப் போனாள். அதற்குள் கிழவி முந்திக் கொண்டாள்.

"இந்தப் புள்ளைங்க, ஒண்ணும் பண்ணல நய்னா! சும்மா இல்லாத பொல்லாத சொல்லப்படாது. வாயி அயிவிடும். பங்களா குடிசையில் தூங்குன காத்தாயி, இந்தக் கல்லு மண்ணு இடத்துல தூங்க முடியாம அழுவுறா. அதோ, அவளுக்கு ஒரு புள்ள தலைக்கு ஓசரமாத் துணிகொடுத்தான். ஒரு புள்ள போத்திக்கத் தன் துப்பட்டியைக் குடுத்திருக்கு. இது எல்லோருக்கும் பாரமா இருக்கோமேன்னு நெனச்சி அயுவுது. இந்தப் புள்ளைங்க அவள தேத்திக்கினு இருக்காங்க...அவ்வளவு"தான். நீ வந்துட்டே!"

வாத்தியார், தன் சிஷ்யர்களை ஒரு மாதிரி பார்த்தான். பிறகு, "இன்னிக்கு எப்படியோ சமாளி ஆயா. இன்னும் ரெண்டு நாள்ல, எந்தப் பணக்காரன் அண்டயாவது போயி ஒன்கு, பங்களாவுக்குள்ளே குடிசை போட்டுத் தரச் சொல்றேன். வீட்டு வேலையும் பார்த்துக்கலாம். நான் சொன்னா எவனும் தட்ட மாட்டான். நெஞ்சில் இருக்ற மஞ்சாச் சோற எடுத்துடுவேன்னு தெரியும். பாலஸ் ஸ்டோர்காரன், அவன் கடயண்ட படுக்கச் சொல்லி, கட்டில் போட்டிருக்கான். வேணும்னா, நானும் இங்க குந்தட்டுமா?"என்றான்.

"வேணாம் நயினா. இந்தப் புள்ளைங்க, காத்தாயிய கூடப்

பொறந்த பொறப்பு மாதிரி கவனிக்குதுங்க. நீ போய் தூங்கு நய்னா."

வாத்தியார், சிஷ்யர்களைப் பார்த்துக் கொண்டே போனார். சிஷ்யர்களின் முகங்கள், கிழவியிடமும், காத்தாயியிடமும் மன்னிப்பைக் கோரும் பாவனையைக் காட்டின. கிழவி மட்டும், "வாத்தியாரண்ட சொன்னாத் தெரியும் சேதி. செருப்பு பிஞ்சாக் கூட தாங்கிக்கலாம்; பொழப்பே பிஞ்சியிருக்கும். இந்த 'ஏரியாவுக் குள்ள' தல காட்டியிருக்க முடியாது" என்றாள்.

டெப்டி-வாத்தியார், "டேய் நோஞ்சான், ஆத்தாவுக்கும், தங்கச்சிக்கும் டீயும், பன்னும் வாங்கிக்கினு வாடா," என்று சொல்லி, 'நிஜார்' பைக்குள் கையை விட்டு காசை எடுத்துக் கொடுத்தான். 'தங்கச்சி' என்ற வார்த்தையில், சகோதர பாசம் தானாக, தேனாக ஒலித்தது.

காத்தாயி கண்களைத் துடைத்துக் கொண்டாள். நோஞ்சான், ஒரு ஈயப் போணியுடன் வெளியேறினான்.

மணிவாசகர் பதிப்பகம்

# சிறப்பு வெளியீடுகள்

அறிவியல் ஆயிரம் (4 தொகுதிகள்)

தனித்தமிழ் இயக்கம்

தகவல் தொடர்பியல்

பண்பாட்டு மானிடவியல்

தமிழர் பண்பாட்டியல்

கல்வெட்டில் வாழ்வியல்

தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்

மறைந்துபோன தமிழ் நூல்கள்

நாட்டுப்புற இயல் ஆய்வு

தமிழ்மொழி வரலாறு

இலக்கண வரலாறு

இந்திய அரசமைப்பு

டாக்டர் அம்பேத்கர்

சுற்றுலா வளர்ச்சி

மொழி வளர்ச்சியும் மொழி உணர்வும்

தமிழ்நூல் தொகுப்புக் களஞ்சியம்

இதழியல் உலகில் தமிழரசு

பிள்ளையார்பட்டி பிள்ளையார்

பட்டாம்பூச்சி

வேரில்பழுத்த பலா

சீவகசிந்தாமணி

சர்க்கரை நோயும் சிகிச்சை முறையும்

Wrapper Printed at Ganesh Printing, Ms-1. Ph: 561039